

# செவாலியர் இளவாலை அமுது

சிவ. தணிகாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவாலியர்**

**இளவாலை அமுதது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவாலியர் இளவாலை அமுது

**சிவ. தணிகாசலம் – இலக்கிய சங்கமம்**

நூலாசிரியர்
**சிவ. தணிகாசலம்**

வெளியீடு
இலண்டன் இலக்கிய சங்கமம்
2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

நூலின் தலைப்பு : செவாலியர் இளவாலை அமுது
சிவ. தணிகாசலம் - இலக்கிய சங்கமம்

நூலாசிரியர் : சிவ. தணிகாசலம்

வெளியீடு : இலண்டன் இலக்கிய சங்கமம்


பதிப்பு : 2019

அச்சகம் : குமரன் புத்தக இல்லம்
39, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் குலதெய்வம்



இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்



இணுவில் கந்தன்

அருளாசியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய சங்கமத்தின் இதயத்திலிருந்து

## நன்றி நவிலலும் நயந்து போற்றலும்

இலண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக முத்தமிழ் இலக்கியப் பணியாற்றி எம் தமிழின் உயர்வுக்கு உழைத்தவர்களின் நினைவுப் பெருவிழாக்களை நடாத்தி வருகின்றது. இதுவரை இலக்கிய சங்கமத்தால் மகாகவி பாரதியார், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், திருமுருக கிருபானந்தவாரியார், தவத்திரு சிவயோக சுவாமிகள், தவில்மேதை லயஞானகுபேரபூபதி நாதப்பிரம்மன் திரு. தட்சணாமூர்த்தி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவியரசர் கண்ணதாசன், நடிகர்திலகம் சிவாஜிகணேசன், தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர், நல்லைநகர் நாவலர்பெருமான், சிறுகதை மூலவர் சி.வைத்திலிங்கம், சைவஆசான் திரு.ச.அருணாசலம் ஆகியோரது நினைவுதின வைபவங்களுடன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நூற்றாண்டுப் பெருவிழா, தைப்பொங்கல் பெருவிழா என்பனவும் கொண்டாடப்பட்டன.

மேலும் இலண்டன் வாழ் இளைஞர்களின் தமிழ் இலக்கிய ஈடுபாட்டை உத்வேகப்படுத்தும் வகையில் பெரியபுராணச் சொற்பொழிவு, விவாத அரங்கங்கள், மரபுசார் இலக்கியப் பட்டிமன்றங்கள் போன்ற பெருவிழாக்களை நடாத்தி புலம்பெயர்மண்ணில் இலக்கிய வளம் சேர்த்து பலம்வாய்ந்த இலக்கிய அமைப்பாக இயங்கிவருவதற்கு எம் தமிழ் உணர்வாளர்களின் பங்களிப்பே பெரும் சான்றாகின்றது.

இந்தவகையில் தாயகத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும், வேறு பல தேசங்களிலிருந்தும் இங்கு வருகை தருகின்ற பல்துறைசார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களை, இலக்கியப் பணியாளர்களை இலக்கிய சங்கமம் பெருமகிழ்ச்சியோடும் பெருமையோடும் வரவேற்றுக் கௌரவித்து, விருந்தளித்துக் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்து, பல்வேறு ஊடகங்களுக்கும் அறிமுகம் செய்து வருகின்றது.

இந்த இலக்கிய சங்கமத்தின் அமைப்பாளன் என்ற வகையில், இந்த விதையை ஊன்ற எனக்கு ஆசானாக மட்டுமல்ல என் ஆத்மாவின் உள்ளுணர்வின் உந்து சக்தியாய் நின்று என் இலக்கிய வாழ்வினை இந்த மண்ணில் நெறிப்படுத்திய பெருமகனார் மூதறிஞர், தமிழ்க்கங்கை செவாலியர் இளவாலை அமுது அவர்களின் நூற்றாண்டு விழாவிலே அவர்களுடைய வரலாற்று மலரை இலக்கிய சங்கமத்தினூடாய் வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அமுது அவர்கள் என்னுடன் மட்டுமல்ல என் குடும்பத்தோடும் தந்தை போல் உறவுகொண்டு என் பிள்ளைகளுக்கும் ஆசி வழங்கி தருணம் தவறாது எம் குடும்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்புப் பரிசுகள் வழங்கி எங்கள் குடும்பத்தை ஆனந்தப் பெருவெள்ளத்தில் ஆழ்த்திய சம்பவங்களை இத்தருணத்தில் உங்களோடு சேர்ந்து நினைவு கூர்ந்து, குருதட்சணையாய் இம்மலரைப் பெருமகனார் பாதாரவிந்தத்தில் அர்ப்பணிப்பதில் நிறைவுகொள்கின்றேன்.

உயர் இலட்சியங்கள் கொண்ட இலக்கிய சங்கமத்தின் உயர்வுக்காய் உழைத்து இம்மலரை இலக்கிய சங்கமத்தின் முதல் மலராய் வெளிக்கொண்டு வரவேண்டுமென்று அன்புக் கட்டளையிட்ட இலக்கிய சங்கம நண்பர்களான திரு. க. பாஸ்கரநாதன், திரு. பேரம்பலம் சிவானந்தன், டாக்டர் முத்து முருகேசன், திரு க. ஒப்பிலாமணி, திரு செல்வா செல்வநாதன், திரு. எஸ். வாமதேவன், எட்டயபுரம் திரு. எஸ். செல்வராசா, திரு.வீ.ஆர். இராமநாதன், இலக்கிய சங்கம இளந்தலைமுறை நாயகன் பரந்தாமன் பாலசுப்பிரமணியம் இவர்களை நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் தமிழுக்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றி வரும் ஆலயங்களும், தமிழ் நிறுவனங்களும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்குப் பேரார்வம் கொண்டிருப்பதனை வெளிப்படுத்துவதில் இலக்கிய சங்கமம் பெருமைப்படுகின்றது.

அந்த வகையில் இந்த விழாவிற்குப் பேருதவிபுரிய ஒப்புதல்தந்த ஸ்ரீகனக துர்க்கையம்மன் ஆலய நண்பர்கள், உயர்வாசல் குன்று ஆலய நண்பர்கள், ஈழபதீஸ்வர ஆலய நிர்வாகிகள், சைவ முன்னேற்றச் சங்க நிர்வாகிகள், ஈலிங் தமிழ் வாசகர் வட்ட நண்பர்கள், இலண்டன் தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் புதினம் ஆசிரியர் திரு. இராஜகோபால் அவர்களும் இலக்கிய சங்கமத்தின் நன்றிக்குரியவர்கள்.

நிறைவாக குறுகிய காலத்திற்குள் தாய்மண்ணில் சிறப்பாய் மலர் பதிப்பிடுகின்ற குமரன் அச்சகத்தாருக்கும், அவர்களோடு தோள்நின்று அச்சுப் பதிப்பிற்கான உதவிபுரிந்த பத்திரிகையாளர் ஊரெழு அ. கனகசூரியர் அவர்களுக்கும், இவற்றை ஒழுங்கு செய்து தந்த நூலகவியலாளர் என். செல்வராசா அவர்களுக்கும், இலக்கிய ஆர்வலர் திரு. அ. ஸ்ரீசற்குணம் அவர்களுக்கும் இலக்கிய சங்கமத்தின் நெஞ்சார்ந்த நன்றி.

அரிச்சந்திரபுராணம் ஒரு காந்தியை உருவாக்கியதுபோல் செவாலியர் அமுதுப்புலவருடைய வாழ்க்கைச் சரிதம் இனிவரும் எம்மின இளஞ்சந்ததியினரில் பல சாதனையாளர்களை உருவாக்கும் என்பது நிறுவனர் திரு. சிவ. தணிகாசலம் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அப்பணியை இலக்கிய சங்கமம் முன்னெடுத்துள்ளது. செவாலியர் அமுது அவர்களின் வாழ்க்கைச் சுவடுகளைப் பதிவாக்கும் அதேநேரத்தில் இலக்கிய சங்கமத்தினுடைய இலக்கியப் பயணத்தின் சுவடுகளையும் பதிவாக்கியுள்ளோம்.

தேன்மதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும்வகை செய்வோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "என் கடன் பணி செய்து கிடப்பதே"

இயற்கையின் அழகை ரசித்து அனுபவிக்கின்ற தன்மை கொண்டவர்கள் ஒரு சிலர்தான் உலகில் இருக்கின்றார்கள். மற்றவர்கள் அறியமுடியாத பல ரகசியங்களை இயற்கையிடம் இருந்து இவர்கள் கற்றுக்கொள்ளுகின்றார்கள். இவர்கள் இறைவனின் அதிசயங்களை இயற்கையின்மூலம் புரிந்துகொண்டு தங்களுடைய கற்பனாசக்தியை வளர்த்துக் கொள்ளுகின்றார்கள். அவர்களுடைய கற்பனைகள் கவிதைவடிவம் பெறுகின்றபோது அந்தக் கவிதை மொழியிலே புதிய ஜீவகலை தோன்றுகிறது. அந்தக் கலையிலே இறையின்பம் பொங்கிப் பிரவாகிக்கின்றது.

இத்தகைய நெறியிலே இறையன்பைநோக்கி நாடு விழித்தெழ வேண்டும் என்னும் நோக்கில் மாதா அஞ்சலி, மடுமாதா காவியம், அன்னை திரேசா, சுவாமி ஞானப்பிரகாசர் முதலான தெய்வீகப் படைப்புக்களை எமக்கு வழங்கிச்சென்றவர் புலவர் இளவாலை அமுது அவர்கள். உழைப்பே கடவுள் எனக் கருதி காலமெல்லாம் தன்னுழைப்பை கவிதையாக்க உழைத்தவரே இந்த அமுதுப்புலவர். ஈடுபாட்டுடன் மனிதநேயத்தை நோக்கிச் செய்கின்ற தொண்டு வீணாகப்போவதில்லை என்பதற்கு அமுதுப்புலவர் ஓர் உதாரணம். இறைவனுக்கு ஒரு மனிதன் செய்கின்ற அளப்பரிய பணியென்ன என்பதனை அமுதுப்புலவரின் மடுமாதா காவியம் மனிதகுலத்துக்கு என்றென்றும் உணர்த்திக்கொண்டே இருக்கும். இப்பணி கருதியே அதிஉயர் செவாலியர் விருதும் அமுதுப் புலவரைத் தேடிவந்தது.

அந்த மகாகவிஞன் வாழும்போதே அவரின் வரலாற்றைப் படையாதது என் துர்ப்பாக்கியமே. தெய்வத்திடம் நம்பிக்கை வைத்தால் எத்தனை துன்பங்கள் எம்மை நெருங்கியபோதும் அந்தத் துன்பங்கள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல விலகும் என்று எனக்கு நம்பிக்கையூட்டியவர் நீங்கள். நீங்கள் ஒரு சாதாரண குடிமகனல்ல. இறைபணிசெய்து வாழ்வை நிறைவுசெய்தவர். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கோ, ஒரு நாட்டுக்கோ சொந்தமானவர் அல்லர். மனித இனத்துக்கே பணியாற்றுகின்ற உயர்நிலையினைப் பெற்றவர்கள் நீங்கள். உங்கள் மரணம் நிகழ்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக உங்கள் வாழ்வின் பல செய்திகளை ஒலிநாடாவில் பதிவுசெய்து தந்தீர்கள். இறையின்பமுடையவர்களை நோய்கள் தீண்டாது, மரணபயம் கிடையாது என்று நான் எண்ணியிருக்கையிலே விதி உங்களைத் தன் பக்கமாக அணைக்கத் தொடங்கியது. இயற்கையின் நியதியை யாரால் மாற்றமுடியும்? நீங்கள் இறுதி மூச்சுவிட்ட நாட்களிலும் பக்கத்தில் நின்றேன். அத்துடன் நின்றுவிடாது உங்களுடைய பத்துப் பிள்ளைகளின் சாட்சியாக உங்களுடைய வரலாற்றை எழுதிவைப்பேனென்று உறுதிமொழி எடுத்துக்கொண்டேன். அந்த உறுதிமொழியை ஒரு தாளில் எழுதி உங்கள் கைகளில் கொடுத்திருந்தேன். உங்களுக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவு செய்வேன், எப்படி எழுதிமுடிப்பேன் என்று இரண்டு வருடங்கள் நான் செய்த கடுந்தவத்தினால் உங்கள் வரலாறு நூலாக வெளிவருகின்றது.

எந்தக் கஷ்டங்களையும் எதிர்கொள்ளுகின்ற வலிமையை தெய்வ நம்பிக்கையொன்றே எமக்குத் தருகின்றது. இதுவே அப்பர் சுவாமிகளின் வரலாறு. மக்களுக்குப் பணி செய்வதன் மூலம் ஈசனுக்குப் பணிசெய்ய முடியும் என்று வாழ்ந்த திருநாவுக்கரசு சுவாமிகளின் சிந்தனைகள் என் நெஞ்சிலே உங்களை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றது. அடக்கமான தெய்வப்பணிக்கு அப்பர் சுவாமிகள் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டு. அந்த அடக்கத்தின் சாயலை உங்கள் வாழ்க்கை நெறியிலே உணர்ந்துகொண்டேன்.

செவாலியர் இளவாலை அமுது அவர்களின் சரித்திரத்தை எழுதிமுடிக்கவேண்டும் என்ற வைராக்கியத்துடன் தெய்வத்தின் பாதங்களைச் சரணடைந்தேன். பாறாங்கல்லுடன் கட்டப்பட்டு கடலிலே வீசப்பட்ட அப்பர் சுவாமிகளை அந்தப் பாறாங்கல் தெப்பமாக மிதந்து அவரைக் கரைசேர்த்ததுபோல் அமுதுப் புலவரின் வரலாறும் கரைசேர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கை



தவில்மேதை உருவச்சிலை

சைவமக்கள் கோயிலென்றால் அது குறிப்பது சிதம்பரம். அந்தத் திருத்தலத்தின் ஆடவல்லான் சக்தி சிவகாமி அம்மை. அந்தச் சிவகாமி அம்மன் ஈழத்திலே கோயில் கொண்ட தலம் இணுவில் சிவகாமி அம்மன் கோயில் என்ற வரலாற்றுப் பெருமையுடையது.

(பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை)

ஆட்டலட்சுமியுறைந் தருளும் யாழ்ப்பாணப்
பட்டினந்தன்னில் பரராச சேகர என்னும்
ஆரிய குலத்திறை அரசுவீற்றிருந்த
தென்னிணுவை எனும் திருநகர்.

(இணுவை சின்னத்தம்பிப் புலவர்).

"கன்னல் செறி வாழை கமுகுபுடை சூழ
துன்னும் இணுவில்" என்று கயிலாய மாலையும்,
"கரும்பும் கமுகுவும் வாழையும் நெல்லும் செழித்து
ஓங்கிடும் வளமுடைய இணுவில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யாழ்ப்பாண வைபவமாலையும் விளக்குவதால் இணுவிலின் வரலாற்றுப் பெருமையை மேலும் சொல்லவேண்டியதேயில்லை. தமிழ், சமயம் இரண்டும் கண்ணெனப் போற்றிய இணுவை மண்ணில் வரலாற்றுக் காலத்திலிருந்தே (இயல், இசை, நாடகம்) முத்தமிழ் துறைசார்ந்த அறிஞர்கள் தோன்றியிருக்கின்றார்கள். சிற்பக் கலைக்கோர் எடுத்துக்காட்டு இணுவில் கந்தனின் மஞ்சம். அது உலகப் புகழ் வாய்ந்தது.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் இணுவை மக்களின் அயராத உழைப்பையும் சமய மொழிப்பற்றையும் தான தர்மங்களையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் மாபெரும் வரலாற்று விழுமியமாகத் திகழ்கின்றது. பாரததேசத்தின் கர்நாடக இசைக்கு இருப்பிடம் இணுவில் என்பதனை தமிழாராய்ச்சிக் கட்டுரை மலர் விளக்கி நிற்கின்றது.


உலகம் போற்றும் கலைஞர்களை உருவாக்கிய இணுவை மண்ணில் பிறந்து அந்த மண்ணில் தவழ்ந்ததே என்னுடைய பெரும் பாக்கியம் என்று கருதுகிறேன். 'கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா' என்று கவிமாமணி இணுவில் வீரமணி ஐயா அவர்களின் பாடலை ஏழிசைமாமணி டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் தன்னுடைய கம்பீரமான குரலிலே பக்திரசம் பொங்கப் பாடினார். அந்தப் பாடல் திக்கெட்டும் இணுவில் மண்ணின் புகழைப் பரப்பிநிற்கின்றது.

இத்தகைய புகழ் பூத்த மண்ணில்தோன்றி தன்னுடைய தவில் நாதத்தால் பாரததேசமெல்லாம் வெற்றிக்கொடிநாட்டி நாதப்பிரம்மன் என்ற பெயரை பெற்றவர் "லயஞானகுபேரபூபதி" இணுவில் தட்சணாமூர்த்தி அவர்கள். எங்கள் தலைமுறையில் ஓர் அற்புதமான மேதைக்கு அவரே எடுத்துக்காட்டு. இளவயதில் கேட்ட அந்தத் தவில் நாதம் என் காதின் ஓரத்திலே இன்றும் இசைத்துக் கொண்டிருக்கின்றது. அந்த நாதப்பிரம்மனின் பாதத்திலே எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பைக் காணிக்கையாக வைக்கின்றேன். ஆத்மாவை ஊடறுத்துச் சென்று இறையின்பம் ஊட்டும் அந்த நாதப்பிரம்மனின் தவில் நாத இசையோடு மதுரகவி இளவாலை அமுதுவின் கவிதைகள் சேர்ந்திசைக்கட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



மூதறிஞர், இலக்கியக் கலாநிதி, செவாலியர், அமுதசாகரன், அடைக்கலமுத்துப் புலவர் (புலவர் அமுது) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

“வாழ்க்கை வரலாற்று இலக்கியம்” என்பது ஒருவகை இலக்கியம். மேனாட்டில் இவ்வகை இலக்கியம் மிகவும் பிரபல்யமானது. தமிழ்ச்சூழலில் இது மெல்ல மெல்லத்தான் அறிமுகமாகி வளர்ந்து வந்துள்ளது. தனிமனிதன் ஒருவனுடைய வரலாற்றினூடாக அவனுடைய சுயவிருப்பு, வெறுப்புக்கள் மாத்திரமன்றி அவன் வாழ்ந்த சமகாலத்து சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் அம்சங்களும் வெளிப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. தமது வாழ்க்கை வரலாற்றை ஒருவர் எழுத முனையும்போது அதில் உள்ளதும், நல்லதும் பதிவு செய்யப்படுவது இயல்பாகும். வாழ்க்கை வரலாற்றை எழுதமுனையும் ஒருவர் உண்மைகள் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்பதில்லை. ஆனால் சொல்லப்படும் விடயங்கள் உண்மைகளாக வெளிப்பட வேண்டும். அப்போதுதான் அதற்குப் பெறுமதியிருக்கும்.

ஈழநாட்டைப் பொறுத்தவரை மிகச் சிலரே தமது வாழ்க்கைப் பக்கங்களைப் பதிவு செய்துள்ளார்கள். குறிப்பாகப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கனக செந்திநாதன், சிரித்திரன் சிவஞானசுந்தரம், டொமினிக் ஜீவா, எஸ். பொன்னுத்துரை, வண. ஆயர் ஜெபநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் முதலானோர் இவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர்கள். தவிர ஆறுமுகநாவலர், வித்துவசிரோன்மணி கணேசையர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை முதலானோர் அவ்வப்போது தாம் எழுதிய கட்டுரைகளில் தமது வாழ்வோடியைந்த வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவுசெய்து வைத்துள்ளனர்.

தவிர ஈழத்திலே சில அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை அவர்களோடு நெருக்கமாகத் தொடர்புகளை வைத்திருந்தவர்களும் எழுதியுள்ளார்கள். குறிப்பாகத் தம்பிமுத்துப்பிள்ளை சரித்திரம், குமாரசுவாமிப்புலவர் வரலாறு, ஆறுமுகநாவலர் சரித்திரம் முதலான வற்றை இதற்கு வகைமாதிரிகளாகச் சுட்டலாம். இந்தப் பின்புலத்திலே தான் புலவர் அமுதுவின் நெஞ்சுக்கு நெருக்கமாக இருந்த அன்பர் சிவ. தணிகாசலம் அவர்கள் புலவர் அமுதுவின் வாழ்க்கை வரலாற்றை எமக்களிக்க முன்வருகின்றார். புலவரின் விசுவாசத்துக்குரிய அன்பராக இருந்த இவர் புலவரது வாழ்க்கைப் பாதையிலே சந்தித்த இன்பங்கள், துன்பங்கள், சவால்கள், சாதிப்புக்கள் முதலான பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக அறிந்து வைத்துள்ளார். புலவரின் வாயினாலேயே பலவற்றை இவர் கேட்டறிந்துள்ளார். மகாத்மாகாந்தி, நேரு, இந்திரா காந்தி முதலானோர்களுடைய வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கற்றுணர்ந்த அருட்டுணர்வால் புலவர் அவர்களும் ஒரு வாழ்க்கை வரலாற்று நூலை எழுத முனைந்தார். அதற்கு யாழ்ப்பாண மண்வாசனைப் பின்புலத்தில் “இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்” என்று தலைப்பிட்டார். யாழ்ப்பாணப் பண்பாட்டிலே வேலி, கதியால் முதலான சொற்கள் மிகுந்த முக்கியத்துவம் கொண்டவை. வேலியின் உறுதிக்கும், நிலைபேற்றுக்கும் அத்திபாரமாக விளங்குபவை கதியால்களே. கதியால்கள் பலவகை. ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் தவிர்க்கமுடியாத ஒருபக்க வேலியாக விளங்கும் புலவர் அமுது அவர்கள், தனது வாழ்க்கை வரலாறு சொல்லும் நூலுக்கு இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளது பொருத்தமாக அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சரித்திரத்தில் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் சில பக்கங்களைப் புலவர் விரிவாகக் காட்டியுள்ளார். தான் சந்தித்த ஆளுமைகளில் பெருமதிப்புக்குரியவர்களை இந்நூலில் முதற்கட்டமாக இவர் பதிவுசெய்தார். தனது வாழ்க்கைப் பயணத்தில் யார் யாரெல்லாம் கொழுகொம்பாக நின்றார்களோ அவர்களையெல்லாம் மிகுந்த நன்றியோடு நினைவுபடுத்தியுள்ளமை புலவரின் நன்றி விசுவாசத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி இளமுருகனார், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், தனிநாயகம் அடிகளார் முதலானோர் இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க கல்வியாளர்கள். தவிர தனது ஆளுமையினைப் பாவித்த அன்னை திரேசா, கவிஞர் கண்ணதாசன் முதலான பலரையும் இவர் நினைவில் கொண்டு வந்துள்ளார்.

புலவர் அமுது அவர்களுடைய "இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்ற நூல் அவரது வாழ்க்கை வரலாற்றை முழுவதுமாகச் சுட்டிநிற்கவில்லை என்ற பெருங்குறை ஒன்று இருந்தது. ஏனெனில் புலவர் அமுது சாதாரண ஒரு புலவரல்ல. தாயகத்திலும், தமிழ்நாட்டிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ள தேசங்களிலும் என நன்கு அறியப்பட்ட மூதறிஞர்.

அமுதுவின் கவிதைகள், மடுமாதா காவியம், மாதா அஞ்சலி, நெஞ்சே நினை, காக்கும் கரங்கள், இவ்வழிச் சென்ற இனிய மனிதன்,அன்பின் கங்கை அன்னை திரேசா, இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வரலாறு முதலான இவருடைய படைப்புக்கள் இவருடைய பல்பரிமான ஆளுமையின் வெளிப்பாடுகளாக உள்ளன. தவிர பல்துறை சார்ந்த கட்டுரைகள் பலவற்றையும், நாடகப்பிரதிகள் சிலவற்றையும் இவர் எழுதியதாக அறியவருகிறது.

இவருடைய ஆளுமையினைக் கருத்தில் எடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு "இலக்கியகலாநிதி" என்ற உயரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பலருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளது. ஆயினும் இப்பட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்தைக் கௌரவப்படுத்திய வர்கள் மிகச் சிலரே. அவர்களுள் புலவர் அமுது தலையானவர். பட்டமளிப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் புலவர் ஒரு சொற்பொழிவை ஆற்றினார். அன்றுதான் புலவரின் நகைச்சுவை கலந்த அர்த்தபுஷ்டியான உரையினைச் செவிமடுக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நேரம் போனதே தெரியவில்லை. மலையருவியாக வந்த சொல்வீச்சில் குருமார்களும், அருட் சகோதரிகளும், எம்மைப்போன்ற இலக்கிய ஆர்வலர்களும் மயங்கி இருந்த பொழுதை நினைத்தால் இப்போதும் இனிக்கின்றது.

புலவர் அமுதுவின் குடும்ப வாழ்க்கை பற்றி நிறையச் சொல்லப்பட்டுள்ளது. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள். அது புலவர்க்கு வாய்த்திருந்தது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் தத்தமது புலங்களில் உச்சங்களைத் தொட்ட உயர்ந்த கண்ணியமானவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களில் பலரை புலவரின் அருமைத் துணைவியாரின் இறுதிச்சடங்கில் பார்த்திருக்கின்றேன். அவர்களில் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி ஏ.ஜெ. வி. சந்திரகாந்தன் அடிகளாரை நான் பல்கலைக்கழகத்தில் மாணவனாகப் படித்த காலம் தொட்டே நன்கு அறிவேன். பல்வேறு விடயங்களில் எங்களுக்கெல்லாம் ஆதர்ஷமான ஒரு புலமையாளன். பேராசிரியர் க. கைலாசபதியால் இனங்காணப்பட்டு உள்வாங்கப் பட்டவர் அடிகளார். அதனால் அடிகளாரின் புலமை மேதாவிலாசத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அடிகளாரின் ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ்ப் புலமைகளில் நான் என்னை இழந்திருக்கின்றேன். உயர்ந்த பண்பாளர். அவரை நான் கடவுளின் அவதாரமாகவே பார்ப்பதுண்டு. பிறரிடம் அன்பைச் சொரிவதில் அடிகளார் முன்மாதிரியானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பெருமைகளுக்கெல்லாம் வித்தாக விளங்கும் புலவர் அமுதுவின் வாழ்க்கை வரலாறு நாம் ஒவ்வொருவரும் வாழவேண்டிய பாதையினைக் காட்டும் கைவிளக்காக உள்ளது. புலவரின் நிறை வாழ்வு நீண்ட ஒரு சமூக பண்பாட்டு வரலாற்றை எம் கண்முன்னே நிறுத்தியுள்ளது. புலவரின் வரலாற்றை இயன்றவரை முழுமையாக ஆக்கித்தந்த அன்பர் சிவ. தணிகாசலம் அவர்கள் மிகுந்த பாராட்டுக் குரியவர். புலவருக்கான உயர்ந்த காணிக்கை இது. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கக்கிடைத்த இப் பொன்னான பொழுதுக்காக எல்லாம்வல்ல ஆண்டவனுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளேன்.

பேராசிரியர் கி. விசாகரூபன்
தலைவர்
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலக்கியம் வளர்க்கும் இனிய செம்மல்.



எம்மவர் மத்தியில் இன்று அருகிவரும் கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து நமது பெருமை உலகம் முழுவதும் ஓங்கிநிற்கப் பாரியதொண்டாற்றி வரும் திரு.சிவ. தணிகாசலம் அவர்கள் எழுதிய இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமை யடைகின்றேன்.

இளவாலை அமுதுப்புலவர் அவர்கள் பண்டிதமணி கணபதிப் பிள்ளை, சோமசுந்தரப்புலவரின் மகன் வித்துவான் இளமுருகனார், மற்றும் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பேராசிரியர்களின் வழிகாட்டலில் வளர்ந்து வரலாறு படைத்தவர். தொண்ணூற்றிரண்டு வயதுவரை பார்புகழ வாழ்ந்த இவர் மூதறிஞர் என்னும் நாமத்துடன் தன் மானுடவாழ்வை நிறைவுசெய்தவர். இத்தகைய ஒரு பெருந்தகையின் வரலாற்று நூலைப் படைத்த சிவ.தணிகாசலம் அவர்கள் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்திலேயே இலக்கிய மன்றத்தை ஆரம்பித்திருந்தார்.

இலண்டன் தமிழ் வானொலியில் திரு.நடாமோகனுடைய வழிகாட்டலில் பல தமிழ் அறிஞர்களை இணைத்து “இலக்கிய சங்கமம்” என்னும் நிகழ்ச்சியை நடத்திவருகின்றார். என்னுடைய இலக்கிய முயற்சியெல்லாம் கனகதுர்க்கை அம்மனின் இலக்கியத் தாகமே என்று தொண்டாற்றும் கல்விமான் சிவ.தணிகாசலம் அவர்களின் இலக்கியசேவை செவ்வனே தொடரவும், அவர் உருவாக்கியிருக்கும் இந்த நூல் வெளியீடு சிறப்பாக அமையவும், மலர் மணங்கமழவும் கனகதுர்க்கை அம்மனின் நல்லருட்பேறு கிடைக்கவேண்டும் என்று அம்பாளுடைய அனைத்துச் சிவாச்சாரியர்கள் சார்பாகவும் அம்மனின் திருவடிபணிந்து வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ கனக பாலகுமாரக்குருக்கள்
ஆலய பிரதமகுரு
ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*
**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
*5, CHAPEL ROAD, LONDON, W13 9AE.* *TEL: 0208 - 810 0835*
Founded on 10-08-1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.com Email: info@ammanealing.com

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr.T. Joganathan

**Asst Treasurer**
Mr. K Sarvananthan

**Elected Comm. Member**
Mrs S Jaijam

**Committee Members**
Mr N Balasubramaniam
Mr R. D Ratnasingam
Mr S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. R. Kanesharajah

**Secretary**
Mr. S. Abayalingam

Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Dr. V. Paramanathan
Mr. S. Premachandra
Dr. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Solicitor**
Mrs. G. Kathirgamanathan
72 Chestnut Drive
Pinner,Middlesex
HA5 1LY

30/01/2012

**"அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அருள் எங்கும் பரந்து அருளாட்சி பொழிக."**

ஐக்கிய இராச்சியத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழும் சமயமும் தளைத்தோங்க, இலண்டன் தமிழ் இலக்கிய மன்றம் என்ற நிறுவனத்தை உருவாக்கி அதன் வழித்தோன்றலாக, இலக்கிய சங்கமம் ஊடாக அமைதியான வழியில் தமிழ்த் தொண்டாற்றி வரும் சிவதணிகாசலம் அவர்கள் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர். அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்பிகை மீது அளப்பரிய அன்பு கொண்டவர்.

திரு.சிவதணிகாசலம் அவர்கள் புலவர் அமுது அவர்கள் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் உடையவர். புலவர் அமுது அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது. "செவாலியர் இளவாலை அமுது" என்ற தலைப்பில் அவருடைய வாழ்க்கை வரலாற்றினை வெளிக்கொணரும் முயற்சியானது இன்றைய காலகட்டத்திற்கு வேண்டற்பாலதே.

சிவதணிகாசலம் அவர்களது இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டும் எனவும் இந்நூலானது பல வழிகாட்டல்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும் அம்பிகையின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

நன்றி.

செ இராமச்சந்திரன்,
தலைவர்,
ஆலய நிர்வாகசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதுப்புலவர் பற்றிய அழகான வரலாற்று நூலுக்கு மன்னார் ஆயரின் மகிழ்வான வாழ்த்துச் செய்தி



"நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்ற பாரதியின் வார்த்தைக்கு ஒப்ப இள வயதில் மட்டுமல்ல தனது தளர்ந்த வயதிலும் தளராத தமிழ்ப்பற்றோடு அயராது தமிழ்ப்பணி புரிந்தவர் அமுது அவர்கள்.

பலவித சிறப்புக்களையும் ஆற்றல்களையும் கொண்டு நிறைவான பெருவாழ்வு வாழ்ந்து சென்ற அமுது என்ற இந்த மாபெரும் புலவரின் வாழ்க்கை வரலாற்றை நூலாகப் படைக்கும் திரு. சிவ. தணிகாசலம் அவர்களை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். அமுதுப் புலவரின் பல்வேறு படைப்புக்களை, நூல்களை ஆய்வுசெய்து 302 பக்கங்களைக் கொண்ட ஒரு காத்திரமான நூலை அவர் தமிழ் உலகிற்குப் படைத்தளிக்கின்றார்.

அமுது அவர்கள் ஈழம் பெற்றெடுத்த இனிய கவிஞர்களில் ஒருவர். சொல்லின் செல்வர், அமுதகவி, புலவர்மணி, முப்பணி வேந்தன் போன்ற பல விருதுகளை வென்ற அடைக்கலமுத்து என்ற ஆசானுக்குக் "கலாநிதி" என்ற இன்னுமோர் கௌரவமும் கிடைத்திருக்கின்றது. அன்னாருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியதன் ஊடாக யாழ். பல்கலைக்கழகம் தன்னையும் கௌரவப் படுத்திக் கொண்டதாகவே கருதுகின்றோம்.

"செவாலியர்" என்ற விருது வழங்கப்பட்டதன் ஊடாக சர்வதேச திருச்சபையினால் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு மாபெரும் தமிழ்ப் புலவராக இவர் உயர்ந்து நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளு தமிழில் தேனைக் கலந்து நெஞ்சை அள்ளும் கவிபடைக்கும் அமுதுவின் பெருமைகள் நிறையவே உண்டு. கன்னித் தமிழ் இவருடைய உரைநடையில் கன்னியாகவே களிநடனம் புரியும். அவர் உரையாடும்போது சொல்லின் சுவைகளான எதுகையும் மோனையும் எட்டிநின்று வேடிக்கை பார்க்கும். இவர் தன் கருத்துக்களை எழுத்தில் வடிக்கும்போது உயிரினமும், மெய்யினமும் எழுந்து நின்று நர்த்தனம் ஆடும்.

தன் சொந்த ஊராகிய இளவாலையைப் பற்றி கவிஞர் அமுது இப்படிப் பாடுகின்றார்.

"இளவாலையே.......<br>
தேங்காய் வீழ்ந்தால் மாங்காய் சொரியும்<br>
பலாக்காய் வீழ்ந்தால் பாக்குப் பிஞ்சுகள் சிதறும்<br>
வாழைக்குலைகள் முற்றத்தில் நின்று சுற்றத்திற்கு கை நீட்டும்<br>
வெற்றிலைக் கொடிகள் முருக்க மரங்களின் முதுகு சொறியும்<br>
நெல் அறுத்த வயல்களில் கிளிக்கூட்டங்கள் பூபாளம் பாடும்<br>
மரவள்ளிக் கிழங்குகள் மண்வளம் பேசும்"

மடுமாதா காவியம் இவர் அளித்த அருமையான நூல்களில் ஒன்று. மடுமாதா காவியமென்னும் மகத்தான நூலைத் தந்தமைக்காக இக்கவிஞரை மன்னார் மக்கள் என்றும் மனத்தில் இருத்திக் கொண்டாடுவர். இக்காவியத்தின் நிறைவில் மடுமாதாவை நோக்கி அவர் பாடும் வரிகளில் அவருடைய கவியாற்றலையும் மாதா பக்தியையும் நாம் கண்டு மகிழலாம்.

"கேட்ட வரம் அளிக்கும் கீர்த்திபெற்ற சீமாட்டி<br>
காட்டில் குடியிருக்கும் கருணையுள்ள என்தாயே<br>
பாட்டில் மலர் தொடுத்தேன் பாலோடு தேன் எடுத்தேன்<br>
நாட்டில் அமைதி என்ற நதியைத் திருப்பிவிடு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது என்ற இப்பெரும் புலவரின் வாழ்க்கை வரலாற்றை அடுத்த தலைமுறையினரும் அறியும்படி செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு சிவ. தணிகாசலம் அவர்கள் இந்தப் பாரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவருடைய இந்தப் பெருமுயற்சி வெற்றிபெற எமது நல்லாசிகளை மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்.

அன்புடன்
கிறிஸ்துவின் பணியில்,
இரா. யோசேப்பு ஆண்டகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரருள்தந்தை ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி



தமிழ்க் கிறிஸ்தவ உலகில் தனது அற்புதமான எழுத்து நடையால் அழியா இடம் பிடித்தவர் அடைக்கலமுத்து என்னும் இயற்பெயருடைய புலவர் இளவாலை அமுது அவர்கள்.

பொதுநிலையினர் திருச்சபைப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட வேண்டும் என்னும் கொள்கைக்கு ஏற்ப ஈடுபாட்டுடன் முன்நின்று உழைத்தவர். தனது புலமைத்திறனால் அற்புதமான நூல்களைப் படைத்துத் திருச்சபைக்கு அணிசெய்தவர்.

பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் மொழிக்கும், சமயத்துக்கும் ஆற்றிய பணிகளை நூலாக வடித்தளித்த இவர் இலங்கையின் புகழ்பெற்ற அன்னை மரியாவின் யாத்திரைத் தலமாக விளங்கும் மடுத்திருப்பதியின் பெருமையை காவியமாக்கியவர். அத்துடன், வாழும் புனிதை என்று போற்றப்பட்ட அன்னை திரேசாவின் வரலாற்றை 'அன்பின் கங்கை அன்னை திரேசா' என்னும் நூலாக உலகத் தமிழர்களுக்குத் தந்தவர்.

மரபும் புதுமையும் கலந்த அவரது எழுத்துகளில் இளமையும் இனிமையும் தவழ்கின்றன. இனிமையும் சந்தச்சுவையும் அவர் கவிதைகளில் காணப்படுவது போலவே அவரது உரைநடையிலும் கவிதைச் சுவையைக் காணலாம். படிக்கப் படிக்கத் திகட்டாத இனிக்கும் தமிழுக்குச் சொந்தக்காரர் அவர்.

இந்நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க கிறிஸ்தவத் தமிழ்ப் புலவராகத் திகழும் புலவர் இளவாலை அமுது அவர்களின் வாழ்வும் பணியும் ஏனையவர்களுக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அன்னாரது வாழ்வையும் அவரது படைப்புகளையும் பணிகளையும் விரித்துரைக்கும் இந்நூல் சிறப்பாக வெளிவர இறையாசீர் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

பேரருள்தந்தை ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை
ஆயர்
திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பேராயர் மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் ஆசிச் செய்தி



புகழ்பூத்த நெடுந்தீவைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து அடைக்கலமுத்து எல்லோராலும் அமுது என்று அழைக்கப்பட்டவருமான ஆசிரியர் அவர்களை யாழ்ப்பாணத்தில் அறியாதவர்களே இல்லை. இளம் வயதிலே கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தேறி ஊர்காவற்றுறை தூய அந்தோனியார் கல்லூரி முதல் பல பாடசாலைகளிலும் படிப்பித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் செல்வநாயகம், வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை ஆகியோருடன் கல்வியை முறையாகப் பெறும் பேறுபெற்றவர்.

தனது பதினேழாவது வயதிலே எழுத்துப் பணியை ஆரம்பித்த இவர் சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல பேர்போன எழுத்தாளராகவும் திகழ்ந்தார். நெஞ்சே நினை, அமுதுவின் கவிதைகள், அன்னை திரேசா, மடுமாதா காவியம் போன்ற பல நூல்கள் இவரது எழுத்துப் பணிக்கு நல்ல எடுத்துக் காட்டாகும். மிகவும் இலகு நடையில் யாவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இவரது இலக்கிய நடை இருக்கும். யாழ்ப்பாணத்தைப் பற்றிய விடயங்களை மிகவும் சுவாரஸ்யமாக அனைவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் இவர் எழுதுவார். கவிதை எழுதுவதிலும் இவர் வல்லவராக இருந்தார். இவரின் பிள்ளைகளில் ஒருவர் குருவாக வந்து பல பட்டப்படிப்புக் களை மேற்கொண்டு கனடாவில் ரொறொன்ரோ நகரில் பணிசெய்கின்றார். ஆசிரியர் அமுது அவர்களின் கல்வி, இலக்கியம், சமூக சமய பணிகளுக்காக பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 2002 ஆம் ஆண்டு இவருக்கு "செவாலியர்" என்னும் விருது வழங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பித்தார். இவர் பன்நாடுகளில் தமிழுக்கும் இலக்கியத்துக்கும் கத்தோலிக்கத்துக்கும் ஆற்றிய பணிகளுக்காகப் பாராட்டையும் விருதுகளையும் பெற்றிருக்கின்றார்.

எனது இருபத்தைந்தாவது ஆயுத்துவ வெள்ளிவிழாவிற்கு இங்கிலாந்தில் இருந்து கொழும்புக்கு வருகை தந்த அமுது அவர்கள் அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி என்னை மகிழ்வித்தார்.

அமரத்துவம் அடைந்த இவரையும் இவரது பணியையும் நினைவுகூர திரு. சிவ.தணிகாசலம் ஒரு நூலை "செவாலியர் இளவாலை அமுது" என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். இவரது இம்முயற்சி பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதும் எனக் கூறி ஆசிரியரை வாழ்த்தி இறை ஆசீர் கூறி நிற்கின்றேன்.

மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்<br>
யாழ். பேராயர்<br>
ஆயர் இல்லம்<br>
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாசிச் செய்தி



செவாலியர் இளவாலை அமுது என்னும் நூல் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். திரு. அமுதசாகரன் அடைக்கலமுத்து அவர்களின் நற்பண்புகள் அனைவராலும் போற்றப்பட்டவை. அறிவு, அடக்கம், பணிவு, சொல்லின் செயல் அனைத்துடனும் நல்வாழ்க்கை வாழ்ந்த அடைக்கலமுத்து பல நூல்களை எழுதி சமூகத்தினை நல்வழிப்படுத்திய பெருமைக் குரியவர். தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வழிவகுத்த சிறப்புடையவர். இவருடைய வாழ்க்கை அனைவருடைய சிந்தனைக்கும் முக்கியமானதாகும். இவருடைய மறைவு குடும்பத்தினருக்கு மட்டுமன்றி அனைவருக்கும் வேதனையைத் தந்தது. இவரது பணிகளைச் சிறப்புச் செய்து இலண்டனில் வாழும் சிவ. தணிகாசலம் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு. அமுதசாகரன் அடைக்கலமுத்துவின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி சாந்தி!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



தமிழ்மொழியை அமுது என்று பாவேந்தன் போற்றினான். அமுது என்று ஓர் ஆத்மா தமிழ் மொழிக்கு அழகு செய்துவிட்டு அமர உலகுக்கு தமிழ் பகிரச் சென்றுவிட்டது. புலமையால் பெருமை பெற்ற புலவர் அமுதுவுக்கு நினைவு அஞ்சலியாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் ஆனந்தமடைகின்றேன். அன்பர் சிவ. தணிகாசலம் அவர்களின் கடின முயற்சியினால் வெளிவரும் இந் நூல் சிறந்த ஆவணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அடியேன் இலண்டன் மாநகரம் வந்தபோது ஈழபதீஸ்வரர் திருக் கோயிலில் சிவ. தணிகாசலம் அவர்களின் தந்தையின் நினைவாக வெளிவந்த "அர்ச்சனை மலர்கள்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டேன். அந்த விழாவில் அமுதுப் புலவர் அவர்கள் பாமாலை பாடி என்னைக் கௌரவித்த நாள் அகத்தில் பசுமையாக உள்ளது.

பட்டங்கள், விருதுகள், உலகப் பெருமைகள் பெற்ற கவிஞனின் வாழ்வு இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. புலவரின் நாமம் புவியுள்ளவரை நிலைக்கட்டும். என் இனிய வாழ்த்துக்கள்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னுரை
## "எழுத்துக்குள் இளவாலை அமுது"



எழுது - அது
எதிர்கால விழுது! என்பார்கள்.
எழுதி வைக்காத
வரலாறு வறண்டு போன நதி!
இன்று வரலாறு
நாளை கதை
மறுநாள் கனவு
பின்பு பொய் என்று போய்விட்டதைக் கண்டிருக்கிறோம்!
இலண்டன் வாழ் தமிழ் நண்பர்
சிவ. தணிகாசலம் -
அவர் சிரிப்பைப்போல் நூலை விரித்திருக்கிறார்!
இளவாலை அமுது –
எழுந்த ஞாயிறாகக் கதிர்பரப்பிய காட்சிகளைக்
கலையாமல் தீட்டுகின்றார்!
ஈழத்துப் பெரும்புலவரின்
ஈடற்ற வாழ்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருட்டுக்குள் போய் விடாமல்
வெளிச்ச வரிகளால் வேலி போட்டிருக்கிறார்!

தவில் வித்துவானுக்குத் தன் படைப்பைக்
காணிக்கையாக்கும் பக்கம் முதல்
அமுதுப் புலவரின் மறைவினால் வரும்
அழுகை வரை
இந்த நூல் ஈழ வரலாறாக மட்டுமன்றித் தாயகத்
தமிழ் அறிஞர்களின் குறிப்புக்களையும்
கூட்டிக் கொண்டுள்ளது!

இளவாலை அமுதுவை
எழுதி வரும் ஓவியக்காரனாய்
ஆசிரியர் சிவ. தணிகாசலம்
அழகு படுத்துகிறார்
ஆழப் படுத்துகிறார்!
'சந்தியாப்பிள்ளை செய்த புகையிலைக் குறும்பு'
'தாயும் இல்லை தந்தையும் இல்லை
என்ற பொய்க்குத் தண்டனை கொடுக்காத
அருட்தந்தை'
'நடுவிலான் என்று கிருஷ்ணனைக் கூப்பிட்டு
வெந்நீர் கேட்ட இளமுருகனார் 'சுடுதண்ணி' சொல்லுக்குத் தந்த
இலக்கண விளக்கம்
'மறவாதிருக்கும் மனம்' என்று ஈற்றடியை மடியில்
இருந்து எடுத்துக் கொடுத்தது போல் தந்த வெண்பாச் செய்தி!
அன்னை திரேசாவிடம் பிச்சைக்காரன் நாள்தோறும்
எடுத்த பிச்சைக் காசுகளைத் தந்த பேருதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'படார்' என்று கூறிப் பரவசப்படுத்திய

என்.எஸ். கிருஷ்ணனின் நகைச்சுவை

"பதினொரு வயதிலேயே பொருள் தெரியாமலே

கவிதை எழுதத் தொடங்கிய கவிஞர் தாகூர்"

இப்படி இந்நூலில் பரவசப்படும் பக்கங்கள் பல.

செவாலியர் அமுதுப் புலவரின்

சின்ன வயதுப் புலமை 120 பாடல்களை ஒரே

வாரத்தில் மனனம் செய்த மகிமையில் தெரியச் செய்கிறார்.

சூரியன் மறைவைச் சொக்க வைக்கும் கற்பனையில் எழுதிய

அமுதனாரின் அதிசயச் சொல்லாட்சி!

பேராசிரியர் கணபதிப் பிள்ளையே தட்டிக் கொடுக்கும் தமிழனாக,

கங்கைநதி கால் கழுவ

திங்கள் வந்து தலை தடவும் கலைப் பீடத்தே

பொங்குதமிழ் கேட்டவுடன் பூக்களெலாம் தேன்சிந்தும் ஈழநாடு

எனப் பூரிக்கும் சொல்லடுக்கில் பூத்த கவிதை!

சுவாமி ஞானப்பிரகாசரின் அட்டாவதான ஆச்சரியத்தை,

அட்ட அவதானம் உண்டுமக்கு – அதை

யாரும் அறிந்ததே இல்லை ஐயா!

கிட்ட இருந்த எனக்கல்லவோ – அந்தக்

கீர்த்தி தெரியும் தமிழ்ப் புலவா!

என்று பாடும் அமுதனாரின் அழகு நடை!

சிவ. தணிகாசலம் அமுதுப் புலவரைச் சிறைசெய்திருக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத் தமிழ் அறிஞர்கள்,

ஈழத் தமிழ் அறிஞர்கள் என இளவாலை அமுது ஈட்டி வைத்திருந்த தொடர்புகளை விளக்கும் கையேடாக இந்நூல் காட்சி யளிக்கின்றது!

எழுத நினைப்பதை எல்லாம் எழுதக் கூடாது!

எழுத நினைப்பது சிலருக்கு

எழுத வராது!

எழுத நினைப்பது எல்லாம் எழுத்துக்கு முடியாது!
இதற்கிடையில்

எழுத வேண்டும் என்பதை எழுதி விட வேண்டும்!

சிவ. தணிகாசலத்திற்கு

எழுத வருகிறது!

இளவாலை அமுதுவை

நேரில் பார்ப்பதுபோல்

தேரேற்றிக் கொண்டு வந்திருக்கிறார்!

தமிழ்ப் பெருமக்களே!

தரிசனத்திற்குத் தயாராகுங்கள்!

அன்புடன்
அருணை பாலறாவாயன்
தமிழ்ப் பேராசிரியர்
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்துறை வாழ்நாட் பேராசிரியரின் வாழ்த்து



"உடல்வலிமை, மனவலிமை, அறிவுவலிமை, உணர்வுவலிமை, ஆத்மீகவலிமை இவை அனைத்தும் உடையவனே வாழ்க்கையில் பரிபூரணநிலையை அடையமுடியும். இவர்களால் மட்டுமே சாதனை படைக்க முடிகின்றது. இதனால்தான் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று பாடி வைத்தார்கள். இத்தகைய மனித விழுமியங்களை மனித தத்துவங்களை உள்வாங்கித் தன் வாழ்க்கைப் பயணத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் புலவர் இளவாலை அமுது அவர்கள்." என்று செவாலியர் கலாநிதி புலவர் அடைக்கலமுத்து பற்றி அன்பர் தணிகாசலம் எழுதியுள்ள நூலிலே பொருத்தமாகக் கூறியுள்ளார்.

எங்கள் எல்லோருடைய மனங்களிலும் நிறைந்துள்ள அமுதுப் புலவர், தணிகாசலத்தினுடைய மனத்தில் நிறைந்ததும் வியப்பில்லை. ஆனால் நண்பர் தணிகாசலம் தன்னுடைய நல்ல தமிழ் நடையிலே அப்புலவருடைய சிறப்புமிகு வரலாற்று நிகழ்வுகளையெல்லாம் கோவைப்படுத்தி நமக்குத் தந்து மகிழ்கிறார். 2003ஆம் ஆண்டு மனோன்மணியும் நானும் இலண்டன் சென்றபோது புலவர் அமுது அவர்களுடன் நண்பர் தணிகாசலம் குடும்பமும் இணைந்து ஒரு விழாவினை ஒழுங்குசெய்து எங்களுக்குச் சிறப்புச் செய்தனர். இப்படி அமுதுப் புலவருடன் இணைந்து நின்ற நாட்கள் நினைவழியா நாட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவரைப் பற்றி அறியாத பல தகவல்களைச் சுவையாக தணிகாசலம் இந்த நூலிலே தருகிறார். "என் ஆத்மாவிற்குள் ஆழமாகப் பதிந்துவிட்ட அற்புத மனிதர்களைச் சிந்திக்கவும் எழுதவும் இந்த நூல் வழிவகுத்தது. இவ்வாறான ஒருநிலையில் எனக்கோர் விழிப்புணர்வைத் தந்து தனது பணியைத்தொடர என்னை ஊக்குவித்துச் சென்ற அமுதுப் புலவர் அவர்களின் பாதங்களை வணங்கிப் பணிகின்றேன்." என்று நூலை நிறைவுசெய்யும் நூலாசிரியரை மனமுவந்து பாராட்டுகிறேன். அமுதுப் புலவரைத் தன்னுடைய நூலாலே நமக்குப் பின்வரும் சந்ததிகளெல்லாம் அறியும்படி வைத்தமைக்கு அவருக்கு நாம் நன்றி கூறுகிறோம். அமுதுப் புலவர் பாதம் பணிந்து நண்பர் தணிகாசலம் பணி மேலும் மேலும் ஓங்கி வளர வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
Ph.D. (Edinburgh), D.Litt.(UJ)
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய பணி...



கடந்த ஆண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து போயிருந்தேன். பத்மநாப ஐயரைச் சந்தித்தபோது பேராசிரியர் செல்வ கனகநாயகம் இலண்டன் வரவிருக்கும் செய்தியை அவர் சொன்னார். அவர் அமுதுப் புலவர் நினைவுப் பேருரை ஆற்றவரும் செய்தியையும் ஐயரே அருளினார். பிறகென்ன இல்.ஃ.பட்டில் தங்கியிருந்த என்னை பாதாள ரயில், பேரூந்து ஆகியவற்றில் ஏற்றி க்றீன்.ஃ.பிட் நகர மண்டபத்தில் இறக்கினார் ஐயர்.

இங்கிலாந்தில் இலக்கிய ஒன்றுகூடல்களில் கலந்துகொள்ளும் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதை ஏலவே கண்டிருந்தேன். ஆனால் அமுதுப் புலவர் நினைவுப் பேருரையை கேட்கக் கூடியிருந்த கூட்டம் என்னைப் பிரமிக்க வைத்தது. யாழ்ப்பாணத்தார் மீது குறிப்பாகக் கத்தோலிக்கர் மீது நான் வைத்திருக்கும் மதிப்பு ஒருபடி உயர்ந்தது.

யாழ். குடாநாட்டிலிருந்து வெகுதொலைவில் இருக்கும் நெடுந்தீவு தமிழ் உணர்வுக்குப் பேர்போனது. தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள் பிறந்த மண் அது. அமுதுப் புலவரின் தாயகமும் அதுவே. நெடுந்தீவு மக்கள் பேசும் தமிழில் சில பழந்தமிழ் சொற்கள் பயில்வதை அவதானித்திருக்கின்றேன்.

எமக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் என்ற மட்டிலும், ஆழ்ந்த தமிழ் அறிவு படைத்தவர் என்ற மட்டிலும் தாம் எழுதிய நூல்கள் மூலம் கிடைத்த வருவாயை போரால் அல்லற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மக்களுக்கு வழங்கிய தண்ணளி வாய்ந்தவர் என்ற காரணத்தாலும் செவாலியர் அடைக்கலமுத்து என் மதிப்பில் உயர்ந்து நிற்கின்றார்.

நண்பர் சிவ. தணிகாசலம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், ஓர் இலக்கிய ஆர்வமிக்க இளைஞராக எனக்கு அறிமுகமானவர். போர்க்காலத்தில் அவர் புலம்பெயர்ந்து போனதிசை அறியாதிருந்தேன்.

அமுதுப் புலவருக்கு அவர் அணுக்கரான செய்தியை அண்மையில் தான் அறிந்தேன். அவர் செய்த நல்வினையின் பயனாக அவர் தக்கார் ஒருவரைச் சென்றடைந்ததாகவே கருதுகின்றேன். முதிர்ந்த ஞானப்பழமாக "அமுதர்" கனிந்த நிலையில் தணிகாசலம் அவரோடு செலவிட்ட பொழுது தவப்பொழுதாக வாய்த்திருக்கிறது. அதன் பெறுபேறுதான் "செவாலியர் இளவாலை அமுது" என்ற இந்நூல்.


தமிழ் உலகம் இதை ஏற்றுப் பயன்பெறுக!

கவிஞர் சோ. பத்மநாதன் (கவிஞர் சோ.ப)
"ஏரகம்"
பொற்பதி வீதி
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மண்ணிலிருந்து ஒரு குரல்



இணுவிலைச் சேர்ந்த அன்பர் திரு. சிவ. தணிகாசலம் அவர்கள் இலக்கிய ஆர்வலர், ஆய்வுள்ளம் கொண்ட அருளாளர் என்பதை என் முதற் சந்திப்பிலே அறியமுடிந்தது. புலம்பெயர்ந்து இலண்டன் மாநகரில் வாழ்ந்தாலும் நம்மவர் சிலரைப்போல்,

"தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளம்"

கொண்டவர்களாய் வாழாமல்,

"தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம் கொண்டு"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற பரந்துபட்ட நோக்கோடு, தமிழ்த்தொண்டிலும், சமயப் பணியிலும் ஈடுபட்டு தன்னையே தான் மேற்கொண்டுள்ள பணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனைப் பூக்களாக்கியுள்ள அன்பர் என்பதை என்னால் அறிய முடிந்தது.

நெடுந்தீவில் பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் புனித வளனார் துறவற சபையினரால் நடாத்தப்பட்ட கலாசாலையில் கல்வி பயின்று இளவாலையில் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி இறுதிக்காலத்தில் இலண்டனில் இன்னுயிர் நீத்த செவாலியர் கவிஞர் அமுது அவர்களின் கவிதையில் நயம் கண்டு சிறப்புக்களை அறிந்து தெரிந்து "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற எண்ணத்தில் ஆய்வு நூல் ஒன்றை எழுதி வெளியிட உள்ளார் என்பதறிந்து பேர் மகிழ்வும் பேருவகையும் கொண்டேன்.

தான் எழுதும் நூல் சில எழுத்தாளர்களின் நூல்போல் காற்றோடு காற்றாக கலந்து மறைந்துவிடாமல் காலத்தை வென்று நிலைபெறவேண்டும் என்பதற்காக கவிஞர் அமுது அவர்களின் சில உண்மைத் தரவுகளைப் பெறும் நோக்குடன் நெடுந்தீவுக்கு வருகை தந்தார்.

நெடுந்தீவின் துறைமுக வாயிலில் "என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை ஏற்படுத்தி "தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்கிய தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையைக் கண்டவுடன் அவரைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டதுபோலும். எனவே அவர் தொடர்பான தேடுதலையும் மேற்கொண்டார். இவரின் ஆய்வுள்ளம் அடுத்ததாக அடிகளாரைப் பற்றியதோ நாம் அறியோம்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ணல் வேண்டும்.
திண்ணிய நெஞ்சம் வேண்டும்.
தெளிந்த நல்லறிவு வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாரதியின் இலக்கியத்திற்கு இலக்கணமாகத் திகழும் திரு. சிவ. தணிகாசலம் அவர்கள் கலை, இலக்கியம் ஆகியவற்றின் நல்லறிவும், ஆற்றலும் கொண்டு காண்பவர் அனைவரையும் கவர்ந்திழுக்கும் தோற்றமும் உடையவராகத் திகழ்கின்றார்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற வான் புகழ் வள்ளுவரின் திருக்குறள் தான் எத்தனை உண்மை என்பதனை இவர் பிரிந்து சென்றபோது என் உள்ளம் எண்ணியது.

இலக்கியச் செம்மல் சிவ. தணிகாசலத்தின் பணியினால் தமிழ் கூறும் நல்லுலகில் பல நல்ல தரமான நூல்களை நாம் எதிர்பார்க்கலாம்.

வாழ்க தமிழ்! வளர்க இவர் பணி!

கலாபூஷணம், புலவர் அரியநாயகம் J.P
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதயமேடையில்



"அமுது" என்றிடும் அடைக்கல முத்து
அடிய னேனையும் ஆட்கொண்ட முத்து
எமது வாழ்வின் ஏற்ற இறக்கம்
எல்லா வற்றிலும் கரிசனை காட்டிய
அமுது என்றிடும் ஆசான்; என்னை
அன்பினால் பிணைத்து ஆதரவளித்த
நாள்களை எப்படி நான் மறந்திடுவேன்?
"வல்லைப் பாலத்திற்கு அப்பால் பிறந்தவன்
பண்ணைப் பாலத்திற்கு அப்பால் பெண் எடுத்தவன்".
என்னை இப்படித்தான் அறிமுகம் செய்து
அமுது மகிழ்வார்.
புன்னகை சொரியும் பொன்மன முடையான்,
பூவாய் உதிரும் புதுத்தமிழ் சொரிவான்.
சீதளம் மிகுந்த சீமையில் வாழ்ந்தும்
ஊர்நலம் மறவா உயர்தனிச் செம்மல்
நண்பர், சுற்றம், உறவுகள் உடனே
என்றும் அன்பாய் இருந்தர சாண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கேறிய கபில பரணர்
காவியம் கண்ட கம்பன், வில்லி
குயிலின் பாட்டைக் காவியமாக்கிய
மீசைக் கவிஞன் பாரதி, இப்படிப்
பற்பல கவிஞர்கள் பாதையில் வந்த
அமுது என்றிடும் அடைக்கல முத்து.
என்றைக்கு உங்களைக் கண்டேனோ நான்
அன்றைக்கே உன் காதலில் விழுந்தேன்.
கடைசியாகக் கொழும்புத் துறையில்
கட்டி யணைத்து கன்னம் மோந்த
ஈரப்பசையோ மாறாதென்றும்
இதயம் வரையும் இடம்பிடித்துள்ளது.
உங்கள் அன்பு வார்த்தைகள்
இதழ்களால் இறங்கி இதயம் செல்லும்.
ஈழத் தமிழர் புலமைக்கிருந்த
அடையாளங்களில் அமுதும் ஒருவன்.
உங்கள்
அன்புமகனார் அருட்கலாநிதி
வண. ஏ.ஜே.வி. எஸ்சுடனே நான்
இருபதாண்டுகள் வரை உடன் பணிபுரிந்தவன்.
காணும்போதெல்லாம் உங்களைப் பற்றிக்
கதைப்பதின் மகிழ்ச்சியை
அதிவண. கலாநிதி ஜஸ்ரின் அடிகள்
அனுபவித்திருப்பார் என நினைக்கின்றேன்.
அமுது என்றிடும் அடைக்கலமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிறந்த நாளை மறவாதென்றும்
கடிதமொன்றும் காசோலை யொன்றும்
அனுப்பிய உங்களை மறத்தல் ஒல்லுமோ?
கூட்டமாயினும் குழுநிலையாயினும்
பாட்டும் பொருளும் "பகிடியும்" கலந்து
மகிழ்ச்சிக் கடலில் நீச்சலடித்த
மாபெரும் புலவன் அமுது என்றிடும்
அடைக்கல முத்து, என்றும் எங்கள்
இதய மேடையில் கொலுவீற்றிருக்கிறார்.

பழந்தமிழ் பண்பாட்டின் பல விழுமியங்களை பாதுகாக்கும் நெடுந்தீவின் மகன் அமுது. மண்வளமும் மனவளமும் மிக்க இளவாலையின் மருமகன். தமிழ் வளர்த்த ஞானப்பிரகாசர் வரலாறு கூறும் "நெஞ்சே நினை" தமிழ் அன்னைக்கு அவர் சூட்டிய வைர மாலை. அவரது எழுத்தும் பேச்சும் ஈழம் தொட்டு இங்கிலாந்து வரை பரந்துபட்டது. அமுது அவர்கள் விட்டுச் சென்ற தமிழ்ப் பணியைத் தொடரும் திரு. சிவ. தணிகாசலம் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



எனது இதயத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் அமுதுப் புலவர்பற்றி சிந்தனைச்சிற்பி சிவ. தணிகாசலம் அவர்கள் படைத்திருக்கும் ஆய்வு நூலைப் படிக்கும் பாக்கியம் பெற்றேன்.

மறைந்தோரைப்பற்றிப் படிக்கும்போது ஏற்படும் கண்ணீர்த்துளி மறைந்து, மாமனிதத் திலகம் அமுதுப்புலவருக்குப் படைக்கப்பட்டிருக்கும் இந்த ஆய்வியல் நூலைப் படிக்கும்போது எனக்கும் இப்படி ஒரு மரணம் வராதா என்றுதான் நினைக்கத்தோன்றுகிறது.

ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு பலரை உதாரணம் காட்டமுடியும். ஆனால் "ஒரு மானுடக் கவி இப்படித்தான் வாழவும், மறையவும் வேண்டும்" என்பதற்கு எனக்கு அமுதுப்புலவரைத் தவிர வேறு எவரேனையும் தெரியவேயில்லை.

புலவர் அவர்களின் மனைவி, நோயாகப் படுக்கையில் இருந்தபோது, தனது மனைவியை ஒரு குழந்தையைப்போல் பராமரித்த அமுதுவின் நல்லுள்ளம் அறிந்தே அவர்பால் எனக்கும் எனது துணைவியாருக்கும் மாறாத பற்றுதல் ஏற்பட்டுப்போனது.

டாக்டர் இந்திரகுமார் அவர்களின் மரணாஞ்சலிக்காக வந்திருந்த வேளையில், காலை எட்டுமணிக்கு, எழுத்தாளர் எம். ரி. செல்வராசா அவர்களுடன் நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்து என்னை அழைத்துச்சென்ற அமுதுப்புலவர் என்னருகே அமர்ந்திருந்து, அஞ்சலி உரையும் நிகழ்த்தும்போது அவருக்கு 91 வயது என்பது எனக்குள் தொடர்ச்சியான பதற்றத்தையே உருவாக்கியிருந்தது.

பின்னொருநாள் எனது குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு ஐயாவைக் காணவந்தவேளை "உங்களுடைய ஆசை என்ன ஐயா?" என்று கேட்டேன். "இப்படி இயங்கிக்கொண்டு இருக்கும்போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உயிர் பிரிந்துவிடவேண்டும்" என்று சொன்னார். அதன்பின் ஒரேயொரு வாரந்தான். அதுகூட வைத்தியசாலையில் அவர் உயிர் பிரிந்த செய்தி, அவருடைய ஆசையை நிறைவேற்றியது கண்டேன்.

அமுதுப் புலவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது "அமுதுப் புலவர் அவர்களின் மரணம், ஒரு திருமண மரணம்" என்றும், "ஒரு மனிதன் மறைய வேண்டுமென்றால் அமுதுப் புலவரைப்போல் மறையவேண்டும்" என்றும் சொன்னேன்.

ஏன் அது திருமண மரணம்? என்று என்னைச் சிலர் கேட்டார்கள். ஐயா தனது அனைத்துக் குழந்தைகளையும் நல்ல மனிதர்களாகப் படைத்துச்சென்றார். தனது மனைவியைத் தூயஅன்புடன் நேசித்து வாழ்ந்தவர். அவர் மறைந்தபின் அனைத்துப் புகழுடனும் தனது மனைவியைத் தேடிச்சென்றார். அதனால்தான் இதனையொரு "திருமண மரணம்" என்றுரைத்தேன்.

இத்தனை பெரும் பேறுபெற்ற புலவர் அவர்களைப் பற்றி, ஒரு வரலாற்றாய்வியல் நூலை மிக அற்புதமாகப் படைத்து நிற்கும் திரு. சிவ. தணிகாசலம் அவர்கள் இந்த நூலினைப் படைக்க மிகச் சரியான தெரிவாக எனக்குத் தோன்றுகின்றார். காரணம் அமுதுப்புலவர் அவர்களின் இறுதி மாணவரும் திரு. சிவ. தணிகாசலம் அவர்களே. படைப்பாளர் பற்றிய படைப்பைப் படைத்து நிற்கும் நூலாசிரியரின் இருகரம் பற்றிப் பாராட்டுகின்றேன்.

என்றும் கனிந்த அன்புடன்
டாக்டர். நாகேஸ்வரன் அருள்ராசா
(கல்லாறு சதீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தமிழ் அரங்கத்தின் மூலைக்கல்



அமுது ஐயா.....

இலக்கிய சங்கமம் நீங்கள்,

மீட்டிப் பார்க்கின்றேன்,

தமிழ் உணர்வாளர் சிவ. தணிகாசலம்

வீட்டில் தமிழ் விருந்து,

பெருமாட்டி தங்கம்மா அப்பாக்குட்டி

வித்தகர் கிருபானந்தவாரியார்

பாவேந்தன் பாரதிதாசன் நினைவு விழாக்கள் கண்டு,

இந்த நிகழ்வுகள் வானலையில் வர..

உலகப் படைப்பாளிகள்

பிரான்ஸிலிருந்து முகத்தார் ஐயா, வண்ணைத் தெய்வம் முந்தி வர, பேராசிரியர்கள் குணசிங்கம், பால சுகுமார் பேசவர- முல்லை அமுதனும் நூல்களுக்கு அரங்கமைக்க, மாதினியும் அணிசெய்ய,

அமுது ஐயா உங்கள் தலைமையில்

இலக்கிய சங்கமம்...

இலண்டன் தமிழ் வானொலியில்

அமுதம் கடைந்த பொழுதுகள் அவை...

அங்குதான் இலக்கிய சங்கமம் கடைந்த

தமிழ் அமுதம் உங்கள் பழகு தமிழை ருசித்துக்கொண்டேன்...

வேறோர் உலகம் சென்றதாய்

அமரர் ஆனதாய்ச் சொல்லுகிறார்கள்.

என் செல்லிடத் தொலைபேசித் தொடர்பில் உங்கள் பெயரை இன்னமும் முதற்பெயராய் பார்க்கின்றேன்-

ஒவ்வொரு நாளும் உங்களோடு தொடர்பு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் என்றும் எங்கள் இலக்கியப்பரப்பில்
வாழும் தமிழ்க்கடல் அமுதம்...
தூரம் செல்லாத ஈழ தமிழ் உணர்வு நீங்கள் அமுது ஐயா..
சபை மெய் மறக்கச் சிரிக்கக் காலக் கடைசியில்
புத்தக வெளியீட்டில்..
அரங்கக் காற்றை,
ஈழத்தமிழின் உச்சரிப்பு உளியால் செதுக்கியது
உச்சரிப்பின் உரைகல்
ஈழமொழியின் அகராதியாய் அது.
அந்தச் சொற்பொழிவு வரலாற்றில் பதிந்துவிட்ட
தமிழ் அரங்கத்தின் மூலைக்கல்.
வேறென்ன?
எங்கள் தமிழ் வேலிக்கு கதியால் போட்ட
செவாலியர் உங்களைப் பணிவது
எங்கள் தமிழ் எம்மை வாழ்த்துவதற்கே...
இலக்கியச் செல்வம் இனிய நண்பர்
தமிழ் இலக்கியத்திற்கு ஒரு வைரக்கல்லை
ஊன் உறக்கம் மறந்து
உள்ள உண்மை உணர்வால் உளி செய்து
கடைந்து அமுதுப் புலவர் வரலாறாய்
இங்கே பிரகாசிக்க வைத்துள்ளார்.

நடராசா கண்ணப்பு
அரங்க ஆற்றுகையாளர்-
"அரங்கம் காட்டும் அதிசய வாழ்வு"
அன்னை கலைக்கழகம் நிறுவனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. துரையப்பா கணேசலிங்கம்

## (இளைப்பாறிய மாவட்டப் பொறியியலாளர்)

## வாழ்த்து



அமுதுப்புலவர் பல விருதுகள் பெற்ற நாடறிந்த ஒரு ஈழத் தமிழறிஞர். செவாலியர் விருது பெற்றவர். அன்னாரை நான் அறிவேன், அவரை மகிமைப்படுத்தும் மலரை வெளியிடுகின்ற இலக்கிய சங்கம ஸ்தாபகர் சிவ. தணிகாசலம் அவர்கள் எடுக்கும் இந்த முயற்சி, தமிழ் கூறும் உலகம் உள்ளளவும் பாராட்டப்படும். நானும் இந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த வாய்ப்புக்கு எங்கள் குடும்பத்தவர் அனைவரின் சார்பிலும் நன்றி கூறுகின்றேன். வாழ்க இலக்கிய சங்கமம், ஓங்குக அமரர் அமுது ஐயா புகழ்!

இவ்வண்ணம்
இளைப்பாறிய மாவட்டப் பொறியியலாளர்
துரையப்பா கணேசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

## ஒளிர்ந்தவர் ஒளி காட்டி
## ஒளி வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்



ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி ஞாலத் திருள்கற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னே ரிலாத தமிழ்

மலையிடைத் தோன்றி உயர்வான எண்ணம் உள்ளவர்கள் வணங்கிட விளங்கி ஓவென்று அலைஒலி எழுப்பும் கடலால் சூழப்பட்ட பூமியின் இருளை அகற்றுவன எவை தெரியுமா? ஒன்று கண்ணைப் பறிக்கும் தனித்தன்மையுடைய சூரியன். மற்றையது தனக்கு நிகரிலாத தமிழ்மொழி. புறஇருள் அகற்றும் கதிரவன் போன்று அகஇருள் அகற்றும் ஆற்றல் கொண்டது தமிழ் என்பது இக்கவிதையின் பிரகடனமாகிறது.

தமிழின் இந்த தன்னேரிலாத அகஇருள் அகற்றும் ஆற்றல் தமிழ் நூல்களாலேயே தமிழரை வந்தடைகின்றது. தமிழ்நூல் ஒன்றைப் படைக்கையில் அதனைப் படைப்பவர் தன் அகத்தில் காணும் ஒளியையே தமிழ்நூல் படைப்பவர்க்கு தன் எழுத்தால் சொல்லால் படைப்பால் காட்டுகின்றார். இந்த அகஒளியை நூலாசிரியர் எவ்வாறு பெறுகின்றார்? எங்கிருந்து பெறுகின்றார்? என்ற கேள்விக்கு மரபின் வழி பெறுகின்றார், தம் முன்னோர் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றார் என்ற விடைகளைத் தமிழர் வாழ்வுக்கும் தமிழர் மொழிக்கும் இலக்கணம் கண்ட தொல்காப்பியம் தருகிறது.

இதனால்தான் தன் மரபு என்ன என்பதை நூலாசிரியர் தன் எழுத்தில் வெளிப்படுத்துதலும் தன் முன்னோர் யார் என்பதைத் தன் படைப்பில் பதிப்பதும் ஒரு பொது வழக்காகிறது. இதனை நான் மதிப்புரை எழுதும் இந்நூலில் திரு. சிவ. தணிகாசலம் அவர்கள் அழகாகச் செய்துள்ளார். தன்னுடைய மரபு என்பது யாழ்ப்பாணத் தமிழ் மரபு என்பதை ஆசிரியர் எடுத்த எடுப்பிலேயே காட்டியுள்ளார். தான் பழகிய போற்றிய ஆசிரியர்கள், பேச்சாளர்கள், கலைஞர்கள் பட்டியல் ஒன்றைத் தன் எழுத்தின் இடையிடை சொல்லிச் செல்லும் உத்தியின் மூலம் இதனை நூலாசிரியர் செய்கின்றார். இந்தத் தந்திரோபாயத்தைச் சரிவர விளங்கிக் கொள்ளாவிட்டால் நூலாசிரியர் சுயவிளம்பரம் செய்கின்றாரா என்கிற ஐயத்துள் வாசகர் மனம் செல்லக் கூடும் என்பதற்காகவே இதனை நூல் மதிப்புரைக்கு முன் விளக்க வேண்டிய தேவை எழுகிறது.

மேலும் நூல் மதிப்பீடு என்று சொல்லும் பொழுது நூலாசிரியர் எதனைக் கூறியுள்ளார்? ஏன் கூறியுள்ளார்? எப்படிக் கூறியுள்ளார்? அது எந்த அளவுக்கு வாசிப்பவரால் விளங்கப்படக் கூடியதாக உள்ளது? நூலைப் படிப்பதினால் விளையும் பயன் என்ன? என்பன போன்ற பல கேள்விகளுக்கான விடைகள் மூலமான நூல் குறித்த திறனாய்வாக அமைகிறது.

இந்நூலில் நூலாசிரியர் எதனைக் கூறியுள்ளார்? குருவருள் இன்றி திருவருள் இல்லை என்ற தமிழ்மரபின் அடிப்படையில் புலத்தில் தன் குருவாக அமைந்த தமிழ்ப் பெரியார் அமரர் அடைக்கலமுத்து ஐயா குறித்துக் கூறி திருவருளைத் தேடியுள்ளார். அதாவது கவிஞராக, ஆசிரியராக, புலமையாளராக, கேட்பவர் காதினிக்கப் பேச்சுரைக்கும் பேச்சுக்கலை வல்லுநராக, ஈழத்துக் கத்தோலிக்க மதத்தின் தனித்துவமான கிறிஸ்தவ எழுத்தாளராகவும் நூலாசிரியராகவும் புலத்துத் தமிழிலக்கியத்தின் சாதனை எழுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளராகவும் பேச்சாளராகவும் பன்முகம் காட்டிய ஈழத்துத் தமிழ்ப் பெரியார் அடைக்கலமுத்து என்னும் இயற்பெயர் கொண்ட இளவாலை அமுதுப் புலவர் குறித்த நூல். தமிழுக்கும் அமுது என்று பெயர் என்ற பாரதிதாசனின் கவிதாவரிகள் மனித உருவான வடிவு அமுதுப்புலவர் அவர்கள். அமுதுத் தமிழ் படைப்புக்கள் என்று தனியான இலக்கிய அலகு ஒன்றையே நிறுவும் அளவுக்கு அவர் ஆக்கங்கள் செந்தமிழின் அத்துணை துறைகளிலும் சாதனைப் படைப்புக்களாக இலங்கின. இத்தகைய ஒரு பெரியார் தமிழோடு வாழ்கின்றார் என்பதற்கு உதாரணமாக அவரின் அன்பு மாணவர் சிவ. தணிகாசலம் அவர்கள் அமரர் அமுதுப் புலவர் பற்றி எழுதிய இந்த நூலும் பன்முகம் கொண்டதாக இலங்குகிறது.

அடுத்து இந்நூலை ஏன் எழுத முயன்றார் என்பதைஎடுப்பின் குருவாக தான் ஏற்ற ஒருவரின் உள்ளத்து வார்த்தைகளை உரசிப்பார்த்து அவர் குறித்த உன்னதமான படைப்பொன்றைக் கொண்டுவருவதற்காக எழுதியுள்ளார். அதாவது அமுது என்னும் தமிழ்க் கலைக்களஞ்சியம் ஒன்றை தன் முயற்சியால் அவரிடம் இருந்து பெற்ற பதினைந்து மணிநேர வாய்மொழியுடனும் தான் அவருடன் கொண்ட பாச உறவால் பெற்ற அனுபவங்களுடனும் நூலாசிரியர் நூல் ஒன்றுக்குள் அடக்க முயன்றுள்ளார். இதன் வழி தமிழர் பெருமரபாம் குருபக்திக்கு மற்றொரு ஏகலைவனாக திரு. சிவ. தணிகாசலம் அவர்கள் உயர்ந்துள்ளமையை நூல் எடுத்து விளக்குகிறது.

தொடர்ந்து நூலாசிரியர் எதைக் கூறியுள்ளார் என்பதை எடுத்து நோக்கினால் அமுதுப் புலவர் குறித்த பல அரிய தகவல்களை இதுவரை வெளிவராத சுவையான செய்திகளை இந்நூல் வெளிக் கொண்டு வந்துள்ளது. இதனால் தமிழிலக்கிய உலகில் அமுதுப் புலவர் குறித்த ஆய்வுகளுக்கு உதவியும் புரிகிறது. நூலாசிரியர் அமுதுப் புலவர் பற்றி எப்படிக் கூறியுள்ளார்? புதினம் பத்திரிகை ஆசிரியர் ராஜகோபால் அவர்களால் மடுமாதா காவிய நூல் வெளியீட்டில் அடைக்கலமுத்து ஐயா அவர்களுக்கு அறிமுகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவ. தணிகாசலம் அவர்கள் ஒருவகையில் அமுதுப் புலவரின் தமிழாலும் அன்பாலும் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இந்நூலை வடித்துள்ளார். இதனால் வியத்தலும் நயத்தலும் ஆக அமுதுப் புலவர் குறித்தும் அவர் ஆக்கங்கள் பற்றியும் கூறியுள்ளார். இதுவே இந்நூலின் பலமாகவும் பலவீனமாகவும் அமைகிறது. அமுதுப் புலவர் குறித்த அவரின் வாய்மொழிக் குறிப்புக்களையும் பிறர் உரைகள் பலவற்றையும் தருவது நூலின் பலமாக உள்ளது. ஆயினும் புகழ்ந்துரைத்தல் என்னும் தன்மைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தல் நூலின் சமநிலை ஆய்வுத்தன்மையை பலவீனப்படுத்துகிறது. இதனால் இந்நூலை எந்த வகைக்குள் அடக்குவது என்ற ஒரு கேள்வி எழத்தான் செய்கிறது. இருந்த போதிலும் ஒரு மாணவன் குருவுக்கு செய்யும் மதிப்பளிப்பு – ஒரு இலக்கிய மகன் தன் இலக்கியத் தந்தையை வெளிப்படுத்தல் என்னும் கோணத்தில் பார்க்கையில் நூல் முழுமை பெறுகிறது.

நூலைப் படிப்பவர் எந்த அளவுக்கு நூலை விளங்கிக் கொள்வர் என்ற கேள்வி அடுத்ததாக எழுகிறது. சிவ. தணிகாசலம் அவர்கள் இயல்பாகவே இலக்கியத் தாகம் உள்ளவர். அந்த தாகத்தில் பிறந்த தேடலில் மலர்ந்த இந்த நூல் சிவ. தணிகாசலத்தின் இலக்கியப் பயிற்சியையும் வெளிக் கொணரச் செய்கிறது. விடயங்களைச் சொல்லும் பொழுது இலக்கியத் துடனும் இயல்பு உதாரணங்களுடனும் இணைத்து எழுதும் சிவ. தணிகாசலத்தின் நடை தனித்துவமாக உள்ளது. நூலுக்குள் பலவிடயங்களைத் தந்து உரைநடைக் காவியப்போக்காகவும் நூலை மாற்றிவிடுகிறது. இது வாசிப்பவர்க்கு ஒரு தனிப்பட்ட எழுத்தாளர் குறித்த தகவல்களை வாசிக்கின்றோம் என்பதற்கு அப்பால் நூலுடனான ஒன்றிப்பு ஒன்றுக்கு வாசகரை அழைத்துச் செல்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அமுதுப் புலவரின் ஆன்மா சிவ. தணிகாசலத்தில் வியாபித்து நின்று எழுதுவது போன்ற பிரமை இந்நூலைப் படிக்கையில் ஏற்படுகிறது. இதன்வழி தனக்கும் தன் குருவுக்கும் இடையிலான ஒன்றிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழத்தை வெளிப்படுத்துவதில் சிவ. தணிகாசலம் அவர்கள் அளப்பரிய வெற்றி பெற்றுள்ளார்.

இனி நூலின் பயன் என்ன என்று பார்க்கும் பொழுது தாயகத்தின் அற்புதமான படைப்பாளன் கவிஞர் ஆசிரியர் அமுதுப் புலவர் அவர்களைக் குறித்த உறவாடல் ஒன்றை நூல் ஏற்படுத்துகிறது. இந்த உறவாடல் அமுதுப் புலவர் குறித்த சிவ. தணிகாசலம் அவர்களின் இதயத்து சிந்தனைத் தீச்சுடர்களாக அமைவதினால் இந்நூல் தமிழிலக்கியத்திற்கு ஒளியூட்டும். அமுதுப்புலவர் குறித்த சிந்தனைகளுக்கு வளமூட்டும். வாசகர் மனதில் இலக்கியச் சுவையும் அமுதுப் புலவர் குறித்த ஆழமான பதிவையும் ஏற்படுத்தும். இது அவர் வழியில் புதிய படைப்புக்கள், படைப்பாளர்கள் பிறக்க வழிவகுக்கும். இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருளும் தமிழன்னை நல்லாசியும் வேண்டி விடைபெறுகின்றேன். சொற்சுவையும் பொருட்செறிவும் உள்ள இந்நூலை இதன் குணம் நாடி குறைவிலக்கி ஒவ்வொரு தமிழரும் படித்து இன்புற வாழ்த்துகின்றேன்.

செந்நெறிச்செல்வர் சூ.யோ. பற்றிமாகரன்
BA Special Diploma (Oxford) BSc PGDiploma MA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பொருளடக்கம்

## முதலாம் பாகம்


1. என் இலக்கிய உணர்வுகளோடு ஒன்றித்த வரலாற்று கலைஞர்களின் வாழ்த்துக்கள் 3
2. அமுதுத் தமிழ்த்தேரை இழுப்பதற்கு என்னுடன் கூடி வடம் பிடித்தவர்கள் 17
3. ஏந்திய விளக்கில் எண்ணெய் வார்த்து தீபத்தின் ஒளியைத் தூண்டியவர்கள் 23
4. மௌனத்தில் ஓர் உரையாடல் 31
5. அமுதுவின் ஆரம்பப் பள்ளி 35
6. திட்டமிட்ட வாழ்க்கை முறை 52
7. கொலம்பகம் ஆசிரிய கலாசாலையில் அமுது 56
8. பகீரதப் பிரயத்தனம் 57
9. பாடசாலையின் நூற்றாண்டு விழாவிலே சஞ்சிகையின் ஆசிரியர் 61
10. என் தமிழ்த் தாகத்துக்கு இளமையில் நான் கண்ட ஒரு தண்ணீர்ப் பந்தல் வித்துவான் இளமுருகனார் 63
11. "காவியப் பூ வாவியின் யாழ்ப்பாண அன்னம் பண்டிதர்கள் தாய்மடியே" என்று அமுது போற்றும் இலக்கியகலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அமுத நினைவுகள் 71
12. மாவலிகங்கை தாலாட்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கங்கை 77




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பாதுகாவலன், ஈழகேசரி ஆரம்ப எழுத்தின் களம் 82

14. வான் புகழும் வரலாறு, தமிழ் வளர்த்த
நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
அமுதுவின் "நெஞ்சே நினை" 87

15. தமிழ்த்தூதும் தமிழ்க்கங்கையும் 103

16. அமுதுவின் கவிதைகள் - ஒரு பார்வை 109

17. மடுமாதா காவியம் 127

18. தமிழ்க்கங்கையும் அன்பின்கங்கையும் 140

19. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் 144

20. நிறைகுடம் 158

21. இரு செவாலியர்கள் 165

22. அமரர் கல்கி, கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன்,
பேரறிஞர் அண்ணா, சிந்தனைப் பண்ணையில்
சங்கமித்த தமிழ்க் கங்கை 169

23. அமுதுப்புலவருடன் அஞ்சல், நாழிகை
ஆசிரியர் மாலி, விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் 176

24. அமுதத்தமிழுக்கு களம்அமைத்த புதினம்
ஆசிரியரின் நெஞ்சோடு 179

25. கலாநிதி அமுது ஐயாவுடன்
கவிஞர் கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை
ஓர் இதமான மாலை 183

26. வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின்
அரவணைப்போடு 185

27. ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டத்தில்
ஒரு பிதாமகர் 188

28. அர்ச்சனை மலர்களில் அமுது ஐயா 192


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. "வானொலி வரலாற்றில் ஒரு மைல்கல்,
திரையுலகின் கலைக் களஞ்சியம்
பி.எச்.அப்துல் ஹமீத்" - அமுது 197

30. இலண்டன் ஊடகக் கலைஞர்களின்
சில நினைவுகளோடு 200

31. அமுதுவின் இதயத்தில் புல்லாங்குழல்
வாசிப்பவர்களில் ஒரு சிலர் 203

32. நிறைவாக 223

## இரண்டாம் பாகம்

அமுதுவைச் சுமந்த தாயக மண்ணின்
தரிசனம் நோக்கிய இலக்கியப் பயணம் 231

நேர்காணல் (செவ்வி கண்டவர் திரு. முல்லை அமுதன்) 237

## மூன்றாம் பாகம்

அமுதுவின் வரலாறு சொல்லும் நிழற்படங்கள் 269



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 1. என் இலக்கிய உணர்வுகளோடு ஒன்றித்த வரலாற்று கலைஞர்களின் வாழ்த்துக்கள்

## காந்தி கண்ணதாசன்

என் நோவை நீக்கி சாவை சரித்திரமாக்கி தத்துவம் தந்த நல்வரிகளின் நாயகன் அந்த வரிகளைச் செதுக்கிய ஆசனத்தில் அமரப் பாக்கியப்பட்டேன்....அவரின் மகன் காந்தி கண்ணதாசனின் வாழ்த்துக்களுடன்:



யுகக்கவிஞனாய் சிம்மாசனமிட்ட
கவியரசனின் ஆசனத்தில்,
அந்த அமரப்புலவனின் ஆசியுடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதிதேவியிடம் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தர் திருநெறிய தமிழின் ஞானவீறும், விறலும் வெளிப்படுவது உன்னிசையில்.. உன்னிசை கேட்டால் புவி அசைந்தாடும், கல்லும் கனியாகும்...

உலகின் இருளைப்போக்கி பொருளின் உண்மைத் தன்மையை உயிர்களுக்கு அறிய வைத்த உதயசூரியனின் கருணையை உன் குரலால் வெளிப்படுத்தியவன் நீ...

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கும் உன்னிசையின் நுட்பத்தை என்னைப் போன்றவர்களால் அளவிட்டு உரைக்கமுடியுமா?





இலண்டன் நகரிலே உயர்திரு
திரு. தணிகாசலம் அவர்கள்
இயக்கிவரும் தமிழ் இலக்கிய சமயப்
பணி சீரும் சிறப்புடனும் இயங்கிட
வாழ்த்துகிறேன்.
அன்பு ஆசியுடன்
முருகன் திருவருள்
டி. எம். சௌந்தரராஜன்
26.10.'99




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி

இசை இசையென்று இசையையே சுவாசித்த இசை மேதையே ... உங்கள் வாழ்த்து எங்கள் இலக்கிய மன்ற வாசல்வர அமுதப்பயணம் தொடர்கிறது.





உ


இலண்டன் அறிஞர் உயர்திரு
சிவ தணிகாசலம் அவர்கள்
தமிழுக்கு செய்யும் தொண்டை
நான் மிகவும் பாராட்டுகிறேன்
உலகில் எல்லா மொழிகளும்
அவர் அவர்களை [illegible]
சேர்த்து வைக்கிறார்கள்
அந்த நாட்டு மொழிகளின்
வளர வேண்டுமென்று பாடு
படுகிறார்கள் [illegible]
[illegible] இசைக்கு மொழியே
இல்லை. தெய்வ மொழியோ [illegible]
[illegible] இசை
மொழியும் இசையும்
வளர்க [illegible] அன்புடன்
எம்.எஸ். விஸ்வநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் வைரமுத்து

வானம் எனக்கு ஒரு போதி மரம்... நாளும் எனக்கு ஒரு சேதி தரும்... அந்த வரிகளின் நாயகன் வாழ்த்துக்களுடன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்த விகடன்



### உணர்வுப் புத்தகம்!

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அஞ்சல்வழியில் எம்.ஏ. படிக்கிற தணிகாசலம், முதலாண்டு தேர்வு எழுதுவதற்காக லண்டனிலிருந்து சென்னைக்கு வந்தார்.

"படிப்பு ஒருபக்கம் இருக்க, நான் சார்ந்துள்ள லண்டன் தமிழ் இலக்கிய மன்றம் சார்பாகத் தமிழ் பிரபலங்களான சுஜாதா, விசு, நாகேஷ், பூர்ணம் விஸ்வநாதன் உள்ளிட்ட பலரையும் நேரில் சந்தித்து, அவர்களது வாழ்க்கை மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றி உரையாடுகிறேன். இதுபோல நூற்றுக்கும் மேற்பட்ட பிரபலங்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளேன். இவையெல்லாம் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிடுவதுதான் என் நோக்கம்" என்கிற தணிகாசலம், "உலகத் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற புத்தகமாக அது அமையும்!" என்கிறார், கண்கள் மின்ன.

பூர்ணம் விஸ்வநாதனுடன் தணிகாசலம்.

- ஜெயந்த்

104 ■ ஆனந்த விகடன் ■ 24.6.01






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவை மன்னன் நாகேஷ்





நாகேஷ்

"போட்டதெல்லாம் முளைக்கவில்லை"
என்ற பழமொழியை பொய்யாக்கி.
[illegible]

[illegible] /10/99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சிரிக்க வைத்த காட்சிகளில் வயிறு வலிக்கச் சிரித்தேன்,
நீ அழுத காட்சியிலும் எனை மறந்து அழுதேன்.
உனை நேரில் சந்திக்க ஆசைப்பட்டவன் நான்.
என் ஆவலை நிறைவேற்றியவன் நீ!
எனக்கும், என் மனைவிக்கும், என் பிள்ளைகளுக்கும்
உன் கையால் கொடுத்த தோடம்பழச் சாறு
இன்றும் என் நாவிலும், நினைவிலும் இனிக்கின்றது.
இன்று நீயில்லை, அதைநிரப்ப ஆளில்லை.
சராசரி மனிதனும் சரித்திரம் படைப்பான்
என்பதை வாழ்விலே நிலைநிறுத்தியவனும் நீ!
அன்று நீ எனக்களித்த தீர்க்கதரிசனமான வாழ்த்து
இன்று பூமியில் நிதர்சனமானது ஐயா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைஅரசி பீ.சுசீலா

இனிமை, உணர்வு, நுட்பங்கள் அனைத்தும் குழைத்து ஆன்மாவைக் குளிரவைக்கும் பாடல்களைப் பாடுவேன் என்று

"சொன்னதும் நீதானா? சொல் சொல்.. என்னுயிரே.."




இலண்டன் மாநகரில் திரு
[illegible]
தமிழ் சமய பணிகள் மென்
மேலும் வளரவேண்டும்
என்று எல்லாம் வல்ல
இறைவனை மனமாறப் பிரார்த்தி
கிறேன் - இப்படிக்கு
P. Susheela




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்குநர் விசு

மக்கள் அரங்கம் மூலமாக அந்த மண்ணில் பலரைப் பஞ்சப் பாதாளத்தில் இருந்து மீட்டு கல்விக்கண் திறக்க தொலைக்காட்சியில் தொலையாத வாழ்வின் வழிகாட்டியான கலங்கரைவிளக்கானவர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் அன்பழகன்

நீ கேள் என்றார்- புத்தகங்கள் தந்து, தமிழ் புலம்பெயர் மண்ணில் சிறக்க வழி செய்ய முனைந்தார்.

இன்றுவரை அந்த வாக்கை அவர் நிறைவேற்ற எனக்குச் சந்தர்ப்பம் கைகூடவில்லை.





திரு. சி.வ. தனிகாசலம் அவர்கள்,
லண்டன் வாழ் தமிழ்வழி இளைய தலை
முறையினர், தமிழ் மொழி பேச்சு வழக்கை
இழந்துவிடாமல் — பயின்று நினைவில்
கொண்டே மறவு காத்திட வழிசெய்யும்
இயக்கொருவன், தமிழ்மொழி — சமயப்
பணியாற்றி வரு இப்புதனை நடத்திவருவது
அறிந்து மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.
க. அன்பழகன்
31/10/99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிக்கோவின் வாழ்த்தும் பலத்துடன்...**




இலண்டனில் குடியேறியிருக்கும்
இலங்கைத் தமிழர்களின் மொழி,
கலாச்சாரம் ஆகியவற்றைக் காக்கும்
முயற்சியில் [illegible] சிவ. தணிகா
சலம் அவர்கள் பாராட்டுக்குரியவர்.
தாம் [illegible] பணியில் அவருக்குள்ள
ஆர்வமும் முயற்சியும் அவரை வெற்றி
யடையச் செய்யும் என்ற நம்பிக்கை
ஏற்படுகிறது. அவர் பணி வெல்க
என வாழ்த்துகிறேன்

[illegible]
31.10.99.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் தமிழன்பனின் அன்பு வாழ்த்தில்...






புலம் பெயர்ந்து வாழும்
தமிழர்களுக்குத்
தாய்நாட்டுக் கிழக்கு
விடியல் தெரிவதில்லை!
எனினும்
இடம் வெளிச்சாலையில்
தாய்மொழிப் பயிற்றை
வளர்ப்பது கடனென்று
முயன்று வரும்
இத் தணிகாசலத்தின்
தவம் பலிப்பதாக.


தமிழன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் குமாரவேலன்





திரு. சிவ. தணிகாசலம் என்னும்
தமிழ்ப் பெருமகனாரை இன்று
கண்டு உரையாடியதில் பெருமகிழ்ச்சி
அடைந்தேன்.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு
மேலாக ஈழத்திலும் இலண்டன் மாநகரிலும்
இன்பத் தமிழ்ப் பணியும் இறைப் பணியும்
செய்து வரும் அன்பருக்கு என் உளமார்ந்த
வாழ்த்துகள்!

தமிழ்ப் பற்றிலும் படிப்பிலும்
இவர் காட்டும் ஆர்வம் வியக்க வைக்கிறது.
இவர் போன்ற இளைஞர்களால் தமிழ்
இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து
வாழும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் உலகை வெல்லும் காலத்தை
இவர் பணி ஓர் எடுத்துக்காட்டு.


வெல்க இவர் தொண்டு!


அன்பருக்கு என் நல்வாழ்த்துகள்!

பொ. குமரவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் காவலரின் அருளுரை.......







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2. அமுதுத் தமிழ்த்தேரை இழுப்பதற்கு என்னுடன் கூடி வடம் பிடித்தவர்கள்

செவாலியர் இளவாலை அமுதுப்புலவரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளக் காத்திருக்கும் என் அன்புத் தமிழ் உறவுகளே, இதோ எனது அமுதுவின் படையல். ஒரு வரலாறு வரைய அந்த நாயகனிடம் உள்ள ஈடுபாடு இன்றியமையாதது. மடுமாதா காவியத்தின் வெளியீட்டு விழாவில் ஆரம்பித்த எங்கள் பிதாமகன் உறவு அவரது கல்லறைவரை தொடர்ந்தது. இந்தப் படையல் பன்முகத் தன்மை கொண்டவை. இந்தப் படையலில் அமுது அவர்கள் சொல்லச் சொல்ல நான் கேட்டுப் பதிவுசெய்த விடயங்கள் ஒருவகை. அவருடைய வீட்டில் நான் என் கண்களால் கண்ட காட்சிகள் ஒருவகை. அவருடைய வாழ்க்கை நடைமுறைகள் இன்னோர்வகை. அமுது அவர்கள் இரசித்த அற்புதக் காட்சிகள் மற்றொருவகை .அமுதுவின் இதயத்தில் புல்லாங்குழல் வாசிக்கும் நட்புறவுகள் ஒருவகை. அமுது அவர்கள் மிகவும் உயர்வாகப் போற்றிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், நடிகர்கள், நகைச்சுவைக் கலைஞர்கள் பற்றிய அவருடைய கருத்துகள் ஒருவகை. ஓய்வு கிடைக்கின்ற நேரங்களி லெல்லாம் நானும் நண்பர் பாஸ்கரனும் அமுதுவுடன் உரையாடி மகிழ்ந்த மறக்க முடியாத சுவையான சம்பவங்கள் என்று பல்சுவை கொண்ட கலவைதான் இந்தப் படையல். அமுதுப் புலவரின் சுவாசக்காற்றுப் படாத எந்த ஒரு விடயமும் இல்லாத உணர்வுப் படைப்புத்தான் இந்த வரலாறு என்பதனை மிகத் தாழ்மையுடன் சொல்லி வைக்க விரும்புகின்றேன். அருங் குணங்களுக்கும், அசாத்திய திறமைகளுக்கும் உறைவிடமாக விளங்கியவர் அமுதுப்புலவர். இவருடைய கற்பனைவளம், கவியாற்றல், நகைச்சுவை கலந்த பேச்சாற்றல், ஓயாத உழைப்பு, யாரிடத்திலும் காண முடியாத பரோபகாரச் சிந்தை, விருந்தோம்பல் முதலான தார்மீக நெறிகளைத் தன் வாழ்க்கையின் வேர்களாக்கி வானத்தைத் தொடும் விருட்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முன் வாழ்ந்து காட்டிய அமுதுப்புலவரின் வரலாறு நிச்சயம் உங்கள் நெஞ்சில் தேன் பாய்ச்சும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

அமுதுப் புலவர் அவர்களை அவருடைய மடுமாதா காவிய இலக்கிய வெளியீட்டு விழாவில் நான் தரிசித்த காலந்தொட்டு என் எண்ணத்தில் பதிந்துவிட்ட அவருடைய நினைவுகளை இந்நூலில் பதிய வைக்கும்போது, என் இதயத்தில் மிக ஆழமான பாதிப்பை ஏற்படுத்திய ஏனைய கலைஞர்களும் என் பேனா முனையில் வந்து அடம்பிடித்துக் கொண்டே இருந்து விட்டார்கள். தாயகத்திலும் சரி, தமிழகத்திலும் சரி நான் சந்தித்த ஒவ்வோர் அறிஞர்களும் இலக்கிய உலகில் நான் தொடர்ந்து பயணிக்க பலமான உரமிட்டவர்கள். அவர்களிடம் இருந்து நான் விலகிப் போக முடியவில்லை. அந்தப் பாதிப்புக்களும் இந்நூலில், நிஜவடிவாகவும் நிழல்வடிவாகவும், உவமைகளாகவும் இழையோடுவதனை வாசகர்கள் இனங்காணலாம். இங்கு பதியப்படும் அந்த ஒவ்வொரு நினைவுகளும் புலவர் அமுது அவர்களால் அறிவு பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும், மகிழ்வுடனும் உள்வாங்கப்பட்டவை என்பதனை ஆத்மசுத்தியுடன் இங்கு கூறி வைக்கின்றேன். அந்த வகையில் அமுதுப் புலவர் அவர்களுடைய நூலை அலங்கரித்துக் கொண்டிருக்கும் அனைத்துக் கலைஞர்களும் என் ஆத்மாவில் இரண்டறக் கலந்தவர்கள், என்னுடன் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள். அவர்கள் இன்றி என்னால் இனித் தனித்துப் பயணிக்க முடியாது.

“இலக்கியதாகம்” என்னும் தொடுவானத்தின் பேரழகு எல்லை யில்லாத பெருமை கொண்டது. அந்தப் பேரழகு என்றென்றும் எம் நெஞ்சை ஆக்கிரமிக்கும் வலிமை கொண்டது. இந்தப் படைப்பில் அந்த அழகு எந்த அளவிற்கு படிந்துள்ளதோ எனக்குத் தெரியாது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக என் இதயத்தில் தேங்கிநிற்கும் இலக்கிய ஆர்வத்தின் துடிப்பை இந்த நூலில் காணமுடிந்தால் அதுவே இறைவன் எனக்குக் கொடுக்கும் விலைமதிப்பற்ற வெகுமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி ஓயாமல் சுற்றுகின்றது, காற்று ஓயாமல் வீசுகின்றது, நதியும் ஓய்வின்றி ஓடுகின்றது. இதனைப் போன்றதே மனித வாழ்வின் இலட்சியம். அந்தவகையில் மூச்சுகள் ஓய்கின்றவரையில் அமுதுவின் இலக்கிய முயற்சிகள் ஓயவில்லை. இலக்கிய அறிஞர்கள் கூடுகின்ற அவையிலே அமுதுவின் பேச்சைக்கேட்டு மெய்மறந்து வயிறுகுலுங்கச் சிரிப்பதற்கென்றே ஒருகூட்டம் காத்திருக்கும். அதற்கு ஏற்றாற்போல புத்தகம் நிறைய வாசிப்பதிலும், தொடர்ச்சியாகக் கவிதை எழுதுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுவது அமுதுவின் சுபாவம். அந்த வகையில் இறுதிக் காலத்தில் அவர் அங்கொன்றும், இங்கொன்றுமாக புனைந்து வைத்திருக்கும் கவிதைகளை எடுத்துத் தொகுத்தால் அமுதுவின் மேலும் ஒரு கவிதைத் தொகுதியினை தமிழ்கூறும் நல்லுலகம் கண்டு பயனடையும்.

முதுமை என்பது உடல், உள்ளம், சிந்தனை, செயல், எல்லாவற்றையும் பாதிப்படையச் செய்வது என்பதனை மறுக்கமுடியாது. ஆனால் நல்ல பழக்கவழக்கம், இனிமையான பேச்சு, சிறந்த அனுபவம், பிறருக்குப் பயன்படும் வாழ்க்கை, இவற்றினால் முதுமைக்கும் அழகூட்டலாம் என்பதற்கு அமுதுவின் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டு. சிந்திக்கவல்ல மனம் வயதான காலத்திலும் தேய்மானமடைந்து திறமை குன்றிப்போவதில்லை என்பதனை முதுமையிலும் அவர் கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, இலங்கை போன்ற பல நாடுகளுக்குச் சென்று ஆற்றிய இலக்கியப் பணிகளும், மரணத்தின் வாசலில் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்து கோலோச்சிச்சென்ற மூதறிஞர் இலக்கியவிழாவும் “குன்றின்மேல் விளக்கு” என ஒளிகாட்டி நிற்கின்றது.

உள்ளத்து உணர்வுகள் தூய்மையடைந்து கனிந்திருந்தமையால் ஓய்வுபெற்ற காலத்திலும் இன்ப துன்பங்களைச் சமமாக மதித்து அமுது தன்னுடைய வாழ்க்கையை ஒவ்வொரு நாட்களும் மிக அழகாக இரசிக்க முடிந்ததனை உள்ளங்கை நெல்லிக்கனியென நான் விளங்கிக் கொண்டேன். எப்படிப்பட்ட சூழலில் நாம் வாழ்ந்தாலும் தன் வாழ்வின் எந்த இலக்கை முன்வைத்து வாழ்வை நகர்த்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறாரோ, அந்த இலட்சியத்தை அடைவதில் எப்படியான சத்திய சோதனைகள் வந்தாலும் அவற்றையும் இனிமையுடன் இரசிக்கப் பழகிக் கொண்டால் அதுவே அவன் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம். இந்த வெற்றியே ஒருவரின் உடல் வளத்தையும், உளவளத்தையும் காக்கும் அருமருந்து. இதுவே அமுதுவின் ஆரோக்கிய இலக்கிய வாழ்வில் எஞ்சிநிற்கும் அற்புத அனுபவம். அந்த அற்புத அனுபவ விளக்கின் ஒளியே செவாலியர் இளவாலை அமுது.

மேலும் இவ்வாறான ஒரு நூல் வெளிவரவேண்டும் என்பதில் பேருக்கந்தந்த நண்பர் திரு.க. பாஸ்கரநாதன், பேராசிரியர் மு. நித்தியானந்தன், திரு.ஐ.தி.சம்பந்தன், புதினம்ஆசிரியர் திரு. இராஜகோபால், கலாநிதி சகாதேவன், இராணி சீனிவாசகம், திரு. பரமசிவம், திரு.பரந்தாமன், தமிழகப்பேராசான் திரு.அருணை பாலறாவாயன், இவர்களுக்கு என்றென்றும் என் நெஞ்சார்ந்த நன்றிகள். அடுத்து அமுதுப் புலவரின் தரிசனம் நோக்கிய தாயகப் பயணத்தில் பயனுள்ள ஆலோசனைகளை அள்ளி வழங்கிய என் நாடக ஆசான் திரு.தி.அருட்பிரகாசபிள்ளை ஆசிரியர் அவர்கட்கும், ஆதரவுக் கரம் நீட்டி இந்நூலிற்கு வேண்டிய நிழல்படங்களை படம் பிடித்துத் தந்த திரு. அன்பழகன் குடும்பத்தினர், திரு. அருட்செல்வன் குடும்பத்தினர், மற்றும் ஆசிரியர் திரு. ந. விக்கினேஸ்வரன், தம்பி வேல்முருகன் சிவா, புலவர் அரியநாயகம், திரு. துரைசிங்கம் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்நூல் அச்சுருப்பெறும்போது மூலப்பிரதியுடன் ஒப்பு நோக்கி வேண்டிய திருத்தங்களைச் செய்து, முகப்புப் படங்களைத் தெரிந்து அழகுற மெருகூட்டி நூலுக்கு அணிசெய்த என் அன்பு உறவினர்களுக்கும், நூலை அச்சிட்டு வெளியிடும் பதிப்பகத்தாருக்கும், இந்த நூலை வெளியிடப் பலவகையிலும் துணைபுரியக் காத்திருக்கும் நண்பர்களுக்கும் என்றும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் அவ்வப்போது எனக்கு ஏற்படும் மனப் போராட்டங்களைத் தீர்த்து வைப்பதில் சிரமம்பாராது தங்களை என்னுடன் முழுமையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக்கொண்ட திரு. முல்லை அமுதன், திரு. நடராசா கண்ணப்பு, திரு. பாஸ்கரநாதன், திரு. அ. ஸ்ரீசற்குணம் ஆகியோருக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் என் வேண்டுதலை ஏற்று நூலை மீள் பார்வை செய்து, வடிவமைப்புகள் செய்து, ஆலோசனைகள் வழங்கிய நண்பர் நடராசா கண்ணப்பு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் முயற்சியில் பல சிரமங்களைத் தாண்டி இறுதிவரை என்னுடன் கைகொடுத்து உதவிய என் மனைவி, பிள்ளைகள், மற்றும் இந்நூலை அணிசெய்து நிற்கும் அறிஞர் பெருமக்கள், அனைவரும் என்றென்றும் புலவர் அமுதுவினுடைய ஆத்மாவின் ஆசிக்கும், என் நெஞ்சார்ந்த வணக்கத்துக்கும் உரியவர்களே.

வாழ்க்கை செம்மையாக நடக்கவேண்டும் என்றால் சிறந்த இலட்சியங்கள் இருக்கவேண்டும். குழந்தைப் பருவம்,வாலிபப் பருவம், அதனைத் தொடர்ந்துவரும் முதுமைப் பருவம்வரை ஒருவருடைய எண்ணங்கள்தான் அவரைச் சிறந்த முறையில் உருவாக்குகின்றது. அதற்காகவேதான் “இளமையிற் கல்” என்பார்கள். காரணம் இளமைக் காலம் என்பது வாழ்க்கையின் முழுச்சக்கரத்தின் அச்சாணி என்பதனால் இளமையிற் கல் என்றார்கள். வாழ்க்கைக்கு உறு துணையாவது தூய கல்வியறிவு. அந்தத் தூய கல்வியறிவினைப் பெற மறுப்பவன் வாழ மறுப்பவன் என்று பகவான் இராமகிருஸ்ணர் அவர்கள் குறிப்பிடுகின்றார். குறிக்கோள் சார்ந்த வாழ்க்கையை வாழ்பவன் வாழ்விலே பூரணவெற்றி அடைகின்றான் என்பதனைப் பூமியில் பார்க்கின்றோம். அதற்குப் பெரியோர்களின் வழிகாட்டல்கள் பேருதவி புரிகின்றன. உடல்வலிமை, மனவலிமை, அறிவுவலிமை, உணர்வுவலிமை, ஆத்மீகவலிமை இவை அனைத்தும் உடையவனே வாழ்க்கையில் பரிபூரணநிலையை அடையமுடியும். இவர்களால் மட்டுமே சாதனை படைக்க முடிகின்றது. இதனால்தான் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று பாடி வைத்தார்கள். இத்தகைய மனித விழுமியங்களை, மனித தத்துவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கித் தன் வாழ்க்கைப் பயணத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் புலவர் இளவாலை அமுது அவர்கள்.

அறம் விளையும் பூமியாக என் கண்முன்னே வாழ்வாங்கு வாழ்ந்த அமுதுப் புலவருடைய வரலாற்றை எழுதுவது என்பது ஒரு சர்வசாதாரணமான காரியமல்ல. இவருடைய சாதனைகள் இவரின் பத்தாவது வயதிலிருந்தே ஆரம்பமானது. பல செய்திகளை அவர் தன் நினைவிலிருந்து மீட்டி மீட்டி எனக்குத் தந்துவிட்டுச் சென்றுள்ளார். சிறுபுள்ளியாக தாயின் கருவறையில் பிரவேசித்த நாம் சிறுகச்சிறுக ஓர் உருவத்தைப் பெற்று பன்னீர்க்குடப் பேழைக்குள் இருந்து அவள் உண்ணும் உணவிலிருந்தும் அவள் சுவாசிக்கும் காற்றிலிருந்தும் பங்கெடுத்துக் கொண்டு, பின்னர் பத்து மாதங்கள் சென்றபின் அந்த வீட்டைக் காலிசெய்துவிட்டு வெளியுலகை நோக்கிப் பயணிக்கின்ற மனிதனைப்போல் இளவாலை அமுது அவர்களிடமிருந்து சுவாசித்த பல விடயங்களை இங்கு அவர் வரலாறாகப் படைக்கின்றேன்.

நாலுபேர் துணையின்றி நல்ல காரியம் நடப்பது எப்படி?. அதில் முதல் என் நன்றிக்குரியவர்கள் அமுதுவின் பிள்ளைகள். "ஏவா மக்கள் மூவா மருந்து" என்றாள் ஔவை. பெற்றவர்களின் குறிப்பு அறிந்து வாழும் பிள்ளைகள் பெற்றோர்களின் பிணியறுக்கும் மருந்து போன்றவர்கள் என்பது இதன் பொருள். எவர் ஒருவர் தான் பிறந்த சமூகத்திற்காக, மொழிக்காக வாழ்கின்றாரோ அவர் இறக்கும்போது அவரின் வரலாறு பிறக்கும் என்பார்கள். இந்த வகையில் இளவாலை அமுது அவர்களின் வரலாற்றை என் வல்லமைக்கு ஏற்ப ஒரு நூலாகப் பதிவுசெய்ய எனக்கு அனுமதியளித்த புலவர் அமுது அவர்களின் பிள்ளைகளுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3. ஏந்திய விளக்கில் எண்ணெய் வார்த்து தீபத்தின் ஒளியைத் தூண்டியவர்கள்

காற்றை அடைக்கும் ஆற்றலைப் பெற்றால் கூற்றையும் உதைக்கலாம். எல்லாமே வாழ்க்கையின் ஒரு நம்பிக்கை. இந்த உலகத்தில் யாரையும் மன்னிக்கலாம், ஆனால் தன்னம்பிக்கை இல்லாதவனை மன்னிக்கக்கூடாது என்பார்கள். அந்தவகையில் தன்னம்பிக்கை என்பது எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது. "நீ தமிழை நன்றாக நேசி. எப்பொழுது நீ தமிழை விசுவாசத்துடன் நேசிக்கின்றாயோ அது உன் வாழ்வை, உன் தரத்தை உயர்த்தும்" என்று ஆணித்தரமான நம்பிக்கையையும் இலக்கியச் சுவையையும் எனக்கு ஊட்டிய பெருமகன் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள். பல படிநிலைகளில் கம்பனில் தோய்ந்து பல நூல்களால் கம்பனை உணர்ந்து கம்பராமாயணத்தின் சிறப்பை, அதன் பெருமையை அறியஉதவும் முறைகளையெல்லாம் புகட்டியவர் கம்பவாரிதி. கம்பன் விழா மேடைகளிலும் ஏனைய பட்டிமன்ற மேடைகளிலும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் என்னை அழைத்து அறிமுகம் செய்யும்பொழுதெல்லாம் எங்களுக்குள் ஓர் இரசிகமணி இருக்கின்றார் என்று என்னை அறிமுகம் செய்வார். அது மேலும் மேலும் என் உணர்வுகளையும் இலக்கியச்சுவையினையும் தூண்டி என்னை வளர்த்தது என்றே கூறுவேன். அவருடைய சுவாசக்காற்று என்னுடல் மீது செறிந்த பின்புதான் அறிஞர்கள் தொடர்பு எனக்கேற்பட்டது. இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகர், பண்டிதர் பொன்னுத்துரை, வித்துவான் வேலனார், வித்துவான் சொக்கனார், பண்டிதர் வீரகத்தி, உமாமகேஸ்வரன், ஏ.ரி.பி.ஐயா, புலவர் சிவானந்தன், அவருடைய சகோதரன் சிவராமலிங்கம் ஆசிரியர், கவிஞர் சோ.ப., கவிஞர் முருகையன், காரை சுந்தரம்பிள்ளை, கல்வயல் குமாரசுவாமி, பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் சிவலிங்கராஜா, பேராசிரியர் சுப்பிரமணியன், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, தமிழ் விரிவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாளர்கள் திரு. நாகேஸ்வரன், இரகுபரன் என்று கல்விமான்களுடைய தொடர்பை அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த உறவுகள் எல்லாம் கம்பவாரிதியால் யான் பெற்றுக்கொண்ட பெரும்பேறு என்பது என் பணிவான எண்ணம். மேலும் புலம்பெயர்ந்து நான் இலண்டனுக்கு வந்தாலும் என் இலக்கிய முயற்சிகள் அனைத்திற்கும் அவரே என் வழிகாட்டி.

என் மாணவப் பருவம் வறுமையும் துயரங்களும் நிறைந்த பருவம். தனியார் கல்வி நிலையம் ஒன்றை என் சொந்தக் கிராமத்தில் நடத்தி கல்வியாளர்களுடன் நெருங்கிப் பழகியவன். தமிழ்ப் பாடத்தை சாதாரண வகுப்பு, உயர்வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தலை ஊதியமாகக் கொண்டு என் வாழ்க்கையை நகர்த்திச்சென்றவன். என் ஆசிரியத் தொழிலுக்கு துரோணாச்சாரியர்களாக இருந்த குழந்தைவடிவேல் ஆசிரியர் (தமிழ்க் குழந்தை) அவர்களையும் பண்டிதர் இராசையா அவர்களையும் பண்டிதர் சா.வே.பஞ்சாட்சரம் அவர்களையும் (இணுவில்) என்றும் என் நினைவில் வைத்துப் போற்றுகின்றேன். என் துன்பத்திலும், வறுமையிலும் கைகொடுத்து உதவியவர் என் அன்புக்குரிய ஆசான் விரிவுரையாளர் க.தேவராஜா அவர்கள். இவர் இன்று யாழ்ப்பாண வளாகத்தின் வணிகத்துறைப் பீடாதிபதியாக இருக்கின்றார். அவர் என்னுடைய வாழ்வில் விளக் கேற்றிய பெருமகன். அவரிடம் கல்விக்கண் திறக்க உதவிக்கரம் நீட்டிய மக்கள் பலர். அவர் எமது கிராமத்தின் கர்மவீரர் என்றால் அது மிகையாகாது. மேலும் நான் மாணவனாக இருந்தகாலம்தொட்டு மணவறைக்குச் சென்று குடும்பவாழ்வில் ஈடுபடும்வரை என்மீது அக்கறைகொண்டு நல்லறிவு ஊட்டி நல்வழிப்படுத்திய என் தமிழ் ஆசான் தமிழ்க் குழந்தைவேலு அவர்களும், ஆசான் செங்கையாழியான் குணராசா அவர்களும் என்றென்றும் என் வணக்கத்துக்கும் நன்றிக்குமுரியவர்கள்.

மூத்தோர் சொல்லும் முதிர்ந்த நெல்லியும்
முன்னர் புளிப்பினும் பின்னர் இனிக்கும்

என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த வகையில் என் வாழ்க்கைக்குப் பெரிதும் உரமூட்டியவர்கள் அவர்களே.

இலண்டன் வருகையின் பின்னரும் தொடர்ந்தது என் இலக்கியப் பயணம். அது தமிழகம் வரை நீண்டது. இலண்டனில் நான் உருவாக்கிய தமிழிலக்கிய மன்றம் இலக்கிய தாகம்கொண்ட கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் உதயமானது. அதன் நிர்வாகம் அதற்குத் துணை செய்தது. இலக்கிய மன்றத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியாக ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் ஒரு தமிழ்ப் பள்ளிக் கூடத்தை உருவாக்கினேன். இப்பள்ளிக்கூடம் புலவர் இளவாலை அமுது அவர்களின் ஆசியுடனும், இணுவில் ஆறு. திருமுருகன் அவர்களின் ஆசியுடனும் உருவானது. அந்த ஆலய நிர்வாகம் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு செயற்பட்டது. இவற்றின் மூலமாக என் இலக்கிய உறவுகளை, உணர்வுகளை வளர்த்துக் கொண்டேன். இலண்டனுக்கு சைவத்தமிழ் மாநாட்டிற்காக சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவந்த தமிழருவி சிவகுமாரன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கம்பவாரிதி ஜெயராஜ், தமிழகத்தைச் சார்ந்த பேராசிரியர் பாலறாவாயன், டாக்டர் சரஸ்வதி இராமநாதன், பேராசிரியர் செல்வகணபதி, பேராசிரியர் சிவச்சந்திரன் போன்ற அறிஞர்கள் வருகையால் இலண்டன் தமிழிலக்கிய மன்றம் சிறப்பாக இயங்கக் கூடியதாயிற்று. இந்த அறிஞர்களின் துணைகொண்டு பல இலக்கிய மேடை நிகழ்ச்சிகளை முன்னெடுத்தேன். எல்லாவற்றிலும் மேலாக இலண்டனில் நான் கட்டி உருவாக்கிய இலக்கிய மன்றம் ஒரு மாதா பிதாவைத் தந்துதவியது. அந்தவகையில் பிதா இளவாலை அமுதுப் புலவர் அவர்கள். மாதா திருமதி புனிதவதி பாலசுந்தரம் அவர்கள். இவர்கள் இருவரும் எப்பொழுதும் என் இலக்கிய முயற்சியின் உந்துசக்திகள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் இரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று.
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது மகிழ்ச்சியின் வழி.

என்று வடித்த ஒரு கவிஞரின் சிந்தனையின் அடிப்படையில் இலண்டனில் என் நட்புக்குரியவர் திரு க.பாஸ்கரநாதன் அவர்கள். இலண்டனுக்கு வந்தபின்புதான் எனக்கு அவரைத் தெரியும். நாங்கள் இருவரும்தான் எப்பொழுதும் அமுதுப்புலவர் அவர்களிடம் செல்வோம். புத்தகங்கள் அறிவாலயங்கள், ஞானகோபுரங்கள் என்றால் அதன் தரத்தினை அறிந்து உணர்த்தக்கூடியவர் திரு க.பாஸ்கரநாதன் அவர்கள். ஒவ்வொரு மாதமும் நூல் நிலையத்திலிருந்து பல நூல்களைத் தெரிவுசெய்து அமுதுவுக்குக் கொடுப்பது இவர் வழக்கம். பாஸ்கரன் அவர்கள் தெரிவு செய்துகொடுக்கும் நூல்களைப் படித்துவிட்டு அமுதுப்புலவர் அவர்கள் சொல்லுவார் தம்பி பாஸ்கரன் அவர்கள் ஒரு பொன் நிறுக்கும் தராசு என்று. இந்த வார்த்தையை அமுது அவர்கள் பலதடவை கையாண்டதை நான் பார்த்து இரசித்துள்ளேன். அமுது அவர்கள் விரும்புகின்ற எந்த நூலையும் தேடியெடுத்து அவரின் தாகத்தை சாந்தி செய்தவர் பாஸ்கரநாதன் அவர்கள். புத்தகம் சட்டைப்பையில் கொண்டு செல்லும் பூந்தோட்டம் என்பார்கள். அந்த வகையில் உண்மையிலேயே அந்த நண்பர் ஒரு நூலகமாக விளங்கினார். அந்த நண்பனுடைய பேரூக்கம் ஒன்றே என் எழுத்தூக்கம்.

எறும்புகள் கூட நாளைக்குச் சேர்க்கும். இதுவே ஏழைகளின் வாழ்க்கை நிலை. அதில் தவறொன்றும் இல்லை. “போதும் என்ற மனமே பொன்செய்யும் பூமி.” இதனைத் தாரகமந்திரமாகக்கொண்டு பல மாதங்களாக அமுதுவின் வரலாற்றைப் படைக்க நான் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்களுக்குள் இருந்து தவம்செய்கின்றேன். என்னுடைய தவம் பலிக்கவேண்டும் என்பது என்னுடைய அவா. இரவுபகலாக எனக்கு என் மனைவியும் பிள்ளைகளும் பலவழிகளில் துணைபுரிகின்றார்கள். என்னுடைய ஆவல் பூர்த்தியடையவேண்டும் என்பதில் பெருவிருப்பம் கொண்டு பல உதவி ஒத்தாசைகளைத் தருகின்றார்கள். அமுதுவின் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு வரலாற்றை எழுதுவதற்குப் பலப்பல ஆதாரங்களைத் தேடவேண்டி இருக்கின்றது. பல நூல் வழி அதனைத் தேடித் தொகுக்கின்றேன். இந்த வரலாற்று நூல் வெளியாகும்போது அதன் ஒவ்வொரு பக்கங்களிலும் இளவாலை அமுது அவர்களின் நிஜவடிவத்தைப் பார்க்கலாம் என்பது நிதர்சனம். அதுமட்டுமல்ல அவருடன் இணைந்த பலமுகங்கள் கோபுரங்களாக தலைநிமிர்த்துவதைப் பார்க்கலாம்.

நான் தமிழ் மீது காதல் கொண்டேன்- அந்த மோகப்பயணத்தில் நான் மோதிக் கொண்ட தமிழ்பற்றாளர்களும், என் பாதையைச் செப்பனிட்டவர்களும் சொல்லப்பட வேண்டியவர்கள். இந்தப் படையலைச் செய்ய என் கையை தயார் செய்தவர்கள், ஆம் நிச்சயமாக என் பாதைப் பயணத்தின் குறிகாட்டிகள் அவர்கள். அந்த நினைவுப் பதிவுகளை நான் மீட்டிக்கொள்ளுகின்றபோது தமிழை ஆராதிக்கின்ற பொழுதாய்ப் பெருமிதங்கொள்கின்றேன். இவை எனது தமிழ் அடையாளம், ஒருபோதுமே என் பெருமிதப் பாடலென்று எண்ணிக்கொள்ளாதீர்கள்.

நான் யாழ்ப்பாணம் வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனத்தில் எனது GAQ பட்டப் படிப்பினைத் தொடங்கினேன். தமிழ், இந்து நாகரிகம், உளவியல் என்ற பாடங்களில் குறிப்பாக தமிழில் சிறப்புச் சித்தியடைந்தேன். இக்காலத்தில் பண்டிதர் பொன்னுத்துரை, பண்டிதர் நமசிவாயதேசிகர், பண்டிதர் உமாமகேஸ்வரன், வித்துவான் வேலனார், பண்டிதர் வீரகத்தி, பேராசிரியர் சிவலிங்கராஜா, பேராசிரியர் சுப்பிரமணியன் போன்ற பெருமக்கள் என்னைப் பரீட்சைக்கு நெறிப்படுத்தினார்கள். நாட்டின் பிரச்சினைகளின் மேலீட்டினால் நான் தொடர்ந்து படிப்பதனை நிறுத்திவிட்டு இலண்டன் பயணமாகிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் வந்தபின்பும் அந்த ஆவல் என்னை விடவில்லை. தமிழ்நாடு சென்று ஒரு பட்டப்படிப்பை முடிக்கலாம் என்று எண்ணினேன். இதனால் 2000, 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழகம் சென்று முதுகலைத் தமிழ் படிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். (MA தமிழ்) மேற்குறித்த ஆண்டுகளில் முதலாண்டில் தேர்வுப் பரீட்சையிலும், அடுத்த ஆண்டு முதுகலைத் தமிழ் முதலாவது ஆண்டினையும் பூர்த்தி செய்தேன். இக்காலப் பகுதியில் சென்னைப் பேராசிரியர் முத்துச்சண்முகம் அவர்களுடைய வீட்டிலிருந்து இரண்டு மாதங்கள்வரை படித்தேன். அப்பொழுது பல அறிஞர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு எட்டியது. பின்னர் தமிழகம் சென்று படிப்பதற்கான நேரவாய்ப்புக்கள் கைகூடவில்லை.

நான் தமிழகத்திலிருந்த காலப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், கலைஞர்கள் என்று பலரைத் தரிசனம் செய்து அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பத்திரிகையில் எழுதி வந்துள்ளேன். இந்த முயற்சிக்கும் அமுதுப் புலவர் அவர்களே ஊக்கம் தந்தார். நான் சந்தித்த அறிஞர்கள் பற்றி "நிலாத்துண்டுகள்" என்னும் தலைப்பில் எழுதினேன்.

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா, கவிஞர் வைரமுத்து, கவிஞர் அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பர் ஒளவை நடராசன், அ.ச.ஞானசம்பந்தன், கவிஞர் மேத்தா, பேராசிரியர் அன்பழகன் போன்ற எழுத்தாளர்களையும் பேராசிரியர்களையும் ஆர்.எஸ்.மனோகர், மேஜர் சுந்தரராஜன், எம்.எஸ்.விஸ்வநாதன், ஏழிசைமாமணி ரி. எம்.எஸ், இயக்குநர் விசு, எம்.என்.நம்பியார், பூர்ணம் விஸ்வநாதன், நகைச்சுவை மன்னன் நாகேஷ் போன்ற பல கலைஞர்களைச் சந்தித்து அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களைக் கேட்டு அறிந்துகொண்டேன். மேலும் கவிஞர் கண்ணதாசன் இல்லத்தில் காந்தி கண்ணதாசனுடனான சந்திப்பு, ஆனந்த விகடன், ராணி, குங்குமம் முதலான சஞ்சிகைப் பிரமுகர்களுடனான சந்திப்புக்கள், பட்டிமன்ற பேச்சாளர் சந்திப்புக்கள் என்று விரிந்து கொண்டே சென்றன. இந்த அனுபவங்களை எல்லாம் திரட்டி நல்லதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிபூர்வமான நூல் இலண்டனில் வெளியாகும் என்று ஆனந்த விகடன் சஞ்சிகை வாழ்த்தி நின்றதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அந்த ஒவ்வொரு மனிதர்களின் சந்திப்பும் ஆயிரமாயிரம் நூல் களைக் கற்றுத்தெளிந்த அனுபவத்தை எனக்கு ஏற்படுத்தியது. அவர்களுடைய அன்பும் ஆசியும் ஊக்குவிப்பும் என்னை இலக்கியத்தில் அதிகநாட்டம் கொள்ளச் செய்ததை உறுதியாகக் கூறுவேன். அந்த அனுபவங்களைத் திரட்டி நிலாத்துண்டுகள் என்னும் தலைப்பில் இலண்டனிலிருந்து வெளியாகும் “புதினம்” பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதினேன். நிலாத்துண்டுகள் என்னும் தலைப்பினை அமுது அவர்களே தெரிவுசெய்து, என்னை வாழ்த்தி எழுதத் தூண்டினார். புதினம் பத்திரிகை என் எழுத்துக்குக் களம் அமைத்துத் தந்தது. இவை அனைத்தும் என் படைப்பின் பக்கபலம் என்று கூறுவேன்.

இந்த வரலாற்று நூலை எப்படித் தொடங்கி எப்படி முடிப்பேன் என்பதில் எனக்கு எவ்வளவோ மனப்பதற்றங்கள் ஏற்பட்டன. அதனால் என் இரு கரங்களிலும் தீபங்களை ஏந்தினேன். கனக துர்க்கை அம்மனை நோக்கியது ஒரு தீபம். மாதாவை நோக்கியது இன்னொரு தீபம். இந்த இரண்டு தீபங்களின் சங்கமத்தில் உதயமானதுதான் செவாலியர் இளவாலை அமுது என்ற வரலாற்றுப் பெட்டகம்.

என் வாழ்நாட்களில் என்னைச் சுட்டெரித்துக் கொண்டு இருந்த என் இதயத்தின் குமுறல்களை, ஏக்கங்களை, ஏமாற்றங்களை எல்லாம் முற்றாக வடித்தெடுத்து ஓர் இலக்கியத் திரவமாக இளவாலை அமுதுப் புலவர்அவர்களின் காலடியில் வைத்து என் நோக்கத்தைப் பூர்த்தி செய்திருக்கின்றேன்.

ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது அது பலருக்கு வழிகாட்டும் என்ற உயர்ந்த நோக்கில் பொறுக்கி எடுத்த கருவூலங்களைக்கொண்டு இதனைப் படைத்துள்ளேன். இளவாலை அமுதுப் புலவர் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை என்னால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் அவருடைய வாழ்க்கையைப் பற்றி முடிந்தவரை சொல்கின்றேன். தமிழ் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுலகம் சிறியேன் சிறுமை கண்டு சினங்காக்க வேண்டி மன்றாடி நிற்கின்றேன்.

என்னுடைய தமிழிலக்கிய உணர்வுக்கு என்றும் பக்கபலமாக இருந்து கருணையுடன் உரமூட்டியவர் அமுது அவர்கள். இலண்டனில் எந்த இடத்தில் மேடை அமைத்தாலும் எனக்காக அவர் வருவார். என் உணர்வை மதித்து என்னைப் பிள்ளைபோல் பார்த்துக் கொண்டவர். என்மீது கொண்ட மிகுதி அன்பினால் என் குடும்பத்திலும் மிகுந்த அன்பையும் அக்கறையும் கொண்டு என்னை நெறிப்படுத்தியவர். கல்லறைக்குச் சென்றாலும் எனக்கு எல்லாவகையிலும் உறுதுணை யுடனும் நெருங்கிய அன்புடனும் இருந்து வாழ்ந்து முடித்த இளவாலை அமுது அவர்களின் ஆத்மாவின் ஆசியொன்றே இந்த வரலாற்றுப் படைப்பின் ஆணிவேர். இந்த இலக்கியப் படைப்பின் மூலமாக எனது உள்ளத்தில் எழுந்த இலக்கிய அக்கினிச் சுவாலையைச் சாந்தி செய்துகொள்கிறேன்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்.

இந்தப் பழக்கம்தான் என் நெஞ்சுக்குள்ளே ஓர் இலக்கிய நெருப்பு. எழுதவேண்டும் என்ற ஆவல் எனக்கு நீண்டகாலமாக உண்டு. பத்திரிகை ஆசிரியர்கள், தமிழகப் பேராசிரியர்கள் என்னை இனங்கண்டு எழுதும் வண்ணம் பலமுறை தூண்டியிருக்கின்றார்கள். பத்திரிகை உலகம் பல சந்தர்ப்பங்களை எனக்கு வழங்கியபோதும் நீண்ட விடயங்களை எழுதுவதற்கான நேரம் உருவாகவில்லை என்பதனையே நான் எனக்கு அடிக்கடி சொல்லிக் கொள்வேன். எழுதுவதற்கு ஒரு சிறந்த பொருள் வேண்டும். அந்தப் பொருளின் விழுப்பம்தான் என் எழுத்துக்குச் சிறப்பைச் சேர்க்கும் என்பதில் அசையாத நம்பிக்கையுடன் இருந்தேன். என்று நான் இளவாலை அமுதுப் புலவர் என்ற கவிதைப் பிரமனை மரணப் படுக்கையில் பார்த்தேனோ அன்று நான் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிவிட வேண்டும் என்று மிகத் தெளிவான ஒரு முடிவினை மேற்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மௌனத்தில் ஓர் உரையாடல்

ஒரு நூற்றாண்டு வாழ்க்கையை அழகாகவும் எளிமையாகவும் நகர்த்திச் சென்ற அமுதுப் புலவரின் வரலாற்றை எழுதுவது என்பது மிகவும் ஒரு சாதாரண காரியமல்ல. ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம்பதித்த அனைத்துப் பேரறிஞர்கள் மடியிலே தவழ்ந்தவர் அல்லவா இளவாலை அமுது அவர்கள். என்னுடைய வல்லமைக்கு இந்த முயற்சி கடுமையானது. இந்த முயற்சியைத் தொடங்கினால் எப்படி இந்தப் பயணத்தை முடித்து வைப்பேன் என்று என் உள்ளம் பதைபதைத்தபோது எங்கிருந்தோ ஒரு குரல் - அது வேறு யாருடைய குரலும் அல்ல. அன்றாடம் தம்பீ தம்பீ என்று கூப்பிட்டு பழக்கப்பட்ட குரல்தான். ஏன் ராசா உனக்கு இந்த வேலை? தூக்கிப் போட்டுவிட்டு நீ பார்க்க வேண்டிய அலுவலைப் பார் என்று அதிகாரம் செலுத்தியது அந்தக் குரல். அந்தக் குரலுக்குச் சொந்தமானவர் வேறுயாருமல்ல, இன்று அமரராகிவிட்ட புலவர் இளவாலை அமுது அவர்கள்.

அப்பொழுது அவரிடம் நான் கேட்டேன், ஐயா நீங்கள் சாதாரண கவிஞன் அல்ல, நீங்கள் மதுரகவி. அதுமாத்திரமல்ல ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் இளமுருகனார் அவர்களிடம் முறையாகக் கவிதையைக் கற்றுத் தெளிந்தவர். பண்டிதர்களுக்கு எல்லாம் தாயாக விளங்கிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் காவிய வகுப்பு மாணவனாக இருக்கின்ற பேற்றினைப் பெற்றவர் நீங்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்திற்காகப் படித்தபோது பல பேராசிரியர்கள் ஆச்சரியப்படும் வண்ணம் கவிதைகள், கட்டுரை கள், சஞ்சிகைகள் என்று பல சாதனைகள் படைத்துள்ளீர்கள். பத்திரிகைகளில் உங்கள் ஆக்கங்கள், சிந்தனைக் கருவூலங்கள் வெளிவந்தபோது சின்னக்கல்கி என்று பெயர் எடுத்தீர்கள். உங்கள் கவிதைக் கனிகளை நுகர்ந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசமுனிவர் அவர்கள் உங்கள் கவிதைகள் அனைத்தும் தித்திக்கும் தீங்கனிச்சாறு என்று அருள்வாக்குக் கூறினார் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பெரியவர்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் பெற்ற ஒருவன் வாழ்க்கையில் முன்னுக்கு வருவான் என்பதற்கு நான் ஓர் உதாரணம் என்று அடிக்கடி எங்களுக்குக் கூறுவீர்களே? உங்கள் கவிதையை, அதன் நயத்தை, உங்கள் சொல்வன்மையை, அதில் உண்டாகும் நகைச்சுவையைப், பல மேடைகளில் உங்களிட மிருந்து மக்கள் அனுபவித்துச் சுவைத்ததை இன்றும் அசைபோட்டுக் கொண்டிருப்பதனை நான் பார்க்கின்றேன்.

புலவர் இளவாலை அமுது அவர்களைப்போல ஒரு நகைச்சுவை கலந்த பேச்சாளனை இனி நாம் காணமுடியாது என்ற பேச்சு அடிக்கடி என் காதிலே விழுகின்றது. அதாவது நீங்கள் கடந்து வந்த பாதையில் நீங்கள் படித்த படிப்பினைகள், நீங்கள் புரிந்த சாதனைகள் செவாலியர் என்ற அந்த உயர்ந்த கௌரவத்தை நீங்கள் அடைவதற்கு எவ்வளவு பிரயத்தனம் செய்திருப்பீர்கள். தொண்ணூறு வயதிலும் தொண்ணூறு பக்கங்களையாவது நீங்கள் வாசிக்காமல் தூங்கமாட்டீர்கள். மனதுக்குப் பிடித்த ஒரு புத்தகமாக இருந்தால் அதனை வாசித்து முடிக்காமல் மூடமாட்டீர்கள். இப்படி உங்கள் ஆயகலைகள் அறுபத்து நான்கினில் ஒரு சிறிதளவாயினும் நான் வாழ்கின்ற இந்த சமூகத்திலிருக்கின்ற மக்களுக்குக் கொடுப் பதற்கு ஐயா நீங்கள் அனுமதி தரமாட்டீர்களா? என்று மிகுந்த வாஞ்சையுடன் கெஞ்சினேன். அப்பொழுதுதான் என்றுமே உள்ள புன்னகையோடு சொன்னார், தம்பீ நீ இவ்வளவு தூரம் கேட்டபிறகு நான் என்னத்தை இராசா சொல்வது. என்னுடைய மடியை அவிழ்ப்பது என்றே முடிவெடுத்துவிட்டாய். எனவே அதற்கு நான் ஒரு தடையும் சொல்லமாட்டேன். நான் என்னுடைய வாழ்க்கையில் பல நூல்களை எழுதினேன். பல பேருடைய பாராட்டுக்களைப் பெற்றேன். நான் பாடிவைத்த மடுமாதா காவியப் பாடலை படிக்காமல் நாங்கள் நித்திரை கொள்வதில்லை என்று பலர் எனக்குச் சொல்லி என் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீரை வரவழைத்து இருக்கின்றார்கள். என் அன்புக்கும் விசுவாசத்திற்கும் உரிய மடுமாதாவும் உன் இலக்கிய தாகத்தை தணிக்கும் கனக துர்க்கை அம்மனும் உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆசிகளையும் அருளையும் வழங்க நான் மன்றாடுகின்றேன் என்று வாழ்த்துமழை பொழிந்தது அந்தக் குரல்.

ஐயா, நீங்கள் சுயநினைவின்றி மருத்துவமனையில் இறுதிப் படுக்கையில் இருந்தபோது ஒவ்வொரு நாளும் நானும் நண்பர் பாஸ்கரன் அவர்களும் வந்தோம். நீங்கள் வழமைபோல் எங்களிடம் பேசவில்லை. நீங்கள் படுத்த படுக்கையாக இருந்தபோது பெருகிய கண்ணீருடன் உங்கள் பிள்ளைகள் அனைவரும் உங்கள் பக்கத்தில் நின்று உங்களை வீட்டுக்குச் சுகமாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று இயேசுபிரானை மன்றாடிய வண்ணம் இருந்தார்கள். எப்படி யிருந்தபோதிலும் அந்தக் கடவுள் உங்களைத் தன்னருகே அழைத்துச் சென்றுவிட்டார். அமுது ஐயா, உங்களுக்கு நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன். நீங்கள் இப்பொழுது எம்முடன் இல்லை, ஏதோ இன்னுமொரு உலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள். ஆனால் உங்களுடைய பெயரை உங்களுடைய பிள்ளைகள் மட்டுமல்ல இலண்டன் வாழ் இலக்கிய உலகமும் உச்சரித்துக் கொண்டு தானிருக்கின்றது. காரணம் தொண்ணூற்றியொன்று வயதில்கூட பெரியதொரு தொகுப்பு நூலைப் படைத்து ஒரு மாதகால இடை வெளியில் வெளியிட்டு நாள் குறித்து, மேடை அமைத்து, இலக்கியச் சுவைஞர்களை, இலக்கிய ஆய்வுரையாளர்களை, உறவுகளை அழைத்து, வெளியீட்டு விழா நடத்தி, எல்லோருக்கும் உணவு படைத்து, சோறு கறி ஆறும்முன்னம் சாப்பிடுங்கோ என்று உற்சாகப்படுத்தி, நீண்டதொரு நேரம் மக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துப் பேசி, எல்லோருக்கும் நீங்கள் ஆசிவழங்க, அன்றைய விழாத் தலைவர் அறிஞர் தாசீஸியஸ் அவர்கள் 'மூதறிஞர்' என்ற நாமத்தை வழங்க, மக்கள் எல்லோரும் இணைந்து மூதறிஞர் வாழ்க என்று வாழ்த்துமழை பொழிந்தார்கள். நீங்கள் அன்று இமயத்தின் உச்சிக்கே சென்றீர்கள். உங்கள் சிம்மாசனத்தில் உட்கார்ந்த வண்ணம் இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டேன் என்று மக்களை நீண்டநேரம் காக்க வைத்தீர்கள். விழா முடிந்துபோகின்ற வேளையில் எல்லோரையும் கட்டியணைத்து முத்தமிட்டு வழி அனுப்பி வைத்தீர்கள். மிகுதி எல்லாமே கனவாக முடிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் எப்படி இவ்வளவு சீக்கிரமாக நீங்கள் முடித்து வைத்தீர்கள். எந்தவொரு மனிதன் இப்படி வாழ்ந்து முடிக்க முடியும் என்று உங்களைப் பார்த்து ஏங்குகின்றார்கள்.

ஐயா ஒன்றை மட்டும் நான் உங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்துடன் கூறுவேன். ஒருவன் இந்த உலகத்தில் வாழும்போதுதான் இவன் எப்படியடா இவ்வளவு தூரம் முன்னேறினான், பாராட்டுக்களைப் பெற்றான், பட்டங்களைப் பெற்றான் என்று உலகம் ஆச்சரியப்படும், ஆதங்கம் கொள்ளும். ஆனால் உங்கள் வாழ்க்கைப் பயணத்தைப் பொறுத்தமட்டில் உங்கள் மரணங்கூட இந்தப் பூமியில் வாழும் மக்களைத் திணறடித்துள்ளது. இதன் இரகசியம்தான் எங்கள் ஒருவருக்கும் புரியவில்லை. மடுமாதா காவியம் படைத்த புண்ணியமோ? அல்லது எல்லோரும் சந்தோசமாக வாழவேண்டும் என்பதில் நீங்கள் பெருவிருப்பம் கொண்டவர் அதனாலா? எமது தாயகத்தில் மக்கள் பட்ட துயரங்களைக் கண்டு நீங்கள் வடித்த கண்ணீர் கொஞ்சமல்ல. இயற்கைச் சீற்றத்தாலும் பெரும்போரினாலும் எம் உறவுகள் அழிந்தபோது பூவும் பிஞ்சுமாக போட்டுக் கரிக்கிப் போட்டார்களே என்று நீங்கள் அழுத முகம் என் நெஞ்சிலே ஆழமாகப் பதிந்து இருக்கிறது. அந்தக் கருணை, உள்ளத்தின் சிறப்பா?

எல்லோரும் நன்மை பெறவேண்டும் என்ற கருத்தில் மனம் வேரூன்றி உள்ளவர்கள் விண்ணவரையும் காண்பார்கள் என்ற வேதவாக்கை கேள்விப்பட்டிருக்கின்றேன். உங்கள் வாழ்க்கைப் பயணம் ஒரு தெய்வீகப் பயணம் என்பதனை ஒவ்வொரு நாட்களும் உணர்கின்றேன். மடுமாதா காவியம் வெளியீட்டில் மடுமாதா காவியத்தைப் பற்றிய எனது ஆய்வுரையைத் தொடர்ந்து எங்களின் இணைப்பும் அன்பும் வளரத்தொடங்கி மூதறிஞரில் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதுவரையில் உங்களிடம் நான் கண்டது தமிழுக்‌ காக, தமிழ்க் கவிதைக்காக இரவையும் பகலாக உழைத்தீர்கள் என்பதனையும், பிறர் குறைகளை மறப்போம் மன்னிப்போம் என்ற பெருந்தன்மைத் தாராளகுணத்தையும், தாயக மக்களின் விடிவு ஒன்றுதான் உங்கள் இதயத்தின் நாடித்துடிப்பு என்ற இலட்சிய தாகத்தையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 5. அமுதுவின் ஆரம்பப் பள்ளி

முதுபெரும் தவமூதாட்டியான ஔவை ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர் என்று பாடி வைத்தார். கவிஞன் உருவாகுவதில்லை, கவிஞன் பிறக்கின்றான் என்று இன்னொரு வகையான கருத்தும் உண்டு. அதற்கு உதாரணம் ஒன்று கூறினால் பாரதியின் தோற்றம் பற்றிப் பாடிய ஒரு கவிஞன் சொல்கின்றான் "எட்டயபுரத்தில் இரட்டைப் பிறவி" என்று. ஒன்று பாரதி மற்றது கவிதை. பாரதி கவிஞனாகவே மண்ணில் தோற்றம் பெற்றான் என்று பாடல் புகல்கின்றது. புகழ்பூத்த கவிஞர்கள் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அவர்கள் இளமையிலேயே கற்பனை வளம் படைத்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். அந்தவகையில் புலவர் அமுது அவர்களுடைய மாணவப் பருவத்தை எடுத்துப் பார்க்கின்ற பொழுது அவர் எத்தனை தூரம் கற்பனாசக்தியுடையவராக இருந்திருக்கின்றார் என்பதனை உணரமுடியும்.

புலவர் அமுது என்று பின்னாளில் போற்றப்பட்ட அடைக்கலமுத்து அவர்கள் முதலில் தாய் தந்தையிடம் கதை கேட்பதில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்திருக்கின்றார். அமுதுவின் தந்தையார் நிறையப் பஞ்சதந்திரக் கதைகளை அடிக்கடி சொல்லிக் கொடுப்பார். அந்தக் கதைகளில் இருக்கக்கூடிய அம்சங்களை எல்லாம் கற்பனை செயவது அமுதுவின் வழக்கம். மேலும் அமுதுவின் தந்தையார் அக்காலம் யாழ்ப்பாணத்தில் பல சுருட்டுத் தொழிற்சாலைகளில் சென்று இலக்கியப் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பது வழக்கம். அந்த அனுபவங்களைத் தந்தையிடம் இருந்து பெற்றுக்கொண்டதால், "என் தந்தையிடம் இருந்தே எனது கற்பனை ஊற்றெடுக்கத் தொடங்கியது என்று கூறலாம்" என்கிறார் இளவாலை அமுதுப் புலவர்.

"என்னுடைய ஆரம்பக் கல்வியை நான் நெடுந்தீவில் துறை முகத்துக்கு அருகாமையில் அமைந்த பள்ளிக்கூடத்தில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தேன். அறம் செய விரும்பு, ஆறுவது சினம் என்ற அரும்வரிகளை அங்குதான் படித்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தை நெடுந்தீவு கிழக்குப் பாடசாலை என்றுதான் அழைப்பார்கள். நாங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அடிக்கடி வெளியிலை போய் எட்டிப் பார்த்தால் கப்பல் வாறது தெரியும். வள்ளங்கள் அங்குமிங்கும் அசைந்த வண்ணம் இருக்கும். இப்படியாக துறைமுக இயற்கை அழகு வாய்ந்த அந்த மண்ணில் ஆறு தூண்களால் இணைத்து வேயப்பட்ட ஒரு கொட்டிலில் எனது கல்விப் பயணம் ஆரம்பமானது. ஆறு தூண் களைக் கொண்ட அந்தப் பள்ளிக்கூட அறையின் நடுவில் இருக்கின்ற வேப்பமரத்தாலான தூண் ஒன்றை எனது தந்தையார்தான் பள்ளிக்கூடம் கட்டக் கொடுத்திருந்தார். இதனால் பள்ளிக்கூட ஆசிரியர் மட்டத்திலும் எங்கள் பெயரில் ஒரு மதிப்பு இருந்தது."

இந்தச் சூழலில் வளர்ந்த அடைக்கலமுத்து அவர்களுக்கு முதலில் தந்தையார் சொல்லிக் கொடுத்த விக்கிரமாதித்தன் கதைகள், கம்பராமாயணக் கதைகள் போன்றவற்றில் உண்டான வீர உணர்ச்சிகளும் வியப்பான செய்திகளும் அவரின் ஆரம்பக் கற்பனையின் தோற்றத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தன. "தனிமையில் இருக்கும்போது இந்தக் கதைகளில் வருகின்ற காட்சிகளை எண்ணிப் பார்ப்பேன். அந்தக் காட்சிகள் எல்லாம் என் மனக்கண்ணிலே நிஜமான காட்சிகளாக வந்து வந்து போகும். இந்த நினைவுகள் என்னை இயற்கை அழகினில் நாட்டம் கொள்ள வைத்தது" என்கிறார் அமுதுப்புலவர். காலையிலே பசும்புல் வெளியில் காணப்படும் பனித்துளிகளும் அன்றாடம் காலையிலே பூத்துக்குலுங்கும் மலர்க் கூட்டங்களும் ஒவ்வொன்றாகத் துளிர்விடும் புதுவகை இலைகள், தேகத்தை மென்மையாக வந்து வருடிச் செல்லும் தென்றல் காற்று, பெருவிருட்சங்களில் இருந்து பாடிக் கொண்டிருக்கும் பறவைகளின் இசை முழக்கம், மென்மையான மழைத்துளிகள் எல்லாமே சிறுவன் அடைக்கலமுத்துவின் எண்ணங்களை ஆக்கிர மிக்கத் தொடங்கிவிட்டது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு வயதிலிருந்தே மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் அவருடைய எண்ணங்கள் ஓட்டம் பிடித்தன. பிற்காலத்திலே மதுரகவியாக, என் மூச்சும் தமிழ் என் பேச்சும் தமிழ் என்று முதிர்ந்த பருவத்திலும் தமிழ்ப்பணி என்றால் முன்னின்று உழைத்த அமுது அவர்கள் தனது பதினொராவது வயதிலே தன் கல்வியைத் தொடர்வதற்காக நெடுந்தீவைவிட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

அமுதுப்புலவரின் தந்தையார் அவர்கள் நல்லூர் கயிலாச பிள்ளையார் கோயில் அருகாமையில் ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கி, அங்குதான் இரண்டாவது கட்டமாக அமுது அவர்களின் கல்வி தொடரப்பட்டது. "எனது ஐந்தாம் வகுப்பினை சென்.சார்ள்ஸ் கல்லூரியில் ஆரம்பித்தேன். அக்காலத்தில் பிரசித்திபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி போன்ற கல்லூரி களுக்குச் செல்லும் மாணவர்கள் இங்குதான் ஆரம்பக் கல்வியை மேற்கொள்வார்கள். பிரசித்திபெற்ற ஆசிரியர்கள் அங்கு பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். அங்கு எனது ஐந்தாம் வகுப்பை முடித்துக் கொண்டு பின்னர் ஆறாம் வகுப்பு படிப்பதற்காகக் கொழும்புத்துறைக்குச் சென்றேன்.அங்குதான் எனது தமிழ் அறிவை வளர்க்க ஆரம்பித்தேன் அல்லது முதன்முதலில் தமிழ்க்கேணியில் எனது காலை நனைத்தேன்" என்கிறார்.

"என் தமிழ் அறிவுக்கு இந்த ஆறாம் வகுப்புத்தான் முக்கிய அடையாளம். கொழும்புத்துறைப் பள்ளிக்கூடம் கொலம்பகம் என்று அழைக்கப்பட்டது. இந்தப் பாடசாலைக்கு ஒரு வரலாறு உண்டு. துறைமுகத்திற்கு ஒரு மைல் தூரத்தில் அமைந்திருந்த இந்தப் பள்ளிக்கூடம் மதகுருமார்களினால் உருவாக்கப்பட்ட பள்ளிக்கூடம். இங்கு இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று சாதனா கழகம். மற்றையது போதனா கழகம். மிகப்பெரிய கட்டடம். அருகாமையில் கோயிலும் இருந்தது. அங்குதான் என்னுடைய ஆறாம் வகுப்புக் கல்வியைத் தொடர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பள்ளிக்கூடத்தைத் துறவிகள்தான் நடத்திக்கொண்டு வந்தார்கள். இவர்கள் விவாகம் செய்யாதவர்கள். இவர்கள் மாதவன் சபைத் துறவிகள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள்தான் எங்களுக்குக் கற்பிப்பார்கள். மற்றைய நேரங்களில் தொழுகையும் ஜெபமும் செய்வார்கள். பள்ளிக்கூடத்தை அண்மித்து பெரிய தோட்டங்கள் அமைத்து அதனைப் பராமரிப்பார்கள். இவர்கள் பூசை செய்வார்கள். வயோதிபர்களை நன்கு பராமரிப்பார்கள். இவர்களை Brother என்று அழைப்பார்கள். இவர்கள் வெள்ளாடை உடுத்தி இருப்பார்கள். வெள்ளை இடைக்கட்டும் கட்டுவார்கள். காலை ஐந்து மணிக்கு அவர்கள் எல்லோரும் எழுந்துவிடுவார்கள். ஜெபம் செய்வதிலும் தியானத்திலும் ஆழ்ந்துவிடுவார்கள். ஆறு மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்க கோயிலுக்கு வருவார்கள். திருப்பலிக்குப் பின்னரும் ஜெபம் செய்வார்கள். காலைச் சாப்பாடு முடித்துக் கொண்டு பாடசாலைக்கு வருவார்கள். அவர்களிடம் நான் கண்டு கொண்ட விடயம் என்னவென்றால், வேறெந்தவித செயலிலும் கவனம் செலுத்தாமல், மாணவர்கள் இடத்தில்மட்டும் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருப்பார்கள்.

என்னுடைய வாழ்க்கையில் பெரும்பாலான விடயங்களை, பொது விடயங்களை, ஆத்மநேயத்தை அங்குதான் கற்றுக்கொண்டேன். என் நினைவில் இன்றும் ஒரு காட்சி கண்முன்னே தெரிகின்றது. என்னுடன் படித்த ஒரு மாணவன், அவனுக்கு சிரங்கு நோய் பிடித் திருந்தது. அதனால் அவருடைய உடம்பில் கொப்பளங்கள் போட்டு அதில் சீழும் நிறைந்திருந்தது. ஒருநாள் எங்கள் தலைமை அதிபர் அந்த மாணவனைப் பார்த்துவிட்டு, கைகளை எல்லாம் தூக்கி அசைத்துப் பார்த்தார். தம்பி, பின்னேரம் பாடம் முடிந்ததும் என்னுடைய அறைக்கு வா என்று சொல்லிவிட்டுப் போனார். தலைமை ஆசிரியர் சொன்னபடி அவரும் அறைக்குப் போக, இது என்ன நடக்குது என்று பார்க்க நானும் மெல்ல மெல்லப் பின்னாலே போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவப்பு நிறமுடைய ஒரு சவர்க்காரத்தைப் போட்டு அந்தக் கைகளைக் கழுவிச் சுத்தம்செய்து துணியினால் ஒத்தித் துடைத்து எடுத்து, பின்னர் மருந்துகள் எல்லாம் போட்டு இனிமேல் துப்புரவாக வரவேண்டும். காற்சட்டை, சேட்டு எல்லாம் தோய்த்துப் போட்டுக் கொண்டு சுத்தமாக வரவேண்டும். உனக்குத் தோய்த்து சுத்தப்படுத்தக் கஷ்டமென்றால் என்னிடம் கொண்டு வந்து கொடு, நான் தோய்த்து சுத்தம் செய்து உலரவைத்துத் தருகின்றேன் என்று கூறினார். அத்தகைய அனுதாபமும் இரக்கமுமுள்ள மதகுருமார்கள் மிகுந்த மனிதநேயத்துடன் நடந்துகொண்டார்கள். பெற்ற தாயையும்விட மிகுந்த மனிதநேயமுடையவர்களாக இருந்தார்கள். இந்த மகான்களிடம் பாடம் கேட்பது எனக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருந்தது."

மிகுந்த மன உருக்கத்துடன் அமுது அவர்கள் இதனைக் கூறிய போது, அவர் கண்கள் சிவந்து அதிலிருந்து கண்ணீர்பெருகியது. பிற்காலத்தில் அவர் அன்னை திரேசா அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதுவதற்கான ஆழமான படிமானங்களை இவர் இந்த ஆறாம் வகுப்பு கல்வி பயின்ற காலத்திலேயே பெற்றுக்கொண்டார் என்பதைத் தெட்டத்தெளிவாகப் புரிந்துகொண்டேன்.

தன்னைச் சூழ்ந்து இருக்கின்ற இயற்கையை விட்டுவிட்டு மனிதன் எங்கும் செல்லமுடியாது, இயற்கையுடன் இணைந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தில் ஆழமான விருப்புக் கொண்டவர் இளவாலை அமுது அவர்கள். மாணவப் பருவத்திலிருந்து மூதறிஞர் வரை அவர் எப்படி இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தார் என்பதனை பின்வரும் அத்தியாயங்களில் விளங்கிக் கொள்ளுவோம்.

"சிந்தனை செய்க சிந்தனை செய்க
எந்தப் பொருளையும் சிந்தனை செய்க"

என்ற திரு.வி.கல்யாணசுந்தரமுதலியார் கருத்தோவியத்திற்கு அமைய இளமைப் பராயத்திலேயே பல திசைகள் நோக்கி அவர் சிந்தனை விரிவதாயிற்று. அமுதுவின் கவிதைத் தொகுப்பு ஒன்றே பல்துறை சார்ந்த அவரது சமுதாயச் சிந்தனையை படம்பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காட்டுவதைக் காணலாம். "மாதவன் சபைத் துறவிகள் உண்மையிலேயே தெய்வத்தின் அருள்பெற்ற தூதுவர்கள்போல கல்விப் பணி செய்கின்றார்கள். படிக்கும் பாடத்தில் ஒன்று விளங்காவிடின் இன்றைக்குப் பின்னேரம் நின்று வடிவாகக் கேட்டு விளங்கிக் கொண்டு போகவேண்டும் என்று அறிவுறுத்துவார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் நான்காம் வகுப்பு படிக்கின்றவரையும் எங்கள் மீது இதுபோன்று எந்தவொரு ஆசிரியர்களும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. பொதுவாகச் சொல்லப்போனால் அவர்கள் எங்களைப் பற்றி பெரிதும் அக்கறை கொள்ளவில்லை.

அதுபற்றி அவர்களிடம் எந்தப் பார்வையும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இந்தத் துறவிகள் இவற்றை நன்கு அவதானித்துக் கடமையாற்றினார்கள். ஒரு மாணவன் பள்ளிக்கூடம் வருகின்றபொழுது அவன் தலையை நன்றாக இழுத்திருக்கின்றானா? அவன் அணிந்திருக்கின்ற ஆடைகள் தோய்த்து உலர்த்தப்பட்டவையா? கை, கால், நகங்கள் ஒழுங்காக வெட்டப்பட்டு இருக்கின்றனவா? காலைச் சுத்தமாக வைத்திருக்கின்றானா என்று கேட்டு காலைத் தூக்கிப் பார்ப்பார்கள். அவர்களுக்குத் திருப்தியில்லை என்றால் வடிவாகச் சுத்தம் செய்துவிட்டு வரும்படி துரத்துவார்கள். காலில் செருப்பு இல்லாமல் போனால் காரணம் கேட்பார்கள். பின்னர் கட்டாயப்படுத்துவார்கள். அப்படியும் அது சரிவராதபட்சத்தில் அதனை வாங்கப் பண உதவி செய்வார்கள். கையில் வைத்து எழுதுகின்ற பென்சிலைப் பார்ப்பார்கள். அது மிகக் கட்டையாக இருந்தது கண்டால் அதற்கும் உதவுவார்கள். இப்படியாக எல்லா வழிகளிலும் நெறிகளிலும் வழிகாட்டலிலும் தெய்வத்தினை ஒத்த அந்தத் துறவிகளிடம் பாடம் கேட்கக் கொடுத்து வைத்தது என் பாக்கியம் என்றே நான் கருதுகின்றேன்.

எங்கள் வகுப்பில் அவர்கள் பாடம் எடுக்க வரும்போது குறிப்பிட்ட விடயங்களில் அந்தத் துறவிகள் மெத்தக் கவனமாக ஆயத்தம் செய்து கொண்டு வருவார்கள். எத்தனை தடவை யார் கேள்வி கேட்டாலும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். என்னுடைய முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து வகுப்பிலும் பெறமுடியாத புதிய புதிய அனுபவங்களை எனது ஆறாம் வகுப்பிலே என் நெஞ்சுக்குள்ளே உணர்ந்து கொண்டேன். அந்தத் துறவிகள் எங்களிடத்திலே மிகவும் அன்புடனும் விசுவாசத்துடனும் இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். என்னுடன் படித்த மாணவர்களில் ஒருசிலர் தலை மயிர் வெட்டாமல் பள்ளிக்கூடம் வந்தால், உடனே கடிதம் எழுதி வீட்டில் பெற்றோரிடம் கொடுத்துவிடும்படி அனுப்பிவிடுவார்கள். சிலவேளை அவர்களின் நிலைமை கண்டு தாங்களே பணம் கொடுத்து உதவுவார்கள். இந்தச் சிறப்புக்களை எல்லாம் நான் கண்டுகொண்டிருக்கும் வேளையில் இன்னுமொரு அற்புதமான செயற்பாட்டினையும் கண்டேன்.

எமது ஆறாம் வகுப்புடன் ஏழாம், எட்டாம் வகுப்பை இணைத்து மாணவர் குழுவாக அமைத்து தமிழ்த்திறன் போட்டி என்ற ஒரு நிகழ்வை நடத்தினார்கள். சோழர் கழகம், பாண்டியர் கழகம் என்று குழுவாகப் பிரித்து தமிழ்த்திறன் போட்டியினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் நாங்களே இலக்கியத் தரம் வாய்ந்த போட்டிகளை நடாத்தினோம். பொதுவாக மாணவர்கள் இரண்டு கழகமாகப் பிரிக்கப்பட்டு போட்டி ஆரம்பிக்கப்படும்பொழுது உதாரண மாக ஒரு கழகத்தைச் சார்ந்த மாணவன் ஒரு வெண்பாவைப் பாடினால் அவர் எந்தச் சொல்லில் அந்த வெண்பாவை முடிக்கின்றாரோ, அந்த முடிக்கும் சொல்லில் இருந்து இன்னோர் வெண்பாவை எதிரணியினர் பாடவேண்டும். இந்தப் போட்டிகள் அதாவது கழகப் போட்டிகள் ஒவ்வொரு கிழமையும் மூன்று, நான்கு தடவைகள் இடம்பெறும். நான் இந்தப் போட்டிகளில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகவே பல பாடல்களைப் பாடமாக்குவேன். நான் கயிலாச பிள்ளையார் கோயிலிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு நடந்துதான் செல்வேன். அப்பொழுது எல்லாம் நல்ல பாடல்களைத் தெரிவு செய்து பாடிக்கொண்டு போவேன். பாடமாக்குவேன்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் பள்ளிக்கூடங்கள் மிக அருமையாக இருந்த காரணத்தினால் பல வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் வந்து படித்தார்கள். அக்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் கூட வீரகேசரி போன்ற பத்திரிகை களில்தான் வெளிவரும். நான் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தபோது என்னுடைய வாழ்க்கையில் மிகவும் ஓர் அதிசயமான சம்பவம் இடம்பெற்றது. எங்கள் வகுப்புக்கென்று அரசினால் குறிப்பிடப்பட்ட சில பாடநூல்கள் இருந்தன. அவற்றில் ஒன்று வித்துவான் குமாரசுவாமிப் புலவர் இயற்றிய "இராமோதந்தம்". இராமபிரானுடைய கதைச்சுருக்கம் என்பது இதன் பொருள். இராமகாதை வரலாற்றைச் சுருக்கி இரத்தினச் சுருக்கமாகப் பாடப்பட்டது. ஒருநாள் எங்கள் இலக்கிய வகுப்பு ஆசிரியர் எங்கள் எல்லோரையும் அழைத்தார். மொத்தம் நாங்கள் அறுபது பேர் இருந்தோம். இன்று திங்கட்கிழமை, நீங்கள் அடுத்த வாரம் திங்கட் கிழமை வரும்போது இந்தப் புத்தகத்தில் இருக்கின்ற நூற்றியிருபது பாடல்களையும் பாடமாக்கிக்கொண்டு வரவேண்டும் என்று கூறினார். அவர் சொன்னதைக் கேட்டு நான் மலைச்சுப் போனேன். பின் என்னுக்குள்ளே ஓர் அசட்டுத்துணிவு. பாடமாக்கிப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் மேலோங்க அந்த வாரம் முழுவதும் அந்த முயற்சியிலேயே இருந்தேன். என்ன ஆச்சரியம்? பாடல்கள் எல்லாம் பாடமாகிவிட்டன.

திங்கட்கிழமை பள்ளிக்கூடம் சென்றேன். இலக்கியப் பாடநேரம் நெருங்கியது. சொன்னமாதிரி வகுப்பறைக்கு ஆசிரியர் வந்தார். நூற்றியிருபது பாடல்களையும் பாடம் செய்த மாணவன் எழும்பலாம் என்றார். நான் திடீரென்று எழும்பி நின்றேன். சுற்றுமுற்றிலும் பார்த்தேன், வேறு ஒருவரும் எழும்பியதைக் காணவில்லை. பின்னர் ஆசிரியர் அரைவாசி பாடம் செய்தவர் எழும்பலாம் என்றார். அப் பொழுதும் பார்த்தேன் ஒருவரும் எழும்பவில்லை. கால்வாசி பாடமாக்கியவர் யார்? என்று கேட்டதும் வேறு சிலர் தலையைச் சொறிந்து போட்டு எழும்பினார்கள். பின்னர் ஆசிரியர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து உனக்கு உண்மையிலே முழுப்பாடலும் பாடம்தானோ? என்று கேட்டார். நான் ஓம் பாடம்தான் என்றேன். குறுக்கும் மறுக்குமாக 15 – 20 பாடல்களைக் கேட்டார். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடகட என்று பாடலைச் சொன்னேன். அவர் பிரமித்துப் போய்விட்டார். பின்னர் வந்து என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அதிபரின் அறைக்குச் சென்றார். பாருங்கோ இந்தப் பையன் ஒரு வாரத்தில் நூற்றியிருபது பாடல்களை, அதாவது ஒரு புத்தகத்தையே பாடமாக்கிக் கொண்டு வந்துள்ளான் என்று கூற, அதிபர் மிகுந்த பிரமிப்புடன் எனக்கு வெகுமதியான பொருளும் பரிசாகத்தந்து இப்படித்தான் மாணவன் இருக்க வேண்டும் என்று வாழ்த்தி, என்னைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஒவ்வொரு வகுப்பு வகுப்பாகச் சென்று ஒரு அசாதாரண மாணவனாக எல்லோருக்கும் அந்தத் துறவி அடையாளம் காட்டினார். அன்றைய நாளில் ஒரு பாடத்தை நான் நன்றாகக் கற்றுக் கொண்டேன்" என்று அடைக்கலமுத்து கூறுகின்றார். அதுவென்ன? "எனக்கு என்னில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதாவது பலபேரினால் சாதிக்கமுடியாத ஒன்றை என்னால் சாதிக்க முடியும் என்பதனை அன்று நான் என்னுள் உணர்ந்து கொண்டேன். அது மாத்திரமல்லாமல் அதிமிஞ்சிய ஞாபகசக்தியும் என்னிடம் இருக்கின்றது என்பதனையும் நான் உணர்ந்து கொண்டேன்."

புலவர் அமுது இந்தச் செய்திகளைச் சொல்லிக்கொண்டிருந்த வேளையிலே வள்ளுவனுடைய குறள் ஓவியம் ஒன்று என் மனத்திரையிலே மின்னி மறைந்தது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

இதனை ஏன் இந்த இடத்தில் குறிப்பிடுகின்றேன் என்றால், தன்னுடைய ஞாபகசக்தியைப் பற்றி அமுதுப்புலவர் கொண்டிருந்த அளவுகடந்த நம்பிக்கையை நான் இன்னுமோர் விதத்தில் அளக்கமுடிந்தது. என்னவெனில் அவருடைய தொண்ணூற்றியொரு வயதில் மூதறிஞர் பட்டமளிக்கப்பட்ட விழாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர் வாழ்க்கைச் சரிதத்தைப் பதிவுசெய்ய அவரிடம் கேட்டிருந்தேன். அதற்கிணங்க நான் நண்பர் பாஸ்கரனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போயிருந்தேன். உண்மையில் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கிய எமது உரையாடல் இரண்டு நாட்களில் நிறைவெய்தியது. ஏறத்தாழ பதினைந்து மணிநேரம் நாவும் வரட்சியடைய எந்தவித சலிப்போ களைப்போ இன்றி நெடுந்தீவில் அவர் படித்த முதல் வகுப்புத் தொடங்கி தன் வரலாற்றுப் பக்கங்களைப் பதிவு செய்த விதம் மிகவும் அற்புதமானது. சில விடயங்களில் ஆண்டு தேதிகளில் மறதியிருந்தாலும் அன்று அவர் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றைப் பதிவுசெய்துகொண்ட விதம் அவரது அதியுயர்ந்த ஞாபகசக்திதான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

சிறுவனாக இருந்த அடைக்கலமுத்து, பாடமாக்குகின்ற சக்தி அதிகமாக இருந்ததினால் எந்தப் பாடத்தில் எந்தக் கேள்வி வந்தாலும் முழுமையான பதிலைக் கொடுக்கக்கூடிய மன உறுதியுடன் வாழ்ந்திருக்கின்றார். "என்னுடைய வகுப்பில் என்னுடன் படித்த வெளிமாவட்ட மாணவர்கள் வயதில் மிக அதிக வித்தியாச முடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் எவருடனும் என்னால் ஆங்கிலத்தில் மோதிப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர்களால் தமிழ் பாடத்தில் என்னுடன் போட்டிபோட முடியவில்லை" என்று பெருமையுடன் அமுது புன்னகைத்தார்.

"நான் அக்காலம் பத்தாம் வகுப்பு எஸ்.எஸ்.சி படிக்கும்போது எங்களுக்கு தமிழ் படிப்பிப்பதற்கு என்று ஒரு பாலபண்டிதர் ஆசிரியர் ஒருவர் வருகை தந்தார். அவர் தமிழை ஒரு பாடமாகப் படிப்பித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருநாள், தம்பியவை உங்களுக்கு நான் இப்பொழுது வெண்பா எழுதக் காட்டித் தரப்போகின்றேன் என்றார். எத்தனையோ வெண்பாக்களைப் படித்துப் பாடமாக்கிச் சுவைத்த எனக்கு நானும் வெண்பா எழுதப் பழகப் போகின்றேன் என்பதை எண்ணியபோது அந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவுகணக்கே கிடையாது.

முதன்முதலாக அவர் ஒரு வெண்பாவை எடுத்தார். அந்தப் பாடல் நளவெண்பாவிலிருந்து எடுக்கப்பட்டது. அந்தப் பாடலின் சீர், தளை, தொடை என்பனவற்றை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளக்கம் சொல்லித் தந்தார். அன்றுதான் வெண்பாவை முறையாகப் பிரித்து எப்படி எப்படி பாடலை சரி, பிழை பார்ப்பது என்ற தெளிவும் எனக்கேற்பட்டது. நளவெண்பாவில் பெரும்பாலும் வெண்பாவுக்குரிய இலக்கணம் பிழைக்காது. ஏனைய வெண்பாக்களில் சில பல குறைகள் ஏற்படலாம். நீட்டலும் குறுக்கலும் புலவர்க்கு அழகு என்பது, அன்று அந்த ஆசிரியரின் விளக்கத்திலிருந்து விளங்கிக் கொண்டேன். அந்தவொரு வாரத்திலேயே எனக்கு வெண்பா எழுதப் பழகிவிட்டது. அதுமட்டுமல்ல வெண்பா எழுதவேண்டும் என்ற ஆர்வமும் உண்டாகிவிட்டது.

எங்களுக்கு அப்பொழுது அதிபராக இருந்தவர் பெருமதிப்புக்குரிய சந்நியாசி திரு.பேதுருப்பிள்ளை அவர்கள். மாணவர்களிடத்தும் மற்றையவர்களிடத்தும் மிகுந்த பற்றும் இரக்கமும் கொண்ட சந்நியாசி மிகுந்த இறைபக்தி உடையவர். கட்டுரை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தால் மிகுந்த கவனமாகப் பார்ப்பார். ஒருமுறை திரு. பேதுருப்பிள்ளை அவர்கள் ஒரு கட்டுரையை நாலு பக்கம் முழுமையாக எழுதித் தரும்படி கேட்டார். அப்பொழுது எனக்கு எழுதுகிற கஷ்டத்திலே நெடில் சொற்களை எடுத்து ட, டி என்று நீட்டி எழுதி நாலு பக்கத்தை முடித்துக் கொடுத்தேன்.அவர் என் கட்டுரையை வாசித்துப் பார்த்துவிட்டு என்னைக் கூப்பிட்டு நீயென்ன கட்டடத்தையும் கொட்டகையையும் நீட்டி எழுதிப் பக்கத்தை நிரப்பினியோ என்று கேட்டுப் பிரம்பாலை அடித்து, இனிமேல் இந்த மாதிரியான ஏமாற்று வேலையை என்னுடன் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லிக் கண்டித்தார். இப்படியான மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்ட ஆசிரியப் பெருமக்களின் கண்டிப்பான வழிகாட்டலால்தான் பல விடயங்களை நான் அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டேன். இத்தனை வருடங்கள் கழிந்தும் அவர்கள் மீது இன்றும் அன்புடனும் விசுவாசத்துடனும் இருக்கின்றேன்" என்று மிகுதியான அவருடைய நன்றிப் பெருக்கை விளக்கிக் கூறினார்.

"இந்தப் பள்ளிக்கூடச் சூழல் என் வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டாக்கியது. அது என் அகத்துள்ளே ஏற்பட்ட மாற்றங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் உலகில் காணப்படும் விடயங்களை சாதாரண பார்வையில் பார்த்த இப்பொழுது அவற்றில் காணப்படக்கூடிய இயல்பான அழகினை நான் மிகுந்த அவதானத்துடன் கூர்ந்து நோக்கவும், கற்பனை செய்யவும் என் நெஞ்சுக்குள்ளே ஒரு புதிய உதயம் உண்டானது. தாயுள்ளத்தினை ஒத்த அந்தத் துறவிகளின் அன்பான வழிகாட்டலினால் ஒரு மாருதம் என் மனத்திலே வீசத்தொடங்கியது. அன்பும் மகிழ்வும் என் உள்ளத்திலே பொங்கிப் பிரவாகிப்பதனை நான் உணர்ந்தேன். இந்தவேளையில் இலக்கியம் மட்டுமன்றி இலக்கண நூல்களையும் போதிப்பதால் இலக்கண முறைப்படி பாடல் எழுதுவதைக் கற்றுக்கொள்ள முற்பட்டேன்" என்றார் அமுது.

கவிஞர் தாகூர் அவர்கள் பற்றிக்கூட ஒரு முக்கிய செய்தி என்னவெனில் இவர் மாணவனாக இருந்தபொழுதிலே பாடல் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். எனவே பாட்டின் பொருளை அறியமுடியாத பதினொரு வயதில் கூட கவிதை எழுதத் தொடங்கிவிட்டாராம். இதனால் அவர் குடும்பம் மட்டுமல்ல ஆசிரியர்கள் கூட தாகூர் அவர்கள் பெருங்கவிஞராகச் சிறப்புப் பெறுவார் என்று பாராட்டி இருக்கின்றார்கள். பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் தாகூரை அழைத்து இந்தப் பொருளை வைத்துப் பாடல் எழுது பார்க்கலாம் என்றால், அவர் மறுநாளே அதனை செய்து முடித்துவிடுவாராம். இது கவிஞர் தாகூரின் இயல்பு. இந்தவகையில் பிற்காலம் மதுரகவியாக மிளிர்ந்த அடைக்கலமுத்து அவர்கள்கூட பதினோராம், பன்னிரண்டாம் வயதிலேயே அற்புதமாகப் பாடல் புனையும் கலையை வளர்க்கத் தொடங்கிவிட்டார் என்பதனை அமுதுவின் உரையிலிருந்து அறிந்துகொண்டேன்.இளவயதில் அவர் தான் அடைந்த கஷ்டங் களையும், பின்னர் அதனால் அவர் அடைந்த மகிழ்ச்சிப் பிரவாகத்தையும் "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்" என்ற உவமையைக் காட்டி விளக்கினார். "எதைச் செய்து முடிக்க வேண்டும் என்று இளமையில் ஆசைப்பட்டேனோ அதனை என் வாழ்நாளில் செய்து முடித்தேன்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற வள்ளுவன் வாக்கும் அடைக்கலமுத்து அவர்களின் வாழ்வியல் தத்துவத்தை விளக்கும் குறளாக அமைந்து விளங்கு கின்றது.

தொடர்ந்து இவ்வாறு சொல்கிறார் அமுது:

"பள்ளிக்கூட வளவிலே பூந்தோட்டம் அமைத்து அதனைப் பராமரிப்பது துறவிகளின் இன்னொரு முக்கிய பணியாக இருந்தது. நாங்கள் படிப்புமுடிந்த நேரத்தில் பள்ளிவிட்டு வீடு வரமுன்னர் அவர்களுடன் சேர்ந்து பூந்தோட்டத்துக்கு தண்ணீர் அள்ளிக்கொண்டு போய் ஊற்றுவோம். துறவிகள் ஆனந்தமடைவார்கள். நாங்கள் வீடு போகும்போது வெகுமதியாகப் பென்சில் தருவார்கள். என்னுடைய வாழ்வில் என்றும் மறக்கமுடியாத சில நினைவுகளை உங்களுக்குச் சொல்லுகின்றேன். என்னுடன் கூடப் படித்த சந்தியாபிள்ளை என்ற மாணவன் மிகுந்த வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றுதான் நினைக்கின்றேன். அவர் சிலவேளைகளில் பள்ளிக்கூடம் வராமல் தகப்பனுடன் மணல் அள்ளும் வேலைக்குச் சென்றுவிடுவார். கணக்குப் பாடத்திலும் மிகக் கட்டையாக இருந்தார். என்னிடம் அடிக்கடி உதவி கேட்பார். அவருக்குப் புகையிலை போடுகின்ற பழக்கம் சிறுவயதில் இருந்தது. துறவிகளுக்கு இந்தப் பழக்கங்கள் பிடிக்காது. கடுமையாகக் கண்டிப்பார்கள். அடிப்பார்கள். ஒருநாள் கணக்குப் பாடநேரம் துறவி சந்தியாபிள்ளையைக் கூப்பிட்டு உனது கொப்பியைக் கொண்டு வா என்று கூற, அவர் தனது இடுப்பில் மறைத்துவைத்திருந்த புகையிலையை எடுத்து மச்சான் இதைக் கொஞ்ச நேரம் வைத்துக் கொள் என்று என்னுடைய சட்டைப் பைக்குள் போட்டுவிட்டு துறவியிடம் சென்றார். கணக்கிலே பல பிழைகள் இருந்ததால் துறவி அவரைப் பிரம்பால் தண்டித்தார். அப்பொழுது துறவியின் கருத்தை மாற்றுவதற்காக ஐயா இப்பொழுது அடைக்கலமுத்துவும் புகையிலை போடுகிறார் என்று க்தையை மாற்றிவிட்டார். அப்படியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





என்று திகைத்த துறவி உடனடியாக என்னிடம் வந்து சட்டைப்பையைச் சோதித்துப் பார்த்தால் புகையிலை இருந்தது. ஆத்திரம் தாங்கமுடியாத துறவி அன்று என்னைப் பிரம்பினால் அதிகமாக அடித்துக் காயப்படுத்தினார். என் தாய் தகப்பன் கூட எனக்கு அப்படி ஒரு நாளும் அடித்ததில்லை. எனவே அது எனக்கொரு புதுமையான அனுபவத்தைத் தந்தது. அதாவது துறவிகள் படிப்பு விடயத்தில் மட்டுமல்ல பழக்கவழக்கத்திலும் அவர்கள் எப்படி எங்கள்மீது அக்கறை காட்டுகின்றார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

இதுபோல் இன்னும் ஒரு சந்தர்ப்பம் என மனத்திலே பசு மரத்தாணிபோல் நிலைத்து நிற்கின்றது. அதனையும் சொல்கின்றேன். அந்த அருமையான துறவிகள் பள்ளிக்கூட வளவில் பூந்தோட்டம் அமைத்துப் பராமரித்து வந்தார்கள். நாங்கள் மாலை நேரங்களில் பள்ளிக்கூடம் முடியநின்று தண்ணீர் அள்ளி ஊற்றி மண்ணைக் கொத்திக் கஞ்சல் பொறுக்கிச் சுத்தம் செய்து உதவுவோம். அவர்கள் அதற்காக எங்களுக்குப் பென்சில், கொப்பி இலவசமாகத் தருவார்கள். சிலவேளைகளில் அவர்களே எங்களை மறித்துக் கொஞ்சம் வேலை செய்துதரும்படி கேட்பார்கள். இப்படி ஒருநாள் வேலை செய்து களைத்துப் போனோம். துறவியும் மனம் மகிழ்ந்து உங்களுக்கு நல்ல பரிசு தரப்போகின்றேன், எல்லோரும் ஒழுங்காக வந்து நில்லுங்கோ என்றார். பென்சில் விலை குறைந்த பொருள் என்றாலும் அக்காலத்தில் காசு கொடுத்து வாங்குவது கஷ்டம்தானே? ஒரு ஆளுக்கு ஒரு பென்சில், ஒரு இறப்பர். தாய் தகப்பன் இல்லாத ஆளுக்கு இரண்டு பென்சில், இரண்டு இறப்பர் என்று சொல்லிவிட்டு தாய் தகப்பன் இல்லாதவர்கள் கையை உயர்த்துங்கோ என்று சொல்ல நான் இரண்டு கைகளையும் உயர்த்தினேன். அவர்கள் இரண்டுப்படி தந்தார்கள். பின்பும் கெட்டிக்காரனாய் இருக்கிறாய் அடடா உனக்கும் தாய் தகப்பன் இல்லையோ என்று கேட்க அந்த நேரம் இல்லை என்று சொல்லிவிட்டேன். கையில் மிஞ்சியிருந்த ஒரு பென்சிலையும் தந்து இதையும் கொண்டு போ என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் இப்படித்தான் தோட்டத்தில் வேலை செய்ய எங்களை மறித்துவிட்டார்கள். மாலை நேரம் வீடு செல்ல நன்றாய் பிந்திவிட்டது. என்னுடைய கஷ்டகாலம் என்னைத் தேடி எனது தகப்பனார் பள்ளிக்கூடம் வந்துவிட்டார். எனக்குக் கையும்காலும் பதறத் தொடங்கிவிட்டது. இன்றைக்கு மத்தள அடிதான், என்னென்று தப்பப் போகிறேன் என்று ஏங்கிக் கொண்டு நின்றேன். தகப்பன் வந்து துறவியிடம் கேட்டார். பள்ளிக்கூடம் முடிந்து நீண்டநேரம் மகன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை அதுதான் தேடி வந்தனான் என்றார். அப்படியா, யார் உங்களின் மகன்? என்று கேட்க தகப்பனார் என்னைக் கைகாட்டி அவர்தான் அடைக்கலமுத்து என்று சொன்னார். துறவி சிரித்துவிட்டு அப்படியா அவரைக் கூட்டிக்கொண்டு போங்கோ என்று என்னைத் தகப்பனுடன் அனுப்பி வைத்தார். தூக்குக்குத் தீர்ந்த கைதிபோல் துடிதுடித்தேன். என்மீது அவர்கள் வைத்திருந்த மரியாதை அத்தனையும் இழந்துவிட்டேன் என்று அழுதேன். அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. ஏன் அந்த ஆசிரியப் பெருந்தகை என்னைத் தகப்பனிடம் காட்டிக் கொடுக்கவில்லை. மறுநாளும் அடிவிழப் போகின்றதே என்ற பய உணர்வுடன் சென்றபோதும்கூட அந்த ஆசிரியப் பெருந்துறவி இதுபற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே. அதுதான் என் வாழ்க்கையில் என்னை அதிகம் சிந்திக்க வைத்தது." இந்தச் சந்தர்ப்பத்தில் அமுதுவின் கண்ணில் கண்ணீர் பனித்தது. ஏன் நானுங்கூட அந்தப் பெருந்தகையை எண்ணிக் கண்ணீர்விட்டேன். இது நாங்களாக எண்ணித் திருந்தவேண்டிய விடயமல்லவா? தண்டனையைவிட இந்தப்பொறுப்பு அதிக தண்டனையல்லவா. "அன்றிலிருந்து என் வாழ்வில் என் மனத்தில் ஓர் உறுதியை மேற்கொண்டேன். என்றும் என்வாழ்வில் நான் உண்மையுடையவனாக வாழவேண்டும். அந்தத் தூய்மையான வழிகாட்டலின் பெயரில்தான் நான் நல்ல கட்டுரைகளை எழுத ஆரம்பித்தேன்" என்றார்.

"இந்நாட்களில் எங்கள் பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் பரீட்சை நடத்துவதற்கு என்று ஓர் இன்ஸ்பெக்ரர் வருவார். அவருடைய பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சதாசிவம் ஐயர். இவர்தான் அக்காலம் சுன்னாகம் வித்துவான் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் நடத்திய பண்டிதவகுப்புப் பள்ளிக்கூடத்திற்குப் பொறுப்பாக இருந்தவர். ஒருநாள் எங்கள் வகுப்புக்கு வந்தார். ஒருசில வெண்பாக்களைப் பிரித்துப் புணர்த்தி, அதனை அழகாக விளக்கினார். பின்னர் மாலைக்காட்சி பற்றி நாற்பது வரிகள் எழுதும்படி பணித்தார். நாங்கள் அப்பொழுது வகுப்பில் அறுபது பேர் வரை இருந்தோம். மாலைக்காட்சி எழுதி முடிந்துவிட்டது. ஆசிரியரிடம் கொடுத்துவிட்டோம். மறுநாள் தமிழ் பாடநேரம் அவர் கையிலே ஒரு சில கட்டுரைகளுடன் வந்தார். வந்ததும் சொன்னார். அறுபது பேருடைய கட்டுரைகளில் மூன்று கட்டுரைகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன என்று முதலில் கூறினார்.

அதில் முதல் கட்டுரையில் அமைந்த கற்பனை தன்னை நன்றாக ஈர்த்திருக்கின்றது என்று கூறினார். நானும் யார் அந்த விண்ணனாக இருக்கும் என்று அறிய ஆவல்கொண்டு இருக்கையில் அடைக்கலமுத்து நீ தான் வா என்று அழைத்து, என்னிடம் அந்தக் கட்டுரையைத் தந்து வாசிக்கும்படி கூறினார். நான் கட்டுரையை வாசித்தேன். அன்று அந்தக் கட்டுரையை நான் இப்படித்தான் எழுதியிருந்தேன். முழுவதும் நினைவில் இல்லாவிட்டாலும் நினைவில் இருப்பதைக் கூறுகின்றேன்" என்று தன் கடந்த காலக் கற்பனையைச் சொல்லில் வடித்தார். இதோ அந்த மாணவன் அடைக்கலமுத்துவின் மாலைக்காட்சி:

"சூரியன் தனது கடமையை நிறைவாகச் செய்துவிட்டு ஓய்வு பெறும் நோக்கத்தில் படுக்கைக்குச் சென்றான். அவன் படுக்கின்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த தலையணையைக் காணவில்லை. அவனுக்கு ஆத்திரம் அதிகம் ஏற்பட்டுவிட்டது. அதனால் கைகளை ஓங்கி வானத்தை அறைந்தான். அவன் அடித்த இடத்தில்தான் அந்தத் தலையணை இருந்ததால் அது உடைந்து பஞ்சுகள் எல்லாம் சிதறிப் பறந்து வந்து கடற்கரையில் படிந்து நீரைக் குடித்து, நீர்க்குமிழிகளாகக் கரையை நோக்கித் தெறித்தது என்று மாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் தோன்றும் கடற்கரைக் காட்சியையும் இணைத்து அந்தக் கட்டுரையை வடித்திருந்தேன். இப்படி ஒரு வர்ணனையில் யாரும் கட்டுரையை எழுதவில்லை. என்னை வெகுவாகப் பாராட்டி பள்ளிக்கூட தலைமை ஆசிரியரிடமும் கூட்டிச் சென்று எனது கற்பனைத் திறனை எடுத்துக்கூறி மிகப் பிரமாதமாகப் பாராட்டினார்கள். அத்துடன் அடைக்கலமுத்து உனக்கு அருமையான கற்பனாசக்தி உண்டு. நீ இக்கட்டுரையை எழுதியதுபோல் இன்னும் பல சமூக விடயங்களைப் பற்றிக் கற்பனை செய்யவேண்டும். அப்படி நீ பயிற்சி செய்தால் ஒரு காலத்தில் நீ பெரிய அறிஞனாய் வருவாய் என்று பாராட்டியதுடன், இப்படிப் பாராட்டுப் பெறுவது எல்லாம் வாழ்வில் முன்னேற்றத்துக்கு ஒரு சிறந்த வழி என்று அறிவுரைகள் கூறி அனுப்பி வைத்தார்" என்கிறார் அடைக்கலமுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 6. திட்டமிட்ட வாழ்க்கை முறை

இந்த இளமை நிலையின் அறிவுறுத்தல்கள் எல்லாம் அடைக்கலமுத்து அவர்களின் இதயத்தில் மிக ஆழமாகப் படிந்து இருந்தன. இந்தப் படிமானங்களின் காரணமாக அவருடைய நடைமுறைச் செயற்பாடுகளெல்லாம் அந்த அறிவுரைகளுக்கு அமைந்தனவாக அவர் வாழ்க்கைநெறியை அமைத்துக்கொண்டார். அதனால்தான் என்னவோ நான் அவரிடம் பேசும்போது எல்லாம் பிள்ளைகளிடத்தோ, மனைவியிடத்தோ குறைகளைக் கண்டுபிடித்துப் பேசக்கூடாது, சிறு பிழைகள் கண்ணுக்குத் தெரிந்தாலும் சாடை மாடையாகக் கண்ணுக்குத் தெரியாத மாதிரிவிட்டு எப்பொழுதும் பிள்ளைகளைத் தட்டிக்கொடுத்து வளர்க்கவேண்டும் என்று பலமுறை எனக்கு அறிவுரை தந்துள்ளார். அந்த அறிவுரைகள் என் வாழ்க்கைப் பயணத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் சிறந்த வழிகாட்டலாக என்னை நெறிப்படுத்தியிருக்கின்றது. அவர் தன்னுடைய பிள்ளை களிடத்தில் பழகும்போதும் பேசும்போதும் பலமுறை அவருடைய இயல்புகளை அவதானித்து இருக்கின்றேன். அவருடைய வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் ஒவ்வொரு சொற் பிரயோகங்களும் ஒரு பூவினைவிட மென்மையானது. இத்தகைய சொற்பிரயோகங்களில் எப்படி அவர் பரிச்சயமானார் என்று நான் பலமுறை என்னுள் ஆச்சரியப்பட்டிருக்கின்றேன். அப்பொழுது நான் பலமுறை அந்தப் பழக்கத்தையும் பயிற்சிகளையும் பற்றி அவரிடமே கேட்டுத் தெரிந்துகொண்டேன். அதுபற்றிய விளக்கங்கள் குறிப்புகள் எல்லாம் பின்னர் வரும் அத்தியாயங்களில் எடுத்து விளக்குவேன்.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லுகின்றேன். ஒருமுறை அடைக்கலமுத்து அவர்கள் ஒரு கட்டுரையை எழுதிக்கொண்டு போய் ஆசிரியரிடம் கொடுத்திருக்கின்றார். அந்தக் கட்டுரையை வாசித்துவிட்டு அந்த ஆசிரியப்பிரான் மிகுந்த புன்சிரிப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக்கல்கி வாரும் என்று மிகுந்த பரவசத்துடன் அழைத்தார். அந்தப் பாராட்டை இன்றும் நான் நெஞ்சில் சுமந்துகொண்டே இருக்கின்றேன் என்றார்.

அக்காலம் யாழ்ப்பாணப் புலமை பற்றி அடைக்கலமுத்து அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணம் தமிழ்த்தாயகமான தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது என்று குறிப்பிடுகின்றார். "இக்காலத்தில் நல்லைநகர் ஆறுமுகநாவலர், வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை, மகாவித்துவான் நா.கதிரவேற்பிள்ளை போன்ற பல அறிஞர்கள் தென்னிந்தியா சென்று யாழ்ப்பாணத்தின் புகழை நிலைநிறுத்தினார்கள். ஆனால் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டே தனது புகழை ஈழத்தில் மட்டுமன்றி தமிழகமெங்கும் பரவச்செய்தார். இவர் தமிழ்மொழி, வடமொழி, என்பவற்றில் மிகுந்த பாண்டித்தியம் உடையவராக இருந்ததுடன் இலக்கணச் சுருக்கம், மெய்ப்பொருளாய்வு, கண்டனம் எனப் பல்வகைத் துறையிலும் பாண்டித்தியம் உடையவராக விளங்கினார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் சிறந்த மாணாக்கனாக விளங்கியவர் வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள். இவர் தனக்குப் பிற்காலத்தில் பேர்பெற்ற இலக்கணவித்தகர் பண்டிதர் நமசிவாயதேசிகர் போன்ற பல பண்டிதர்கள், வித்துவான்கள், பேராசிரியர்கள் போன்றவர்களுக்கு இலக்கண இலக்கியங்கள் மற்றும் தர்க்கசாஸ்திரங்கள் போன்ற விடயங்களிலும் பேராசானாகப் பணிபுரிந்தார். இறைபக்தியுடன் தமிழ்ப்பணி செய்வதனையே தொண்டாக நினைத்த தமிழ் முனிவர் மகாவித்துவான் கணேசையர் அவர்கள் குமாரசுவாமிப் புலவரின் மாணவனாக இருந்த காலத்தில் அவருடைய தூண்டுதலால் பத்திரிகைகளில் பல விடயதானங்களைச் செய்வார். அந்த விடயங்கள் தமிழ்கூறும் உலகிற்கு நல்ல பயனைக் கொடுக்க ஆரம்பித்தன. அவருடைய பல கட்டுரைகளை அக்காலத்தில் பதிப்பித்து வெளியிடுவதில் பெருந்தொண்டாற்றியவர் ஈழகேசரி நா.பொன்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அந்தப் பத்திரிகையில் வரக்கூடிய விடயங்களைத் திட்டமிட்டு தவறாமல் படிப்பேன். இதனால் தமிழ்ப் பாடத்தில் நான் ஒரு கெட்டிக்காரன் என்ற எண்ணம் என்னுள் வளரத்தொடங்கியது. இந்த நிலையில் சதாசிவம்ஐயா அவர்கள் என்னைச் சின்னக்கல்கி என்று அழைத்தது எனக்குத் தேடக்கிடைக்காத ஒரு திரவியம் என்றே எண்ணினேன். இன்றும் அந்தப் பாராட்டு என் இதயத்தை இன்பத்தில் குளிப்பாட்டுகின்றது.

இந்தப் பாராட்டைப் பெறுவதற்கு இன்னுமோர் தூண்டல் எனக்கு இருக்கின்றது. அதுவும் என் வாழ்க்கையில் தேடக் கிடைக்காத ஒரு பாக்கியம். என்னிலும் பத்து வயது மூத்தவர் என் அண்ணர். ஆசிரிய கலாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அவருக்கும் தமிழ்மொழி மீது அதிக விருப்பம் இருந்தது. அவர் ஒவ்வொரு நாளும் தவறாது எனது பாடக் கொப்பியை எடுத்து வாசிப்பார். கட்டுரைகளைப் படிப்பார். அதுமட்டுமன்றி என்னைத் தமிழ்மொழியில் பாண்டியத்தியம் உடையவராக ஆக்கவேண்டும் என்ற அவாவினால் தமிழ்நாட்டிலிருந்து நேரடியாகத் தான் பெற்றுக்கொள்ளும் சஞ்சிகை கள், பத்திரிகைகள் என்பவற்றை தவறாமல் தந்து உதவுவார். அந்தச் சஞ்சிகையில் முக்கியமாக ஆசிரியர் கல்கி அவர்கள், மூதறிஞர் ராஜாஜி அவர்கள், டி.கே.சி. போன்ற பல அறிஞர்களின் கட்டுரைகளைத் தவறாமல் படிப்பேன். எனக்குள்ளே ஒரு தன்னம்பிக்கை, எனக்குள்ளே நான் சிறுகச் சிறுக முன்னேறினேன். என்னுடைய இடைவிடாத அந்த வாசிப்பு எனக்குப் பல எண்ணங்களை ஊட்டியது. வாழ்வில் தன்னம்பிக்கை, முயற்சி, உழைப்பு இல்லாமல் எந்தவிதமான குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்துவிட முடியாது என்பதனை என் உள்ளம் எண்ணியது. வெறுமையான, சோம்பேறித்தனமான எண்ணங்கள் வெறும் பசுந்தரைகள் கண்டு பொழுதுபோக்கும் மனப் பான்மை உடையவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து விடுவார்கள் என்பதை அவர்களின் எழுத்து அனுபவத்தில் இருந்து உணரத் தொடங்கினேன். சிரிப்பதற்கு ஒரு நேரம், சிந்தனை செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு ஒரு நேரம், விளையாட ஒரு நேரம், படிக்க ஒரு நேரம், உழைக்க ஒரு நேரம் என்பதனை என் நெஞ்சு உணர ஆரம்பித்தது. சுருக்கமாகச் சொன்னால் என் அண்ணர் எனக்குச் செய்த அந்த உதவியினால், நான் ஒன்றை அடைய வேண்டும் என்றால் திட்டமிட்ட ஆழ்ந்தவினை வேண்டும், அதாவது விடாமுயற்சி வேண்டும் என்பதனை உறுதி செய்துகொண்டேன். எனவே முன்னேற வேண்டும் என்ற ஆசைநெருப்பு என் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. அதற்கு என் அண்ணனின் அயராத பங்களிப்பு கைகொடுத்தது என்றே கூறுவேன்" என்கிறார் அமுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கொலம்பகம் ஆசிரிய கலாசாலையில் அமுது

"தென்னைமரச் சோலைகளும் சீனிரசம் உண்டாக்கும். பன்னவர் கள் தந்திடும் பார்வயலும் - தன்னகத்தே கொண்ட கொலம்பகத்தில் எனது சாதாரண தரப் பரீட்சையை (எஸ்.எஸ்.ஸி.) முடித்து ஆசிரிய கலாசாலையில் அடியெடுத்து வைத்தேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8. பகீரதப் பிரயத்தனம்

“கொலம்பகத்தில் நான் சாதாரண தர பரீட்சையில் சித்தி யடைந்தபோது எனக்குப் பதினாறு வயது. ஆசிரிய கலாசாலையில் சேர்வதற்கு பதினெட்டு வயதாக வேண்டும். அக்காலம் சாதாரணதர பரீட்சை சித்திபெற்றவுடன் வேலைக்குப்போகத் தொடங்கிவிடுவார்கள். ஆசிரிய கலாசாலைக்கு ஆசிரியர் பணிக்கென்று விரும்பி வரக் கூடியவர்கள் குறைவாகத்தான் இருக்கும். காரணம் வறுமையில் இருக்கக்கூடிய குடும்பங்களிலிருந்து வருபவர்கள் எஸ்.எஸ்.ஸி சித்தியடைந்துவிட்டு வேலைக்குப் போகின்றேன் என்றால் பெற்றோர்கள் கையெடுத்து கும்பிடுபோட்டுக் கொண்டே விடை கொடுப்பார்கள். இந்த நிலையில் நான் ஒருவாறு ஆசிரிய கலாசாலையில் சேர்ந்துவிட்டேன். என்னுடன் அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து ஐந்து பேராக எல்லாமாக ஆறு பேர் சென்றோம். வெளிமாவட்டங்களில் இருந்தும் ஆறுபேர் வந்தனர். எல்லாமாக பன்னிரண்டுபேர் பயிற்சிவகுப்புக்குச் சென்றோம். பொதுவாக இக்காலத்தில் ஐந்து ஆசிரிய கலாசாலைகள் இருந்தன.

கொலம்பகம் ஆசிரிய கலாசாலை,

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை,

திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை,

சாவகச்சேரி ஆசிரிய கலாசாலை,

இளவாலை பெண்கள் ஆசிரிய கலாசாலை. இதனைப் போதனா சாலை என்றும் அழைப்பார்கள்.

திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைக்கு அளவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் அவர்கள் அதிபராக இருந்தார். அவர் B.A பட்டம் பெற்றவர். அக்காலத்தில் சமூகத்தில் அவருக்கு உயர்ந்த மதிப்பிருந்தது. சாவகச்சேரி ஆசிரிய கலாசாலைக்கு அதிபராக திரு. அமரசிங்கம் அவர்கள் இருந்தார். இவரும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பட்டதாரி அதிபர். சிறந்த பேச்சாளர், சிறந்த அறிவாளி. திரு. இராசசிங்கம் அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்தார். இவரும் ஒரு சிறந்த அறிவாளி. B.A பட்டம் பெற்றவராக இருந்தார். அந்தக் காலத்தில் B.A பட்டம் பெற்றவர்களைக் காண்பது அரிது. ஆனால் கொலம்பகம் ஆசிரிய கலாசாலையில் பட்டதாரி அதிபர் இருக்கவில்லை. ஆனால் நான் கொலம்பகம் ஆசிரிய கலாசாலையில் காலடி எடுத்து வைத்தவேளை அங்கொரு பெரியமாற்றம் நிகழ்ந்தது. துறவிகளில் மிகப் பிரபல்யம் வாய்ந்தவரும் வேத சாஸ்திரங்களில் Dr. பட்டம் பெற்றவருமான அந்தக் காலத்து B.Sc இமிலியான்பிள்ளை அவர்கள் எங்கள் ஆசிரிய கலாசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவர்தான் யாழ்ப்பாணத்துக்கு வந்த முதல் ஆயர். பதினாறு வயது நிரம்பிய என்னை அந்தப் பெரியவர்தான் ஆசிரிய கலாசாலையில் சேர்த்துவிட்டார். உண்மையிலே அந்த ஆசிரிய கலாசாலை என் வாழ்க்கைக்கு உரிய பயிற்சிக்களமாக அமைந்தது என்று கூறலாம். தமிழ்மொழி இலக்கிய இலக்கணப் பாடங்கள் முன்னுள்ள சாதனா வகுப்பு பயிற்சிபோல் அன்றி சற்றுவிரிந்த ஆய்வுமுறையிலான கற்கை என்பதினால் அதனைச் சுவைபடச் சொல்லி உணரவைக்கக் கூடியளவில் எங்கள் கலாசாலையில் ஒருவரும் இருக்கவில்லை. அந்தக்காலத்தில் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் ஆசானாகக் கடமையாற்றினார். எங்களுக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் கிட்டத்தட்ட ஒரு வருடம் முடியும் நேரம் நாம் அதிபரிடம் சென்று இலக்கண இலக்கியங்களை சுவைபட சொல்லித் தரவல்ல ஆசான் ஒருவரைத் தரவேண்டும் என்று மிகுந்த தாழ்மையுடனும், பயபக்தியுடனும் எடுத்துச் சொன்னோம்.

எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அதிபர், ஆசிரியர் வித்துவான் இளமுருகனார் அவர்களை எங்களுக்குத் தமிழ் ஆசானாக ஏற்பாடு செய்து தந்தார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தமிழ் ஆசானாக இருந்த இளமுருகனார் அவர்கள் இப்பொழுது கொலம்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஆசானாக கடமையை ஏற்றுக்கொண்டார். ஆசிரிய கலாசாலைக்கு வித்துவான் இளமுருகனார் வந்தபோது அங்கு எல்லாமே ஒரு புது மாற்றம் ஏற்பட்டது. இவர் தனித்தமிழ் சொற்களை மட்டுமே தெரிவுசெய்து பாடம் சொல்லும் எண்ணங்கொண்டவர். வடமொழிச் சார்புள்ள சொற்களைப் பயன்படுத்த மாட்டார். இவர் நவாலியூரைச் சேர்ந்தவர். நம்நாட்டுக்குப் புகழும் புலமையும் சேர்த்த தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரின் மகன். இவர் தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக தனது இயற்பெயராகிய பாலசுப்பிரமணியம் என்ற பெயரைத்தான் இளமுருகனார் என்று மாற்றியிருந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவரைப் போல இளம்வயதில் பண்டித வகுப்பில் சித்தியடைந்தவர் யாரும் கிடையாது. தங்கத் தாத்தாவின் மகன் அல்லவா! அவர் தன்னுடைய வீட்டிலேயே பண்டித வகுப்பை நடாத்தியவர். வேத, ஆகம, இதிகாச புராணங்களில் மிகுந்த பயிற்சி உடையவர். சமயப்பற்றுள்ள பெரும்பிரான். மிகுந்த ஒழுக்கசீலராக வாழ்ந்து காட்டியவர். அவரிடம் பாடம் கேட்டுப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது எனது வாழ்வில் நான் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர் வகுப்புக்கு வருகின்றபொழுது எதையும் நன்கு ஆயத்தம் செய்து கொண்டுதான் வருவார். இளமுருகனார் ஒரு பெரும் புலவரின் மகன். தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி. செய்யுள் இயற்றுவதில் மிகுந்த வல்லமை உடையவராக இருந்தார். ஈழவளநாட்டின் செய்யுள் யாத்த புலவர்களில் இளமுருகனார் மிகப் பிரபலம் வாய்ந்தவர். ஈழத்துச் சிதம்பரம் பற்றிய ஒரு பெருங்காவியம் அவருடைய புலமைக்குச் சான்றானது. இலக்கணப் பிழையின்றி செய்யுள் இயற்ற வேண்டும் என்பதில் மிகுந்த கண்டிப்புடையவராக இருந்தார். இலக்கணப் பிழையின்றி கவிதை எழுதுவது என்பதனைவிட அந்தக் கவிஞனுக்கு ஏற்ற சொற்தொடர்களைச் சொற்கோர்வைகளைத் தேர்ந்து எடுத்து கவிதை புனைவதிலும் மிகுந்த வல்லமை உடையவராக இருந்தார். எங்கள் பள்ளிக்கூட அதிபர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி உயர்வு பெற்று வெளியேறும்போது அவருக்காக ஒரு பாடல் ஒன்றை எழுதினேன். எனக்கு சரியாக ஞாபகம் வருகுதில்லை. மூன்றாவது வரியை இப்படித்தான் எழுதினேன்.

"அறம் வாழும் செல்வா – அருளுக நல்லாசி" என்று எழுதி நான்காவது வரியை எப்படிப்போடுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டு இருந்துவிட்டு இறுதியாக ஆசிரியரைக் கேட்டபோது, "மறவாதிருக்கும் மனம்" என்று ஏதோ மடியில் வைத்திருந்ததை எடுத்துத் தந்த மாதிரிச் சொன்னார். ஆசிரிய கலாசாலையில் இருந்து இளமுருகனார் அவர்களைப் பிரியவேண்டிய நேரம் வந்தபோது அவரிடம் சென்று செய்யுள் இயற்றுவதனைப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் விருப்பத்தை அவரிடம் சொன்னபோது அதற்கு அவரும் அனுமதி தந்தார். அதனால் நான் அவருடைய வீட்டுக்குச் சென்று இலக்கண விதியின்வழி செய்யுள் புனையும் கலையைத் தொடர ஆரம்பித்தேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பாடசாலையின் நூற்றாண்டு விழாவிலே சஞ்சிகையின் ஆசிரியர்

"ஆசிரிய கலாசாலையில் படித்துக்கொண்டு இருக்கின்றபோது அதன் நூறாவது ஆண்டுவிழா வந்தது. இந்த விழாவிற்கு ஒரு சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்று எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் தீர்மானம் எடுத்தார்கள். அந்த சஞ்சிகையின் பெயர் தூதன். இந்தச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு எல்லோரும் சேர்ந்து என்னைத்தான் ஆசிரியராகத் தெரிவு செய்தார்கள். எனக்கு அதுவொரு புதிய அனுபவம். அதனால் நான் பல அறிஞர்களைச் சந்தித்து விடயதானங்களைப் பெற்றுக்கொண்டேன். பாடசாலைக்கு வெளியில் இருக்கக்கூடிய பல அறிஞர்கள் விடயதானங்கள் செய்தார்கள். பாதர் (Father) ஜோசப் தனது முதலாவது கட்டுரையை இந்தச் சஞ்சிகைக்குத் தந்தார். இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டபோது இந்த சஞ்சிகையில் சென். ஜோசப் கல்லூரியின் தலைவரான பீற்றப்பிள்ளை அவர்களின் கட்டுரை மிகுந்த சிறப்புடையதாக எல்லோராலும் போற்றப்பட்டது. பிரித்தானியாவில் B.A பரீட்சை ஆரம்பிக்கப்பட்டபொழுது பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழிருந்த பல மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்கள் எல்லோரிலும் முதல் மாணவனாகத் தோற்றிய ஒரு மிகச்சிறந்த பேரறிஞர் என்ற மதிப்பினையும் திரு.பீற்றப்பிள்ளை அவர்கள் பெற்றிருந்தார். இலண்டனில் M.Sc பரீட்சை எடுத்தபோதும் அவர் முதற்தர மாணவனாக இருந்தார். இவர் மரணம் அடைந்தபோது மாணவர்கள் அவருடைய மூளையைச் சோதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்தளவிற்குப் பிரசித்தமானவர் திரு. பீற்றப்பிள்ளை அவர்கள். நான் தூதன் ஆசிரியனாக இருந்து இப்படியான கல்விமான்களிடத்தில் விடயதானத்தைப் பெற்று மிகுந்த துடிப்புடன் தூதன் சஞ்சிகையை வெளியிட்டு பலரிடம் இருந்தும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டேன். எதிர்காலத்தில் நானொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாக இருக்கவேண்டும் என்பதனைவிட நல்லதொரு எழுத்தாளனாக வாழவேண்டும் என்ற பெருவிருப்பத்தை தூதன் சஞ்சிகை எனக்கு ஏற்படுத்தியது.

யாரும் செய்ய முடியாத ஒரு காரியத்தைச் செய்துமுடித்தால் அதனைப் பகீரதப் பிரயத்தனம் என்று சொல்லுவார்கள். அத்தகைய முயற்சியில் நான் ஈடுபட ஆரம்பித்தேன். என்னுடைய செயல்கள் ஒவ்வொன்றும் செயற்கரிய செயல்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணம், தளராத நம்பிக்கை என்பன என் அடிமனத்தில் தோன்றி என் எண்ணங்களுக்கு உரமேற்றியது. தூதன் சஞ்சிகையை வெளியிட்டு எனக்குக் கிடைத்த பாராட்டும் புகழும் எதிர்காலத்தில் நானொரு கவிஞனாக ஓர் எழுத்தாளனாக இரண்டையும் இணைக்கின்ற ஒரு புள்ளியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம், பேரவா என்னுடைய கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொண்டே இருந்தது. அதற்காகவே செயற்பட்டேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10. என் தமிழ்த் தாகத்துக்கு இளமையில் நான் கண்ட ஒரு தண்ணீர்ப் பந்தல் வித்துவான் இளமுருகனார்

"சுவாமி வேதாசலம் என்னும் தனது இயற்பெயரை மறைமலை அடிகள் என்று சுத்தத் தமிழில் மாற்றிய மாபெரும் தமிழ் அறிஞர் மறைமலை அடிகளுடைய இலட்சியத்தைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு தமிழ் அறிஞரைச் சொல்ல வேண்டும் என்றால் அது வித்துவான் இளமுருகனார் என்றுதான் நான் சொல்லுவேன். இவர் பாலசுப்பிரமணியம் என்ற தன் இயற்பெயரையையே இளமுருகனார் என்று மாற்றம் செய்து கொண்டிருந்தார். சிறந்த தமிழ்ப் பற்றுடைய வராகவும், சிறந்த தமிழ் அறிவுடையவராகவும் வித்துவான் இளமுருகனார் விளங்கினார். நான் ஒரு சந்தர்ப்பத்தைக் கூற விரும்பு கின்றேன். ஒருநாள் அவருடைய வீட்டுக்குக் கவிதை இலக்கணம் படிப்பதற்காகப் போயிருந்தேன். அங்கே அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காக கிருஸ்ணன் என்றொரு மலையாளத்தைச் சேர்ந்த ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். வித்துவான் அந்த வேலைக்காரனை நடுவிலான் இங்கே வா என்றதும் அவர் வந்தார். உடனே அவரிடம் வெந்நீர் கொண்டு வா என்று சொன்னார். (நடுவிலான் என்றால் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்) அவனுக்குப் புரியவில்லை. ஏதோவொரு கொஞ்சத் தண்ணீரைக் கொடுக்க அதைக் கையில் தொட்டுப் பார்த்துவிட்டு நடுவிலான் உன்னை வெந்நீர் கொண்டு வா என்றல்லவா சொன்னேன் என்றார். உடனே நான் அவரைக் கேட்டேன். ஐயா அவரைச் சுடுதண்ணி கொண்டு வா என்று சொன்னால் இலகுவாக இருக்குமே என்று கேட்டேன். அவர் உடனே பதறி அடித்துக்கொண்டு சுடுதண்ணி என்றால் அது சுட்ட தண்ணீர், சுடுகின்ற தண்ணீர், சுடும் தண்ணீர் என்று அது முக்காலத்தையும் அல்லவா குறிக்கும். எனவே அவன் எந்த நீரைக் கொண்டுவருவான். இது தண்ணீருக்கும் பொருந்தாது இலக்கணத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொருந்தாது என்று எனக்கு அன்றைக்கு இந்தச் சுடுதண்ணீரை வைத்துக்கொண்டே அவர் வினைத்தொகையை படிப்பித்து முடித்துவிட்டார். இப்படி அவர் இலக்கணமே வாழ்வாகக் கொண்டவர்.

அவர் செய்யுள் இயற்றும் வல்லமை நிறைந்தவர். இதிகாசம், புராணம் மற்றும் இலக்கியங்கள் அனைத்தும் கற்றுத்தெளிந்த ஞானியாக விளங்கியமையால் எந்தக் கேள்விக்கும் உடனே விடையிறுக்கக்கூடிய வல்லமை படைத்திருந்தார். செய்யுள் இயற்றுவதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்ததினால் அவர் அதிகம் செய்யுள் படித்திருந்தார். இதனால் அவர் சொல்வளம் மிக்கவராக விளங்கினார். இதனால் அவர் ஒரு தமிழ்ச்சொல் அகராதியாகவே விளங்கினார் என்று சொல்லலாம். மேலும் ஆசிரிய கலாசாலைப் பாடப் பயிற்சிப் புத்தகமாக ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு, மறைமலை அடிகள் எழுதிய சிந்தனைக் கட்டுரைகள் எமக்குக் கட்டாய பாடமாக இருந்தன. இந்தப் பாடநூல்களை எல்லாம் அவர் சுவைபட எமக்குப் பல உதாரணங்களுடன் விளக்குவார். பாடல்களை நயத்துடன் விளக்கும் போது டீ.கே.சியின் கவிதை நயக்கும் முறை பற்றியெல்லாம் எடுத்து விளக்குவார். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் கட்டுரைகள் எல்லாம் எதுகை மோனைச் சொற்களைக் கொண்டதாகவே அமைந்திருக்கும். எப்பொழுதும் அவர் எதுகை மோனைச் சொற்களையே தேடியெடுத்து கட்டுரை அமைப்பார். இதனைப் படிக்கும்போது நெஞ்சிலே தேன் கசியும். எப்படியெல்லாம் இதனைத் தேடித் தொகுத்தார் என்று எனக்குள்ளே எண்ணுவேன். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் எந்த வசனநடையை எடுத்துப் பார்த்தாலும் அங்கு எதுகைமோனை தொக்கி நிற்கும். இந்த மொழிநடைதான் அவருக்குப் பெரும் கீர்த்தியைக் கொடுத்தது. எனவே இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றினால்தான் எதிர்காலத்தில் இலக்கிய உலகில் நான் ஒரு இடத்தைப் பிடிக்கலாம் என்ற எண்ணம் உதயமானது. அதனால் அவர்கள் பாணியைப் பின்பற்றிக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் இளமுருகனார் அவர்களின் வீட்டுக்குச் செய்யுள் இயற்றும் விதிகளைப் படிக்கச் சென்றபோது முதலில் அவர் எனக்கு வெண்பாவைத்தான் சொல்லிக் கொடுத்தார். முதலிலே அவர் யாப்பு இலக்கணத்தைத்தான் விளக்கினார்.

"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோ
டிழுக்கா நடையதியாப் பெனப்படுமே"

என்று ஆரம்பித்தார். எழுத்து – அதன் தொகை, வகை, விரி, அசை - அதன் தொகை, வகை, விரி, சீர் - அதன் தொகை, வகை, விரி, தளை - அதன் தொகை, வகை, விரி அவற்றை விளக்கி வெண்பா எழுதும் முறையை எனக்குச் சொல்லித்தர ஆரம்பித்தார். அதற்கு முன்னதாக பல வெண்பாக்களை எடுத்து உதாரணமாகக் கூறுவார். அதில் முக்கியமாக நளவெண்பாவில் வரும் பல பாடல்களை மனதில் நிலைநிறுத்திக் கடகடவென்று பாடிக் காட்டுவார். பின்னர் அதனை ஒவ்வொரு கூறுகளாகப் பிரித்து விளக்கம் செய்வார். வெண்பாக்களைப் பொறுத்தவரையில் நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, குறள் வெண்பா, ப∴றொடை வெண்பா எனப் பல இனம் இருந்தபோதும் முதலில் நேரிசை வெண்பாவையே பாடிப் பழகும்படி சொன்னார். பல வெண்பாக்களைத் தேடிப் படித்துப் பாடமாக்கும்படி கூறுவார். அவருடைய அறிவுரையைக் கேட்டு யாப்பெருங்கலத்தின் முக்கியமான சூத்திரங்களை எல்லாம் வழிநெடுகிலும் மனப்பாடம் செய்துகொண்டு இருப்பேன். பல அறிஞர்களுடைய வெண்பாக்களை மனப்பாடம் பண்ணுவேன். அதனை ஒவ்வொரு சீராகப் பிரித்துப் பிரித்துப் பார்ப்பேன். அந்த முறையைப் பின்பற்றி வெண்பாக்களை எழுதிக்கொண்டு போய்க் காட்டுவேன். அப்பொழுது அவருக்கு நான் கையாளும் சொற்களில், சொற்கோர்வைகளில் ஒரு மனவிருப்பம் ஏற்பட்டது. அது மாத்திரம் அல்லாது "நீ நல்ல ஒரு கவிஞனாக வருவாய்" என்ற பாராட்டையும் அவரிடம் இருந்து பெற்று இருக்கின்றேன். இவையெல்லாம் என்னுடைய வரப்பிரசாதம் என்றே எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நான் சந்தித்தது முன் செய்த பாக்கியம் என்று எண்ணுகின்றேன்.

பொதுவாக ஒரு கவிஞன் பாடலைப் புனையும்போது அது எந்தவிதமான இனமாக இருக்கலாம். அது அந்தக் கவிஞனின் உள்ள உணர்ச்சியை அப்படியே வெளியே கொண்டுவந்து காட்டுவது தான் கவிதை. எனவே அந்தக் கவிதைகளைப் படிக்கும்போது அந்தக் கவிஞன் சிந்தனை எதனை நோக்கிப் போகின்றது என்பதனைக் குறிப்பாக அறிந்துகொள்ளலாம். பொதுவாக தனிப்பாடல்களைப் படிக்கும்போது அந்தக் கவிதை எழுந்த காலச்சூழ்நிலையை, மக்கள் மனநிலையை படம்பிடித்துக் காட்டுவதாக அமையும். அத்தகைய பாடல்களை மனப்பாடம் செய்வது அப்படியான செய்யுளை ஆக்கக்கூடிய மனோநிலையையும் ஊக்கத்தையும் தரும் என்பதனை இளமுருகனாரின் கற்பித்தலின் பின்னர் எனது அனுபவமாகக் கொண்டுவரக் கற்றுக்கொண்டேன்.

தமிழ்ப் புலவர்களினுடைய வரலாற்றுச் செய்திகள் எல்லாம் ஒரு தெய்வீகப் பொலிவு கொண்டதாக அமைந்திருப்பதையும், அவர் களின் கவிதை சிறந்த கவிநயத்தைக் கொண்டிருப்பதையும், அதன் பொருள் சிறந்த தெய்வீகத்தன்மை கொண்டிருப்பதையும் அறிந்து உணர ஆரம்பித்தேன். தேவதேவியின் அருள்பெற்ற கவிஞர் காளமேகப் புலவரின் பாடல்களில் (தனிப்பாடல்களைப் பொறுத்தவரையில்) என்னை நான் மறந்திருக்கின்றேன். ஒருமுறை காளமேகப் புலவர் ஓர் அரச சபைக்குச் சென்றிருந்தார். அவருக்கு அந்த அரசன் எந்த விதமான மரியாதையும் செய்யவில்லை. இருக்க ஆசனமும் கொடுக்கவில்லை. அவர் தேவியின் அருள்பெற்றவர் அல்லவா.? தெய்வம் சும்மாவிடுமா? அரசனுடைய சிம்மாசனமே காளமேகத்தின் இருக்கையாக நீண்டு இடம்கொடுத்தது என்பது வரலாறு. முன்பு கம்பனுடைய வாழ்வில் சரஸ்வதிதேவி எப்படியெல்லாம் வந்து அருள்மழை பொழிந்துள்ளார் என்ற வரலாறும் எமக்குண்டு. இப்படி அந்தச் சிம்மாசனம் நீண்டு காளமேகத்துக்கு இடம் தந்தபோது அந்தத் தெய்வத்தின் கருணையை எண்ணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்து அரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்"

எனப் பாடினார்.

எனவே அரசனுக்கு இணையாக புலவன் உயர்ந்திருக்கக் கூடிய கவிதாசாரத்தின் தெய்வீக சக்தியை இளமுருகனார் அவர்களின் கற்பித்தலிலிருந்து புரிந்துகொண்டேன். தனிப்பாடல்களை எல்லாம் தேடித்தேடி மனப்பாடம் செய்து அதிலிருக்கக் கூடிய இரசங்களை எல்லாம் உறிஞ்சி எடுக்க ஆரம்பித்தேன். ஒரு கவிஞனின் வல்லமை எத்தகையது என்பதற்கு ஒரு அளவுகோலாக நான் காளமேகப் புலவர் பாடலிலிருந்து பல பாடல்களை எடுத்துத் தெளிந்து கொண்டேன். அக்காலத்தில் பாடற்புலமைகளில் போட்டிகள் உண்டு. அந்தவகையில் காளமேகத்தின் மீது பூசல் கொண்டிருந்த அதிமதுர கவிராயர் என்பவர்க்கு காளமேகப் புலவர் தன் திறன் பற்றிக் கூறுகையில்,

"இம் மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்டா காதோ – சும்மா
இருந்தால் இருந்தே னெழுந்தேனே யாமாயின்
பெருங் காளமேகம் பிளாய்"

என்று பாடினார்.

நான் சும்மாதான் இருப்பேன். ஆனால் இம் என்று சொல்வதுக் கிடையில் எழுநூறு பாடல் பாடுவேன். அம் என்று சொல்வதற்குள் ஆயிரம் பாடல்கள் பாடுவேன். எனவே கவிஞன் என்பவன் கார்மேகமாகப் பொழிபவன் என்பதனை இந்தப் பாடல் எனக்கு உணர்த்தியது. இவ்வாறான புலமையின் ஆழத்தை உணர்த்தும் பல்சுவை கொண்ட பாடல்களை எல்லாம் வித்துவான் இளமுருகனாரிடம் மிக்க ஆர்வத்துடன் தெளிவாகக் கற்றுக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த எடுப்பிலேயே பாடல் பாடுகின்றவர்களை ஆசுகவி என்று சொல்லுவார்கள். இந்தத் திறமையை வித்துவான் இளமுருகனாரிடம் நான் கண்டு வியந்திருக்கின்றேன். இந்தவகையில் கவிஞர் காளமேகப் புலவர் அவர்களின் தனிப்பாடல் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதற்கு இன்னொரு காரணமும் உண்டு. காளமேகப் புலவர் வாழ்ந்த காலம் பெரும்பாலும் நாடு வரட்சியடைந்த காலம். நாட்டில் பசி, பட்டினி, பஞ்சம், கஷ்டம் நிறைந்த காலம். எனவே அவருடைய தனிப்பாடல்கள் அந்தக் களநிலையை எடுத்துச் சொல்வதாக அமைந்திருந்தது. சோழப் பெருமன்னர் காலம் இலக்கியத்தின் பொற்காலமாக விளங்கியது. ஆனால் காளமேகப் புலவர் வாழ்ந்த காலம் வறுமைகள் நிறைந்த வரண்ட காலம். எனவே அவருடைய பாடலில் அந்த வரட்சிக்கான கற்பனை நிலவியது. இந்தப் பாடல்கள் இளமையில் வறுமையுடன் வாழ்ந்து வந்த எங்கள் சூழ்நிலையில் எங்கள் உடம்புடன் ஒட்டிக்கொண்டது என்று சொல்லலாம். உதாரணத்துக்கு இளமுருகனாரிடத்தில் நான் கேட்டுச் சுவைத்த இரண்டொரு பாடலைச் சொல்லுகின்றேன்.

காளமேகப் புலவர் ஓர் இடத்துக்குப் போய்கொண்டு இருக்கின்றார். மிகவும் களைத்துவிட்டார். மிகத் தாகமாக இருக்கும் நிலையில் அவ்வழியில் மோர் விற்பவளைக் கண்டார். அவருக்கு மனதிலே மகிழ்ச்சி. அவளிடம் மோரை வாங்கி மடமடவென்று குடித்தார். மோரைக் குடித்ததும் அவருக்கு ஒரு பாடல் அந்த மோரைப் பற்றியே பிறந்தது.

“காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந் தரையில் வந்ததற் பின்
வாரொன்று மென்முலை யாராச்சியர் கைவந்ததற் பின்
மோரென்று பெயர் படைத்தாய் முப்பெயரும் பெற்றாயே”

என்பது அந்தப் பாடல்.

மோர் விற்பவள் அந்த மோருக்குள் தண்ணீரைக் கலந்து கொடுத்திருந்தாள். அந்த மோரின் தன்மை காளமேகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படித்தான் இருந்தது. மோரே நீ வானத்திலிருக்கும்போது உனக்கு மேகம் என்ற பெயர். நீண்டதான இந்தப் பூமியில் நீ இறங்கும்போது உனக்கு நீர் என்று பெயர். இந்த அம்மையின் கையிலே பட்டதும் நீ மோர் என்று பெயர் பெற்றாயே. நீரே நீ இப்படி மூன்று பெயரும் பெற்றுவிட்டாயே, உன்னுடைய சிறப்பே சிறப்பு என்று பாடிய விதம் புலமையின் அழகினையும் அவர் வாழ்ந்த சூழலையும் விளக்குகின்றது.

பொதுவாக வறுமையில் வாழ்கின்றவர்களுக்கு வசைபாடுவது என்பது இயல்பாகவே வந்துவிடும். இப்படி வசைபாடுவதில் காளமேகம் பெரும் புகழ்பெற்றிருந்தார். உதாரணத்துக்குச் சொல்லப்போனால் அவர் இறைவன் மீது கூட வசைமாரி பொழிந்து இருக்கின்றார். கடவுள் அடியார்களுக்கு எளிமையானவர் என்பது சமயங்கள் கூறும் உண்மை. அதனைக் காளமேகம் இப்படிப் பாடினார்.

"வில்லால் அடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பாலடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை அம்பலவாணாற் கோரன்னைபிதா
இல்லாத தாழ் வல்லவோ இங்ஙனே யெளிதானதுவே."

அருச்சுனன் வில்லால் அடித்தான். கண்ணப்பர் தனது ஒரு கண்ணை இறைவனுக்குக் கொடுத்துவிட்டு மறுகண்ணைக் கொடுப்பதற்காகச் செருப்பைக் கழட்டி இறைவன் கண்ணிலே அடையாளத்திற்காக வைத்தார். சாக்கிய நாயனார் கல்லை மலராகப் பாவனை செய்து எறிந்து பூசை செய்தார். பிட்டுக்கு மண் சுமந்தபோது பெருமானே பிரம்பால் அடிபட்டார். இப்படிப் பாடுவதன் மூலம் சிதம்பரத்தில் நடனம் ஆடிக்கொண்டு இருக்கின்ற சிவனுக்கு ஒரு அன்னை, பிதா இல்லாத குறைதானே. இப்படி யாருக்கும் எளிதாகப் போனது என்பதனைத் தனது பாடல் மூலம் விளக்கினார். இதனால் தாய் தகப்பன் இல்லாத ஒருவனுக்கு என்ன நடக்கும் என்பதனை, தனது அனுபவத்தை வசைபாடல் மூலம் விளக்கும் அதேவேளை, அந்த இறைவன் பிறப்பு இறப்பு இரண்டும் அற்ற பிறப்பிலி என்ற பெருமையையும் உணர்த்தியுள்ளார். இத்தகைய பாடல்கள் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமித்துக் கொண்டன. மூதாட்டி ஔவையின் வெண்பாக்கள் எல்லாம் நல்ல அனுபவங்களையும் செய்யுள் இயற்றுவதில் சிறந்த பயிற்சிகளையும் ஏற்படுத்தியது. தூங்கிக் கொண்டிருந்த என் உள்ளத்தில் இளமுருகனார் அவர்களின் இந்த வழிகாட்டல், பாராளும் உலகத் தமிழ்க் கவிஞர்களின் கவிதை மீது நாட்டம் கொள்ளச் செய்தது" என்று முடித்தார். எனவே என்னைப் பொறுத்தவரையில் தமிழ்க் கவிதையில் குறிப்பாக மரபுக் கவிதைகள் பாடுவதில் மதுரகவி என்ற பெயர் எடுத்தார் புலவர் இளவாலை அமுது. இவர் வித்துவான் இளமுருகனார் வயலில் விளைந்த கரும்பு என்றே இந்த அத்தியாயத்தை முடிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 11. "காவியப் பூ வாவியின் யாழ்ப்பாண அன்னம் பண்டிதர்கள் தாய்மடியே" என்று அமுது போற்றும் இலக்கியகலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அமுத நினைவுகள்

"ஒரு கவிதையை ஒருவன் எப்படி இதயபூர்வமாக, உணர்வுபூர்வமாக அனுபவிக்க முடியும் என்பதனை எனக்கு உணர்த்தியது பண்டிதமணியின் காவியப் பாடசாலை என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஒரு கவிஞனின் இதயம் எத்தகையது என்பதனை அவனுடைய ஒரு பாடலிலே வைத்து விளக்கக்கூடிய மிகப்பெரிய ஆற்றல் படைத்தவராக விளங்கியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடத்தில் நான் ஒரு மாணவனாக இருந்தேன் என்பது என்னுடைய வாழ்க்கையில் எனக்கு கிடைத்த பெரும்பேறு என்று நான் இன்றுவரையும் எண்ணிக்கொண்டிருக்கின்றேன். அப்படியான ஒரு மனிதனை மீண்டும் என் வாழ்வில் சந்தித்ததில்லை.

யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் ஈழத்திருநாட்டிலே இலக்கிய இரசனைக்கு தன்னிகரற்ற ஒருவராக விளங்கியவர் நல்லை நகர் ஆறுமுகநாவலரின் மருமகனாரான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை அவர்கள். அவர்களிடத்திலே மாணவனாக இருந்து அந்தப் பெருமகனின் இரசனையிலே தன்னை இணைத்து அந்த இரசனையிலிருந்து பெற்ற அனுபவங்களை எல்லாம் தன் வழிகாட்டலாகக் கொண்டு பண்டிதமணி அவர்கள் நடத்துகின்ற காவிய வகுப்பு எந்தவொரு மனிதனுடைய இதயத்தையும் ஈர்த்து இன்புறுத்தவல்லது. ஆசிரிய கலாசாலை பயிற்சியை முடித்துக் கொண்டதும் அளவெட்டி தெற்கிலுள்ள பாடசாலையில் அதிபராக நான் கடமை ஆற்றினேன். தொடர்ந்து அங்கிருந்து இடமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெற்று சென்.சார்ள்ஸ் கல்லூரிக்கு உதவி ஆசிரியராகச் சென்றேன். இக்காலகட்டத்தில்தான் நான் பாலபண்டிதத்தைப் படிப்பதற்காக பண்டிதமணி அவர்களிடம் சென்றேன். அவரிடம் இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்து பாலபண்டிதம் சித்தியடைந்தேன்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் மாணவர்களுக்குப் பாடங்களைப் படிப்பிக்கும்பொழுது அவர் கையாளுகின்ற பல உத்திகளை அவரிடம் நான் கற்றுக்கொண்டேன். ஓர் இலக்கியத்தில் ஒரு பாடலை அல்லது ஒரு காட்சியை விளங்க வைப்பதில் அவர் கையாளுகின்ற அணுகுமுறை மிகவும் வியப்பிற்குரியது. அந்த முறையை வேறு ஒருவரிடமும் நான் காணவில்லை. உத்திகளைக் கையாண்டு இலக்கியச் சுவையை விளக்குவது அவருக்குக் கைவந்த கலை. அதுமாத்திரமல்லாமல் இயல்பாகவே நகைச்சுவையையும் அதில் கலந்துகொடுப்பதில் அவர் தன்னிகரற்று விளங்கினார் என்று நான் சொல்லுவேன்.

ஒருசில விடயங்களையும் ஒருசில பாடல்களையும் நான் அன்று அவரிடம் கற்றதை இன்று நினைவுபடுத்திக் கூறுகின்றேன். ஒருமுறை மகாபாரதத்தில் வீமன் என்ற பாத்திரத்தை விளக்கிக் கொண்டிருந்தார். ஆயிரம் யானை பலம்கொண்ட வீமனின் வீர இயல்புகளை விளக்கி விட்டு எங்கள் சமுதாயத்தில் எங்கள் மத்தியிலும் பல வீமன்கள் இருக்கின்றார்கள். அவர்களில் சில வீமன்கள் மனைவிக்கு கண்ணைப் பொத்தியடித்துவிட்டு தன்னை ஒரு வீமனாக எண்ணிக் கற்பனை செய்வார்கள். அப்படி யாராவது வீமன்மார் இந்த வகுப்பில் இருக் கின்றாரோ என்று கேட்பார். ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டே அல்லது ஒரு பாடலை வைத்துக்கொண்டே ஒரு காவியத்தின் முழுத்தன்மையையும் நெஞ்சில் ஆழமாகப் பதிய வைத்தவர் பண்டிதமணி அவர்கள்.கம்பனுடைய பாடல்களை எடுத்து கையாளு கின்றபொழுது அவர் அடைகின்ற மோனநிலைக்கு எல்லையில்லை. உதாரணத்துக்கு ஒரு பாடலை நான் சொல்லுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணரும் நலத்தினாள் இணையள் நின்றுழி
கண்ணோடு கண்ணினை கவ்வி ஒன்றை யொன்று
உண்ணவும் நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

ஸ்ரீராமனும் சீதாபிராட்டியும் ஏக காலத்தில் ஒருவரை ஒருவர் நோக்கிய அந்த நோக்கை அவர் எமக்கு விளக்கிக் காட்டியவிதம் இன்றும் என் நெஞ்சில் தேன்பாய்ச்சிக்கொண்டிருக்கிறது. இராமன் சீதையை முதலில் நோக்கினானா? சீதை முதலில் இராமனை நோக்கினாளா? இருவரிலும் யார் முதலில் நோக்கினார்கள் என்ற கேள்வியை காவியம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை அந்தக் கேள்விக்கு யாரும் விடை கண்டதில்லை. இதுவே கம்பனுடைய சிறப்பு. சூரியன் உதிக்கத் தாமரை மலர்ந்தது என்றவாறு ஸ்ரீராமனும் சீதாபிராட்டியும் "மாறிப்புக்கு இதயம் எய்தினார்கள்" என்றும் இருவரும் ஒருவர் நெஞ்சில் ஒருவராக வாழ்ந்ததால் அந்த இருவரின் நோக்கும் ஏக காலத்தில் நிகழ்ந்ததை சூரியன் உதிக்கத் தாமரை மலர்ந்தது என்ற உவமையினாலே விளக்கிய இலக்கிய நயம் இன்றும் எங்களை வியக்க வைக்கின்றது.

அறிவு, உணர்ச்சி என்ற இரண்டினுள் உணர்ச்சியை அடிப் படையாகக் கொண்டே கவிதை பிறக்கின்றது. உணர்ச்சி என்பது அறிவினைப்போல் ஆராய்ச்சிக்குட்பட்ட விடயமல்ல. எனவே கவிதையின் உண்மைத் தன்மையை அதன் உண்மையான இயல்பை அறியவேண்டும் என்றால் அதனை உண்மையாக அனுபவித்தே அறியவேண்டும். அப்படியென்றால் அதற்கு ஒரேயொரு வழி தன்னை மறந்து அதனை இரசிப்பது என்பதே ஓர் இலக்கியக் கோட்பாடு. உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதையின் இயல்பு என்ற கொள்கையே இருபதாம் நூற்றாண்டில் தலைதூக்கி நிற்கின்றது என்பதனை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையில் விளக்கியிருக்கின்றார். இந்த அடிப்படையில் பாரதியார், பாரதிதாசன், கம்பதாசன், கண்ணதாசன் கவிதைகள் உணர்ச்சிப் பிழம்புகளைத் தீட்டும் கவிதைகளாகக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் கவிதையில் இருக்கக்கூடிய அந்த உணர்வோட்டங்களை எல்லாம் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து அதன் இரசனையை ஊட்டும் உயர்ந்த கலையை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் நான் கண்டுகொண்டேன்.

கம்பனுடைய கவிதாசாரத்தை எடுத்து விளக்குவதில் பண்டிதமணி அவர்களின் பாங்கு மிகச்சுவையானது. கம்பனுடைய காவியம் கடல் போன்றது. அந்த கடலுக்குள் அவர் நுழைந்து எடுத்துவரும் ஒவ்வொரு கருத்துக்களும் முத்தானவை. அவருடைய அனுபவத்தை நான் முற்றுமுழுதாக என் உள்ளத்துள் பதித்துக்கொண்டேன். எனது மடுமாதா காவியத்தை நான் படைத்தபொழுது என் மனக்கண்ணிலே தோன்றியதெல்லாம் அவர் ஊட்டிய காவிய சுவைதான் என்பதை மறுக்கமுடியாது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் நான் நேரில் படித்ததைவிட திருநெல்வேலியில் அவர் ஆசிரிய கலாசாலையில் பணிசெய்து கொண்டிருந்த காலத்தில் அவர் வடித்த பல கட்டுரைகளை நான் படித்திருக்கின்றேன். அவருடைய தலைசிறந்த கம்பராமாயணக் கட்டுரைகள், தனிப்பாடல்கள் பற்றிய நயப்புரைகள் போன்ற பலவகையான கட்டுரைகளைப் படித்திருக்கின்றேன்.

காவியங்கள் மட்டுமன்றி சங்ககால நூல்களும் எங்கள் பண்டித வகுப்புக்குப் பாடநூல்களாக இருந்தன. அந்த இலக்கியங்களில் குறிப்பாக அகத்திணைப் பாடல்கள், புறத்திணைப் பாடல்கள் என்பவற்றை மிகுந்த அற்புதமாக விளக்குவார். சங்ககால காதல் பாடல்களையும் புறத்திணைச் செய்யுட்களையும் மிக எளிமைப்படுத்தி விளக்குவதற்கு அவர் கம்பனுடைய கவிதையையும் வள்ளுவன் குறளையும் ஏற்றகருவிகளாகத் தகுந்த இடத்தில் கையாண்டு அவற்றை தன் நயப்பிற்கு உறுதுணையாகச் சேர்த்துக்கொள்வார்.

கலித்தொகையில் இடம்பெற்ற காதல் பாடலொன்றை அவர் எடுத்து விளக்கிய விதம் இன்றும் என் நெஞ்சை ஈர்த்து இன்புறுத்து கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலை யுளே பிறப்பினும் மலைக்கவைதான் என் செய்யும்
நினையுங் கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருள்ளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

இந்தப் பாடல் கலித்தொகை என்ற சங்ககால இலக்கியத்தில் இடம்பெற்ற பாடல். ஒரு பெண் தன் காதலனுடன் கூடிச்சென்று விடுகின்றாள். இதனை அறிந்த அந்தப் பெண்ணினுடைய தாய் கதறி அழுகின்றாள். அந்தப் பெண்ணின் துயரத்தைக் கண்டு, அவளுக்கு ஆறுதல் கூறவந்த ஒரு முதியவர் சொல்லும் அறிவுரையாக இந்தப் பாடல் அமைகின்றது. இந்தப் பாடலை விளக்குவதற்குள் கம்பராமாயணக் காவியத்தின் பெரும்பகுதியையும் திருக்குறளின் பெரும்பகுதியையும் எங்களுக்கு விளக்கிவிடுவார். என்னைப் பொறுத்தவரையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

தமிழகத்திலிருந்து அமரர் கல்கி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் ஹண்டி பேரின்பநாயகம் வீட்டில்தான் தங்கியிருந்தார். ஒரு தமிழ் விழாவில் பண்டிதமணியினுடைய இலக்கியப் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு அன்று எல்லோருக்கும் ஏற்பட்டது. அங்கே ஹண்டி பேரின்பநாயகம் அவர்களும் அமரர் கல்கி அவர்களும் சமுகமளித்திருந்தார்கள். ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் பண்டிதமணி அவர்கள் மீது அளவுகடந்த பற்றும் மதிப்பும் உடையவர். பண்டிதமணியின் பேச்சு முடிந்ததும் ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் அமரர் கல்கியிடம் ஒரு விடயத்தைக் கூறினார். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகானை ஒருமுறை ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைக்கு அனுப்பி எடுத்தால் தமிழ்கூறும் அனைத்து உலகிற்கும் இவர் தலைமை தாங்குவார் என்று கல்கியிடம் கூற, கல்கி அவர்களும் மிகுந்த பரவசமடைந்தார்" என்று புலவர் இளவாலை அமுது அவர்கள் மிகுந்த பெருமிதத்துடன் எனக்குக் கூறினார்.

திரு.முல்லை அமுதன் அவர்களுடைய காற்று வெளியீடு நூலான இலக்கியப் பூக்கள் என்ற நூலிலிருந்து பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது ஒரு செய்தியைப் படித்தேன். ஆசிரியர் சிவபாதன் என்பவர் பண்டிதமணி அவர்களைப் பற்றி ஒரு சிறப்பான கட்டுரை எழுதியிருந்தார். அதில் 1929 – 1959 ஆண்டு காலப் பகுதியில் பண்டிதமணியின் ஆசிரிய கலாசாலை விரிவுரைகளையும் அவரது ஆக்கங்களையும் எடுத்து விளக்குகின்றார். அதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் நாவலருக்கு எப்படி ஒரு நாவலர் பரம்பரை உள்ளதோ, அதுபோல பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் ஓர் இலக்கியப் பாரம்பரியம் இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

ஆம்! அது உண்மைதான். அந்த பண்டிதமணி என்ற ஈழத்துப் பாரம்பரியத்தில் வந்த காவியப் புலவன் இளவாலை அமுது என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. மாவலிகங்கை தாலாட்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கங்கை

"மக்கள் நாகரிகம் துளிர்விட்டுக் கொண்டிருக்கும் பேராதனைப் பல்கலைக்கழகம் எனக்குப் புதியதோர் உலகத்தை அறிமுகம் செய்தது. பதினெட்டு வயதுமுதல் சேலைகட்டுகின்ற பெண்கள் வாழ்ந்த இடத்தின் நாகரிகத்தைப் பழகிய எனக்கு, ஆறுமுழச் சேலை கட்டியவர்களுடன் காகத்தின் கூட்டைப் போல தலையைக் கோதிச் செய்து வைத்திருக்கின்ற பெண்களின் நாகரிக உலகம் கல்வியிலும் பழக்கவழக்கத்திலும் புதியதோர் உலகத்தை எனக்கு அடையாளங் காட்டியது. எனக்கு முதலில் வியப்பைத் தந்தது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூல் நிலையம்தான். இத்தனை நூல்களா என்று என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது. பிரமித்துப் போய்விட்டேன். தமிழில் இத்தனை புத்தகங்கள் இருக்கின்றனவா? இத்தனை புத்தகங்களையும் நான் வாசித்து முடிக்கின்ற வரை உயிருடன் இருப்பேனா? என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அங்கு நான் படித்த காலத்தில் எமக்கு ஆசிரியராக இருந்து விரிவுரையாற்றிய பேராசிரியர்கள் எங்களுடன் மிக இனிமையாகப் பழகினார்கள்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் வயதில் மிக மூத்தவர். தமிழ்த் துறைக்குத் தலைவராக இருந்தார். தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் மிகுந்த வல்லமை உடையவராக இருந்தார்.

எந்த விடயத்தை எடுத்தாலும் அவருடைய விளக்கங்கள் ஓர் ஆராய்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவே இருக்கும். எதனைச் சொல்கின்றபோதும் அவர் சிந்தனையில் மூழ்கியவண்ணமே பேசுவார். நான் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்ற முதல் ஆண்டு. ஒருநாள் நானும் ஏனைய என்னுடன் கூடப் படித்த வித்துவான் வகுப்பு மாணவர்களும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சென்றிருந்தோம். அவருடைய வீடு பெரியதொரு மண்டபம். நிறையத் தளபாடங்கள் எல்லாம் பொலிந்த வண்ணம் காட்சியளித்தன. அவர் ஒரு கதர்த்துண்டை அரையிலே கட்டிக்கொண்டு எண்ணெய் தேய்த்த வண்ணம் அங்கு நின்றார். எங்களைக் கண்டதும் என்ன விடயமாக வந்தீர்கள்? என்று விசாரித்துவிட்டு, நான் ஒரு பெரிய வேலையில் இருக்கின்றேன். இரண்டொரு நாளுக்கு எந்தக் காரணம் கொண்டும் என்னிடம் வரவேண்டாம் என்று பலத்த யோசனையின் மத்தியிலே கூறினார். அப்பொழுது எங்களுடன் வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த செபரத்தினம் என்ற வித்துவான் கேட்டார். ஐயா, அப்படி என்ன கஷ்டமான வேலை.? நாங்கள் ஏதாவது உதவி செய்யலாமா? என்று கேட்டார். சாச்சா இது உங்களுக்கு வேண்டாத வேலை. நான் சில பாட்டு எழுத வேண்டியிருக்கு. மலேசியாவில் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை ஆரம்பித்திருக்கின்றார்கள். அதனை வாழ்த்திப் பாடல் எழுதவேண்டும். அதுதான் இன்று ஆரம்பித்துள்ளேன் என்று கூறினார். இதற்கு ஏன் ஐயா நீங்கள் கவலைப்படுகின்றீர்கள்? எங்களிடம்தானே அமுது என்ற ஒரு பெரியவிண்ணன் இருக்கின்றான். தினகரன் பத்திரிகையில் இந்த வாரமும் அவருடைய கவிதை வந்திருக்கிறது என்று சொன்னார். யார் அந்த அமுது? நீதானோ? என்று என்னைக் கிண்டலாகக் கேட்டார். நான் சொன்னேன் ஐயா நீங்கள் எத்தனை துறைகள், எத்தனை விடயத்தைத் தெரிந்து வைத்திருக்கின்றீர்கள். இவர்கள் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிறார்கள் ஐயா என்றேன். என்னுடன் வந்தவர்களோ விட்டபாடில்லை. ஐயா, அமுதுவிடம் கொடுத்துப் பாருங்கோ என்றார்கள்.

பேராசிரியர் அவர்கள் சரி என்று விடயத்தைச் சொன்னார். தம்பி, மலேசியா பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ்த்துறை ஒன்று ஆரம்பிக்கின்றார்கள். அதனை வாழ்த்தி சில பாடல்கள் எழுதவேண்டும். அதைத்தான் காலையில் ஆரம்பித்தேன். சரியாக வந்து அமையவில்லை என்று சொன்னார். அவரிடம் விடயத்தைத் தெரிந்துகொண்டு பாடலை எழுதினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கங்கை நதி கால் கழுவ, திங்கள் வந்து தலை தடவும்
கலைப்பீடத்தே.
பொங்குதமிழ் கேட்டவுடன் பூக்கள் எல்லா தேன் சிந்தும்
ஈழநாட்டின்
சங்கத்தின் தமிழ் வடித்து தக்கோர்க்கு விரைந்துரைக்கும்
தமிழ்ப்பீடத்தே.......

வயதுபோன தன்மையினால் ஞாபகப்படுத்திச் சொல்லமுடியவில்லை, பத்து நிமிடத்தில் பாடலை எழுதிக் கொடுத்தேன்.

முதல் வரியைப் பார்த்ததும் அவருடைய உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் தாண்டவமாடியது. எங்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சிறப்பான உணவு விடுதியில் எமக்கு விருந்து வைத்தார். "எங்களுக்குள் ஒரு புலவன்" இருக்கின்றான் என்று பெருமகிழ்வு கொண்டார். இதன் பின்னர் அவர் கண்ணகியைப் பற்றி ஒரு காவியப் புத்தகம் எழுதி வைத்திருந்தார். 25 – 30 பாடல்கள் வரை இருக்கும். அதனை ஒரு பார்வை செலுத்தும்படி கேட்டுக் கொண்டார். அதனை நான் செய்து கொடுத்தேன். மிகுந்த அன்புடன் என்னோடு பழகினார். அடுத்த பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள். மிகப் பெரிய அறிவாளி. இலக்கியத்தின் திறனாய்தல் என்ற விடயத்தை அவரிடம் இருந்தே நான் கற்றுக்கொண்டேன். ஒரு நூலினை மதிப்பீடு செய்கின்ற விதிமுறைகளை அவரிடமிருந்து நாங்கள் நன்கு கற்றுக்கொண்டோம். தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஆராய்ச்சி நூலினை எழுதியவரும் இவர்தான். பேராதனையில் இவர்களிடம் படிக்க வாய்ப்புக் கிடைத்தது தேடற்கரிய பெருநிதியம் என்றுதான் கூறுவேன்.

இலக்கிய ஆய்வில் இவர் ஒரு பொன் நிறுக்கும் தராசு என்று குறிப்பிடலாம். அவர் உரையில் மல்லிகைப்பூ வாசம் இருக்கும். விரிவுரையாற்றும்போது தேன்விட்ட தீம்பாலாய் அவை சுவைக்கும். தமிழ்ப் பண்ணையில் தோன்றிய நந்தவனச் செடிகளில் அவரை முல்லைச் செடிக்கு ஒப்பிடலாம். நிறைந்த ஆங்கிலமொழி அறிவும் அவரின் ஆய்வுக்குத் துணைபுரிந்தது. அவர்களிடம் பாடம் கேட்டது எனக்கு வாழ்விலே பெருஞ் சிறப்பைத் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள், பேராசிரியர் சதாசிவம் அவர்கள் அத்துடன் கலாநிதி அரசரத்தினம் என மூன்று வருட காலமாக பேராதனையில் இவர்களிடம் நாங்கள் எங்களின் ஆற்றலை வளர்த்துக் கொண்டோம். நான் பேராதனையில் இருந்தபோது தனிநாயகம் அடிகளாரும் அங்கு விரிவுரையாற்றினார். டிப்ளோமா பட்டம் சம்பந்தமான துறையில் அவர் முக்கிய கர்த்தாவாக இருந்தார். சிலவேளைகளில் அவர் கட்டுரை எழுதும்போது என்னையும் அழைப்பார். அவர் படித்துப் படித்துச் சொல்ல நான் அதை எழுதிக் கொடுப்பேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியம், நன்னூல், சூத்திரங்கள் என்பன அதிகம் இடம்பெறவில்லை. ஆனால் இலக்கியங்கள், இலக்கிய வரலாறுகள், ஆய்வுகள் என்பன முக்கிய இடம்பிடித்தன. அந்த வகையில் இலக்கியத்தின் காதலரும் காவலருமாக வாழ்ந்து வந்தார் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள். காலநேரம் அறிந்து இதயத்தைக் கனிய வைக்கும் கலாரசிகன் அவர். தமிழ்க் கலாசாரத்தை எமக்கு வடித்துத் தந்த பெருமை அவருக்கு உண்டு. தமிழ் சால்பு அவர் எழுதிய நூல். தமிழ்மொழிப் பற்று, நாட்டுப்பற்று, அவரில் பொங்கி நுரைதள்ளுவதை நான் மட்டிட்டேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கினார். காப்பாளாராக இருந்து எல்லாத் தமிழ் விழாக்களுக்கும் பொறுப்பாக விளங்கினார். இவருடைய காலத்திலேதான் நான் இளங்கதிர் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டேன். பல அறிஞர்களின் படைப்புக்கள் கொண்ட இளங்கதிர் என்ற சஞ்சிகையை நான் வெளியிட்டபோது என்றுமே இல்லாத வகையில் அது மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. பேராசிரியர் வித்தியானந்தன் முதல் பல அறிஞர்களும் பாராட்டினார்கள். இன்னும் ஒரு முக்கிய சம்பவம் இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் சார்பில் ஒரு பெரிய நூல் கண்காட்சி விழா ஒன்றும் நடைபெற்றது. பல தேசத்திலிருந்தும் மக்கள் இந்த நூல் காட்சியைக் காண முன்வந்தார்கள். அப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கண்காட்சி. இதனைப் பற்றிய ஒரு கட்டுரையை நான் எழுதி வீரகேசரி பத்திரிகையில் வெளியிட்டிருந்தேன். பலருடைய பாராட்டுக்கள் என்னைத் தேடி வந்தன. இவை அனைத்தும் என் பேராதனை வாழ்வின் பக்கங்கள்" என்று நினைவை நேர்நிறுத்திக் கூறுகின்றார் புலவர் இளவாலை அமுது அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. பாதுகாவலன், ஈழகேசரி ஆரம்ப எழுத்தின் களம்

அமுது அவர்களிடம் பத்திரிகைக் களம் பற்றி கேட்டபோது இவ்வாறு தெரிவித்தார்:

“பொதுவாக ஒரு மனிதன் தமிழாற்றலை வளர்ப்பதற்கு, ஒரு நிலைப்படுத்துவதற்கு பத்திரிகை என்பது ஒரு முக்கிய சாதனம் என்பதனை எனது தூதன் சஞ்சிகை எனக்கு உணர்த்தியது. இதனால் நான் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களின் இயல்புகளை அறியத் தலைப்பட்டதுடன் அவர்களின் ஆக்கங்களையும் தேடிவாசிக்க ஆரம்பித்தேன். இக்காலத்தில் தமிழின் பல்துறைசார்ந்த வளர்ச்சிக்கு பத்திரிகைதான் களம் அமைத்துக் கொண்டிருந்தது. இயல், இசை, நாடகம் சார்ந்த அனைத்துப் பெருமக்களும் பத்திரிகையை தமது ஆற்றலை வளர்ப்பதற்கு ஆதாரமாகக் கொண்டனர். சமயத்தைச் சார்ந்த பெரியோர்கள் கூட தமது சமயக் கருத்துக்களை, தத்துவக் கருத்துக்களை எடுத்து விளக்குவதற்குப் பத்திரிகையை ஆதாரமாகப் பயன்படுத்தினர். இதனால் பத்திரிகைத்துறையும் வளர ஆரம்பித்ததுடன் தமிழ்த் துறையும் வளர்ச்சி காண ஆரம்பித்தது.

இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பாதுகாவலன், இந்துசாதனம், உதயதாரகை போன்ற பத்திரிகைகள் இருந்தன. நான் முதன்முதலில் பாதுகாவலன் என்ற பத்திரிகையில்தான் எழுதினேன் என்ற ஞாபகம் எனக்குண்டு. நான் எனது கட்டுரையை பத்திரிகையில் எழுதும்போது அந்தக் கட்டுரை பத்திரிகையில் வெளிவருமா என்று எண்ணியதுண்டு. இருந்தும் என்னுடைய கட்டுரை பத்திரிகையில் வெளிவந்து மிகுந்த பாராட்டைப் பெற்றது. அதற்குக் காரணம் அக்காலத்தில் பத்திரிகையில் கட்டுரை எழுதியவர்களின் பின்னணியும் அவர்களுடைய சாதனையும் என்று சொல்லலாம்.

எனக்கு நல்ல ஞாபகம். ஒருமுறை ஸ்ரீகாந்தா என்பவர் ஈழகேசரியில் ஒரு கட்டுரையை வடித்திருந்தார். அதுவொரு பாராளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்றத் தேர்தலை அண்மித்துவந்த கட்டுரை. தெய்வீகப் பெயர்களை வைத்துக்கொண்டு ஏமாற்றும் கம்பப் பேர்வழிகள் என்று அதன் தலைப்பு இருந்தது. தெய்வத்தின் பெயர்களைத் தாங்கி நிற்கும் அரசியற் பிரமுகர்கள் தமது மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பதுதான் அந்தக் கட்டுரையின் உள்ளீடு. இந்தக் கட்டுரையை நான் படித்தேன். என் மனதிற்குள்ளே ஓர் இனம்புரியாத உதயம் தோன்றியது. நானும் பத்திரிகையில் எழுதவேண்டும் என்று எண்ணினேன். அதற்கு முன்னர் நான் வாசித்துத் தெரிந்து வைத்துக் கொண்ட அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு கட்டுரையை வடித்தேன். இலங்கையில் உள்ள எழுத்தாளர்கள் யார் யார்? பெயர்பெற்ற எழுத்தாளர்கள் யார் யார்? என்றும், புதிய எழுத்தாளர்கள் தோன்றவேண்டும் என்றும், புதிய எழுத்தாளர்கள் என்ன என்ன விடயங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அந்தக் கட்டுரையை எழுதிப் பாதுகாவலன் என்ற பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். எனது கட்டுரையை பாதுகாவலன் பத்திரிகை வெளியிடுமோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருந்தது. நான் எதிர்பார்க்காத வண்ணம் எனது கட்டுரை பாதுகாவலன் முதற் பக்கத்தில் வெளிவந்தது. எனக்கு ஏற்பட்ட இன்ப அதிர்ச்சிக்கு அளவே கிடையாது. அந்தப் பத்திரிகையில் வந்த கட்டுரையை நான் எடுத்துக் கொண்டு எனக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அறிந்தவர்கள், அறியாதவர்கள் என்று எல்லோருக்கும் கொண்டுபோய்க் காட்டினேன். எனக்கு இன்றைக்கு எத்தனை விருதுகள், பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த மரியாதைகளுக்கு எல்லாம் முதல்மரியாதை பாதுகாவலனில் வந்த எனது முதல் ஆக்கம்தான். பத்திரிகையில் எழுதுவதற்கு எனக்கு வழிகாட்டியது ஸ்ரீகாந்தா அவர்களின் "கம்பத்து பேர்வழிகள்" என்ற கட்டுரைதான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. என்னுடைய கட்டுரைக்கு நான் வைத்த தலைப்பு 'எழுத்தாளர்களுக்கு ஒரு தூது' என்பதாகும்.

இந்தக் கட்டுரையின் சிறப்பினை அறிந்த பண்டிதர் ஞானப்பிரகாசம் அவர்கள் என்னைத் தேடிவந்து எனது கட்டுரையைப் பற்றி நேரில் பாராட்டிவிட்டு பின்னர் சில புத்திமதிகளைக் கூறினார். மிகுந்த அன்புடனும் கண்டிப்புடனும் அந்த விடயத்தை எனக்குச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி உன்னுடைய எழுத்து நன்றாக இருக்கின்றது. உனக்குச் சிறந்த எழுத்து வல்லமை, கற்பனை எல்லாம் அமைந்திருக்கின்றது. பலர் ஆசிரிய கலாசாலையை முடித்துவிட்டுப் பின்னர் வேலை கல்யாணம் பிள்ளைகுட்டி என்று மாறிவிடுவார்கள். நீயும் அந்த வரிசையில் சேர்ந்துவிடாதே. கிழமையில் ஒருதடவையாவது எழுதி உன் ஆற்றலை வளர்த்துக் கொள் என்று சொல்லிச் சென்றார். அந்த மகாமனிதனின் வார்த்தை அமுதம் என் நெஞ்சில் இப்பொழுதும் கரும்பாக இனிக்கின்றது. அக்காலம் வீரகேசரி பத்திரிகை ஒரு முதன்மை வாய்ந்த பத்திரிகையாக இருந்தது. அதில் ஊர்க்குருவி என்னும் தலைப்பில் பல கட்டுரைகள் வரும். அதனை எல்லோரும் விரும்பி ஆர்வத்துடன் படிப்பார்கள். அந்த வகையில் வீரகேசரியில் எழுதத் தொடங்கினேன். 'உழைத்தால்தானே ஊதியம் கிடைக்கும்' என்ற முறையில் எனது ஓய்வுநேரங்களைப் பயனுள்ளதாகவும் இன்பம் உள்ளதாகவும் மாற்றிக் கொள்வதற்கு எழுத்தையும் வாசிப் பையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினேன். ஓடும் என் எண்ணத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்தி எழுத்து, கவிதை என்ற இரண்டும் இணைகின்ற புள்ளியில் என்னை நான் நிலைநிறுத்தினேன்." என்கிறார்.

வித்துவான் இளமுருகனார், பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்ற இருபெரும் ஆசான்களால் வளர்க்கப்பட்டவர் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள். இந்த வழிகாட்டலில் புலமையை வளர்க்கத் தொடங்கிய அடைக்கலமுத்து அவர்கள் பாதுகாவலன் பத்திரிகையில் தன் நெஞ்சிற் குடிகொண்டிருக்கின்ற மாதா பற்றிய பாடல்களை எழுதுவதற்கு முற்பட்டார். புலவன் என்றால் மரபு இலக்கணம் அவனுடன் கூடவே இணைந்துவரும் என்பது தவிர்க்க முடியாத ஒன்று.

கவிஞர் தாகூர் அவர்களின்மேல் புலவர் அமுது அவர்கள் கொண்ட ஈடுபாட்டினால் அவர் கீதாஞ்சலியில் எழுதிய கவிதையை மனக்கண் முன் நிறுத்தி, புலவர் அமுது அவர்கள் மாதா அஞ்சலி என்ற தனது கவிதையை ஆரம்பித்தார். இவருடைய கவிதைகள் தொடர்ச்சியாகப் பாதுகாவலன் பத்திரிகையில் வெளிவந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேநேரம் அந்தக் கவிதை அடைக்கலமுத்து அவர்களுக்கு மிகுந்த பாராட்டையும் அள்ளிவந்தது.

இளவாலை அமுதுப் புலவர் அவர்கள் படித்த கொலம்பகம் கிறிஸ்தவ ஆலயத்தில் கோயில் கொண்ட மாதாவை இதயத்தில் நிறுத்தி அந்த மாதாவின் அழகை புலவர் அடைக்கலமுத்து அவர்கள் தன் கவியாற்றலினால் வடிக்கத் தலைப்பட்டார். சிறுவயதிலிருந்தே கற்பனையை ஊற்றெடுக்கச் செய்வதில் தன்னைப் பயிற்றிக்கொண்ட அமுது அவர்கள் தன் நெஞ்சில் குடிகொண்ட மாதாவின் ஒப்பற்ற அழகை உலகிற்குக் காட்ட மிகவும் உன்னதமான உத்தியொன்றினைக் கையாண்டு மாதாவின் அழகினைக் கவிதையில் வடித்தார். இந்தக் கவிதையின் சாராம்சம் பின்வருமாறு:

"ஒரு கலைஞன் மிக உயர்ந்த ஒரு வடிவத்தை உலகம் அதிசயிக்கும் வண்ணம் படைத்துக்காட்டவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காக அவன் என்ன செய்கின்றான் என்றால், உலகில் இருக்கின்ற அழகான பொருட்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் தெரிவுசெய்து அதில் ஒவ்வொன்றிலும் கொஞ்சம்கொஞ்சமாக எடுத்து அவற்றை ஒன்று சேர்க்கின்றான். அழகான பூ, அழகான காய், அழகான கனி, அழகான இலை - இப்படி எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒரு உரலில் போட்டு இடித்து அரைத்துக் கூட்டாக எடுக்கின்றான். அந்தக் கூட்டினால் அந்த உருவத்தைச் செய்கின்றான். அந்த உருவத்திற்கு ஒளியூட்டுவதற்காக நிலவிலிருந்து ஒரு பகுதியைப் பிய்த்து எடுத்துவருகின்றான். இப்படி நிலவின் ஒளியையும் சேர்த்து அந்தச் சிற்பி படைத்த அழகிய உருவத்தைக் காட்டிலும் மிகுந்த அதிசயம் வாய்ந்தது, அற்புதம் வாய்ந்தது அந்த மாதாவின் அழகு" என்று தன் உள்ளத்தில் குடிகொண்ட மாதாவை தன் கவிதை வரிகளால் வடித்துக் காட்டுகின்றார் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள்.

"உலகினில் அழகையெல்லாம் ஒருங்கு சேர்த்து அரைத்துக்கூட்டி
நிலவின் இன் ஒளியைச் சேர்த்து நித்திரை ஒருநாள் இன்றி
கலையினில் நிரம்பும் சிற்பி கைபுனைந்து எழுதும் தெய்வச்
சிலையினில் அழகைக் கண்டேன் செம்மை மா முகத்தில் அம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அந்த மாதாவின் அழகின் அற்புதங்களை எடுத்து வடிக்கின்றார். மேலும், அந்த மாதாவின் அற்புதங்களை இவ்வாறு வர்ணிக்கிறார்:

"கண்ணொளி தெரியான் அங்கே கடவுளின் தாயார் என்றான்
பண்ணொலி கேட்குதென்று பக்கத்தில் செவிடன் சொன்னான்
நண்ணினான் முடவன் துள்ளி நடந்தனன் படிகள் மீது
என்னருள் தாயே என்றான் இருகைகள் கூப்பி ஊமை."

இளவாலை அமுதுப் புலவர் அவர்களின் பக்தி இரசம் கொஞ்சும் இந்தப் பாடல்கள் பத்திரிகையில் வெளிவந்தபோது, பாடல்கள் வாசகர்களின் உள்ளத்தை உருக்கியது. இதன் தெய்வீகச் சிறப்பை உணர்ந்த பத்திரிகை நிறுவனம் அந்தப் பாடல்களைத் தொகுத்து சிறு நூலாக வெளியிடவேண்டுமென்று விரும்பியது. அதன் பிரகாரம் இளவாலை அமுது அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அமுதுப் புலவர் அவர்களுடைய விருப்பத்தை பெற்றதும் மாதா அஞ்சலி நூலுருப்பெற்றது. பாதுகாவலன் நிறுவனமே இந்த நூலை வெளிக் கொணர்ந்தது. இது பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்:

"மாதா அஞ்சலி என்ற பக்தி நூல் வெளியானபோது யாழ்ப் பாணத்தில் முதன்முதலாக செவாலியர் பட்டம் பெற்ற அருளானந்தம் அடிகளார் அதனைப் படித்துவிட்டு என்னைத் தேடிவந்து மிகுந்த பாராட்டுதலைத் தெரிவித்தார். ஒருநாள் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தேன். ஒவ்வொரு நாளும் உங்களுடைய பாடல் ஒன்றைப் படித்துவிட்டுத்தான் இரவில் தூங்குவேனென்று குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமில்லாமல் இப்படியான பாடல்களை நீ தொடர்ந்து எழுதவேண்டும் என்று எனக்கு அறிவுரை கூறியும் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு மேலாக மடியில் கொண்டுதிரிந்தேன். பின்னர் அது எங்கோ தொலைந்துவிட்டது" என்று பெருமிதத்துடன் கூறுகின்றார் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள். மாதா அஞ்சலியே அவருடைய முதற்படைப்பு என்பது அவருடைய வாய்மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 14. வான் புகழும் வரலாறு, தமிழ் வளர்த்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அமுதுவின் "நெஞ்சே நினை"

கிறிஸ்தவம் உள்ளவரை கிறிஸ்தவர்களின் உள்ளத்திலும் தமிழர்களின் நெஞ்சத்திலும் வாழ்ந்து கொண்டு இருப்பவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள். இவர் சரித்திரம் படைத்த ஒரு சமயப் பேரறிஞர். மாட்டுவண்டியில் பயணம் செய்து சமயப் பிரசாரமும் தொண்டுகளும் செய்த மாமேதை. உயிருக்கு ஆபத்து நேரிட்டபோதும் அதனைப் பொருட்படுத்தாது தமிழுக்கும் தன் சமயத்துக்கும் அருந் தொண்டாற்றியவர். ஓலைக் குடிசையில் வாழ்ந்து கொண்டு இருந்த காலத்தில் மழைத்தூறலிலிருந்து தன்னைக் காப்பாற்றுவதற்காக ஒரு கையிலே குடையும் மறு கையில் பேனாவும் வைத்துக்கொண்டே, இலக்கியப் பணியும் மறைப் பணியும் செய்த மகாமேதை என்று நெஞ்சார வாழ்த்துகின்ற பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்களின் ஓர் அறிமுகக் குறிப்பினை வைத்துக்கொண்டு, அத்தகைய மாபெரும் ஓர் அறிஞரிடம் புலவர் அடைக்கலமுத்து அவர்களுக்கு இடையிலான உறவு எத்தகையது என்பதனைச் சுருக்கமாகக் கூறுவதே இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும்.

எப்பொழுதும் அறிஞர் பெருமக்களின் பாராட்டையும் வாழ்த்தையும் பெறவேண்டும் என்ற ஆதங்கத்தில் ஓடி ஓடி உழைத்தவர் இளவாலை அடைக்கலமுத்து அவர்கள். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச முனிவர் யார் என்பதனை அமுது அவர்கள் பின்வரும் ஒரு பாடலிலே எடுத்துக் காட்டுகின்றார்.

"தாயினும் இனிய அன்பன்
சஞ்சலம் தீர்க்கும் நெஞ்சன்
தூய்மையே படிந்த தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் பசுந் தரையைக் காட்ட
ஆயனாய் இறைவன் தந்த ஆண்டகை"

என்ற அற்புதப் பாடல் வரிகளினால் விளக்குகின்றார். முதன்முதலாக ஞானப்பிரகாசமுனிவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் இளவாலை அமுது அவர்கள். இந்த நூல் வெளிவரும்போது பல்கலைக்கழகம் தொட்டு பாமர மக்கள் வரை தமிழ் கூறும் நல்லுலகம் ஒரு தலைசிறந்த வரலாற்று ஆசிரியனை அடையாளம் கண்டுகொண்டது.

"ஆசிரிய கலாசாலையை முடித்துக்கொண்டு நான் அளவெட்டி தெற்கில் உள்ள பாடசாலையில் அதிபராகக் கடமை புரிந்தேன். பின்னர் அங்கிருந்து இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்.சார்ள்ஸ் பள்ளிக்கூட உதவி அதிபராகக் கடமையாற்றினேன். இந்தப் பாடசாலையின் பொறுப்பதிகாரியாக இருந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள். எனக்கு அவரிடம் முன்னதாகவே நிறைந்த பழக்கம் உண்டு. அவர் ஆசிரிய கலாசாலைக்குப் பலமுறை வந்து சிறப்புச் சொற்பொழிவுகள் செய்து இருக்கின்றார். அத்துடன் தூதன் பத்திரிகைக்கு நான் ஆசிரியர் பொறுப்பில் இருந்தபோது அவரிடம் சிறந்த கட்டுரையை வாங்கிப் பிரசுரித்து இருக்கின்றேன். இந்த நெருங்கிய உறவு நான் அதிபராகக் கடமையாற்றியபோது இன்னும் ஓர் அந்நியோன்னியமான இணைப்பை உருவாக்கியது. அவருடன் நான் பழகிய அந்தக் காலங்கள் என் வாழ்க்கையில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த காலங்களாகும்.

நான் பள்ளிக்கூட விடயமாக அவரை அடிக்கடி சந்திப்பேன். சுவாமி ஞானப்பிரகாசரின் பொறுப்பில் இருந்த பள்ளிக்கூடங்களைப் பரிசோதனை செய்வதற்கு என்று பதினைந்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களுக்கும் சென்று அங்கு இருக்கக்கூடிய நிலைமைகளை நன்கு ஆராய்ந்து குறிப்புகள் எழுதிவந்து சுவாமிகளிடம் கொடுப்பார்கள். அந்தக் குறிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவருடைய வீட்டில் நிறைந்திருக்கும். நான் போகின்றபொழுது என்னைக் கொண்டு அந்த விடயங்களை வாசிக்கச் சொல்லுவார். அந்தப் பள்ளிக்கூடங்களில் உள்ள குறைநிறைகளை அறிந்து கொள்வார். அவருடைய இருப்பிடம் ஒரு நூலகமாகத்தான் இருக்கும். புத்தகம் இருக்கின்ற அலுமாரியைப் பார்த்தால், இந்தா முறிந்துவிழப் போகின்றது என்ற மாதிரித்தான் இருக்கும். தமிழிலும் ஆங்கிலத்திலும் நிறைந்த கட்டுரைகளும் நூலும் எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஒரு பன்மொழிப் பண்டிதர் என்பது வரலாறு அறிந்த உண்மை. அவருடைய ஆக்கங்கள் கல்வியாளர் மத்தியில் பெரு மதிப்பைப் பெற்றது.

செந்தமிழ், இந்துசாதனம், கலாநிதி போன்ற சஞ்சிகைகளில் அவருடைய ஆக்கங்கள் இடம்பெற்றதையும் அவருடைய ஆக்கங்களை மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணத்து ஆரிய திராவிடபாஷா விருத்திச் சங்கம் என்பன விரும்பி வரவேற்ற தன்மையையும் கலாநிதி கா.இந்திரபாலா அவர்கள், சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுடைய சில வரலாற்றுக் குறிப்பிலே சுட்டிக்காட்டுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ்மொழி வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்துவந்த குருகுல கல்வி முறையை 'மரபு முறைக்கல்வி' என்று கோடிட்டுக் காட்டி, இவற்றில் பழைய நூல்களை மனனம் செய்து விளக்கம் கூறுவதே அந்தக் கல்வி முறையின் பிரதான அம்சம் ஆகும்.

ஆனால் ஆங்கிலக் கல்வி முறையின் தாக்கத்தால் குருகுலக் கல்விக்குப் பதிலாக உயர்கல்வி வகுப்புக்களும் பல்கலைக் கழகங்களும் தோற்றம் பெற்றமை கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மரபுவழி கல்வியாளரிடம் இரு பிரிவினர் தோற்றம் பெற்றனர். ஒரு பகுதியினர் ஆங்கிலக் கல்வி மேலீட்டால் பாதிப்படைந்தவர்கள். சிலர் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியினால் பாதிப்படையாதவர்கள். ஆங்கிலக் கல்வி முறையின் தாக்கத்தைப் பெறாதவர்கள் இயற்றமிழ் வல்லவர்களாக விளங்கினர். ஏனையோர் தமிழ்ப் புலமையோடு மட்டும் நின்றுவிடாமல் மொழி, சமூகம், சமயம், ஒழுக்கம் முதலியவற்றை உரைநடை வாயிலாகவும் கட்டுரை வடிவங்களிலும் எடுத்து விளக்குவதற்குப் புதிய வகையில் சிந்திக்கத் தொடங்கினர். இதனால் தமிழ்மொழிக்கு வேண்டிய சீர்திருத்தங்களை மேற்கொண்டு பிரசாரங்களையும் செய்ய ஆரம்பித் தார்கள். மேலை நாடுகளில் ஏற்பட்ட ஆய்வுமுறைகள் இவர்களை நன்கு பாதித்தது. காலப்போக்கில் ஆங்கிலக் கல்வி முறையிலான அணுகுமுறைகளின் மாற்றங்களும் வளர்ச்சியும் எமது கல்விப் பாரம்பரியத்தில் பெருமாற்றங்களை ஏற்படுத்தியது. இத்தகைய சூழலிலே வாழ்ந்தவர்தான் சுவாமி ஞானப்பிரகாசர். இத்தகைய ஒரு வளர்ச்சி முறையில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஈர்க்கப்பட்டதால் நாடறிந்த அறிஞராக மட்டுமன்றி பிறநாடுகள் அறிந்து புகழும் அறிஞராக விளங்கினார் என்று கலாநிதி இந்திரபாலா அவர்கள் குறிப்பிடுவதும் இங்கே மனங்கொள்ளத்தக்கது."

இத்தகைய சிறப்பு இயல்பினைக் கொண்ட சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் பிறந்த பூமியை அமுது இப்படித்தான் தனது கற்பனை ஊற்றில் வடித்தெடுக்கின்றார்.

"மண்ணிலும் மரத்திலும் தமிழ் மணக்கும் நாடு
வான் வளம் குன்றிலும் தான் வளம் குன்றாத நாடு
இலங்கை மாதாவின் நெற்றியில் இட்ட திலகம்"

என்று கூறும் நாடு யாழ்ப்பாணம். இரகுவம்சம் என்ற இலக்கிய நிதியைத் தந்தார் அரசகேசரி. 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று புகழ் பெற்றார் ஆறுமுகநாவலர். தொல்காப்பியம், கலித்தொகை முதலிய பழைய நூல்களைத் தொகுப்பித்தார் தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர்கள் யாவரும் யாழ்ப்பாண மண்ணின் மணிகளே. அந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து ஒரு காதவழி தொலைவில் அமைந்ததுதான் மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணக் குடாநாடு என்ற பழத்தட்டில் கண்ணைக்கவரும் மாதுளங்கனிபோல் காட்சியளிப்பதுதான் மானிப்பாய் கிராமம். நெல்வயல்களும் மருதமரங்களும், அம்மரநிழல்களில் படுத்துறங்கும் பட்சிகளும் அந்த ஊரை அழகுபடுத்துகின்றன. அங்குள்ள வாழைக்கனிகளின் சுவையைத் தோற்கடிப்பதற்கு என்று மாவும் பலாவும் போட்டியிடுகின்றன. இலங்கை அரசியல்வானில் இணையற்ற சோதியாய் விளங்கிய சேர் பொன். இராமநாதனையும், ஆட்சிச் சிறப்பிலும் கலை ஞானத்திலும் தேர்ந்த சேர் பொன். அருணா சலத்தையும், கலாஜோதி ஆனந்தகுமாரசுவாமியையும் பெற்றெடுத்தது மானிப்பாயே. உனது இத்தகைய சிறப்பினை மனதில் வைத்துக் கொண்டுதான் அந்த நாட்களில் ‘அமெரிக்க மிஷன்’ என்று பெயர் பெறும் புரட்டஸ்தாந்தர் கிறீன் வைத்தியசாலையையும் அங்கு அடிக்கல் நாட்டினார்களோ?

போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தரை ஒழிக்க முயன்ற டொன் லூயிஸ் என்ற பூதத்தம்பி வாழ்ந்த இடம் மானிப்பாய் என்பதும் வரலாறு. அத்தகைய சிறப்புப் பெற்ற மானிப்பாயிலே சங்கின் வயிற்றில் இருந்து முத்துப் பிறப்பது போல் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் பிறந்தார். ஞானப்பிரகாசர் என்ற பாரிசாத மலரின் நறுமணம் ஈழநாட்டில் மட்டுமல்ல, தமிழகத்தில் மட்டுமல்ல, மேலைநாட்டிலும் வீசியது. அந்தச் செடியின் ஆணிவேர் மானிப்பாயில் அல்லவா தோற்றம்பெற்றது" என்று சுவாமிகளின் வரலாற்றைத் தொடக்கி வைக்கின்றார் இளவாலை அமுது அவர்கள்.

மறைநூல் விரிவுரையாளராகவும் வேதப் போதகராகவும் ஆராய்ச்சி யாளராகவும் பன்மொழிப் புலவராகவும் இவர் விளங்கியிருக்கின்ற தன்மையை மிகுந்த எளிமைத் தமிழில் தீட்டிக்காட்டியவர் இளவாலை அமுது அவர்கள். நீண்ட காலங்கள் சுவாமிகளுடன் இணைந்து கொண்ட புலவர் அவர்கள் சுவாமிகளின் அற்புதக் குண இயல்புகளை நேரே கண்டு அனுபவித்துள்ளார். இவர் ஒரு கிறிஸ்தவ போதகத்தின் ஞானபண்டிதன். சைவசமயச் சூழலில் தொண்டு செய்ய நேரிட்டதால் சைவ சமய நூல்களை ஒன்றும்விடாது கற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமொழியாகிய சமஸ்கிருதம், உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை என்ற பல்வேறு நூல்களில் நிறைந்த ஞானமுடையவராக விளங்கும் சுவாமிகள் சமய வாழ்வு சமய அறிவியலில் அவர் ஒரு நிறைகுடம் என்றே அமுது குறிப்பிடுகின்றார். ஒரு சிறந்த ஆசிரியனுக்கான அழகிய தோற்றப்பொலிவு, மனிதப் பண்புகள் அனைத்தும் ஒன்று கலந்துவிட்ட தோற்றம், வசீகரமான முகம், இரக்கத்தைச் சுரக்கின்ற கண்கள், உருக்கி வார்த்தாற் போன்ற உடலமைப்பு, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போன்ற பொறுமை, கிறிஸ்தவ போர் வீரனுக்கு உரிய வீரநெஞ்சு அனைத்தும் நிறைந்த ஓர் ஆசிரியனாக என் கண் முன்னே தோற்றம் பெற்றவர் சுவாமி ஞானப்பிரகாசர் என்கிறார் இளவாலை அமுது அவர்கள்.

"சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் போதனை செய்கின்ற இடங்களில் நாற்காலிகளைக் காணமுடியாது. புல் நிலத்தைத் தேடும் பாலைவன நாடோடிகளாகவே செயற்பட்டனர். அறிவு குறைந்த மக்களுக்குப் போதனை செய்யும் போதெல்லாம் அவர் பலபடி கீழே இறங்கி வருவார். அவர்களுக்கு விளங்கக்கூடிய சின்னஞ்சிறு கதைகள், பழமொழிகள், தத்துவங்கள், நாட்டுப் பாடல்கள் என்று பல விடயங்கள் இடம்பெறும். வேத சாஸ்திரங்களை மிக இலகுவாக அவர்களினுடைய நெஞ்சில் புதைத்து விடுவார். பழமொழிகள், மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக் காட்டுவார். அவற்றை இலகுவாகக் கையாள்வது அவருடைய இயல்பு. மக்களிடையே தெளிவான பகுத்தறிவு வளரவேண்டும் என்பது அவருடைய உள்ளத்து உன்னதமான கருத்து. அவர் ஞானோபதேச வகுப்பை நடத்திக்கொண்டு இருக்கும் நேரத்தில் அவரைக் காண வருகின்றவர்கள் யாவருமே அவருடைய போதனையில் கலந்து பரவசமாகிவிடுவார்கள். அவர் எங்கள் உள்ளத்தின் ஞான ஊற்று" என்று நெஞ்சினிக்கக் கூறுகின்றார் இளவாலை அமுது அவர்கள்.

சமயப்பணியோடு தமிழ்ப்பணியும் செய்த சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களை 'இலங்கை வீரமாமுனிவர்' என்று குறிப்பிட்டு இருப்பது மிகப் பொருத்தமானது என்று புலவர் அமுது கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுந்தர வடிவும் பரிசுத்த குணமும் புருஷத்துவமும் உடைய சுவாமிகள் ஓர் இடத்துக்குப் போகின்றபொழுது அவருடைய வண்டிச் சத்தம் கேட்டவுடனே அந்த ஊரே திரண்டுவிடும். சிறு பிள்ளைகள் ஓடிச்சென்று கோயில் மணியை அடிப்பார்கள். நீண்டகாலம் பழகிய நாய்க்குட்டிகள் போல் மிகுந்த பரிவுடன் அவரின் காலடி தேடி ஓடுவார்கள். வயது முதிர்ந்த பெரியவர்களும் சுவாமிகளை ஒரு பிதாவாகக் கருதிப் பின் செல்வார்கள். சுவாமிகள் வண்டியை விட்டு இறங்கும் முன்னதாக ஒரு சிற்றூரே சேர்ந்துவிடும். அவருடைய அன்பும், கருணையும், ஈகையும் தமிழ்மொழியைப்போல் நினைத்து நினைத்துச் சுவைக்கக்கூடியவை.

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் கத்தோலிக்கர் மத்தியில் வாழ்ந்தபோது யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் செல்வர் வீட்டுச் சின்னப்பிள்ளைகள் போல் தங்களை நினைத்துக் கொண்டார் கள். பல மொழிகளில் உண்டான தேர்ச்சி தமிழில் துறைபோகக் கற்ற கல்வி, அதன் பெருமை, பேச்சு வன்மை என்பன அவரை மலை உச்சியில் கொண்டு போய் வைத்தது. எந்தக் கத்தோலிக்க மாநாடுகளுக்கும் பேருரைகளுக்கும் அவரே தலைமை தாங்குவார். 1936 ஆம் ஆண்டு இவர் ஐம்பது நாட்களுக்கு மேல் ஆபத்துக்குரிய நோயினால் பீடிக்கப்பட்டு இருந்தார். சுகம் பெற்று வந்தபோது மக்கள் கூடி ஆரவாரித்து அவரைப் பாராட்டியபோது மக்களைப் பார்த்தார். அவரின் கண்களிலே கண்ணீர்த் துளிகள். எனக்குப் பாராட்டுதல் என்பது பிடிக்காத ஒன்று என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் நோயால் இளைத்த என் உடல் உங்களுடைய மங்கல வார்த்தையைக் கேட்டு இளமை பெற்றுவிட்டது என்று கூறி மகிழ்ந்தார். இவருடைய அறிவுக்கூர்மையை கூர்ந்தமதியோடு சிந்தித்த "காவலன்" பத்திரிகை "வேத விற்பன்ன வித்தியா ஞானி" என்று முத்திரையிட்டுப் பேசியது. "நற்செய்திப் போர்வீரன்", "ஞானத் தளபதி" என்ற பெயர்களும் சூட்டப் பெற்றன.

சுவாமிகள் பலபல மொழிகளைக் கற்று நூல்களில் தேர்ச்சிபெற அறிவுக்கடலே அவருடன் சங்கமாகிவிட்டது. வாலிபர்கள் நிறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வாசிக்க வேண்டும் என்பதனையே அவர் எப்பொழுதும் வலியுறுத்துவார். அதுபற்றி கட்டுரைகளிலும் எடுத்து விளக்குவார். இளமைப் பருவம் தொட்டு நூலோடு பழகுவது என்பது அவருடைய வாழ்க்கையின் குறியாக இருந்தது. வாசிக்க வேண்டும் வாசிக்க வேண்டும் என்று அடிக்கடி நினைவுகூரும் சுவாமிகள் புத்தகக் குவியலிலே அதிகம் மூழ்கியிருந்தார். நான் மட்டுமல்ல ஞானப்பிரகாச சுவாமிகளைக் காணச்செல்லும் எந்த மனிதர்களும் அவரிடம் குவிந்திருக்கும் புத்தகக் குவியலைப் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. சுவாமி ஞானப்பிரகாசரின் நூல் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பெருவெள்ளம் வந்து நூல்கள் பல அழிந்து ஒழிந்து போனாலும் ஞானப்பிரகாசர் வீட்டு நூல் நிலையம் ஒன்று மட்டுமே இருந்தால்போதும். காரணம் அவருடைய மறைவு ஏற்பட்ட 1947 ஆம் ஆண்டு வரையிலான அத்தனை நூல்களும் அவரிடத்தில் குவிந்திருந்தன. இதிகாசம், சங்க இலக்கியங்கள், இலக்கணம் புதிய பழைய பதிப்புக்கள், ஏட்டுச்சுவடிகள், மொழிவரலாறுகள் அத்தனையும் நிறைந்து வழியும் புண்ணிய பூமி அவர் வாழ்ந்த மனை. அவர் எம்மை விட்டுப் பிரிந்தபோது 'பூனை புலம்பல்' என்ற பாடல் தொகுப்பில் ஒரு பாடலில் அவரது நூல் நிலையத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டி ருக்கின்றேன்.

"கம்பன் இருந்திங்கே கத்துகின்றான் - கவி
காளிதாசன் கண்ணைப் பொத்துகின்றான்
நம் பெரும் வள்ளுவன் கண்ணீர் விடத் - தமிழ்
நங்கை இருந்து புலம்புகின்றாள்."

இந்த நூலகத்தில் சுவாமிகள் அத்தனை நெஞ்சங்களுடனும் அந்நியோந்நியமாகப் பழகி இருக்கின்றார். அவர் பிரிந்ததும், அந்த மாமேதைகள் கண்ணீர்விடத் தொடங்கிவிட்டனர் என்பது இந்தப் பாடலின் பொருள். இந்த வரலாற்றுக் குறிப்பு சுவாமி ஞானப்பிரகாசருக்கும் புலவர் இளவாலை அமுதுவுக்கும் இடையிலான நேசமான நெருக்கப் பிணைப்பினைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகளின் அட்டாவதானத்தை நேரில் கண்டுகளித்து அதில் அனுபவத்தைப் பெற்றவர் இளவாலை அமுது அவர்கள். சுவாமி ஞானப்பிரகாசருடைய ஞாபகசக்தி என்பது மிகுந்த ஆச்சரியத்துக்குரியது. ஒரு நூலை எடுத்துப் பிரிப்பார். அதில் தேவையான வரிகளை எழுதுவார். பின்னர் ஒரு நூலை எடுத்துக் கொள்வார். அப்பொழுது வெளியில் பல தலைகள் தெரியும். அது பள்ளிக்கூட நிர்வாகம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அவர் பள்ளிக்கூட மேசை வாங்கு போட்டது, ஓடு போட்டது - அந்தக் கணக்கு வழக்குகளைப் பற்றி அவர்களுடன் பேசுவார். பின்னர் இன்னொரு புத்தகத்தைப் புரட்டுவார். சாளரத்தினூடாக நான்கு, ஐந்து தலைகள் தெரியும். அவர்களைக் கூப்பிட்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார். அதற்கான உபகாரங்களைக் கூறி வழி அனுப்புவார். பின்பு புத்தகத்தில் மீண்டும் கைபோடும் பொழுது இன்னொரு தமிழ் அறிஞர் வந்து சந்தேகம் கேட்டுத் தெளிவதற்காகக் கதவினைத் தட்டுவார். இந்த ஆறுதலற்ற வாழ்க்கையில் அவர் படைத்துச்சென்ற நூல்கள் எத்தனை! கட்டுரைகள் எத்தனை! ஆய்வுகள் எத்தனை!. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுடைய அட்டாவதானத்தைப் பக்கத்திலே இருந்து அனுபவித்த இளவாலை அமுது அவர்கள் அதனைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

“அட்ட அவதானம் உண்டுமக்கு – அதை
யாரும் அறிந்ததே இல்லை ஐயா
கிட்ட இருந்த எனக்கல்லவோ – அந்தக்
கீர்த்தி தெரியும் தமிழ்ப் புலவா”

என்று தீட்டுகின்றார்.

“விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்துவிடுவார். அதன்பின்புதான் மணிக்கூடு அடிக்கும். ஒரு மணி நேரம் தியானம் புரிவார். குருவுக்குரிய கடமைகளைச் செய்துமுடித்த பின்னர் ஞானநூல்களை எடுத்து வாசித்துக் கொண்டிருப்பார். மக்களுக்காகச் சிறுசிறு பிரசங்கங்கள் செய்வதும், முன்னேற்ற வழியில் அவர்களைக் கொண்டு செல்வதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் வந்தபோது ஏற்ற துணைபுரிவதும், அவருடைய இயல்புகளாகும். தன்னைக் கொல்ல வந்த பகைவனையும் தனது உற்ற நண்பனாக மாற்றிய பெருந்துறவி. ஒழுங்காக நாளாந்த வேலைகளை வகுத்து அவற்றை முறையாகத் திறம்படச் செய்யும் ஆற்றலை நாம் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. அவருடன் ஒன்றாக இருக்கின்ற பலருடைய பேச்சு இப்படித்தான். சுவாமிகளின் ஆற்றலை வியந்து மூக்கிலே கைவைப்பதை நான் கண்டு ஆச்சரியப்பட்டு இருக்கின்றேன்" என்று அமுதுப்புலவர் விளக்கிநிற்கின்றார்.

"மானிப்பாயில் சுவாமிகள் ஐம்பது நாட்கள் சுகவீனமுற்று இருந்தார். அவர் சுகம் பெறுவார் என்ற எந்தவிதமான அறிகுறிகளும் காணப்படாத நிலையிலும் அவர் சுகம் பெற்று மீண்டுவிட்டார். அப்பொழுது அந்த மானிப்பாய் வைத்தியசாலை அதிபர் டாக்டர் ஜேம்சன், "எங்கள் கவனத்தினால் நீங்கள் சுகம் பெறவில்லை. நாள்தோறும் உம்மைப் பார்க்கக் கண்ணீர்த் துளிகளுடன் கூட்டம் கூட்டமாக வந்து செபம் பண்ணுகின்ற உங்கள் அடியார்களைக் கண்டேன். அவர்களின் மன்றாட்டத்தினால் நீங்கள் அற்புதமாகச் சுகமடைந்தீர்கள்" என்று கூறி ஆச்சரியப்பட்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்க உப தலைவராகவும் யாழ்ப்பாண வரலாற்றுக் கழகத்தின் தலைவராகவும் இலங்கை எழுத்துப் பிரதிகளின் ஆய்வுக்குழுவில் ஓர் உறுப்பினராகவும் விளங்கினார். 1944 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக செனட்சபை உறுப்பினராகவும் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் அருந்தொண்டாற்றியமை வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சங்களாகும்.

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் ஆய்வு முயற்சிகள், தமிழ்மொழியியல், பண்டைத் தமிழர் வரலாறு, யாழ்ப்பாணச் சரித்திரம், என்று மூன்று வகைப்பட்டதாக அமைந்துள்ளமையை பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், அகராதிகள் யாவும் தொகுக்கப்பட்டு தனிநூலாக வெளிவர வேண்டும் என்றும், பல்கலைக்கழகம் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய ஆய்வுகளை நடாத்த முன்வரவேண்டும் என்றும் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த முயற்சியின் முதற்படியாக அமைவதுதான் அமுது அவர்களின் 'நெஞ்சே நினை' என்ற வரலாற்று நூலாகும். இந்த வரலாற்று நூல் முயற்சியில் இளவாலை அமுது அவர்களின் அயராத உழைப்பினையும் ஆழ்ந்த தமிழ் புலமையையும் சுவாமிகள் மீது அமுது அவர்கள் கொண்டிருந்த பேரன்பினையும் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் வெகு வியப்புடன் பாராட்டியிருக்கின்றார். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுடைய மொழி ஆய்வினைப் பாராட்டி ஜேர்மனிய அரசு சுவாமிகளின் நினைவாக முத்திரையை வெளியிட்டது.

நல்லூர் ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் இந்த மண்ணைவிட்டு பிரியும் நிலையினை அமுது அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார். "புதன்கிழமை பொழுது புலர்ந்து வருகின்றது. விண்மீன்கள் நிலாவை விட்டு மறைகின்றன. யாழ்ப்பாணக் கத்தோலிக்க கோயிலின் மணியின் துயரஒலி திக்கெட்டும் தொனிக்கின்றது. தமிழ் ஆய்விலும், சமயச் சேவையிலும் ஈடுபட்டு ஒளிசெய்து கொண்டிருந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்ற மணிவிளக்கு மறைந்துவிட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் பல பாகங்களிலிருந்தும் வந்த சனவெள்ளம் புன்முறுவல் பூத்த பொன்முகத்தைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தனர். பல்லாயிரம் மக்களுக்கு ஞானதீட்சை அளித்த அருள்கரங்களைப் பார்த்துப் புலம்பினர். இன்னும் சிலநாள் இருந்திலையே, என்ன செய்வோம்? என்று வாய்விட்டுப் புலம்பினார்கள்."

அந்தச் சம்பவங்களையெல்லாம் நினைவுசெய்து அமுது அவர்கள் பேசியபோது அவருடைய கண்கள் கண்ணீர்மழை பொழிந்தன. நாடெங்கும் தமிழ் வளர்த்த நல்லூர் ஞானப்பிரகாசர் சுவாமிகளின் வரலாற்றை அறிய ஆவல் கொள்ளும் அறிஞர் பெருமக்களுக்கு இளவாலை அமுது படைத்தளித்த 'நெஞ்சே நினை' ஓர் அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொக்கிஷம். நீண்டகாலம் அடிகளாருடன் நெருங்கிப் பழகியதாலே பல்சுவையான அனுபவங்களைத் தாங்கி இந்த நூல் வெளிவந்தது. தமிழ் பேசும் கத்தோலிக்கப் பெருமக்களுக்கு உதவும் வண்ணம் தொடக்கப்பட்ட மறை மாவட்ட இலக்கியக் கழகத்தின் முதல் வெளியீடாக 'நெஞ்சே நினை' என்னும் இந்நூல் வெளியானது.

ஐயா அமுது அவர்களே, உங்களிடம் ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகின்றேன். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தைச் சொல்வதற்கு 'நெஞ்சே நினை' என்று பெயர் சூட்டினீர்கள். அதற்கான ஒரு விளக்கத்தைத் தருவீர்களா? என்று கேட்டவுடன் அமுது அவர்கள் தொடர்கின்றார்.

"தம்பி, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இதயம் இருக்கின்றது. மனம் என்ற ஒன்று இருப்பதினால்தான் மனிதன் என்று அழைக்கப்படுகின்றான். தேனைச் சுவைத்த வண்டுகள் எப்பொழுதும் அந்தத் தேன் நிறைந்த மலர்களையே நாடிச் செல்கின்றன. பல்வகை சுவை பொருந்திய இனிப்புக்களின் சுவையறிந்த எறும்புகளும் அந்த வாசனையை நோக்கியே நகர்ந்த வண்ணம் இருக்கின்றன. இதிலிருந்து எதை நீர் உணர்கின்றீர்? சுவையான பொருள் எனில் நெஞ்சு அதனை நாடிக் கொண்டே இருக்கின்றது. இதுபோல் நெஞ்சைவிட்டு விலகமுடியாத நினைவுகளாக இதயத்தின் அடித்தளத்தில் அவை மீட்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. சுவாமிகளின் நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தி லெல்லாம் உளன்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்வழி வாழ்ந்து காட்டியவர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள். சுவாமிகள் இயேசுபிரானின் மெய்யடியார். பன்மொழிப் பண்டிதன், ஆராய்ச்சியாளன். தாய்மொழியின் பெருமையை உலகறியச் செய்த மாமேதை. இந்தப் பெருநிதியை இழந்துவிட்டோம் என்பது நெஞ்சுக்கு அமைதியைத் தரமுடியாத ஒரு செய்தியாகிவிட்டதே. அவர் ஒரு பெரும் துறவி. அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடலுக்கு அழிவே அல்லாமல், அவருடைய ஆன்மாவுக்கு அழிவில்லையே. அவருடைய புகழுடம்பு என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும். இவற்றை எல்லாம் எண்ணி உனது துன்பத்தை நீ விலக்கிக் கொள்ளமாட்டாயா என்று கேட்டேன். 'கல்வி கரையில கற்பவர் நாட்சில' என்ற நாலடியார் தத்துவம் உனக்கு விளங்காதா என்று கேட்டேன். இத்தனை சொல்லியும் இயலாது என்றா சொல்கின்றாய்? 1947 ஆம் ஆண்டு தைத் திங்கள் 22 ஆம் திகதி புதன்கிழமை உன் கண்ணிலே இருக்கின்ற கண்ணீர் முழுவதும் வற்ற நீ அழுது முடித்தது போதாதா? சரி, இனி நான் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. உன் இதயக் குமுறலை, உன் சிந்தனைப் பெருக்கை இந்தப் பேனா நுனியின் மூலமாக அள்ளித் தெளி. உடைந்துபோன இதய வீணையின் இதயக் குமுறல் இந்த உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவட்டும். உனது இதயக் குமுறலைக் கொட்டித்தீர். நீ தனிமையிலிருந்து புதைந்து புதைந்து அழுந்தியது போதும். நீ நினைப்பதனை அழகாகத் தெளிவாகத் திருத்தமாகச் சொல்லு. நீ மற்றவரிடம் சொல்லித் தீர்த்துவிட்டாயென்றால் உன் நெஞ்சக் குமுறல் தீர்ந்துவிடும். உனது துன்பமும் குறையும். தலைப்பாரமும் போய்விடும். 'சுவரோடாயினும் சொல்லி அழு' என்ற ஆன்றோர் பழமொழியை வைத்துக் கொண்டு, நீ நினைப்பதைச் சொல்லு. உன்னைப் போலவே பல்லாயிரம் நெஞ்சங்களில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். வருங்காலத்தில் எல்லோரும் அவரைத் தங்கள் நெஞ்சில்வைத்து நினைவுகூர இந்த இதயக் குமுறல்கள் துணைபுரியும். எனவே நெஞ்சே நினை என்று எழுதி முடித்தேன்."

ஐயா, இந்த நூல் வெளியானபோது, இந்த நூல் சமுதாயத்தில் குறிப்பாக படித்த மக்களிடையே எத்தகையதொரு தாக்கத்தை அல்லது வரவேற்பை ஏற்படுத்தியது என்று கூறமுடியுமா?

"இந்த நூல் வெளியானபோது பலருடைய பாராட்டு என் வாசல் தேடி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேன்வடியும் கவிபாடும் அமுதே - இன்று
செயற்கரிய செய்த பெரும் பேறு பெற்றாய்
வான்புகழும் வரலாற்று நூலைக் கண்டேன்
மனங்குளிர்ந்தேன் மெய் மறந்தேன் கங்கையாற்றில்
அன்பால் தேன்கனி கலந்த கலசம் கண்டேன்
அருள்பூர்த்த குருமணியை – அறத்தின் வாழ்வை
ஏனின்று வரை யெழுதவில்லை யென்பார் -
இதோ நெஞ்சே நினை என்னும் ஏடு காண்பீர்

என்று ஒரு புலவன் புகழாரம் சூட்டினான். (புலவர் ஞானப்பிரகாசர், மிருசுவில்)

படித்தேன் என் அன்பன் அமுதள்ளித் தந்து
படித்தேன் வாய் இதழ் இனிக்க நெஞ்சினிக்கக்
குடித்தேன் நற் சுவைத்தேன் என் கலையின் தாகக்
குறைதீரச் சுவைத்தேன் இப்புதுமை ஏட்டை
முடித்தேன் பொன் மலை முடித்தேன் இன்ப வெள்ளம்
மூழ்கியுளம் களித்தேன் இக்கனித்தேன் போற்றத்
துடித்தேன் இக்கலை நூலின் இனிமை பொங்கும்
துளித்தேனை மாந்திடுவீர் துயரந்தீரும்

என்று தீட்டினார் யாழ். ஜெயம் என்னும் ஒரு கவிஞன்.

எழுத்தினிலே ஈழத்துக் கல்கி என்பார்
இனிய தமிழ்ப்பேச்சினிலே மேடைத் தென்றல்
மூத்த தமிழ் அறிவாளி புலவர் ஏத்தப்
பாடும் இளமுருகனிடம் பாடம் கேட்டோன்
விழித்திரு கண்மூடாமல் பணிகள் செய்து
விடிவெள்ளி போல் மொழியை விளக்கினோர்க்கு
கொழித்த தமிழ் மணிகுழைத்து அமுது வைத்தான்
கோடி "நெஞ்சே நினை" அதன் பேர் கூறுவோமே.

என்று பாடினார் பண்டிதர்,கலைஞானி-ஞானப்பிரகாசம் அவர்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமிழ்த்துறைத் தலைவர் எனது நூலை நன்கு பாராட்டிக் கருத்துரை வழங்குகையில் சொற்கலைப் புலவர் நல்லூர் ஞானப்பிரகாசர் அவர்களின் நூற்றாண்டு விழா வெளியீடாக அவர் வரலாற்றைக் கூறும் "நெஞ்சே நினை" என்ற நூல் வெளிவருகின்றது.

"மறை மொழி வாயினன் மனிதவத் திறைவன்
நிறை சொற் கலைஞன் நிகரில் கேள்வியன்."

என்று சான்றோரால் போற்றப்படும் சுவாமி ஞானப்பிரகாசர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், சொற்கலைத் துறையிலும் பன்மொழி ஒப்பியற்துறையிலும் வரலாற்றுத் துறையிலும் சிறப்பிடம் வகித்தவர். பல்கலைக்கழகங்களும் நெறிமுறையான ஆராய்ச்சிகளும் செம்மையாக வளர்ச்சியடைய முன்னர் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சித் துறையில் பல சாதனைகளை நிலைநாட்டிய பெருமை சுவாமி ஞானப்பிரகாசரையே சாரும்."

நல்லூர் வரலாற்றுப் பெருமைமிக்க நகர். தமிழரசின் தலைநகர். ஆறுமுகநாவலர் பிறப்பகம். இத்தகைய புகழ் பூத்த நல்லை நகரைத் தலைமைப் பீடமாகக் கொண்டு 43 ஆண்டுகள் தன்னிகரற்ற சேவைகள் செய்து நல்லூர் ஞானப்பிரகாசர் என்று தமிழ் கூறும் நல்லுலகத்தினால் அறியப்பட்டவர். இந்த அறிஞரின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலாக எடுத்துக் கூறும் நூல் புலவர் அடைக்கலமுத்து அவர்களின் நெஞ்சே நினை என்ற நூலாகும்.

இந்த நூல் பொதுவாக ஏனைய வரலாற்று நூல்களைப் போலன்றி சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களினுடைய முக்கியமான வரலாற்றுக் கூறுகளை எடுத்து இயம்பும் ஒரு அரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது. நெஞ்சே நினை என்ற இந்த நூலில் சுவாமிகளின் வரலாற்றை வெளிப்படுத்துவதுடன் அவருடைய தமிழ்ப்பணி, சமயப்பணி என்பவற்றை மதிப்பீடு செய்து ஒப்பிட்டுக்கூறும் வகையில் பல ஆதாரங்களை மிக அரிதாகத் தேடியெடுத்து சுவாமி ஞானப்பிரகாசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முக்கியமான பணிகளின் தகவல்களையும் அதன் தகைமைகளையும் செவ்வனவே நிறுவியுள்ளமை போற்றுதற்குரியது.

வித்துவான் அடைக்கலமுத்து தமிழ் உலகினால் நன்கு அறியப்பட்டவர். வித்துவான் இளமுருகனார், பண்டிதமணி இன்னும் பல பல்கலைக்கழகப் பேராசிரியரின் கைவண்ணத்திலே உருவானவர். சிறந்த கட்டுரையாசிரியர், பதிப்பாசிரியர், சிறந்த கவிஞர் ஆவார். அவருடைய "நெஞ்சே நினை" என்ற சிறந்த அரிய நூலைத் தமிழ் உலகிற்குத் தந்ததன் மூலம் தலைசிறந்த வாழ்க்கை வரலாற்று ஆசிரியராகவும் இடம்பெற்றுவிட்டார். வித்துவான் அடைக்கலமுத்து அவர்கள் செய்த பணி காலத்திற்கு ஏற்றபணி. தமிழ் பேசும் மக்கள் வித்துவான் அடைக்கலமுத்துவின் இந்த அரிய முயற்சியை நிச்சயம் பாராட்டுவார்கள். நெஞ்சில் நிறுத்தி மகிழ்வார்கள்.


வித்துவான் அடைக்கலமுத்துவின் நெஞ்சே நினை என்ற நூல் வெளியானபோது புலவர்மணி இளமுருகனார் வாழ்த்திய வாழ்த்து இங்கே குறிப்பிட வேண்டிய ஒன்று. அமுதுவின் வரிகளில் சொல்ல வேண்டுமேயானால் "1975 ஆம் ஆண்டு புலவர் இளமுருகனார் அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்தார். அந்த நேரத்தில் நெஞ்சே நினை என்ற நூலுக்கு அணிந்துரை செய்துதரும்படி கொடுத்தேன். அதனைப் படித்துவிட்டு பல திங்கள் நோயுற்றிருந்த எனக்கு நெஞ்சே நினை என்னும் இந்நூல் புதிய உயிர்ப்பினைத் தந்தது. இந்த நூலை இடையிலே விடுவதற்கு விருப்பமின்றி முழுவதையும் ஒரே நேரத்தில் படித்து மகிழ்ந்தேன். பழுத்த கறுத்தக்கொழும்பு மாவின் கனியை வெட்டித் தின்ற நிறைவில் என் உள்ளம் இன்பமெய்தியது. கற்பனை அழகும், நடையழகும் பொருந்தக் கவிபுனையும் அமுது, சுவாமி ஞானப்பிரகாசருடைய வாழ்க்கை வரலாற்றை பாட்டிலே தீட்டியிருந்தால் ஒரு காவியமே தோன்றியிருக்கும்" என்று வாயூறி நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 15. தமிழ்த்தூதும் தமிழ்க்கங்கையும்



எம் தாய்மொழித் தமிழுக்கு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்திப் பார்க்கின்ற ஒரு பெரும் சிறப்பை ஏற்படுத்தித் தந்த தனிநாயகம் அடிகளார் ஈழத்தாய் பெற்றெடுத்த அரும்புதல்வன். அமுதுவின் வரிகளில் கூறுவதானால் வசீகரமான சொல்லழகு, கருத்துக் குவியல், பல்மொழி அறிவு, பல்வேறு நாடுகளுக்குச் சென்ற அனுபவம் அனைத்தும் ஒருங்கு சேர்ந்த உருவம்.

அவர் மேடையில் உதிர்த்த வாசகங்கள் என்றென்றும் மறக்கமுடியாதவை. ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் ஓர் உதாரணத்தைக் கூறுகின்றேன். யாழ்ப்பாணத்திலே அவர் பேசுகையில் - ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜேர்மனி தத்துவத்தின் மொழி என்றும், பிரான்ஸ் தூதின் மொழி என்றும் ஒரு நியதியாகக் கொள்ளும்போது, தமிழ் இரக்கத்தின் மொழி என்று கூறுவது இனிது பொருந்தும் என்று கூறினார். பக்தியின் மொழி என்றும் கூறலாம். இரக்கம், பக்தி இரண்டுமே மனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கம்தான். இத்தகைய உருக்கத்தை இரக்கத்தைப் போன்று வேறுமொழிகளில் இரங்குவது அரிது என்றாராம். இதனைக் கேட்டபோது, செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று பாரதி பாடியது போன்ற உற்சாகத்தில் மக்கள் கைதட்டிய ஓசையில் அந்தக் கட்டிடமே அதிர்ந்தது என்று அதனைப் பார்வையிட்ட அமுது அவர்கள் அதனைத் தன் நூலில் பதிவு செய்கின்றார்.

"இந்தப் பேச்சு 1951 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் இடம்பெற்றது. அந்தத் தமிழ் விழாவிற்குத் தலைமை தாங்கவேண்டியவராக இருந்த சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள், அந்த மேடைக்கு வரத் தாமதமாயிற்று என்றாலும் குறித்த நேரத்தில் தனிநாயகம் அடிகள் அன்றைக்கு தன் முத்திரை பதித்த பேச்சை ஆரம்பித்துவிட்டார். தனிநாயகம் அடிகள் தனது பேச்சை முடித்து மக்கள் கைதட்டி கரகோசம் செய்த வேளையில் ரா. பி.சேதுப்பிள்ளை அவர்கள் அந்த மேடையில் தோன்றி "தனிநாயகம் பேசிவிட்டார். தனிநாயகத்துக்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை" என்றதும் மக்கள் வெள்ளம் மேலும் குதூகலம் கொண்டது. இத்தகைய பெருமைக்குரிய தனிநாயகம் அடிகளார் முயற்சியினால் 1964 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் "International Association of Tamil Research" நிறுவப்பட்டது. இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். இந்த நிறுவனத்தின் செயலாளராக அன்று உருவாக்கம் பெற்றவர் தனிநாயகம் அடிகளார். அந்த நாட்கள் தொடங்கி 01-09-1980 ஆம் ஆண்டு அவர் இவ்வுலகைவிட்டுப் பிரியும் வரை அந்த நிறுவனத்திற்காக உழைத்தார்.

முதலாவது மாநாடு மலேசியா நாட்டில் சிறப்பாக இடம்பெற்றது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையில் அறிஞர் அண்ணாவின் தலைமையில் இடம்பெற்றது. மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரிஸ் நகரில் நடை பெற்றது. நான்காவது மாநாடு 1974 ஆம் ஆண்டு தை மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஈழமண்ணில் யாழ்ப் பாணத்திலே பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் பதின்நான்கு பைந்தமிழ் வல்லாரின் திருவுருவச் சிலைகள் திறக்கப்பட்டன. அதில் வள்ளுவர், தொல்காப்பியர் வரிசையில் தனிநாயகம் அடிகளாரும் தெய்வச்சிலையாக அமர்த்தப் பட்டார். 1981 ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளாரின் மாட்சி நயப்பு மலர் வெளியிடப்பட்டது. இதில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் தனிநாயகம் அடிகளார் பற்றிக் கூறுகையில் தமிழாராய்ச்சி மன்றத்தின் தந்தையும் தாயும் அவரே என்று குறிப்பிட்டு இருக்கின்றார். 1974 ஆம் ஆண்டு நான்காவது மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் இவர் தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைவர் என்றும் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஞானத்தந்தை என்றும் குறிப்பிட்டு இருக்கின்றார். (ஆதாரம் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்.) தமிழ்மொழியின் பெருமை தரணி யெல்லாம் வீச வேண்டும். தமிழன் கலை கலாசாரம் உலகமெல்லாம் விளங்கவேண்டும் என தன் வாழ்வினை எம் தமிழ் மொழிக்காக எம்மினத்திற்காக வாழ்ந்து காட்டியவர் தனிநாயகம் அடிகளாவார்.

தனிநாயகம் அடிகளார் நெடுந்தீவில் தனிநாயக முதலியார் பரம்பரையில் தோன்றியவர். இவர் குருப்பட்டம் தரித்து நெடுந்தீவுக்கு வந்தபோது அவருக்கு ஒரு பெருவிழா எடுக்கப்பட்டது. அந்த விழாவில் அவருக்கு ஒரு வாழ்த்துப்பா எழுதவேண்டி இருந்தது. அப்பொழுது நெடுந்தீவிலுள்ள ஒரு மகா வித்தியாலயத்தில் என் அண்ணர் அதிபராக இருந்தமையினால், அந்த வாழ்த்துப் பாவினை எழுதுகின்ற பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. அந்த நாளில் ஊரிலிருந்தவர்களிலும் பார்க்க என்னிடம் ஒரு திறமையிருந்தது. அது என்னவென்றால் எனது எழுத்து எப்பொழுதும் அச்சில் கோர்த்தது போல் மிக அழகாக இருக்கும். அந்த எழுத்தைப் பார்க்கின்றவர்கள் பெரிதும் ஆசைப்படுவார்கள். அப்படி யாவரும் ஆசைப்படும் வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சில் வார்த்ததுபோல் அந்த வாழ்த்துப் பத்திரத்தை எழுதினேன். தனிநாயகம் அடிகளாருக்கு அது வாசித்து வழங்கப்பட்டது.

ஒருமுறை அடிகளார் யாழ்ப்பாணம் வந்தபொழுது மீண்டும் அவரைக் காண நேரிட்டது. ஏற்கனவே நான் அவருக்கு வாழ்த்துப்பா பாடியிருக்கின்றேன். அவர் என் மீது மிகுந்த பற்றுடையவராக இருந்திருக்கின்றார் என்பதனை பின்னர் அறிந்துகொண்டேன். ஈழகேசரி பத்திரிகை நிறுவனத்துக்கு ஒருக்கா நான் போக வேண்டும், நீயும் என்னுடன் வா என்று கேட்டார். நானும் பெரும் சந்தோசத்துடன் அவருடன் சென்றேன். திரு.பொன்னையா அவர்கள் அங்கு இருந்தார்கள். அவர்தான் ஈழகேசரி பத்திரிகையின் ஆசிரியராவார். தொல்காப்பியம் தொட்டு பல நூல்களை அச்சிட்டு வெளியாக்கிய பெருமைக்குரியவர். பல சரித்திரப் புகழ் வாய்ந்த நூல்களை அச்சிட்டு வெளியிட்டபோதிலும் அவருக்கு அதிலொரு வருமானம் என்பது ஒரு காலத்திலும் வந்திராது. ஆயிரம் பக்கம் கொண்ட நூலாக இருந்தாலும் அதனை இலவசமாகவே கொடுத்துவிடும் மனப்பாங்கு உடையவர். அவர் அச்சகம் நடத்தினார் என்பதைவிட தமிழ்த் தொண்டு செய்தார் என்றே சொல்லலாம். இதனால் அக்காலம் இவர் ஒரு தமிழ்த் தொண்டனாகவே போற்றப் பெற்றார். தரமான நூல்களை வெளியிட்டு தமிழ் அன்னைக்கு அருந் தொண்டு ஆற்றினார். தமக்கென ஓர் அடையாளத்தை வைத்துக்கொண்டு ஒரு அமைப்பு முறையை வைத்துக் கொண்டு தான் வெளியிடும் நூல்களில் தன் முத்திரையைப் பதித்து வெளியிடுவார். சிறப்பான நூல்களை வெளியீடு செய்வது என்பது ஒரு உயர்ந்த சமுதாயத்தை அடையாளம் செய்து காட்டுவதாகும். அத்தகைய உயர்ந்த பணியைச் செய்து கொண்டு இருந்த திருவாளர் பொன்னையா அவர்களை நாங்கள் நிறுவனத்தில் சந்தித்தோம். உண்மையில் அவர் பொருளாதார வசதி குன்றிய நிலையில்தான் காணப்பட்டார். இருப்பினும் தொடர்ந்து தொண்டுகள் செய்துகொண்டே வந்தார்.

அங்கு காரில்தான் இருவரும் சென்றோம். போய் இறங்கியதும் அடிகளார் என் காதில் சொன்னார். அமுது உனக்குத் தேவையான புத்தகங்களை எடு, நானும் சிலவற்றை வாங்குவேன். நீ காசைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பற்றி யோசிக்க வேண்டாம். நான் காசு கொடுக்கின்றேன். நீ புத்தகத்தை வாங்கு என்று பணித்தார். பொருளாதாரக் கஷ்டத்தில் இருக்கின்றவர்க்கு ஏதாவது நம்மால் இயன்றதைக் கொடுத்து உதவவேண்டும். அவர் தொண்டினை வளரச் செய்யவேண்டும். உனக்குத் தேவை இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நீ புத்தகங்களை வாங்கு என்று கூறினார். அதன்படி நானும் சில புத்தகங்களை எடுத்துக் கொண்டேன். அப்பொழுது அடிகளார் கூறினார், குறைந்த மூலதனத்துடன் இந்த நிறுவனம் இயங்குகின்றது. ஆனால் அவருடைய எண்ணம் ஆகாயத்தைவிட விசாலமானது. அந்த நிறுவனம் நன்றாக நடக்கவேண்டும் என்று அவர் உளமார விரும்பினார் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

இதன் பின்னர் நான் பல தடவைகள் ஈழகேசரி நிறுவனத்துக்குச் சென்றிருக்கின்றேன். அதன்மூலம் பல அறிஞர்களின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது என்று சொல்லலாம். அது மாத்திரமல்ல ஈழகேசரி ஆண்டு மலர் ஒன்று வெளியிட்டபோது அந்த மலரில் எனது ஆக்கமும் இடம்பெற்றது. இவற்றுக்கெல்லாம் முதற்காரணமாக இருந்தவர் சுவாமி தனிநாயகம் அடிகள் என்றால் அது மிகையாகாது. தமிழன் தன் மொழியைக் காதலிப்பது போன்று வேறு எவரும் தம்மொழியைக் காதலிப்பதில்லை. தமிழ்ப் புலவர்கள் தமிழ்மொழியைப் போற்றுவது போன்று வேறு இலக்கியத்தில் யாரேனும் மொழியினைப் போற்றி இருப்பதைக் கண்டிலேன் என்ற அடிகளாரின் வார்த்தைகள் என் நெஞ்சை இன்ப அதிர்ச்சியில் குளிப்பாட்டி இருக்கின்றது.

1958 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உயர்நிலைக் கற்கைநெறிக்கு விரிவுரையாளராக இருந்தபோது, அங்கு தமிழ் நூல்களின் புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடாத்தி வைத்தார். இலங்கையில் பல முனைகளிலும் இருந்து அறிஞர்கள் வந்தார்கள். மானிப்பாய் வைத்தியர் டாக்டர் கிறீன் எழுதிய வைத்திய நூலும் அங்கு வைக்கப்பட்டிருந்தது. சிறப்பாக நடைபெற்ற இந்தப் புத்தகக் கண்காட்சியைப் பற்றி 'புத்தகப் பூஞ்சோலை' என்ற பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டுரையை வீரகேசரியில் எழுதியிருந்தேன். அடிகளார் அதனைப் பார்த்துவிட்டுப் பாராட்டினார்கள். கண்டறியாத பல நூற்றுக்கணக்கான நூல்களை அங்கே கண்ணையும் கருத்தினையும் கவர்ந்த தன்மையை அக்கட்டுரையில் எழுதியிருந்தேன்.

1947 ஆம் ஆண்டு சுவாமி ஞானப்பிரகாசர் காலமானார். 1950 ஆம் ஆண்டில் ஞானப்பிரகாச சுவாமிகளின் வரலாற்றை எழுதித் தந்தால் அதனை இலவசமாகத் தமிழ்நாட்டில் பதிப்பித்துத் தருவேன் என்று தனிநாயகம் அடிகளார் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனை யாரும் செய்ய முன்வந்ததாகத் தெரியவில்லை. உங்கள் கட்டளையை ஏற்று ஞானப்பிரகாசருடைய வரலாற்றுப் பதிப்பை செய்து முடிக்க வேண்டும் என்று 1950 ஆம் ஆண்டில் இருந்தே நெஞ்சே நினை என்ற நூலை எழுத ஆரம்பித்தேன். அது 1975 ஆம் ஆண்டில் நிறைவேறியது. நெஞ்சே நினை என்ற நூலினை எழுதியதன் மூலம் நான் சேவியர் தனிநாயகம் அடிகளாரின் விருப்பத்தையே நிறைவு செய்தேன்" என்கிறார் புலவர் இளவாலை அமுது அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. அமுதுவின் கவிதைகள் - ஒரு பார்வை

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை.
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை.

(இளங்கோவும் கம்பனும் என்ற கட்டுரை)

இலக்கியக் கருவூலம் என்ற பேராசிரியர் சொக்கன் அவர்களுடைய நூலில் இருந்து இளங்கோவும் கம்பனும் என்ற கட்டுரையைப் படித்தேன். அதில் ஒரு செய்தியை முதன்முதலில் அறிந்தேன். அதாவது வித்துவான் வேந்தனார் அவர்கள் எல்லாக் காப்பியங்களிலும் தலைசிறந்த காப்பியம் சிலப்பதிகாரமே என்று ஈழகேசரியில் வெளியிட்ட செய்தியைப் படித்தபோது எனக்குள்ளே ஏதோ ஓர் இனம்புரியாத ஆதங்கம். ஆனால் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் இந்தக் கருத்தில் மிகுந்த கோபங்கொண்டிருந்தார் என்ற செய்தியையும் அறிந்திருந்தேன். இந்த இரு பெருங் காவியங்களின் வேறுபாடுகளையும் சிறப்பினையும் சீர்தூக்கி அறிந்துகொள்வதற்காக மதுரகவி இளவாலை அமுது அவர்களிடம் சென்றேன். இந்தக் கட்டுரையையும் படித்துக் காட்டினேன். இந்தக் கட்டுரையைக் கேட்டு பரவசம் அடைந்த அமுது அவர்கள் அக்காலத்தில் பல இலக்கிய அறிஞர்களின் கருத்துக்குக் களமாக இருந்த ஈழகேசரிப் பத்திரிகை யின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் முதலில் விளக்கினார். அதன் பின்பு ஏதோவொன்றைத் தான் எழுதிய கவிதைத் தொகுதி யிலிருந்து தேடி எடுத்து வந்து தம்பி இதனை இராகத்தோடு படியும் என்றார். முதன்முதலில் நான் படித்த அமுதுவின் பாடல் இதுதான்.

"காவியப் பூ வாவியிலே யாழ்ப்பாண
அன்னமெனக் கண்டோர் சொல்வார்
நாவலரின் பரம்பரையின் நற்றமிழைக்
கற்றுணர்ந்து நாட்டுக்கீந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலென வாழ்ந்தவனே! பண்டிதர்கள்
தாய்மடியே புலமை சான்றோன்
ஆவியெனப் போற்றிடவே அருநிதியம்
அளித்தவனே அமிழ்தே சென்றாய்!"

என்பது அந்தப் பாடல். இந்தப் பாடல் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவையொட்டி அமுதுப் புலவர் பாடிய பாடல். இந்தப் பாடலை இரண்டு மூன்று தடவை மீண்டும் மீண்டும் படித்தேன். அந்தப் பாடல் என் நெஞ்சினிலே ஒட்டிக்கொண்டது. பண்டிதர்கள் தாய்மடியே என்ற உவமைப்பாடு என் எண்ணத்தில் எழுந்த எத்தனையோ கேள்விகளுக்கு விடையாக அமைந்தது.

புலவர் இளவாலை அமுது அவர்கள் மாணவனாக இருந்த பருவத்தில் கற்பனா சக்தியையும் கவிதை எழுதும் சுபாவத்தையும் வளர்த்துக் கொண்டவர். இவர் ஆசிரியராகப் பணிபுரியும் முன்னதாக பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டு தனது கல்வி ஆற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்க்க முற்பட்டவர். பின்னர் ஆசிரிய கலாசாலையில் அவர் வித்துவான் இளமுருகனார் வழிகாட்டலாலும் காவியப் பாடசாலையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கியப் பயிற்சியும் நயப்புரையும் மேலும் பண்டித வகுப்பில் வித்துவான் வேந்தனார், வித்துவான் நடராஜா போன்ற அறிஞர்கள் வளர்ப்பிலும் செழிப்பாக வளர்ந்து தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டவர். பண்டித வகுப்பில் மாணவனாக இருந்தபோது தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவர் அவர்களுடைய மறைவையொட்டி புலவர் அமுது அவர்கள் எழுதிய பாடல் ஒன்று தினகரன் பத்திரிகையில் வெளியானபோது பண்டித வகுப்பில் வந்து வித்துவான் வேந்தனார் அவர்களே அமுதுவின் புலமையைப் பாராட்டினார். இவ்வண்ணம் அவரின் இளமைப் பருவம் யாழ்ப்பாணத்தில் வரலாறு படைத்த ஆசான்களின் வழிகாட்டலில் இணைந்திருப்பதனை அவருடைய வாய்மொழியும் வரலாறும் எமக்குக் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதன்முதலாக நான் இளவாலை அமுது அவர்களை சந்தித்தது ஒரு இலக்கிய மேடையில்தான். மடுமாதா காவியம் வெளியீட்டு நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடந்தவேளையில் அந்த நூலினை ஆய்வு செய்வதற்கு ஒருவர் தேவை என்று அமுதுப் புலவர் எதிர்பார்த்தபோது புதினம் ஆசிரியர் அன்புக்குரிய இராஜகோபால் அவர்கள் என்னை அமுதுப் புலவரிடம் அறிமுகம் செய்து வைத்திருந்தார். குறித்தபடி எனது நூல் ஆய்வும் இடம்பெற்றது.

அந்த மேடையில் எனக்கும் அமுதுப் புலவருக்கும் இடையில் ஏற்பட்ட பிதா மகன் உறவு அவரைக் கல்லறைக்குக் கொண்டு சென்று வழி அனுப்பி வைக்கும் வரை தொடர்ந்தது. இளவாலை அமுது அவர்களிடம் பழகிய எனது வாழ்நாட்களில் அவரிடம் நான் கண்டுகொண்ட புதுமைகள் எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பது, எம் மக்கள் விடிவை நோக்கி எழுதிக் கொண்டேயிருப்பது, ஒரு பொழுதும் வீணே செல்ல இடம்கொடுக்காதிருப்பது. எப்பொழுதும் மலர்ந்த முகம், இனியசொல், தெளிந்த சித்தம் - இதுதான் அமுது.

இளவாலை அமுதுப் புலவர் அவர்கள் ஈழநாட்டுக் கல்விமான்களின் பரிச்சயங்கள் மட்டுமன்றி மூதறிஞர் ராஜாஜி, அமரர் கல்கி, திரு. வி.க, ரா.பி.சேதுப்பிள்ளை, இரசிகமணி, டி.கே.சிதம்பரநாத முதலியார் போன்ற தலைசிறந்த பெரியோர்களின் எழுத்து நடை, கவிதை நயம் என்பவற்றில் முற்றுமுழுதாகத் தன்னைப் பறிகொடுத்ததோடு அவர்களைப்போல் தானும் எழுதவேண்டும், பேர் எடுக்கவேண்டும் என்று தன்னைத்தானே பயிற்சியில் ஈடுபடுத்தியிருக்கின்றார். புலவர் அமுதுவிடம் நானும் நண்பர் பாஸ்கரனும் சென்று இரண்டு மூன்று மணிகள் பேசி வருவோம். அவரிடமிருந்து பிறக்கின்ற சொற்கள் பேச்சிலும் சரி கவிதையிலும் சரி ஒரு பூக்கூடையிலிருந்து பூக்கள் சொரிவதைப் போல்தான் இருக்கும். இந்தச் சிறப்புக்கு இன்னுமொரு காரணம் இருக்கின்றது. புலவர் இளவாலை அமுது அவர்கள் இரு தளத்திலிருந்து உருவாக்கப்பட்டவர். ஒன்று யாழ்ப்பாணப் பண்டிதர்கள் தாய்மடி. மற்றொன்று யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த துறவிகளின் அரவணைப்பு. சுவாமி நல்லூர் ஞானப்பிரகாசர், பீதுருப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், தனிநாயகம் அடிகள் போன்ற பெருந் துறவிகளின் பட்டறையில் பட்டை தீட்டப்பட்.ட வைரம் என்று கூறலாம்.

புலவர் அமுது அவர்களிடம் நானும் நண்பரும் சென்று வரும் நாட்களில் கவியரசர் கண்ணதாசன் அவர்களுடைய பாடல்கள், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய பாடல்கள், கவிஞர் வாலி அவர்களுடைய தத்துவப் பாடல்கள், கவிஞர் வைரமுத்து அவர்களுடைய கவிதைக்கனிகள் என்பவற்றில் அவருக்கிருந்த ஈடுபாட்டை நான் கண்டு வியப்படைந்திருக்கின்றேன். இளவாலை அமுதுப் புலவர் அவர்கள் ஒரு மரபு சார்ந்த கவிஞனாக இருந்ததனால் கண்ணதாசனின் மரபுக் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடும் மதிப்பும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். இனி அமுதுவின் கவிதைகளை எடுத்து ஒப்புநோக்க வேண்டியது இங்கு பொருத்தமானது.

அமுதுவின் கவிதைகளை எடுத்து ஆராய்கின்றபோது அந்தக் கவிஞன் கவிதை மரபினைப் போற்றுகின்ற பண்பு, அந்தக் கவிஞனின் உணர்வு, அதை வெளிப்படுத்துகின்ற கற்பனை ஆற்றல், அதிலிருந்து வெளிப்படுகின்ற ஒவ்வொரு கருவூலங்களும் எத்தகைய இனிமையான உருக்கத்தைத் தருகின்றன என்பதனை அமுதுவின் ஒவ்வொரு பாடல்வரிகளும் துல்லியமாக விளக்கி நிற்கும். கவிதைகளை எடுத்து ஒப்புநோக்குவதற்கு முன்பாக அவர் கையாளுகின்ற சொல்நடை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு காட்சியை அவர் வெளிப்படுத்துவதில் அவர் கையாளுகின்ற சொல்லின் உருக்கத்தை அறிந்துகொள்வதற்கு இளவாலையிலிருந்து அமுதுப் புலவர் அவர்கள் இலண்டனுக்குப் புறப்பட்ட அந்தக் காட்சியை அவர் எடுத்துச் சொன்ன முறையை அவருடைய சொல்நடையில் பார்ப்பது மிகச் சிறப்பானது.

"முற்றத்து எலுமிச்சையில் பழுத்துவிழுந்து கிடந்த மூன்று நான்கு எலுமிச்சம் பழங்களைப் பொறிக்கி எடுக்கும்போது துயரம் நெஞ்சைப் புடுங்கியது. இளந்தென்றல் காற்று வீசி என் சோகத்தைத் துடைத்தது. பக்கத்தில் நின்ற கறுத்தக்கொழும்பு மாமரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலைகள் என்னைப் பார்த்து சடக்சடக் என்று மார்பில் அடித்துக் கொண்டன. வாசலில் நின்ற செவ்விளநீர் மரத்து தென்னோலைகள் கைகளை நீட்டி பிரியாவிடை கூறின. என் வாழ்க்கைத் துணைவி பிறந்து தவழ்ந்து வளர்ந்த இளவாலைச் செம்மண் அவள் காலடியில் மட்டுமல்ல எங்கள் உடம்பிலும் ஒட்டிக்கொண்டது. பெற்ற தாயை இளங்குழந்தை பிரிவதுபோல அந்த மண்ணைப் பிரியும்போது வேதனையில் என் மனைவியின் கண்கள் துயரத்தைத் தோய்த்துப் பிழிந்தன.

பயணப்பெட்டியை வாகனத்தில் ஏற்றுகின்றார்கள். யன்னல்களை யாரோ சாற்றினார்கள். அந்த நிலையில் என் இருதயம் இருந்த நிலை எனக்குத்தான் தெரியும். கைகேயி வரம் கேட்டபோது அதிர்ந்துபோன தசரதன் முகம்போல எனது புத்தக அலுமாரி நாங்கள் அனாதையாகிவிட்டோம் என்று புலம்பியது. இறுதியாக என் வீட்டின் எல்லாப்புறங்களையும் தொட்டு முத்தமிட்டேன். இரத்தம் சிந்தியல்லவா நானும் மனைவியும் அந்த வீட்டைக் கட்டினோம். வீட்டில் எந்த இடத்தில் ஒரு கல்லைப் புரட்டி எடுத்தாலும் அது எங்கள் பெயரைச் சொல்லி பெருமூச்சுவிடும். என் கண்களிலிருந்து வழிகின்ற நீரை மனைவிக்குக் கூடக் காட்டாமல் அந்த மண்ணைவிட்டுப் புறப்பட்டேன். என் சமுதாயத்திற்கும் என் அன்னைமொழிக்கும் பணிசெய்ய வேண்டும் என்ற ஆவல் சிம்மாசனம் இட்டிருந்தது. தாயகம் நெருப்பு நீரில் நீந்தியது. நான் இலண்டன் வந்து சேர்ந்தேன். சோகமும் வீரமும் துயரமும் வெற்றியும் கலக்காமல் ஒரு இலக்கியம் பிறக்காது. நான் மரபுக்கவிதையைத் தெரிந்துகொண்டவன். பல ஆயிரம் ஆண்டுகள் வேர்விட்ட விருட்சம் அது."

இதுவே அமுதுவின் வாசகங்கள். இந்த அமுதுவின் வார்த்தை வரிகள் மரபுக்கவிதைகள் மீது அவருக்கிருந்த மதிப்பும் ஈடுபாடும் அவருடைய சொல் அடுக்கும் இயல்பாக இருக்கின்ற கவிதை உணர்வையும் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன. தன்னை மறந்து ஆடுகின்ற ஒரு கலைஞனின் ஆட்டத்தில்தான் சகல சாஸ்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் நிறைந்திருக்கும் என்ற கொள்கையில் பற்றுக்கொண்டவர் இளவாலை அமுது அவர்கள்.

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை - தஞ்சமென
வையமெல்லாம் காக்கும் மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு.

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணில் சுடர்கின்ற மீனையெல்லாம் - பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்தது காண் நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு.

என்ற பாரதியின் வழிகாட்டலைத்தான் தன் வாழ்வில் முற்று முழுதாக ஏற்றுக்கொண்டவராக இளவாலை அமுது அவர்களை நான் பார்க்கின்றேன். உண்மை அன்பு சொல்லில் மட்டுமல்ல அது செயலின் வெளிப்பாடே என்பதனை உணர்த்தியவர் அமுது அவர்கள்.

பாரதியின் கொள்கையில் பற்றுடையவராக இருந்து கொண்டே தன் கவிதை உணர்வுகளை வளர்த்துச் சென்றவர்தான் இந்தக் கவிஞர். "கவிஞர்கள் என்றென்றும் கவிஞர்கள்" - ஒரு கவிஞனின் உள்ளக்கிடக்கையை இன்னோர் கவிஞன் ஆத்மரீதியாக உணர்ந்து அனுபவிக்கின்றான். இதற்கு இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாருடைய அற்புதமான உதாரணம் ஒன்றைக் கூறவிழைகின்றேன். இந்த விளக்கம் எந்தக் கவிஞர்களுக்கும் பொருத்தமான ஒன்றே. உதாரணமாக மகாகவி பாரதி அவர்கள் பல ஆங்கிலக் கவிதைகளைப் படித்து இரசித்து அதன் பாவங்களை உள்வாங்கிக் கொண்டவர். அப்படி அவர் அனுபவித்த விடயங்களை வெளிப்படையாகச் சொல்கின்ற ஒரு தன்மையை அவருடைய கவிதையில் காணமுடியும் என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு.

ஆங்கிலப் பெரும்புலவர் டெனிஸ் என்பவர் மிகப் பிரபல்யம் வாய்ந்தவர். நெடுநாட்களாக அரசாங்கத்தின் சமஸ்தான புலவராகவும் விளங்கியவர். அவருடைய கவிதைகளில் பாரதி விரும்பி இரசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறந்த கவிதையொன்றிலிருந்து அவர் உள்வாங்கிய அனுபவங்களைப் பாரதியுடைய கவிதையில் வெளிப்படுவதைக் காணலாம். இந்தக் கவிதை கவிஞர் டெனிஸ் அவர்களுடைய நண்பர் ஒருவர் இறந்தபோது அவருடைய பிரிவிற்காகப் பாடப்பட்டது. நண்பர் இறந்தபோது அவருடைய பிரிவு கவிஞரை நன்றாகப் பாதித்திருந்தது. அந்தத் துன்பத்தின் மிகுதியில் பாடிய பாடலே பாரதியை மிகவும் கவர்ந்தது. இது சரமக்கோவை என்று சொல்லப்படுகின்றது.

ஒரு மனிதனுக்கு துன்பம் நிகழ்கின்ற பொழுது அதனோடு சேர்ந்து பல துயரங்கள் இணைந்துவிடுகின்றன. ஒருவன் ஒன்றை எண்ணி அழுகின்றபோது அந்த அழுகையில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் ஒருங்கிணைந்துவிடுகின்றன. நண்பனுடைய இழப்பினால் கவிஞரை பல துன்பங்கள் கவ்விக்கொள்கின்றன. இத்தகைய துன்பங்கள் கவிஞனைத் தாக்கிய நேரம் வருடத்தின் இறுதிநாளான மார்கழி 31 ஆம் திகதி பன்னிரண்டு மணி ஆகும். பொதுவாக மார்கழி 31 ஆம் திகதி இரவு பன்னிரண்டு மணி என்றால் புதிய வருடத்தின் பிறப்பைக் குறிப்பதற்காக இங்கிலாந்து தேசத்திலுள்ள தேவாலயங்களில் மணி அடிப்பது உண்டு. இப்படிப் பல கோயில் களிலிருந்து மணியடித்து குளிர் அனைத்தையும் விரட்டியடித்துக்கொண்டு இருந்தது. இந்த மணியோசை கவிஞனுக்குக் கூறிய செய்திதான் என்ன?

ஐயா, மக்கள் எல்லோரும் துயரத்திற்கு ஆளாகி இருக்கின்றார்களே, விமோசனத்திற்கு இடமில்லாமல் அவர்களின் அறிவு எவ்வளவு தூரம் மங்கிப்போய்க் கிடக்கின்றது. கழிந்துபோகின்ற இந்த வருடத்துடன் எம்மைப் பிடித்திருக்கின்ற துன்பங்கள் தொலைந்துபோய் ஆனந்தமும் அறிவும் புதிய வருடத்திலே தலையெடுக்கக் கூடாதா? என்று கவிஞர் நெஞ்சில் புதியதோர் உணர்ச்சியைத் தோற்றுவிக்க, அந்த மணியின் ஓசை கவிஞனின் காதில் அவ்வாறு நாதத்தை எழுப்பிக்கொண்டே இருக்கக் கவிதைகள் பிறக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ கண்டா மணிகளே முழங்குங்கள்
உங்கள் முழக்கம் வானத்தை எட்டவேண்டும்
அங்கு துன்பத்தின் சாயலான மேகம் ஓடுகின்றது

விண்மீன்களின் ஒளிகூட மங்கிய வண்ணமாகக் காணப்படுகின்றது. இந்த மேகமும் விண்மீன்களும் ஒளியும் வண்ணம் கண்டாமணிகளே முழங்குங்கள். இந்த நள்ளிரவோடு பழைய ஆண்டானது சாகப் போகின்றது. அத்துடன் அவைகளும் ஒன்றாகச் சாகும்படி கண்டா மணிகளே முழங்குங்கள். அந்தப் பாடலின் சாராம்சம் இதுதான்.

பழையன கழிய முழங்குங்கள்
புதியன புகவும் முழங்குங்கள்.

இதயத்தை உறையச் செய்யும் உறைபனி ஒழியவேண்டும். பழைய ஆண்டு ஒழியட்டும். பொய் போகவும் பொய் அல்லாத மெய் வரவும் முழங்குங்கள்.

வறுமையும் துயரமும் பாவமும் ஒழிக
அன்பின்மையும் இரக்கமின்மையும் ஒழிக
துயர்கொண்ட என் புன்கவி ஒழிக
இன்பமயமான உயர் கவி வருக
முழங்குங்கள் கண்டாமணிகளே.
பூர்வமாக வந்துள்ள ஆயிரக்கணக்கான சச்சரவும் போரும் ஒழிக
அன்பும் அமைதியும் நிறைந்த ஆண்டாய்
ஆயிரம் ஆயிரம் வருக கண்டாமணிகளே
முழங்குங்கள் முழங்குங்கள் முழங்குங்கள்.

இந்தக் கவிஞனின் சோகம் எப்படியோ பாரதியின் உள்ளத்தில் ஓர் ஆங்காரத்தை உண்டு பண்ணிவிட்டது. அவையெல்லாம் தமிழ்ச் செய்யுள் ஆக உருவெடுத்தது. நாட்டின் கீழான தன்மைகள் ஒழிய வேண்டும் என்றே அந்தக் கண்டாமணி போல் முழக்கம் இடுகின்றான் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையற்ற தோளினாய் போ போ போ
பொலிவில்லா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியினாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ

வேறுவேறு பாசைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய்
போ போ போ

இது பாரதியின் முழக்கங்கள்.

புதிய வருடம் பிறக்கின்றது. இனி நல்ல காலம் தான். அன்பும் அருமையும் குழைத்து பாரதி புதியதொரு தாண்டவம் ஆடிக் காட்டுகின்றான். எதனையெல்லாம் போ போ என்று சொல்லி விரட்டினானோ இனி புதிய பாரதம் படைக்கும் சக்தியை வரவழைக் கின்றான்.

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

என்று பாடும் பாரதி, பொய்யான நூல்களை அக்கினிக்கு இரை யாக்க வேண்டும், நல்ல நூல்களைத் தேடிக் கற்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றான். இந்தத் தன்மை உலகக் கவிஞர்களின் சிந்தனைப் போக்குகளில் உண்டான தொடர்பாடல்களை எடுத்துக் காட்டுகின்றது.

கவிஞர் இளவாலை அமுது அவர்களின் கவிதைகளை நாம் எடுத்து ஆழமாக நோக்குகின்றபோது ஒரு பாரதி, ஒரு பாரதிதாசன், ஒரு கண்ணதாசன் போன்ற கவிஞர்களுடைய செழுமை, இனிமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மரபுபேணும் தன்மை என்பன செறிந்திருப்பதனைக் காணலாம். இந்த வகையில் அமுதுவின் சில கவிதைகளை எடுத்து நோக்குதல் சிறப்பானது. அமுதுவின் கவிதைத் தொகுதியில் 'உலகம் வாழ்க' என்ற தலைப்பில் இவ்வாறு பாடுகின்றார்.

"நீர் கொண்டு மேகம் பெய்க!
நில மெல்லாம் பசுமை பொங்க!
சீர் கொண்ட அரசு மக்கள்
சிறப்புற அமைதி காக்க!
நேர்கொண்ட அறங்கள் ஓங்க!
நெஞ்சிலே மனித நேயம்
வேர் கொண்டு வாழ்க தெய்வ
விளக்கினால் உலகம் வாழ்க!"

தாயகத்திலிருந்து இலண்டனுக்கு வந்தபொழுது அவருள்ளம் விழைந்தது தாய்மொழிக்கும் தாய்நிலத்திற்கும் தன்னலமற்ற தொண்டு செய்ய வேண்டும் என்ற ஒன்றுதான். குறிப்பாக நான் மரபுக் கவிதையைத் தெரிந்துகொண்டவன். பல ஆயிரம் ஆண்டுகள் வேர்விட்ட விருட்சமது என்று கூறிய மரபிலக்கணம் பேணும் தன்மையையே இந்தப் பாடல் உணர்த்துகின்றது. உலகெலாம் உணர்ந்து என்று சேக்கிழாரும், உலகம் யாவையும் என்று கம்பன் பாடுவதையும், வான்முகில் வழாது பெய்க என்ற வாழ்த்தையும் அமுது அவர்களுடைய தரிசனங்களாகக் காணமுடிகின்றது. இவருடைய காவிய மரபினைப் போற்றும் பண்பினை மடுமாதா காவியம் என்ற இன்னுமொரு அங்கத்தில் நோக்கலாம்.

பல ஈழத் தமிழ் கவிஞர்கள் தமிழ் அன்னைக்கு பாமாலை சூட்டியிருக்கின்றார்கள். இன எழுச்சியுடன் மொழி உணர்வையும் கொண்ட காலத்தால் அழியாத கவிஞர்கள் ஈழப்பூமியிலே வாழ்ந்து பல அற்புதப் பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்க வேண்டும்
ஓடையிலே எம் சாம்பர் கரையும்போது
ஒண்டமிழே சலசலத்து ஓய வேண்டும்.

- (மட்டக்களப்பு இராசபாரதி)

என்று சந்தத்தோடு தமிழால் தமிழே உயிரினும் உயர்ந்ததுவெனும் சத்தோடு கவிபுனையும் ஈழநாட்டுக் கவிஞர்தம் மரபிலே, மொழி உணர்வுமிக்க பாடல்களை எல்லாம் இளவாலை அமுது அவர்கள் வடித்திருக்கின்றார். இங்கே அமுது அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலொன்று:

"சிறப்பறிவோம் பிறப்பறியோம் தேன்தமிழின் தாயே
திருமார்பில் சிற்றிடையில் கை காலில் காதில்
முறைப்படியே காப்பியங்கள் அணிசெய்யும் அரசி
முத்தணிந்த பொன்னாடை போர்த்துவிட்டார் கம்பர்
நிறைகுடமாய் நீ வாழ வள்ளுவனார் முப்பால்
நெற்றியிலே பொட்டிட்டான் பாரதியும் பின்னர்
துறைகடந்த முத்தமிழன் கடல் கண்ணதாசன்
துலங்குமொரு கணையாழி சூட்டிவிட் டாரம்மா."

தமிழ்த்தாய் பற்றிய புலவர் அமுது அவர்களுடைய இந்தப் பாடல் தமிழுக்கு அணிசெய்த கவிஞர்களை அணிசெய்து காட்டுவதுடன் அவர் நெஞ்சினிலே குடிகொண்ட உயர்ந்த கவிஞர் களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்ற தன்மையையும் காணலாம். முறைப்படி காப்பியங்கள் அணிசெய்யும் அரசி என்று அவர் கோடிட்டுக் காட்டி இங்கே ஒரு கவிஞர் பரம்பரையையே காட்டுகின்றார்.

இதனைத்தான் பாரதி,

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் - பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லை ஒன்றின்மை என்னும் பொருளதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் குறிகளால் காட்ட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச்
சாதியை யமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்

தமிழ்க் கவிதை வரலாற்றில் புலவர்கள் காதலைப் பாடினார்கள், வீரத்தைப் பாடினார்கள், மக்கள் வாழ்க்கையின் அவலங்களைப் பாடினார்கள், போர் நெறிமுறைகளைப் பாடினார்கள், மக்கள் விடிவுகாலம் நோக்கிப் பாடியிருக்கின்றார்கள்.

இந்த வகையில் ஈழத்தமிழ் மக்கள் அவலநிலை கண்டு அதனை நினைந்து நினைந்து அழுது அழுது அவர் பாடிய பாடல்கள் என்றென்றும் வரலாற்றில் நின்று நிலைக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. நம் ஈழத்தேசத்தில் போரினால் மக்கள் வீடிழந்து தமக்கிருக்கக் கூடிய கதி எல்லாவற்றையும் இழந்து செல்லுமிடமும் தெரியாது தூரம் தூரமாக ஓடுகின்றபோது, அவற்றையெல்லாம் பார்த்துப் பொறுக்கமுடியாமல் கவிஞர் உள்ளத்தில் எரிமலை என எழுந்த கவிதைகள்.

துடித்திடுமாறு ஈழமே உனக்கு
துன்பத்தின் கிண்ணத்தை எடுத்துக்
குடித்திடுமாறு கொடுத்தனர் பகைவர்கள் - என்றும்
வலையிலே பட்ட மான்களைப் போல
மக்களோ அனைவரும் சிக்க
நிலையிலாப் பஞ்சம் பட்டினி நெருப்பில்
நிறுத்தினர் - நீதியைப் புதைத்தனர்
சிலுவையில் உன்னைப் புதைத்தனர்
ஆனால் தெய்வமாய் நீ உயிர்த் தெழுவாய்

என்று பாடிய அந்த வரிகள் மக்களின் அவலங்களையும் அவர்கள் படுகின்ற வேதனைகளையும் விளக்குவனவாகும். மேலும் மக்கள் நிலையை அவர் எண்ணியெண்ணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலே நெருப்பின் வாடையே மணக்கும்
வழியெல்லாம் இறந்தவர் ஓலம்
கண்ணிலே தகர்ந்த வீடுகள் கோயில்
கற்சுவர்க் குவியல்கள் தெரியும்
விண்ணிலே இருந்து குண்டுகள் மாரி
விரிகடற் கப்பலின் முழக்கம் என்றும்

மருந்துமே யில்லை வாகனம் இல்லை
வைத்திய வாய்ப்புகள் இல்லை
அருந்திட உணவோ ஆறுதற்கிடமோ
அகன்றிட ஊர்களோ இல்லை
வருந்திடும் வேளை வங்கியிற் பணமோ
வழங்கிடும் ஊதியம் இல்லை
பெருந்துகில் அடைய பேரிடர்க் குண்டோ
பெய்குவார் பிணங்களைத் தின்பார்.
ஐயகோ இவற்றை யாருக்கு எடுத்துரைப்போம்

என்ற வரிகள் நாட்டு மக்களிடத்திலே கவிஞனுக்கு இயல்பாக இருக்கக்கூடிய இதயக் குமுறலை எடுத்துக்காட்டுவனவாய் அமை கின்றன.

எந்தவொரு கவிஞனுக்கும் தான் வாழ்கின்ற சமுதாயத்தைப் பாதிக்கின்ற சீர்கேடுகளை துன்பங்களைத் துடைத்து எறிய வேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றுவது இயல்பானதே. இந்த வகையில் சமூகத்தைச் சீரழிக்கக் கூடிய செயல்களை அவர் சாடுகின்ற கவிதை களை இங்கே இனங்கண்டு மகிழ்ந்து கொள்ளலாம். குடிப்பதனால் வருகின்ற கேடு பற்றி கவிஞர் சிந்திக்கின்றபொழுது, ஐயோ! இவற்றை யாருக்கு எடுத்துரைப்போம் என்பார். நாட்டு மக்களிடத்திலே கவிஞனுக்கு இயல்பாக இருக்கக்கூடிய இதயக் குமுறலை இந்தப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

குடித்திடக் கவலை தீரும்
குறைகளும் போகுமென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தெழும் நெருப்பை நூர்க்க
விரும்பியார் நெய்யை வார்ப்பார்.
உழைப்பினை அழிக்கும் - கால்கள்
ஊரிலே திரிய வைக்கும்
களைப்பினைக் கொடுக்கும் - வீட்டில்
கத்திடும் சத்தம் போடும்
குலத்தினில் பிறந்த பெண்கள் பயத்தினால்
குன்றி நிற்பார்
நலத்தையும் இழப்பீர்
நஞ்சுச் சாராயம் நாவிலூற்ற
ஈரலும் எரிந்து நல்ல இரத்தம் வற்றி
வாழ்வின் நேரமும் முடிந்துபோகும்
என்றும் மனைவியை நினையான்
பெற்ற மக்களை எண்ணான் - வீட்டில்
அனைவரும் தன்னைத் தூற்றும் அடிப்படை உணரான்.

இவ்வாறு அவர் எண்ணத்தில் இருந்து வருகின்ற கவிதைகள் எல்லாம் எங்கோவொரு புலமை சார்ந்தனவாகவே தென்படுகின்றன. ஔவையார் அவர்கள் கூறுகின்ற "மானம் அழிந்து மதிகெட்டு சென்ற திசை யார்க்கும் கள்வராய் நல்லார்க்கும் பொல்லானாம் நாடு" என்ற கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மக்கள் சமுதாயத்தினை நோக்கி இரக்க சிந்தனையுடன் பாடி ஈழநாடு பத்திரிகையின் முதற்பரிசு பெற்ற இரத்ததானப் பாடலொன்று.

முல்லைக்குத் தேரைக் கொடுத்தவன் யார் - மயில்
மூடிடப் போர்வை கொடுத்தவன் யார்
இல்லை யென்பார்க்குத் தன் நாடு நகரையும்
ஈர்ந்தவர்கள் தமிழ் வேந்தர ன்றோ.

கோடான கோடி கொடுப்பினும் தேட முடியாத
குற்றுயிருக்கு உற்ற துணை புரிவீர்.
வீர குலத்தில் பிறந்தவரே – துயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்கும் பணியில் சிறந்தவரே
ஊரில் துடிக்கும் உயிர்களுக்குக் - கொஞ்சம்
உங்கள் இரத்தம் கொடுத்து உதவும்.

இந்த வரிகளைப் பாடுகின்றபொழுதெல்லாம் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள், தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்கள் எங்கள் இதயத்திலே வந்து தாளம்போடுவதனை உய்த்துணர முடிகின்றதல்லவா?.

ஈழநாட்டின் புகழை தமிழ்கூறும் நல்லுலகம் எல்லாம் அறியச் செய்த சான்றோர்களையும் அவர்களின் சிறப்பினைப் பாடுவதிலும் இளவாலை அமுது அவர்கள் முன்னிற்கத் தவறவில்லை. ஈழ நல்லூர் ஆறுமுகநாவலர் பற்றிய அமுதுவின் பாடலொன்றை இங்கே பார்க்கலாம்.

சொல்லின் தெளிவிற்கு வள்ளுவர் என்பார்
தூய நூல் அமைப்பதிலே யார் அவர்க்கு நிகரோ
நல்லிதயம் அறிந்தவர்கள் காந்தி இவரென்பார்
நற்றமிழ் வாழ்வினிலே பற்றுடைய குமணன்
எல்லையில்லாக் குறை தீர்த்த சாத்தனவன் நெஞ்சம்
இளங்கோவின் துறவுநிலை கனிவிற்கோர் ஔவை
நல்லை நகர் ஆறுமுகநாவலனார் எங்கள்
நாட்டுக்கோர் தவப் புதல்வன் நம் நெஞ்சினில் வாழ்வார்.

ஈழத்திருநாட்டின் மரபுவழிவந்த தவமுனிவனை அவர் சீர்செய்து நிற்கின்ற தன்மையைப் பார்க்கலாம். தமிழ்ப் புலவர்கள் மாத்திர மன்றி அவருடைய இதயம் உலகளாவிய சமுதாயத்தை எவ்வளவு தூரம் நேசித்தது என்பதற்கு அன்னை தெரேசா மீது அவர் பாடிய பாடலொன்றை இங்கே எடுத்துக் காட்டலாம். ஆதரவற்ற மக்களின் வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்த அன்னை தெரேசா அவர்களைப் பற்றிப் புலவர் அமுதுவின் இதயத்திலிருந்து வெளிப்பட்ட கவிதைச் சாரம் இதுதான்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடும் இல்லை தெருக்களில் திண்ணையில்
வெதும்பி நொந்து இலையான்கள் புண்களில்
கூடு கட்டும் உலர்ந்த உடம்புடன்
கோலம் மாறி இருமல் சளியுடன்
வாடிக் கண்ணீர் வடிக்கும் மனிதரை
வாரித் தூக்கி அணைத்து விடுதியில்
ஓடிப் புண்கள் கழுவிப் படுக்கையில்
உறங்க வைத்திடும் ஒப்பரும் அன்னையே

என்பது அந்தப் பாடல்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு.

என்ற வள்ளுவன் குறளாக வாழ்ந்தவர் அன்னை தெரேசா அவர்கள். அப்படி ஒப்பற்ற சேவையினால் இன்று இறைதூதராகிவிட்ட அன்னை தெரேசா அவர்கள் மீது புலவர் அமுது அவர்கள் பாடிய இந்தப் பாடல் அன்னை தெரேசாவை மட்டுமல்ல சமூகத்தில் காயப்பட்ட உள்ளங்களை அவர் எவ்வளவு தூரம் நேசிக்கின்றார் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

இளவாலை அமுது அவர்களின் கவிதை நூல் வெளியீட்டு விழா இரண்டாவது தடவையாக இலண்டனில் இடம்பெற்றது. இந்த விழா அறிஞர் சிறிக்காந்தராசா அவர்களின் தலைமையில் (வித்துவான் வேலனார் மருமகன்) நடைபெற்றது. புலவர் இளவாலை அமுது அவர்கள் இதனை மிக அழகாக ஒழுங்குபடுத்தி இருந்தார். இந்த வெளியீட்டு நிகழ்ச்சிக்கு முன்னாள் வெரித்தாஸ் வானொலி அதிபர் வண. ஜெகத். கஸ்ப்பார்ராஜ் அடிகளார் பிரதம விருந்தினராக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்தார். அடிகளார் அமுதுவின் கவிதைகளை ஆய்வுரை செய்கின்ற வேளையில் பல பாடல்களை மிக இசையோடு பாடி சபையிலுள்ளவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தினார். அந்தப் பாடல்களை எப்படி எல்லாம் மனனம் செய்தார் என்று வியக்குமளவிற்கு நினைவில் நிறுத்திப்பாடி எல்லோரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ வைத்தார். கவிதை நூலைக் கையிலெடுக்காமல் இசை கூட்டிக் கவிதைகளைப் பாடிய தன்மை அமுதுப் புலவரை மாத்திரமல்ல அங்கு கூடியிருந்த அனைவரையும் பரவசமடையச் செய்தது. அன்றைய நிகழ்வில் தன் ஆய்வுரையை நிறைவு செய்யும் வேளையில் அவர் கூறியதாவது, "வரலாற்று ரீதியாக அமைந்த மரபுக் கவிதைகளை நான் படித்து வருகின்றேன். அந்த வகையில் கவியரசர் கண்ணதாசனுக்குப் பின்னதாக ஒரு மரபுக் கவிஞர் என்றால் அது இளவாலை அமுதுவாகத்தான் இருக்கமுடியும். அவருடைய கவிதைகளை நான் நேசிக்கின்றேன்" என்று கூறி முடித்தார். உண்மையில் கவிஞர் கண்ணதாசன் அவர்களிடத்திலும் அவருடைய அற்புதக் கவிதைகளிலும் இளவாலை அமுது அவர்கள் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு கண்ணதாசனுடைய பிரிவை நோக்கி இளவாலை அமுது அவர்கள் பாடிய பாடலொன்று சான்றுபகர்கின்றது.

சொற்பஞ்சம் அறியாத கம்பன் அவன் தம்பி
தொட்டாலும் கை மணக்கும் கவிதைகளின் கங்கை
அர்த்தமுள்ள இந்துமதம் இதயத்தின் இராகம்
அணியொன்றே இறைவனுக்கு அரிய புஸ்ப மாலை
கற்கண்டோ பசும்பாலோ கனியமுதோ என்னக்
கவின்யேசு காவியத்தை கடிதினிலே செய்தான்
பற்றினோடு அவன் பாடல் இசையினிலே நனைந்தோம்
பாசமுள்ளான் பிரிந்துவிட்டான் என்றிடுதல் முறையோ

இவ்வாறு புலவர் இளவாலை அமுது பாடுகின்ற வகையில் தமிழிலக்கிய வரலாற்றில் இன்பத்தேனையும் வெல்லும் பாடலுக்கு உரிமை பூண்டவன் கவியரசர் கண்ணதாசன். அவருடைய பாடல் அனுபவங்கள் ஒவ்வொன்றும் மக்கள் வாழ்வின் தீர்க்கதரிசனங்கள். வானவில்லுக்கு ஏழு வர்ணம் என்றால் உன் கவிதைகளுக்கு, உன் எண்ணங்களுக்கு ஆயிரமாயிரம் வர்ணங்கள் என்றும், இவருடைய கவிதை உள்ளம் கங்கை நதிபோல் பொங்குகின்றது என்றும், கவியரசர் கண்ணதாசன் அவர்கள் கண்ணன் கனியமுதம் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரனாகிவிட்டார். அதனால் அவருடைய கானம் சாகாவரம் பெற்றவை என்று திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கூறுவது மனங் கொள்ளத்தக்கது.

இந்த வகையில் கவியரசர் கண்ணதாசன் படைத்த இறவாப் புகழ்கொண்ட யேசு காவியம் இளவாலை அமுது அவர்களின் மடுமாதா காவியத்திற்கு ஓர் உந்துசக்தி என்றே கூறலாம். தமிழுக்கு அமுது என்று பெயர் என்று பாடி வைத்தார் பாட்டரசர் புரட்சிக் கவி பாரதிதாசன். அந்தச் செம்மை சார்ந்த கவிதை வரிகளை நினைக்கும்போது அருங்கவிஞர் அமுதுப் புலவர் அவர்கள் எம் நெஞ்சினிலே தோன்றுவார்.

குன்றாத சொல்லும் குறையாத பொருளும் என்றென்றும் நினைந்து நினைந்து மகிழும் நகைச்சுவையும் மரபின் முதுமை தொட்டு புதுமை வரையில் தன்னுடைய கூரிய நோக்கினால் செய்யுள் படைக்கும் திறன்கொண்ட புலவர் இளவாலை அமுது அவர்கள் பெயரிலே அடைக்கலமுத்தும், செஞ்சொற்கள் என்ற பூமலர்க்கொத்தும், பொருள் கனியும் வித்தும்,உடன்பிறப்பான கவிச்சித்தும் உடையவன் அமுதுப் புலவன். அமுது என்ற பெயர் இலக்கியப் பாற்கடலில் என்றென்றும் இன்னிசை பரப்பும் என்ற கவிமணி ஞானப்பிரகாசம் அவர்களின் வாழ்த்து மொழி இங்கு நிறைவாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. மடுமாதா காவியம்

## காவியப் புலவன் இளவாலை அமுது

இலக்கியம் மனதைச் செம்மைப்படுத்துகின்றது. இலக்கியம் உள்ளத்திலே மகிழ்ச்சியைத் தருகின்றது. குறிப்பாக பக்தி இலக்கியம் ஆன்மாவை நெறிப்படுத்துகின்றது. இவ்வண்ணம் இறை இன்பத்தை ஊட்டி உள்ளத்தை நெக்குருக வைக்கும் இறவாக் காவியம் மடுமாதா காவியம். மடுமாதா காவியம் படைத்த மதுரகவி இளவாலை அமுது அவர்கள் கம்பனில் முழுமையாகத் தோய்ந்தவர். அவர் இளவயதில் இருந்து அள்ளிப்பருகிய காவியச் சுவையின் வெளிப்பாடே இந்த மடுமாதா காவியம். கம்பனுடைய கவிதைச் சிறப்பிலும் கம்பன் கண்ட தத்துவங்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட புலவர் அவர்கள் கம்பனுடைய காவியத்தின் உத்திநிலையைக் கையாண்டு மடுமாதா காவியம் என்ற அரிய படைப்பைத் தந்திருப்பதனால் இக்காவியம் மக்களுடைய உள்ளத்தில் ஒரு காவிய அந்தஸ்தைப் பெறுகின்றது. கம்பன் தன் காவியத்தில் எங்ஙனம் இராமனை முழுமுதற்பொருளாய் காட்ட முற்படுகின்றானோ அதாவது "மும்மை சால் உலகிற்கு மூலமந்திரம்" என்று கூறுகின்ற கூற்றை நெஞ்சிலே நன்றாக உள்வாங்கிக் கொண்டு இளவாலை அமுது அவர்கள் தன் நெஞ்சிலே குடிகொண்ட மடுமாதாவைப் பாடு பொருளாகக் கொண்டு மடுமாதா காவியம் படைக்கின்றார்.

"விண்ணவரும் தலைகுனியும் மருதமடுத் திருவே
வெண்ணிலவின் முகங்காண அகமளிக்கும் வடிவே
எண்ணிடவே தித்திக்கும் இனியபெயர் அமுதே
ஏழிசையில் காணாத பண்கடந்த சுவையே"

என்று தன் காவியத்தைத் தொடங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து – நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த
கம்பன் கவியே கவி

என்ற பாடலை நிரூபிக்கின்ற இன்னுமோர் குறிப்பு,

கம்பநாடன் கவிதையிற் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே

இது மாத்திரமன்றி கம்பராமாயணம் படித்த அறிஞர்கள் இக்காவியம் பற்றி பல குறிப்புக்களை வழங்கி இருக்கின்றார்கள்.

"இராமாயணம் படிக்காதவன் ஒரு கவிஞனாக மாட்டான்."
"கம்பனை அதிகம் சிந்திக்காதவன் இலக்கியச் சுவை அறியமாட்டான்."

என்ற வாசகங்கள் சிந்தனைக்குரியவை.

இந்தச் சிந்தனையின் அடிப்படையில்தான் மகாகவி பாரதியும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

என்று சிறப்பித்துப் பாடியது மனங்கொள்ளத்தக்கது. காவிய இலக்கியங்களை எல்லாம் இலகு தமிழிலே வடித்துச் சாதாரண மக்களும் இலக்கியத் தேன்சுவையை அருந்தச் செய்த கவியரசர் கண்ணதாசன் அவர்கள் கம்பனை நோக்கி,

பத்தாயிரம் கவிதை முத்தாக அள்ளி வைத்த
சத்தான கம்பனுக்கு ஈடு - இன்னும் வித்தாகவில்லை.

சீதை நடையழகும் ஸ்ரீராமன் தோளழகும்
போதை நிறைந்ததெனச் சொல்லி – எனை
போட்டான் மதுக்குடத்தில் அள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள்ளிருக்கும் கூந்தலினாள் உள்ளிருப்பாள் என்று சொல்லி
பள்ளமிடும் ராகவனின் அம்பு – அது
பாடலல்ல உண்மை என்று நம்பு.

காலமெனும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு – அது
தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு.

கம்பனென்னும் மாநதியில் கால்நதி போல் ஆவதென
நம்புகிறேன் பாட்டெழுதும் நானே – அந்த
நாயகன்தான் என்ன நினைப்பானோ.

இது கம்பனிடத்தில் அவன் கவிதாசாரத்தில் கவியரசர் கண்ணதாசனுக்கு உண்டான ஈடுபாட்டைக் காட்டுகின்றது. இந்த வகையில் மடுமாதா காவியம் என்ற பக்திச்சுவை பொங்கும் காவியம் படைத்த இளவாலை அமுது அவர்கள் கம்பனை நோக்கும் விதம் அற்புதமானது. இதற்கு முன்னுதாரணமாகப் புலவர் அமுது அவர்களின் அவையடக்கப் பாடலை நோக்கலாம்.

இலக்கணம் என்பார் எழுத்தொடு சொல்லும்
பொருளுடன் யாப்பணி அறியேன்
இலக்கியக் கடலின் கரையிலே தத்தி
இரண்டொரு அடிகளே வைத்தேன்
தலைக்கனம் உடைய தமிழறிவாளர் என்
தமிழிலே குறைகளைக் கண்டு
விலக்கிட வேண்டாம் தமிழ் மொழி தொட்ட
விரலினைச் சூப்பினேன் காப்பீர்.

இந்தப் பாடல் மடுமாதா காவியத்தின் அவையடக்கப் பாடலாக எழுந்த பாடல். இதன் ஒரு தோற்றுவாயினைக் கம்பன் காவியத்தில் பார்ப்போமானால்,

முத்தமிழ்த் துறையின் முறை நோக்கிய
உத்தமக் கவிஞர்க்கு ஒன்று உணர்த்து வென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பொறுப்பவே

என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கவிஞர்கள் எப்படி எல்லாம் ஒருமுகமாகச் சிந்திக்கின்றார்கள் என்பதனை இந்தப் பாடல் உணர்த்துகின்றது. அடுத்து வருகின்ற அமுது அவர்களுடைய காவியப் பாடல் மிகுந்த அற்புதமான கற்பனை உவமை ஆற்றலையும் காவியம் போற்றும் பண்பையும் எடுத்து விளக்குகின்றது.

பாற்கடல் நக்கும் பூனையாய் நினைந்து
பார் புகழ் காவியம் புனைந்தான்
நூற்கடல் கடந்த கம்பனே முன்னாள்
நோக்கிடில் யான் எந்தமூலை
வேர்க்கடல் ஆடும் பாற்கடல் விளிம்பில்
மிதற்குமோர் சிப்பியின்
நோக்கியே வந்த அடைக்கலம் குருவி
நொந்திட எறிந்திடல் நன்றோ?

இந்தப் பாடலில் இளவாலை அமுது அவர்கள் எடுத்துக் கையாண்ட பாற்கடல் நக்கும் பூனை என்ற சொற்றொடரை எடுத்துக் கொண்டால் இது கம்பன் கவிதையிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்ட உவமை ஒன்றே. புலவர் அமுது அவர்கள் காவிய ஆரம்பத்திலேயே கம்பனை நோக்கிக் கற்பனை செய்வது காவிய மரபினை, உயர்ந்த காவியத்தின் பண்பினைப் போற்றுகின்ற தன்மையைக் காட்டுகின்றது.

மகாகவி பாரதி அவர்கள் கம்பனுடைய சிறப்பைப் பாடுகின்ற பொழுது,

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளிதாசன் கவிதை புனைந்ததும்

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாரத தேசத்தின் பெருமைகளுக்கு எல்லாம் காரணமாக இருந்த பெரியவர்களை அறிமுகம் செய்கின்ற பொழுது கம்பனை மட்டும் அவன் செய்த காரியத்தைக் கூறாமல் கம்பன் என்றொரு மானிடன் பிறந்தான் என்ற சொற்றொடரால் கம்பனுடைய பிறப்பாலே பாரத தேசம் பெருமை பெற்றது என்பதைக் குறிப்பால் விளக்குகின்றார். அந்த உத்தமக் கவிஞனை நெஞ்சில் நிறுத்தியே இளவாலை அமுது அவர்கள் மடுமாதா காவியத்தைப் படைத்தார் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில்தான் அவர் அவையடக்கத்தில் பாற்கடல் நக்குமோர் பூனை என்று ஆரம்பிக்கின்றார்.

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் - மற்று - இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதையரோ

என்பது கம்பன் அவையடக்கப் பாடல். எனவே எல்லையற்ற இறைவன் மீது கவிஞன் கொண்ட ஒப்பற்ற அன்பின் வெளிப்பாட்டின் ஒப்புவமையை இது எடுத்துக் காட்டுகின்றது.

இனி மடுமாதா காவியத்தில் இளவாலை அமுது அவர்கள் அமைத்திருக்கும் குரு வணக்கப் பாடல் எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் பாடல் மிக முக்கியத்துவமான காவியப் பொருத்தப்பாட்டுடன் அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

பண்டித மணியாம் கணபதிப்பிள்ளை
பசுந் தமிழ்ச் சோலையில் திரிந்த
வண்டினில் ஒன்றாய் வளர்ந்தனன் அவர்தம்
வாக்கினில் அமுதம் உண்டேன்
கண்டிடச் சிரித்து கையினால் அணைத்துக்
காவிய வயல்களைக் காட்டி
பண்டைய தமிழின் சுவை பிழிந்தளித்தான்
பாவலன் குரு இளமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்தப் பாடலைப் பாடும் தோறும் இளவாலை அமுது அவர்கள் தன்னுடைய இலக்கிய ஆசான் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடத்திலும் தனது இலக்கண ஆசான் வித்துவான் இளமுருகனார் இடத்திலும் கம்பநாடன் கவிதைச்சுவையிலும் அவருக்கு உண்டான அன்பினையும் அக்கறையையும் உணர முடிகின்றது. காவியச் சுவை ஊட்டி வளர்த்த தன் ஆசான்களை மறவாது குருவணக்கத்தில் அமைத்து அவர்களைப் பாடுவது மிகுந்த காவியப் பொருத்தப்பாட்டினை விளக்குவதாக அமைகின்றது. பாடலில் வருகின்ற சொல்லணிகள், உவமையணிகள் குருவினைப் போற்றும் மரபினிலே கவிஞருக்கு இயல்பாக இருக்கின்ற ஈடுபாட்டினை உணர்த்துகின்றது.

இந்தப் பாடலின் தன்மை நோக்கிக் கம்பராமாயணத்தில் வருகின்ற,

தேவ பாடையில் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முள்ளும் - முந்திய
நாவினான் உரைப்படி நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பரோ

என்று பாடியது ஒப்புநோக்கத்தக்கது.

அமுதுப் புலவர் அவர்களின் பக்தி உணர்வின் வெளிப்பாட்டை வெளிப்படுத்துகின்ற பாடலை நோக்கும்போது,

இருந்தாலும் எழுந்தாலும் நடந்தாலும் கிடந்தாலும்
பருந்தாகப் பறந்தாலும் பாயினிலே படுத்தாலும்
அருந்தாயே உன்னினைவை ஒருகாலும் மறவாத
பெருந்தயவு தந்திடுவாய் பிறிதெதையும்யான் வேண்டேன்.

என்று பாடுவது அமுது அவர்களின் அன்பின் முதிர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும் கம்பன் நெஞ்சில் கொண்ட பரம்பொருளின் நிலையை கம்பன் குறிகளால் காட்டுகின்ற முயற்சி என்று கம்பராமாயணத்தைப் பற்றி பாரதி பாடிய பாடலின் கருக்கட்டலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுதுவின் பாடல் புலப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறு பாரதியினுடைய மதிப்பீடும் இங்கே எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பெருங்காப்பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள்
இவற்றில் ஒன்று ஏற்புடைதாகி
முன்வர இயன்று நாற்பொருள்
பயக்கும் நடைநெறித்தாகி

என்று காவிய இலக்கணம் கூறுவது போல் ஒரு முயற்சி தொடங்கப்படும் வேளை அதற்கு இடையூறுகள் ஏற்படா வண்ணம் காக்கவேண்டிய இறைவனைப் பாடுவது ஒரு மரபு. அந்த வகையில் அமுது அவர்கள்,

அடுக்கு மொழிகள் செவி
மடுக்கும் மணி முடிக்கும்
தொடுக்கும் மலர்கள் சில
பிடிக்கும் படி எடுத்தேன்
துடிக்கும் எனது நெஞ்சில்
வடிக்கும் கவிதைத் துளி
அடிக்குள் இடுக்கண் வந்தால்
தடுக்கும் படிக்கு வந்தேன்.

என்று தன் காவியத்திற்கு இடையூறுகள் வந்துவிடக்கூடாது, இனிதே நிறைவேற வேண்டும் என்று வேண்டிப் பாடுதல் வெளிப் படுகின்றது.

கண்ணீரைத் துடைத்தெறியும் கரங்களை எண்ணி –
நித்திலமே – அமைதிக்கோர்
நீரூற்றே – கனிவுள்ள
நெஞ்சே – ஞானப்
புத்தகமே – நம்பி வந்தோர்
புகலிடமே – வல்லமையின்
புயலே – பொறுமைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமே – நம்பிக்கைத்
தாரகையே - இடர் வந்தால்
தாங்கும் கையே
சித்தத்தில் வெண்புறாத்
திருமகளே – மருதமடு
செழிக்குந் தாயே.

இங்கே கவிஞனின் பக்தி வெளிப்பாட்டை மெய்ப்பித்து நிற்கும் சொல்லாட்சியும் அதனைச் சொல்லும் கற்பனைத் திறனும் எண்ணத்தில் இன்பத்தேன் ஊட்டுவதாக அமைகின்றது.

கன்னியர் மணியே போற்றி
கருணையின் கடலே போற்றி
இந் நிலம் கண்ட பெண்கள்
எவரிலும் சிறந்தாய் போற்றி
அன்னையே என்ற வாய்க்கு
அமுதினைச் சொரிவாய் போற்றி
என்னிரு கண்ணே – கண்ணுள்
இருக்கும் மாமணியே போற்றி

பக்தி இலக்கியங்களை எம்முன் நிலைநிறுத்திக் காட்டுகின்ற அமுதுப் புலவர் அவர்களின் இந்த அற்புதமான பாடல்களில் பக்தி இரசம் பொங்குவதனைக் காணலாம். அதனால்தான் பல அடியார்கள் அமுதுப் புலவரை அழைத்து உங்கள் பாடல்களைப் பாடாமல் இரவில் நாங்கள் தூங்குவதில்லை என்று அன்பு மழை பொழிந்துள்ளார்கள்.

உவமைச் சிறப்பினைக் கையாண்டு அமுதுப் புலவர் பாடிய சில பாடல்கள் முற்றுமுழுமையாகக் காவிய நயம்போற்றும் பண்புகள் நிறைந்த தன்மையைக் காட்டுகின்றது.

புண்ணிய மலர்கள் பூத்த
பூங் கொம்போ? அருளும் பண்பும்
எண்ணிடும் தூய்மை – தோய்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில் தவழ் சிற்பம் ஒன்றோ?
கண்ணினில் ஆடும் பாவை
கன்னியர் வந்தாள் கொல்லோ?
உண்மையின் வடிவம் ஈதோ
ஒப்பிலாள் உவமைக்கு ஐயோ?

இந்தப் பாடல்களை மீண்டும் மீண்டும் பாடும்போது சேக்கிழாரின் பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும் பாடல் ஒன்று என் மனக்கண்ணிலே தோன்றுகின்றது. பாடலின் சுவை நயம் நோக்கி சேக்கிழார் பெருமான் பாடல் ஒன்றைக் கூறுகின்றேன்.

கற்பகத்தின் பூங் கொம்போ காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? –புயல்சுமந்த
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ?
அற்புதமோ சிவனருளோ அறியேன்

என்று அதிசயித்தார். கவிஞர்கள் என்றென்றும் கவிஞர்கள்தான் என்பது இங்கே புலனாகின்றது.

இதுபோலவே கங்கை காண்படலத்தில் இராமன், இலக்குவன், சீதையுடன் இணைந்து சென்ற காட்சியைக் கம்பன் உணர்த்தும் அழகும் எடுத்துக்காட்ட வேண்டிய ஒன்றாகத் தென்படுகின்றது.

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையா னொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான்

இவற்றை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றபொழுது மனத்திரையிலே ஒரு கம்பன், ஒரு சேக்கிழார், ஒரு பண்டிதமணி, ஒரு அமுதுப் புலவன் ஒருவர் பின் ஒருவராக நெஞ்சில் தோன்றுவதை உணர்கின்றேன்.

பெருங்காவிய இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம் என்ற இலக்கண நூல் குறிப்பிடுவதுபோல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மலைகடல் ஆறு வளர் நகர் பருவம்
இருசுடர் தோற்றம் இன்னென புனைந்து

என்பதற்கேற்ப மடுமாதா காவியத்தின் வர்ணனைப் பாடல்கள் ஒவ்வொன்றும் எடுத்து தனித்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் பாடல் வர்ணனைகள் புலவர் இளவாலை அமுது அவர்களின் கற்பனை எழிலை மேலும் அழகுபடுத்திக் காட்டுவனவாக அமைகின்றது.

மாணிக்க தீ வாள் இலங்கையாம் மாது
மாங்கனி வடிவமாய் அமைந்தாள்
கூனியே போனாள் மடுவினை வணங்கிக்
குறையிலாப் பதியெனும் மன்னார்
வாணியாய் விளங்கும் மாதர்கள் அரசி
மடுவிலே வாழ்ந்திடும் செல்வி
காணவே என்று நீ கடிதினில் வந்தாய்
கையினில் மாலைகள் கொணர்ந்தாய்.

கங்கையாம் ஆறு இமயத்தை வாரிக்
குடைந்திடும் மணிகளை ஒதுக்க
வங்கத்துக் கடலில் வந்தவை குவிந்து
வரிசையாய்த் தலைமன்னார் வருமே.
இங்குள களனி ஆறொடு வளவ
கங்கையும் இரத்தினம் கொணர்ந்து
சங்கின் முத்தோடு நவநிதி சேர்க்கும்
தவக்கடல் திருமன்னார்த் தலமே.

இந்தப் பாடல்கள் காவிய இலக்கண மரபு முறை பிறளாது நாட்டின் நதி வர்ணனையைக் கடல் வர்ணனைகளைப் பாடுவதாக அமைகின்றது.

ஒரு கவிஞனுடைய திறனை அவன் வெளிப்படுத்துகின்ற எண்ணக் கருக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே உலகம் மதிப்பிடு கின்றது. இந்த வகையில் ஒரு கவிஞன் எந்தப் பொருளைப் பாடுபொருளாக எடுக்கின்றானோ அந்தப் பொருளின் சிறப்பினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞனுடைய அந்தஸ்தும் உயர்கின்றது. எப்பொழுது ஒரு மனிதன் தூய சிந்தனையுடன் ஒரு இலட்சிய நோக்குடன் கட்டுப்பட்டு இறைவனைத் துதித்துப் பாடுகின்றானோ, அப்பொழுது அந்தக் கவிதை இறவாக் கவிதையாகிவிடுகின்றது. இதற்கு என்ன காரணம்? என்றென்றும் இருக்கின்ற இறைவனை எப்பொழுதும் நினைந்து அந்த இறையுணர்வைக் கவிதையில் வெளிக்கொணரும் போது அந்தக் கவிதைகளும் இறைத்தன்மை அடைந்துவிடுகின்றன. இந்த வகையில் நோக்குமிடத்து மடுமாதா காவியம் என்பது ஒரு இறையுணர்வைக் கொண்ட பொக்கிஷமாகவும் இறவாத காவியமாகவும் இருக்கும் என்பதும் தெளிவாகின்றது.

மடுமாதா காவியம் படைக்கின்ற அமுதுவின் இதயம் எத்தகைய புனிதத் தன்மை கொண்டது, அவருடைய இதயம் மண்ணையும் மக்களையும் எப்படி நேசித்தது என்பதற்கு இக் காவியத்தை மாதாவின் காலடியில் வைத்து விட்டு அவர் கேட்கின்ற விண்ணப்பம் ஒன்றே அந்த உண்மைக் கவிஞனின் தூய்மையான இதயத்தை வெளிக்காட்டி நிற்கின்றது. இதுதான் அந்த விண்ணப்பம்.

சிரித்திடும் நிலவும் பூவில்
திருவடி வைத்த தாயே!
விரிந்திடும் துயரம் என்னும்
விரிகடல் நீந்தி வந்தோம்.
எரிந்திடும் ஈழநாட்டை
இயேசுவின் கண்ணில் காட்டி
பரிந்திடும் அமைதி என்ற
பாலை நீ வார்ப்பாய் அம்மா.

உலகத் தமிழ் இலக்கியப் பரப்பில் அதிகம் மிகச் சிறந்த பக்தி இலக்கியம் தமிழ் இலக்கியத்தில்தான் எழுந்திருக்கின்றன என்று ஜி.யு.போப் அவர்கள் காலத்திலிருந்து பேசப்படுகின்றது. அவை புராண இலக்கியமாக இருந்தாலும், உலகமொழி இலக்கிய வளத்துடன் போட்டியிடுகின்ற வகையில் உயர்ந்த அந்தஸ்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவையாக விளங்குகின்றன என்று பன்மொழிப் புலமையாளர்கள் கூறுகின்றார்கள். அந்த வகையில் புலவர் இளவாலை அமுது அவர்களின் மடுமாதா காவியம் பலவகையிலும் காவிய உத்திகளையும் காவியச் சுவைகளையும் கொண்ட உன்னத காவியமாக விளங்குவதை உறுதியாகக் கூறமுடிகின்றது. மடுமாதா காவியத்தில் இளவாலை அமுது அவர்கள் பாடிய மங்கலப் பாடல் ஒன்றையும் எடுத்து நோக்குவது இந்தப் பகுதியை நிறைவு செய்வதற்குப் பொருத்தமாக அமையும் என்று நினைக்கின்றேன்.

புண்ணியம் செழித்து வாழ்க
பொழுதெலாம் உண்மை வாழ்க
மண்ணிலே அன்பு வாழ்க
மனிதரில் நேயம் வாழ்க
விண்ணிலே வெள்ளிக் கூட்டம்
விளக்குகள் கொளுத்தி வாழ்த்த
எண்ணரும் அமைதி தந்து
ஈழத்து இராணி வாழ்க!

இந்த வாழ்த்துப் பாடலைப் பாடும்போது கந்தபுராணச் சிறப்புப் பகுதி ஒன்றே நினைவிற்கு வருகின்றது. ஆறிரு தடந்தோள் வாழ்க என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் மங்கல வாழ்த்தும் இணைந்து ஒலிப்பதனைக் கேட்க முடிகின்றது.

வித்துவான் வேலனார் தலைமையில் நடந்த “மடுமாதா காவியம்” நூல் வெளியீட்டில் அமுது அவர்களின் பக்திரசம் பொங்கும் மடுமாதா காவியப் பாடல்களை அழகாக மெட்டமைத்துப் பாடி எல்லோரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார் கனகபூஷணம் கனகசபை சற்குணராஜன் அவர்கள் (சுதுமலை). அன்றுமுதல் அமுது அவர்களின் எந்த நூல் வெளியீட்டு விழாவிற்கும் திரு. சற்குணராஜன் அவர்களை அழைத்துப் பாட வைப்பது அமுது அவர்களின் வழக்கமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே

என்றார் திருமூலர்.

அன்னை என்னைக் கவிஞன் ஆக்கினான்
பொன்னின் தமிழிலே பொட்டிடுமாறு

என்கிறார் அமுது.

இயேசு காவியம் கவியரசு கண்ணதாசனால் 16.01.1982 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. திருச்சி யோசப் கல்லூரியில் மதுரைப் பேராயர் ஜஸ்டிஸ் தலைமையில் இந்நூல் வெளியீடு செய்யப்பட்டது. பேராயர் உரையைத் தொடர்ந்து முதல்பிரதியினை முதல் அமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களிற்கு வழங்கப்பட்டது. அப்பொழுது எம்.ஜி.ஆர் அவர்கள் கூறிய வாசகம் கவிஞர் கண்ணதாசனை நாடறியும். அவரை நான் அரசவைக் கவிஞராக்கி இருக்கின்றேன். தமிழகத்தில் கம்பனுடைய காவியத்துக்குக் கிடைத்த சிறப்பு இயேசு காவியத்துக்கும் கிடைக்கும் என்பது உறுதி என்று வாழ்த்தினார். மேலும் அவர் வாழ்த்தும் பொழுது மிகுந்த பக்திபூர்வமாக இயேசு காவியம் படைத்த கண்ணதாசனுடைய புகழ் மனிதகுலம் வாழும் வரை இருக்கும் என்று புகழாரம் சூட்டினார்.

பக்தி இரசம் பொங்கும் மடுமாதா காவியத்தை மக்கள் திலகம் திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் கையில் கொடுத்து இருந்தால் எப்படி வாழ்த்தியிருப்பார் என்று கற்பனை செய்து பார்க்கின்றேன். அமுதுவின் இதயம் மட்டுமல்ல என்னுடைய உள்ளமும் ஆனந்த வெள்ளத்திலே அலை மோதுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## 18. தமிழ்க்கங்கையும் அன்பின்கங்கையும்





"ஆண்டவரே, இந்த உலகில் வறுமையுடனும் பட்டினியுடனும் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற எங்கள் சகோதரர்களுக்குப் பணிபுரிய எங்களைத் தகுதியுள்ளவராக ஆக்கியருளும். எங்கே பகை உள்ளதோ அங்கே அன்பையும், எங்கே மனப்பிரிவு உள்ளதோ அங்கே மன ஒற்றுமையையும், எங்கே தவறு உள்ளதோ அங்கே உண்மையையும், எங்கே சந்தேகம் உள்ளதோ அங்கே பற்றுறுதியையும், எங்கே இருள் உள்ளதோ அங்கே ஒளியையும், எங்கே வருத்தம் உள்ளதோ அங்கே மகிழ்ச்சியையும் நான் விளைவிக்கச் செய்தருளும். ஆண்டவரே, ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் கொடுப்பதையும், நேசிப்பதைவிட நேசிக்கப்படுவதையும் நான் தேடச் செய்தருளும்." இது ஆயிரமாயிரம் அன்னைக்குச் சமமான அன்னை திரேசா அவர் களுடைய ஜெபம்.

தெய்வமே சரண் என்று சொல்லி உழைப்பவர்களுக்கு வலிமை அதிகம், உயர்வு அதிகம், அதன் பயனும் அதிகம். எனவே தெய்வத்திடம் பாரத்தைக் கொடுத்துவிட்டுக் கவலை, பயம் என்ற இரண்டையும் விட்டெறிந்து உழைக்கின்ற உழைப்பிலே தெய்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி உண்டு என்ற பாரதியின் சித்தாந்தத்திலே வாழ்ந்து முடித்தவர் அன்னை திரேசா.

இறைவன் படைப்பாகிய எல்லா உயிர்களிடத்திலும் அன்புபூண்டு ஒழுகுதலும் சேவைசெய்தலுமே பக்தி என்று சொல்லப்படுகின்றது. அவ்வாறு பக்திபூண்டு சேவை செய்யும் ஜீவனிடத்தில் ஆண்டவனே கருணை பூண்டு தனது சாம்ராச்சியத்தைக் கொடுக்கின்றான். அந்த சாம்ராச்சியத்தைத் தனதாக்கிக் கொண்டவர் அன்னை தெரேசா அவர்கள். வருந்தி உழைத்தால் முடியாதது ஒன்றும் இல்லை, நம்பிக்கை ஒன்றே வெற்றிப் பாதை. இவற்றை நெஞ்சிலே தாங்கி தன் வாழ்வினை மக்கள் சேவையில் இணைத்து தெய்வநிலையைப் பெற்றவர் அன்பின்கங்கை அன்னை திரேசா அவர்கள். அவருடைய புரட்சிகரமான உலக சேவையை எந்தவிதமான இனமத வேறுபாடின்றி உலகம் போற்றுகின்றது. சிலுவையின் நிழலிலே படுத்துறங்கிய அன்னை உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஆதரவற்ற மக்களுக்கு அபயமளிக்க வேண்டும் என்பது அன்னை திரேசா அவர்களின் சித்தாந்தம். அன்னையின் சேவையைப் பாராட்டி ஒஸ்லோ நகரில் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அந்த அன்பின் கங்கை அன்னை திரேசா அவர்களை தன் நெஞ்சிலே சுமந்தவர் தமிழ்க் கங்கை இளவாலை அமுது அவர்கள். அது மாத்திரமல்லாமல் தமிழ்கூறும் நல்லுலகம் அறிய அன்னை திரேசா அவர்களுடைய வாழ்க்கையை நூலில் வடித்துத் தமிழ் மக்களுடைய அதிஉயர்ந்த பாராட்டைப் பெற்றவர்தான் புலவர் இளவாலை அமுது அவர்கள்.

புலவர் இளவாலை அமுது அவர்கள் சிறு வயதிலேயே யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கிறிஸ்தவக் குருமார்களினால் பட்டை தீட்டப் பெற்றவர். யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பண்டிதர்களின் வழிகாட்டலில் வாழ்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் களினால் நெறிப்படுத்தப்பட்டவர். இளவயதில் தலைசிறந்த எழுத் தாற்றலால் சின்னக்கல்கி என்று பெயர் எடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கவியரசர் கண்ணதாசன், ரா.பி.சேதுப்பிள்ளை, டி.கே.சிதம்பரநாத முதலியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் மு.வரதராஜன் போன்ற அறிஞர்களின் சொல்லாற்றலிலும் பரிச்சயமானவர்.

இளவாலை அமுது அவர்கள் இளவயதுமுதல் பெற்றுக்கொண்ட வேதாகமப் பயிற்சியுடன் கூடிய பரோபகாரச்சிந்தை, அன்பின்கங்கை அன்னை திரேசா என்ற மிகப் பிரபல்யம் வாய்ந்த வரலாற்று நூல் தோன்றுவதற்கான காரணங்களில் முக்கியமானது என்று கூறலாம்.

ஒருநாள் இரவு அன்னை திரேசா இருந்த வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தானாம். வீட்டு வாசலில் நின்று அன்னையை அழைத்தான். அவன் அன்று காலை தொடங்கி மாலை நேரம் வரை தான் பிச்சையெடுத்துத் திரட்டி வைத்திருந்த பணத்தை அன்னையிடம் அர்ப்பணிப்பதற்காகவே வந்திருந்தான். இதனை அறிந்த அன்னை திரேசா அவர்கள் மனம் மிக வருந்தினாராம். இவன் தேடிய பணம் முழுவதையும் என்னிடம் கொடுத்துவிட்டு இரவுக்கு ஒரு வயிறு உணவுகூட இல்லாமல் இருக்கப் போகிறானே என்று மனம் நொந்தாராம். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவன் கையிலிருந்த பொருள் எல்லாவற்றையும் அன்னையிடம் ஒப்படைத்து விட்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றானாம். இந்தச் செயலைக் கண்டு அன்னை திரேசாவின் இதயம் குளிர்ந்தது. இந்த உலகத்தில் எனக்கு எத்தனை பேர் எவ்வளவோ வெகுமதிகளைப் பரிசுகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அத்தனை பரிசுகளிலும் இதுவே மிக உயர்ந்த பரிசு என்று சொல்லி ஆனந்தப்பட்டாராம். பிரதமர் இந்திராகாந்தி அவர்களுடன் நட்புறவு பூண்டவர் அன்னை திரேசா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை அன்னை திரேசா அவர்கள் தெருவோரமாக நடந்து சென்றபோது வயதான பெண்ணொருவர் தெருவிலே சுருண்டு போய்க் கிடப்பதைப் பார்த்தாராம். நடுங்கிய வண்ணம் கிடந்த அந்தப் பெண்ணின் உடலிலே புண்கள். அவை சீள்பிடித்து துர்நாற்றம் வீசியது. அந்தப் பெண்ணை அவசர அவசரமாகத் தூக்கி வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் கிடத்தினாராம். அந்தப் பெண்ணின் புண்களைச் சுத்தம் செய்து ஆறுதல்படுத்தினாராம். அந்தவேளையில் அந்தப் பெண் அன்னையின் அரவணைப்பிலும் அன்பிலும் நெகிழ்ந்து அன்னையிடம் நன்றி என்று சொல்ல வாயைக் குவித்த நேரம் அந்தப் பெண்ணின் உயிர் பிரிந்துவிட்டதாம். அந்தப் பெண் சொன்ன நன்றி என்ற வார்த்தை அன்னை திரேசா அவர்களுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசைவிட மேலான பரிசு என்று அன்னை திரேசா அகமகிழ்ந்தாராம். அன்பின்கங்கை அன்னை திரேசா என்ற நூலில் அமுதுப் புலவர் சுட்டிக்காட்டுகின்ற எடுத்துக்காட்டுகள் எப்படிப்பட்ட கல்நெஞ்சத்திலும் மனிதநேயத்தை வளர்ப்பதற்கு எடுக்கின்ற முயற்சியே என்று கூறலாம்.

அன்பின்கங்கை அன்னை திரேசா என்ற நூல் இளவாலை அமுது அவர்களின் நீண்டநாள் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடு. உலக அனுபவங்களை ஒரு தாயின் அன்போடு இணைத்து எழுதப்பட்ட ஒரு வரலாறு. அவர் கையாளுகின்ற சொற்கள் ஒவ்வொன்றும் அவருடைய இதயத்தின் அடியிலிருந்து நீண்டகாலம் தவம் செய்து வருவதாகவே உணர்கின்றேன். அவருடைய சொல் ஞானத்தால் அன்னை திரேசா அவர்களின் முகம் புதுப்பொலிவு பெறுவதனை உணர்கின்றேன். இந்த நூலை வடிப்பதற்காக இலண்டனில் பல நூலகங்களுக்கெல்லாம் சென்று அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்களைத் தேடிப்பெற்றவர். அது மாத்திரமல்ல அமுதுப் புலவர் அவர்களுடைய மகன் சந்திரகாந்தன் அடிகளார் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து நூல்களை எடுத்து வந்து தந்தையின் முயற்சிக்கு உற்றதுணையாக இருந்திருக்கின்றார். இத்தகைய அரிய முயற்சியின் வெளிப்பாடே இளவாலை தமிழ்க் கங்கை அமுதுப் புலவர் அவர்கள் எம் கையிலே கொடுத்துவிட்டுச் சென்ற 'அன்பின் கங்கை அன்னை திரேசா.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 19. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

மனிதன் கேட்கக் கடவுள் சொன்னது பகவத்கீதை.
கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம்
மனிதன் கேட்க மனிதன் சொன்னது திருக்குறள்.

- (வாரியார்)

இந்த வகையில் திருக்குறள் என்பது ஒரு வாழ்வியல் நூல். ஒரு மனிதன் எப்படி எப்படி எல்லாம் வாழவேண்டும் என்பதனை வகுத்துக் கொடுத்த நூல் திருக்குறள். 'வாழு வாழவிடு' என்பது தலைசிறந்த தத்துவம். எந்தவொரு மனிதனும் தான் நல்ல முறையில் வாழ வேண்டும்; அதேவேளை அடுத்தவரையும் வாழவைக்க வேண்டும். இந்த வாழ்விற்குரிய நெறிமுறைகளை எடுத்துக்கூறும் இணையற்ற நூல்தான் திருக்குறள். அந்த திருக்குறளின் நெறிமுறையில் வாழ்ந்த வாழ்வினை இளவாலை அமுது அவர்களிடம் நான் பார்க்கின்றேன். உடலைக் கெடுப்பது நோய்கள். உள்ளத்தைக் கெடுப்பது தீய குணங்கள். உடலைப் பேணவேண்டும், உள்ளத்தைப் பேணவேண்டும். இந்த இரண்டு பண்புகளின் முதிர்ச்சியை ஏறத்தாழ பதினைந்து வருடங்களுக்கு மேல் அவரிடம் பார்த்து உணர்ந்திருக்கிறேன்.

தொண்ணூறு வயதைத் தாண்டியும் நாடுகள் பல கடந்து தமிழ்ப் பணியாற்றிய உடல் உள ஆரோக்கியத்தை அவரிடம் பலர் கண்டு வியந்துள்ளார்கள்.

"நிலத்தின் இயல்பால் நீர் திரிந்தாற்போல் சிற்றினம் சேர்தலால் ஒருவனது சிறப்புக் கெடும்" என்ற வள்ளுவன் கொள்கையை ஐந்து வயதுச் சிறுவனாக பள்ளியில் படிக்கத் தொடங்கிய காலந்தொட்டு கடைப்பிடித்து வந்திருக்கிறார். இதனால்தான் அவருடைய வாழ்விலே நல்லூர் ஞானப்பிரகாசமுனிவர், தனிநாயகம் அடிகள், பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்ற பெரியார்களுடன் அவருடைய மரணகாலம் வரை இணைந்து வாழமுடிந்தது. ஒரு மனிதன் பெரியோர்களுடன் தொடர்புடையவனாக இருப்பதால் அவன் வாழ்விலே புகழ்பெறுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று வள்ளுவன் பாடி வைத்தான். இனநலம் எல்லாப் புகழும் தரும் என்ற குறளின் வழியிலே அவர் சான்றோர்களைப் பேணித் தன் வாழ்க்கையை நகர்த்தியதால் "ஈழத்தின் மூதறிஞர்" என்ற நிலைக்குச் செல்ல முடிந்தது.

தனது கடின முயற்சியால் இடையறாத தேடலினால், வாழ்க்கையை இனிமையாகவும் நகைச்சுவையாகவும் அமைத்துக் கொண்டவர் புலவர் இளவாலை அமுது அவர்கள். தான் அனுபவித்துச் சுவைத்த சம்பவங்களை, அந்தச் சுவை திரிபுபடாமல் ஏனையோர்க்கும் வழங்கும் வல்லமை கொண்டவர் இவர். இதற்கு எடுத்துக் காட்டாக அமுது அவர்கள் எடுத்துச் சொன்ன நகைச்சுவைச் சம்பவம் ஒன்றைக் கூறுகின்றேன். இந்தக் கதை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் கூறிய கதை. இவர் திருக்குறளின் காவலன். அதுமட்டுமல்ல திருக்குறள் புதைபொருள் பற்றி பல நூல்களும் எழுதியவர்.

ஒருமுறை அவருடைய தலைமையிலேயே ஒரு திருமணவைபவம் சிறப்பாக நடந்து முடிந்தது. கல்யாணம் முடிந்த சில நாட்களில் அந்தத் தம்பதிகளுக்கு இடையில் ஏற்பட்ட மன முறிவுகளை விளக்கி, மணமகனிடமிருந்து ஒரு கடிதம் முத்தமிழ்க் காவலருக்கு வந்தது. அவர் அதை வாசித்துவிட்டு அந்தக் குடும்பத்தின் சங்கடத்தைப் போக்க எட்டு எழுத்திலே ஒரு பதிலை எழுதி அனுப்பினார். அதில் பயன் ஒன்றுமில்லை என்று மணமகனிடமிருந்து பதில் வந்தது. உடனே அவர் ஏழு எழுத்தில் ஒரு பதிலை அனுப்பினார். அதிலும் பயனில்லை என்று பதில் வந்தது. இதற்குப் பதிலாக முத்தமிழ்க் காவலர் ஆறு எழுத்தில் ஒரு பதிலை அனுப்பி னார். இந்தப் பதிலுடன் அந்த குடும்பப் பிரச்சனை சுமுகமாகிவிட்டது. முத்தமிழ்க்காவலர் அறிவுரையாய் அனுப்பிய அந்தப் பதிலின் இரகசியத்தை அமுதுவிடம் கேட்டபோது எட்டு எழுத்தில் எழுதிய பதில் அரவணைத்து நட. ஏழு எழுத்தில் எழுதிய பதில் அடக்கிப்பார். ஆறு எழுத்தில் எழுதிய பதில் அடங்கிப்போ என்று சொல்லி சிரிப்பின் வெள்ளத்திலே ஆழ்த்தினார். இப்படி பல அறிஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நகைச்சுவைக் கருத்துக்களை உள்வாங்கி வளர்ந்தவர் அமுதுப் புலவர் அவர்கள்.

அமரர் கல்கி, ரா.பி.சேதுப்பிள்ளை, கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன் போன்றவர்களின் நகைச்சுவைக் கலையினைத் தேடிக் கற்றதனால் அவர் தன் வாழ்க்கையையும் நகைச்சுவையாக நகர்த்திச் செல்லமுடிந்தது. நகைச்சுவையைப் பெரிதும் வளர்த்துக்கொண்டதால் அவருடைய வாழ்க்கையில் யாரைக் காண்கின்ற பொழுதும் பேசுகின்றபொழுதும் அவருடைய வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் வடித்தெடுத்த தேன்போலவே இனிக்கும்.

அன்பு வாழ்க்கையின் அடிப்படை என்பது திருமந்திரம். அன்புதான் சிவம் என்று பாடியது திருமந்திரம். அன்பினை ஒருவர்மீது செலுத்தி வாழ்கின்றபோதுதான் உலகிலே அமைதி நிலவும் என்பதனை உலகில் தோன்றிய அனைத்து மகான்களும் போதித்தார்கள். எல்லா மதங்களின் அடிப்படையும் இதுதான். இதைத்தான் வள்ளுவனும் அன்பின் வழியது உயிர்நிலை என்றார். அன்பின் சிறப்பினை அறியாதவர்கள் வாழ்வின் சிறப்பை அறியாதவர்கள். அன்பினைப் பேணுவதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு நான் கண்ட சாட்சி இளவாலை அமுதுப் புலவர் அவர்கள்.

தமிழுக்கு அமுது என்று பெயர் என்று தூரத்தில் இருப்பவர்கள் அமுதுவைப் பார்த்துப் புகழாரம் சூட்டுவார்கள். அருகிலிருந்து பார்ப்பவர்களுக்கு இளவாலை அமுது அவர்கள் தமிழ்மொழி போல் உயர்ந்த தோற்றம், நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, குறையொன்றுமில்லாத ஒழுக்கம், குரலிலே கணீர், புலமையின் ஓசை, காவிய நடையும் உரைநடையும் ஒன்றிணைந்த புலவன் இவன். செயற்கரிய செய்த இந்தப் புலவனின் பக்கத்திலே அமர்ந்து அவருடைய இலக்கியச் சுவையுடன் அவருடைய விருந்தையும் உண்டுகளிக்க என்ன புண்ணியம் செய்தவன் இவன் என்று நான் பலமுறை எண்ணியதுண்டு. நல்ல நண்பர்கள் அவருடைய வீட்டுக்கு வந்து ஐயா, என்னை உங்களுக்கு நினைவிருக்கின்றதா? என்று கேட்டால், ஐயோ ராசா உனக்கு என்ரை நெஞ்சிலை ஒரு தனிக்கதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போட்டு வைத்திருக்கிறேன் என்று அன்பினைப் பொழிவார். சாட்சி பொறியியலாளர் மன்மதன்.

வானம் அழுவது மழை என்னும்போது
வையம் அழுவது பனி என்னும்போது
கானம் அழுவது கலை என்னும்போது
கவிஞன் அழுவது கவிதை யாகாதா?

என்ற கவியரசன் கண்ணதாசன் கவிதைச் சுவைபோல அமுதுவின் வார்த்தைகள் யாவையும் ஒரு கவிதையில் பிறப்பவைதான். வீட்டிற்குப் போகும்பொழுது முறுக்குப் பொதியைக் கொண்டு போய்க் கொடுத்தால் அதனை ஆசையோடு சாப்பிடுவார். வீட்டிலிருக்கும் அனுஷாவைக் கூப்பிட்டு சுடச்சுட யாழ்ப்பாணக் கோப்பி கொண்டுவரும்படி கூறுவார். கோப்பியுடன் முறுக்கை எடுத்துக் கடித்துவிட்டு அதற்கு அவர் சொல்லுகின்ற ஆலாபனை மிக அற்புதமாக இருக்கும். வாழ்க்கையின் பலபடி நிலைகளை அவரது வாழ்விலே நான் கண்டு பல அனுபவங் களைச் சேர்த்துக் கொண்டேன்.

இல்லறத்திலே துறவறம் என்பார்கள்.

ஒருவன் இல்லறவாழ்விலே ஈடுபடுகின்றபோது அவருடைய நினைவுகள் மனைவியின் பால் ஈர்க்கப்படுகின்றது. அப்பொழுது தான் என்ற நிலையிலிருந்து நீங்கி மனைவியின் பால் தன் கருத்தைச் செலுத்துகின்றான். அதற்கு அப்பால் மக்கட்பேறு என்ற ஒன்று உண்டான பின்னர் தனக்காக வாழ்ந்தவன் பின் குடும்பத்திற்காகவே ஓடாகத் தேய்கின்றான். இல்லற வாழ்வில் மனைவியுடன் இணைந்து நன்மக்களைப் பெற்று அன்புடனும் அறத்துடனும் அடக்கத்துடனும் வாழ்தலால் புகழுடைய வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். இதுவே இல்லறவாழ்வின் பயன். இதனைத்தான் வள்ளுவன்:

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்று சொல்லி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வாழ்வினை அமைத்துக்கொள்வதற்கு வாய்க்கின்ற மனைவியோ கருத்து ஒருமித்தவளாக இருக்க வேண்டும். தன்னையும் பேணி, தன்னைக் கொண்டவனையும் பேணிப் பாதுகாக்கும் நல்ல இதயங்கொண்ட மனையாளாக இருக்க வேண்டும். இதனைத்தான் ஔவையும் காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றது பேரின்ப வாழ்வு என்று பாடி வைத்தார். ஒரு குடும்பத்தில் மனைவிதான் தாயாக, தந்தையாக, செல்லக்குழந்தையாக, உடன்பிறப்பாக விளங்குகின்றாள். அன்பு, அமைதி, அடக்கம், பொறுமை, பணிவு, மன்னிக்கும் உள்ளம் அனைத்தும் ஒருங்கேயிணைந்த ஒரு வடிவந்தான் மனைவி. மொத்தத்தில் அவள் ஒரு தியாகத்தின் திருவுருவம். இந்தத் தியாகத்தின் திருவுருவத்தை நான் தரிசனம் செய்தது இளவாலை அமுதுப்புலவரின் இல்லத்தில்தான் என்றால் அது மிகையாகாது.

அமுதுப்புலவர் ஒரு ஆசிரியர். அவர் துணைவியார் திரேசம்மா. அவரும் ஒரு ஆசிரியர். இந்த இரண்டு தீபங்களின் சங்கமத்திலே பத்து ஒளிவிளக்குகள். அனைத்தும் கல்விப் பிழம்புகள். பூமிப் பந்தின் பல பாகங்களிலும் அமுதுவின் செல்வப் புதல்வர்கள் கல்விச் செருக்குடன் வாழ்கின்றார்கள்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

என்ற வள்ளுவன் கருத்துக்கமைய தனது பத்துச் செல்வங்களையும் கல்வியிலே வல்லவர்களாக உருவாக்கி இருக்கின்றார்கள். அமுதுப் புலவர் தம்பதிகள் தங்கள் பிள்ளைகளில் ஒருவரான ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளாரை யாழ் மறை மாவட்டத்தில் வாழ அர்ப்பணம் செய்திருக்கின்றார்கள். மற்றப் பிள்ளைகளான பானுமதி, இந்துமதி, காந்திமதி, ஜெயமதி, அமுதகுமாரி, செபஸ்தியான், கலாநிதி வசந்தகுமார், இளஞ்செழியன், அமுதரசன் ஆகியவர்களை நல்வாழ்வில் நன்னிலைப்படுத்திப் பார்த்து மகிழ்ந்த தம்பதிகள் என்று அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் திருமதி திரேசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடைக்கலமுத்து (அமுது) அவர்களின் நினைவுமலரில் வரைந்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

நான் அமுதுப் புலவரிடம் சென்ற காலகட்டத்தில் அமுதுப் புலவர் அவர்களுடைய துணைவியார் நோயுற்ற நிலையில் இருந்தார். அவரைப் பாதுகாத்துப் பராமரிப்பதில் அமுதுப் புலவர் கையாளுகின்ற அணுகுமுறைகளைக்கண்டு நான் எனக்குள் வியந்திருக்கின்றேன். எழும்பியிருந்து உணவு உட்கொள்ள முடியாத சூழ்நிலையிலிருந்த தன் மனைவியை அமுதுப் புலவர் அவர்கள் பக்கத்திலேயிருந்து மடியில் சாய்த்து தன் கரங்களினால் சோறு ஊட்டிய காட்சி என்றும் என் கண்ணில் மறையாத காட்சி.

உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி. இது பாரதியின் வரிகள் என்றாலும், இந்தப் பாடலில் வரும் அடுத்த வரிகள் என்றென்றும் கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கண்ண தாசனின் அற்புத வைரவரிகள்.

"உன்னைக் கரம்பிடித்தேன் வாழ்க்கை ஒளிமயமானதடி
பொன்னை மணந்ததனால் சபையில் புகழும் வளர்ந்ததடி"

இந்தக் கண்ணதாசன் பாடல்வரிகளை உயிர்கொடுத்துப் பாடினார் ரி.எம்.எஸ் அவர்கள். பாட்டிற்கு ஏற்றால்போல் நடிகர்திலகம் சிவாஜியும் நாட்டியப் பேரொளி பத்மினியும் அதன் பொருளை உணர்ந்து அதனைத் தங்கள் நடிப்பில் உருக்கமாக வெளிப்படுத்தினார்கள். இப்படியான ஒரு உருக்கமான தம்பதியை உலகத்தில் பார்க்க முடியுமா அல்லது வெறும் கற்பனையா என்று எண்ணிய எனக்குக் கவியரசர் கண்ணதாசன் உணர்த்திய அந்த அற்புதத் தம்பதிகளாக என் மனக்கண் முன்னே காட்சியளித்தவர்கள் இளவாலை அமுதுப் புலவர் தம்பதிகள் என்றால் மிகையாகாது. காரணம் செவாலியர் விருது பெற்று அதற்கான விழாவிற்கு மேடைக்குச் செல்லத் தன்னை அலங்கரித்த அமுதுப்புலவர் செவாலியர் கோலத்தில் அமரத்துவ மடைந்த தன் மனைவியின் பக்கத்தே சென்று கலங்கிய கண்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வலிகளை நீ சுமக்க பட்டங்களை நான் சுமக்கின்றேன்" என்று அழுத காட்சி இதனை உறுதிப்படுத்துகின்றது.

ஈன்ற தாயை நான் கண்டதில்லை
எனது தெய்வம் வேறு எங்குமில்லை
உயிரைக் கொடுத்தும் உன்னை நான் காப்பேன்
உதய நிலவே கண் துயில்வாயே.

என்ற கண்ணதாசன் கரும்பு வரிகள் வெறுங் கற்பனையல்ல, ஒரு நடைமுறை வாழ்க்கை அனுபவம் என்பதனை அமுதுவின் வாழ்க்கையில் நான் கண்டுகொண்டேன். அவர்களின் குழைந்த அன்பின் உறவின் அனுபவத்தில் பழகித் தோய்ந்த பாச உணர்வுகள் விரிந்துகொண்டே செல்கின்றன.

புலவர் இளவாலை அமுது அவர்கள் தன் துணையை இழந்து பட்ட துயரங்களின் நிழலை, துன்பங்களின் சாயலை அவருடைய கவிதையிலே காணமுடிகிறது. முதுமையில் அவர்களிடம் நான் கண்ட தரிசனங்களுடன் வைத்தே அவர்களின் இளமை வாழ்க்கையை எண்ணிப்பார்க்க முடிகிறது.

இன்பம் வரும்போது மனிதன் மகிழ்ச்சியில் திழைக்கின்றான். துன்பத்திலே அவன் பேதலித்துப் போகின்றான். இதற்கு விதிவிலக்கல்ல இளவாலை அமுதுப் புலவர் அவர்கள். சிரித்தால் சிரித்து, அழுதால் துடித்து வாழ்ந்திடும் துணையை இழந்தபோது அமுதுவின் இதயத்துடிப்பு எப்படி இருந்திருக்கும். கோயில் விளக்கே விடியும் கிழக்கே, அர்ச்சனைத் தேவாரம் நீ எனக்கு, உயிராய் இணைந்தோம் இதயம் கலந்தோம், இன்று தன்னந் தனியாக என்னை விட்டு விட்டுப் போக உனக்கு எப்படி மனம் வந்தது? என்றோ ஒருநாள் உன்னை வந்தடைவேன் என்று எண்ணிய அமுதுவின் இதயத்திலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட வரிகளை அவருடைய கவிதையிலே கேளுங்கள்.

"என் சோகத்தைப் பாட இராகம் இல்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது அறுபது வருடங்கள் வாழ்ந்த இளவாலை வீட்டுச் சுவரில் காதை வைத்தால் அம்மா அம்மா என்று அழைத்த பத்துச் செல்வங்களின் குரலும் கேட்கும். மக்கள் எல்லோரும் வந்து தங்குவதற்காக விசாலமாக அமைத்த தாய்மனையல்லவா அது. இருபது ஆண்டுகள் இலண்டனில் வாழ்ந்த பின் கண்மூடிய வண்ணம் நீ தாய்மனை போய்ச் சேர்ந்தாய். உனக்குத் தாய் மண்ணே தானம் என்ற விருப்பத்திற்காகத் தாய்மனையிலிருந்தே சேமக்காலைக்குச் சென்றாய்.

ஆராரோ பாடிய அம்மா, நீயே தூங்கிவிடலாமா
ஊரே ஒன்று சேர்ந்தாலும் உன்னை எழுப்பலாமா
விழுந்த கண்ணீர்த் துளிகளுக்கு விலையோ இல்லை அம்மா என்றும்
என்ன குற்றம் செய்தோம் நீயும் ஏன் பறந்துபோனாய்

என்று பிரிவுத் துயரில் அமுதுவின் வரிகள் மரணவேதனையில் கூட கவிதாசாரம் கரைந்தோடுகின்ற கங்கையாக அமுது தன் நினைவுகளைக் கவிதையாக மீட்டுவதை இனங்காணலாம்.

என் தேவியே நானும் செய்த குற்றம் என்ன கூறு
ஒரு பார்வை பாரு.

என்ற கவிஞர் வைரமுத்து அவர்களின் பாடலின் ஓசைத் துடிப்பும் அதற்கேற்றாற்போல் நடிகர் திலகத்தின் நடிப்பிலே நரம்புகள் அசைவதின் உயிரோட்டத்தையும் அமுதுவின் பாடலிலே காண முடிகின்றது.

மனைவியைப் பிரிந்தபோது உலகத்திற்கு நீதி வழங்கிய வள்ளுவன் பாடினான்,

"கருமணியின் பாவாய் நீயும் போதியோ
எப்படி என் கண்கள் தூங்கும்?"

என்றார்.

அந்த நிலைதான் எனக்கும். என் கண்ணின் கருமணி போன்றவளே அம்மா – உலகில் சீதை, கண்ணகி, மீரா போன்ற பெண் திலகங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரிசையில் உனக்கும் ஓர் இடமுண்டு என்று அமுது அவர்கள் தன் மனதைத் தேற்றுவது அமுதுப் புலவரின் இதயத்தில் இருக்கின்ற காவிய உணர்வை எடுத்துக் காட்டுவதாகும்.

கடவுளைக் காணவேண்டும் என்றால் தாயின் காலடியில் காணலாம் என்றார்கள் சான்றோர்கள். சுவர்க்கத்தின் கரங்களாய் எனக்குப் பணிசெய்தாய். உன்னால் நான் பேர் எடுத்தேன், பாராட்டுக்கள் பெற்றேன். எங்கள் குடும்பச் சங்கிலி ஒன்று அறுந்துபோய்விட்டது. ஆண்டவன் ஒருநாள் தேவலோகச் சங்கிலியால் என்னைக் கூப்பிட்டுத் தொடுத்து வைப்பார் என்ற அமுதுவின் தேவவாக்கு இன்று பலித்துவிட்டது.

துயரத்திலும் காவியச் சுவை குன்றாமல் கவிமழை பொழிபவர் மதுரகவி இளவாலை அமுது அவர்கள்.

வாழை பலா மாமரங்கள் வளஞ்சொரியும் இளவாலை
நாளெல்லாம் செபதபங்கள் நடக்கும் திருக்கோயில்
கற்றோர் குவிந்திருக்கும் கரைகாணா கல்வி நிதி
சிற்றாறு அள்ளிவந்த முத்தமிழர் சந்நிதியில்
பிறந்த திரேசம்மாவே பிரிந்தனையோ இவ்வுலகம்.

முத்துக்கள் பத்தளித்த மோனத் திருவுருவம்
சித்தம் கலைந்திடவே தேவுலகம் சென்றதம்மா
உடலைத் திரியாக்கி உள்ளத்தை நெய்யாக்கி
கடமை புரிந்திட்ட கைவண்ணம் யாரறிவார்.

புல்லும் தலைவணங்க மெல்ல நடந்தவளே
எல்லார்க்கும் பண்புகளின் ஈரம் தெளித்தவளே
வாழ வழியிழந்து வாழ்விழந்து சோர்ந்துவிட்ட
ஏழைகளைக் கண்டுவிட்டால் இதயம் திறப்பவளே.

அன்பரங்கம் என்ற பெயர் அமைந்த உன் இல்லத்தில்
பொன் ஒளியின் தீபத்தை பலகாலம் ஏற்றிவைத்தாய்
எப்பொழுதும் கணவனுக்கும் இனிய மக்களுக்கும்
நற்பணிகள் செய்திட்ட சாராளே மல்லிகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பின் திருவுருவே அமைதிக்கோர் ஆலயமே
மங்கை நல்லாள் நீ எங்கள் தங்கநிறக் கோபுரமே
சித்தங் கலங்காமல் நித்திரையும் கொள்ளாமல்
புத்திரரை நீ காத்த புதுமை ஒரு காவியமே.

நாட்டைப் பிரிந்து வந்தாய் நாம் வாழ்வோம் என்று அமைந்த
வீட்டைப் பிரிந்து வெந்துயரை நீ சுமந்தாய்
விந்தையுடன் நீ செபித்த வேண்டுதலைக் கேட்டதனால்
சந்திரகாந்தன் என்ற சற்குருவை நாம் கண்டோம்.

பணிக்கே பிறந்தவரைப் பயனுள்ள கலைமணியை
இனிக்கின்ற சொல்லரசை ஈன்றவளே என் தாயே
கற்றூணாய் உந்தன் குடும்பத்தைக் கட்டி வைத்த
சிற்பியே உன்னை சிரம்தாழ்ந்து வாழ்த்துகின்றோம்.

கண்ணீர்க் கடலினிலே கணவனோடு பிள்ளைகளை
மண்ணில் தவிக்கவிட்டு மாதரசே போய்ச் சேர்ந்தாய்
ஈசன் திருவடியில் என்றென்றும் வாழ்ந்திடுவீர்
நேசம் மறவாத நிழலாக நாம் இருப்போம்.

என்றோ ஒருநாள் இன்ப உலகினிலே
குன்றாத உன் அன்பு கோபுரத்தில் வந்தடைவோம்.

அன்று தன் மனைவியைப் பிரிந்தபோது அமுது கொடுத்த வாக்குமூலம், அமுதுவின் கண்ணீரில் பூத்தது இந்தக் கவிதை.

மிக இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய எளிமையும் இனிமையும் உடைய கவிதை ஓட்டம் கொண்ட அமுதுவின் கவிதைகள் அவர் பாடும்பொருளின் சிறப்பினை பலமுனைகளில் சிறப்பித்துக் காட்டுகின்றது. தன் அண்ணனைப்பிரிந்த துயரத்தில் பிறந்த கவிதையினைப் பார்ப்போம்.

அண்ண நீ! இல்லை என்றால்
அடியவன் சரிதம் உண்டோ?
அண்ண நீ! அறிவின் ஆக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அருந்தமிழ்ப் பணியின் தெய்வம்
அண்ண நீ! உடன் பிறப்பின்
அன்புக்கு இராமகாதை
அண்ண நீ! எனக்கு அன்னை!
அருங்குரு அப்பன் அன்றோ.

இலக்கியம் சொல்லித் தந்தாய்
இலக்கண உரைகள் கற்றேன்
மலைத்திடும் கணிதம் சொன்னாய்
வரலாறு வரைதல், வண்ணம்
கலைத்திறன் அரங்கில் பேச்சு
கவின்பெறும் எழுத்துப் பாடல்
பலகலை கற்றேன் அண்ணா!
பட்டவோர் மரமாய்ப் போனேன்.

இந்தப் பாடல்கள் அமுதுவின் சோகத்தை அற்புதமாக வெளிப் படுத்தி நிற்கின்றது.

இளவாலையில் பிள்ளைகளோடு அவர் வாழ்ந்த காலத்திலே பிள்ளைகள் எதைக் கேட்டாலும் மறுக்காமல் மறக்காமல் வாங்கிக் கொடுப்பார். ஒரு மாம்பழத்தைக் கேட்டால் மாம்பழக் கூடையையே வாங்குவது அவரது வழக்கம். ஒரு பிள்ளை சோடா குடிக்க வேண்டும் என்று கேட்டு விட்டால் உடனே சைக்கிளில் சென்று அதனையும் பெட்டியோடு வாங்கி வருவார். காசு இருந்ததோ இல்லையோ பிள்ளைகள் எதனை ஆசைப்பட்டாலும் அதனை உடனே வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பது அவரது குணவியல்பு. அந்தக் கையாலே மாம்பழம் அரிந்து கொடுக்க அதனை வாங்கி உண்பதில் தனிச்சுகம் கண்டவன் நான்.

யாழ்ப்பாணத்திலிருந்து இலண்டனுக்கு வந்த மக்கள் மிகச் சிறந்த சர்வகலாசாலைகளில் படித்து நல்ல நிலையில் இருக் கின்றார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இலண்டனுக்கு வந்து நான் கண்டு கொண்ட, படித்த சர்வகலாசாலை இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது அவர்கள்தான். நான் படைக்கின்ற வரலாற்றில் என்னுடைய வார்த்தைகளுக்கு நூலில் ஆதாரம் இல்லாவிட்டாலும் அமுது அவர்களின் ஆத்மாவே இதற்குச் சாட்சியம். அது மாத்திரமல்லாமல் நானும் நண்பர் பாஸ்கரன் அவர்களும் சேர்ந்து இரண்டு வாரங்களாக அவருடைய வாழ்நாள் முழு அனுபவங்களையும் ஒலிநாடாவில் பதிவு செய்து வைத்திருக்கின்றோம். அதுவே எமது முக்கிய ஆதாரம்.

தமிழில் எழுந்த காவியங்கள் புகழ்பெற்ற நூல்கள் பல்லாயிரம் இருக்கின்றன. அவற்றுள் திருக்குறளுக்கு மட்டும் ஒரு சிறப்பு இருக்கின்றது. அந்தச் சிறப்பு பெரும் பொருளை சுருக்கமாகக் கூறுவதாகும். அதாவது விரிந்த பொருளைச் சுருங்கச் சொன்னதில் வள்ளுவனுக்கு இணை யாரும் இல்லை என்று திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் கூறியிருக்கின்றார். அந்த வள்ளுவனுடைய கருத்தை ஒன்றி ஏழைகளின் வாழ்வு நிலையை உணர்ந்து முழங்காலுக்கு மேலும் இடுப்புக்குக் கீழும் சுருக்கி உடை அணிந்து தன் எளிமையினால் பாரத தேசத்தின் புகழை உலகறியச் செய்தவர் காந்திமகான். வள்ளுவன் வழியில் வாழ்ந்த காந்தி மகான் நாட்டுக்குச் செய்த மிகச்சிறந்த காரியங்கள் பல. அவற்றுள் முக்கியமானது ஏழை மக்கள் நலமாக வாழவேண்டும் என்ற கூட்டுப் பிரார்த்தனை.

அடுத்தது தன்னலமின்மை, இந்த வரன்முறையில் இளவாலை அமுது அவர்களின் மடுமாதா காவியம் என்ற பிரார்த்தனை நூல் எடுத்து நோக்கத்தக்கது. இந்த நூல் பிரார்த்தனைக்கு மட்டுமல்லாமல் மடுமாதா காவியம், நெஞ்சே நினை போன்ற நூல்கள் வெளியானபோது அதனால் பெறப்பட்ட எந்தவொரு வருமானத்தையும் அவர் அனுப வித்தது கிடையாது. அனைத்தும் தாயகத்தில் தமிழ்மொழி வளர்ச்சி மன்றங்களுக்கும் ஏழைகளின் படிப்புக்குமாகவே செலவழிக்கப் பட்டது. இந்தச் செயல்கள் அவர் வள்ளுவன் குறள்வழி வாழ்ந்த நெறிமுறையினைக் காட்டுகின்றன. ஏழைகளுக்குச் செய்கின்ற தொண்டு இறைவனுக்குச் செய்கின்ற தொண்டு என்பதனை என்றென்றும் அவர் தன் வாழ்வில் நிலை நிறுத்திக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இடமறிந்து, காலமறிந்து கருணை காட்டியவர் இளவாலை அமுது. அவருடைய வாழ்வின் ஒவ்வொரு பக்கங்களும் குறளாகவே விரிகின்றது.

கஷ்டப்படுகின்ற ஒவ்வொருவரும் கடவுள். துன்பத்தில் துடிக்கின்ற ஒவ்வொரு ஏழையும் கடவுள். அந்தக் கடவுளையே நான் தேடிப்போகின்றேன் என்று பூவினும் மெல்லிய பாதம் வருந்த ஏழைகளுக்காக யாத்திரை செய்தவர் காந்தியடிகள் என்றால் அந்தக் காந்தியடிகளின் பாதங்களைப் பின்பற்றியவர் இளவாலை அமுது அவர்கள்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை".

உயிர்களிடத்தில் அன்பு, கருணை, இரக்கத்தைக் கொண்டாலன்றி ஆண்டவனின் கருணையைப் பெறமுடியாது என்ற வள்ளுவன் சித்தாந்தத்தை அமுதுப் புலவர் அவர்கள் நன்றாக உள்வாங்கி இருக்கின்றார் என்பதனை அவரின் கவிதைகளே உணர்த்தி நிற்கின்றன.

கண்ணுக்கு அணிகலம் கருணை
வாக்குக்கு அணிகலம் உண்மை
மனதிற்கு அணிகலம் அகிம்சை
கரங்கட்கு அணிகலம் தான தர்மம்

என்ற அமுதுவின் கவிதை வரிகள் அவருடைய பல்லுயிரையும் நேசிக்கின்ற தன்மையைக் காட்டுகின்றது.

உலகப் பொதுமறையாகிய திருக்குறள் உலகின் தலைசிறந்த நூலாகப் போற்றப்படுகிறது. அதுபோல பைபிள் கிறிஸ்தவர்களின் உயர்ந்த பொக்கிஷமாகக் கருதப்படுகின்றது. உன்னைக் கொல்வதைப் போல ஒரு கெடுதியைச் செய்தாலும் அவர் முன்னர் செய்த ஏதாவது நன்மையை மனதில் கொண்டு அவர் செய்த கெடுதியை மறந்துவிடு என்று அறிவுறுத்துவது திருக்குறள். உன்னுடைய வலது கன்னத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறைகின்றவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு என்று பைபிள் சொல்கின்றது. இரண்டும் பிறரை நாம் தண்டிக்கக் கூடாது என்பதனையே காட்டுகின்றது.

இளவாலை அமுது அவர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் அவர் போட்டுக் காட்டிய கதியால்களை விட (இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்) திருக்குறள், பைபிள் என்ற இரு பெரும் வேலிகளுமே இளவாலை அமுது அவர்களின் உயிருக்கும் உடலுக்கும் வேலியாக அமைந்திருக்கின்றது என்று கூறிக்கொள்ளலாம்.

ஒரு மனிதனை மகாத்மா ஆக்குவது அவருடைய வாயில் இருந்து வருகின்ற சொல் ஒன்றுதான். நல்ல சொற்களைச் சந்தர்ப்பம் அறிந்து சொல்பவர்களே சொற்செல்வம் உடையவர்கள் என்று வரலாறு காட்டுகின்றது. அந்தவகையில் சொல்லின் செல்வனாக கவிப் பெருந்தகை கம்பன் அவர்கள் அனுமனைப் படைத்துக் காட்டியிருக்கின்றார். ஒரு சொல்லை எடுத்துச் சொன்னால் அதன் பொருள் எப்படி இருக்க வேண்டும்? அதற்கொரு எடுத்துக்காட்டு, இராமன் இடத்திலிருந்து அம்பு புறப்படுகின்றது. அது தாடகையை நோக்கிச் சென்று அவளின் உயிரைக் குடித்து மீள்கின்றது. அது அம்பின் வேலை. அதுபோல பொருளைத் தெறிப்பதுதான் சொல்லின் வேலை. எனவே சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலே இடைவெளி இருக்கக் கூடாது. இதனைத்தான் வள்ளுவன்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

என சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றார்.

இந்த வகையில் வெல்லுஞ் சொல்வன்மை அறிந்து படைப்பதிலும், பழகுவதிலும் வள்ளுவனின் குறள் போல வாழ்ந்தவர் இளவாலை அமுது அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 20. நிறைகுடம்

பிள்ளைப் பாசத்தைப் பற்றி பாடாத கவிஞர்கள் இந்த உலகத்தில் இருக்க முடியாது. குழந்தைகள் பற்றிய பாடல்கள் என்னும்போது பாரதியின் நினைவுகள்தான் முதன்முதலில் தோன்றுகின்றது.

"சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே"

என்று பிள்ளைகளின் உயர்நிலையைப் பாரதி பாடி வைத்தார். அந்தப் பிள்ளை வளர்ந்து வரும்போது தீராத விளையாட்டுப் பிள்ளை என்று பாரதி பாடி வைத்தார். தமிழ்மொழியிலேயே எத்தனை பிள்ளைத்தமிழ்? ஆண்டவனையே குழந்தையாக வைத்து அடியார்களும் ஆழ்வார்களும் தாலாட்டி மகிழ்ந்தார்கள். வேற்று மொழிகளில் இல்லாத அளவிற்கு தமிழில் குழந்தை இலக்கியம் வளர்ந்துள்ளதை இலக்கிய வரலாறு கூறுகின்றது.

இன்னும் இனிமை கொஞ்சும் மொழியில் கவியரசர் கண்ணதாசன் அவர்கள்,

முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ

என்றும்,

நீரோடும் வைகையிலே நின்றாடும் மீனே
நெய்யூறும் கானகத்தில் கைகாட்டும் மானே
தாலாட்டும் வானகத்தில் பாலூற்றும் வெண்ணிலவே
தெம்மாங்கு பூந்தமிழே தென்னாடன் குலமகளே

என்றும் நெகிழ்ச்சியாகப் பாடுகின்ற பாடல்கள் என்றென்றும் நெஞ்சில் இன்பத்தேனை ஊற்றுவனவாகும்.

"பூப்போல பூப்போலப் பிறக்கும், பால்போலப் பால்போல சிரிக்கும்,
மான்போல மான்போலத் துள்ளும்,தேன்போல இதயத்தை அள்ளும்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தப் பாடல்கள் எல்லாம் பிள்ளைகள் மீது பெற்றவர்களுக்கு இருக்கின்ற பிரியத்தைக் காட்டுவனவாகும். இந்தச் சங்கிலிப் பிணைப்பிலிருந்து எந்த மனிதனும் மீளமுடியாது என்பது வெள்ளிடைமலை.

அயோத்தி மன்னன் தசரதனுக்கு நீண்டகாலமாகப் பிள்ளைகள் இல்லாக் குறையிருந்து வந்தது. மகா முனிவர்கள் செய்த வேள்வியின் பயனாக தசரத மன்னனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் என்ற நான்கு பிள்ளைகள் தோன்றினார்கள். ஒப்பற்ற இராமனே தன் உயிரும் உடலும் என்று போற்றி வளர்த்தவர் தசரத மன்னன். அந்த மன்னனிடம் விசுவாமித்திர முனிவர் சென்று தான் காட்டுக்குச் சென்று செய்யப்போகும் பெருவேள்வியைக் காப்பதற்கு இராமனைத் தரவேண்டும் என்று கேட்கின்றார். அவ்வாறு கேட்கின்ற பொழுது தசரதன் அடைந்த நிலையை கம்பர் இப்படித்தான் வடித்துக்காட்டுகின்றார்.

தரு வனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு
    இடையுறா தவம் செய் வோர்கள்
வெருவரச் சென்று அடை காம வெகுளி என
    நிருதர் இடை விலக்கா வண்ணம்
செரு முகத்துக் காத்தி என நின் சிறுவர்
    நால் வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி என உயிர் இரக்கும்
    கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்.

எண் இலா அருந் தவத்தோன் இயம்பிய சொல்
    மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தா
    லெனச் செவியில் புகுதலோடும்
உள்நிலாவிய துயரம் பிடித்து உந்த
    ஆர் உயிர் நின்று ஊசலாட
கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
    கடுந் துயரம் கால வேலான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பாடலில் உன்னுடைய நான்கு பிள்ளைகளில் கரிய செம்மலாகிய இராமனைத் தருவாய் என்று அந்த முனிவன் கேட்டபோது, அந்தச் சொற்களானது தசரத மன்னனுடைய செவியில் தன்னுடைய உயிரைக் குடிக்க வந்த கூற்றுவனின் வாசகங்களாக ஒலித்தன. எனவே இராமன் தசரதனுக்கு உயிர் போன்றவன், இராமனை நீக்கினால் தசரதனிடத்தில் உயிர் இருக்கமுடியாது என்பது புலனாகின்றது.

இரண்டாவது பாடலில் சொல்லப்பட்ட விடயம் எண்ணுதற்கு அரியதான தவ வலிமையுடைய விசுவாசமித்திரன் உரைத்த வாசகம் பகைவரால் மார்பில் எறியப்பட்ட வேலினால் உண்டான புண்ணிலே நெருப்பினைப் பாய்ச்சினால் எப்படி இருக்கும்? அவ்வாறு வருத்தியது என்பதாகும். தசரதன் உள்ளத்தில் துயரம் நிறைந்த செய்தியை கம்பன் கூறும் விதம் அத்தகையது. அது மாத்திரமல்ல கண்ணில்லாத பிறவிக்குருடன் ஒருவன் உலகப் பொருள் அனைத்தும் கண்டுமகிழுமாறு கண்ணைப் பெற்று பின்னர், அதை இழந்தவன் போன்று துயர மடைந்தான். இங்கே கண்ணிலான் பெற்றிழந்தான் எனக் கூறுகின்ற உவமை உயிரினும் இனிய பிள்ளைப் பாசத்தினை உணர்த்துவதாய் அமைகின்றது. இப்படி காவியத்தில் கண்டு அனுபவித்த கவிதைச் சுவையின் அனுபவங்களை அதன் உருக்கத்தை புலவர் இளவாலை அமுது அவர்களின் பாடல்களில் கண்டு களிக்கலாம்.

அருட்திரு ஏ.ஜே.வி.சந்திரகாந்தன் அடிகளார் இளவாலை அமுதுப் புலவர் திரேசம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன். இவர் 10-03-1953 ஆம் ஆண்டு இளவாலையில் பிறந்தார். இளமைக் காலக் கல்வியை இளவாலை என்றியரசர் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார். இவர் 29-04-1979 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். தன்னுடைய குருத்துவப் படிப்பினைத் திருச்சியில் மேற்கொண்டார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறைகளுக்கு பீடாதிபதியாக இருந்தவர். சவேரியர் குருமடத்தில் விரிவுரையாளராகவும் விளங்கினார். கனடா கொங்கோடியாப் பல்கலைக்கழகத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்யியல் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் இருந்து தற்பொழுது ரொறன்ரோ மைக்கல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் மெய்யியல் நன்னெறி விரிவுரையாளராகவும், வைத்திய நன்னெறி ஆலோசகராகவும் பணிபுரிகின்றார். அது மாத்திரமல்லாமல் அனைத்து நாடுகளின் மெய்யியல் அறிஞர் மன்றங்களின் உறுப்பினராகவும் இருந்துகொண்டு பல ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். அத்துடன் பல நாடுகளுக்குச் சென்று சமாதானம் பற்றிய கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றார். இவர் குருப்பட்டம் பெற்று இருபத்தைந்தாண்டுகள் பணிபுரிந்து வெள்ளி விழாக் கொண்டாடியபொழுது இளவாலை அமுது அவர்கள் வழங்கிய வாழ்த்துக் கவிதைகள் தந்தையின் கவித்துவத்தையும் பெற்றெடுத்த அன்புமகனிடத்தில் இருக்கக்கூடிய உருக்கத்தையும் அவருக்கிருக்கக்கூடிய நிதானத்தையும் வெளிப்படுத்து வனவாகக் காணப்படுகின்றது. முதலாவது வாழ்த்து வெண்பாவிலே சந்தனத்தைத் தொட்டு பொட்டு வைக்கின்றார்.

புன்னகையும் தண்ணளியும் பொன்னுரையும் கண்ணியமும்
அன்னையெனும் நாட்டினிலே அன்புறவும் - தன்னகத்தே
கொண்ட சந்திர காந்தக் குருமணியின் வெள்ளிவிழாக்
கண்டிடுவோம் வாரீர் களித்து.

முக்கனி சிறந்த நாடு
முத்தமிழ் விளங்கும் நாடு
திக்குகள் போற்றும் நாடு
திருத்தலம் கொண்ட நாடு
மக்களின் பக்தி அன்பால்
மழைபெய்யும் புனித நாடு
கொக்குகள் நீந்தும் நன்னீர்
குளங்களைக் கொண்ட நாடு.

நல்லறம் காக்கும் நாடு
நாவினிலே இனிக்கும் தேவன்
கல்லறை வணங்கி என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதொழும் அடியார் நாடு
சொல்லரும் கல்விச்சாலை
சுடர் இளவாலை என்னும்
மல்லிகைச் சந்திர காந்தன்
மைந்தனார் பிறந்த நாடு

என்று தன் மைந்தன் பிறந்த இளவாலையின் நாட்டு வளம்பற்றி கூறுகின்றார்.

தந்தையாய் அன்புத் தாயாய்
தம்பியாய் அண்ணன் போலும்
சொந்தமாய்க் குருவாய் எங்கள்
தோழனாய் அடியா னாகிச்
சிந்தையில் பிறர்க்குச் சேவை
செய்வதால் சிறப்புப் பெற்றீர்
இந்த மா நிலத்திலோடும்
இன்னொரு நதியென் பாரோ

திருமகன் இயேசு – என்னைத்
திரும்பிப்பார் பின் செல் - என்ற
ஒருமொழி கேட்டு வாழ்வில்
ஊழியம் செய்ய எண்ணி
பருவத்தில் இன்பம் நீக்கி
பல்கலைத் துறைகள் தாண்டி
இருபத்தைந் தாண்டு காலம்
எல்லோருக்கும் பணிகள் செய்தீர்

என்ற தந்தையின் கவிதை வரிகள் இதயத்திலிருந்து பிறக்கின்ற சொற்சித்திரம். ஒரு தந்தையின் இரக்கத் துடிப்பினை எடுத்துக் காட்டவில்லையா? இருபத்தைந்தாண்டு என்ற புலவர் அமுதுவின் பாடலை உச்சரிக்கின்றபோது ஏழிரண்டு ஆண்டில் வாவென்று உரைத்த கம்பனின் கவிநாதம் கேட்கவில்லையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்தியம் தவறா வாழ்வு
தருமத்தின் இனிய சாயல்
நித்தமும் மனிதநேயம்
நெஞ்சினில் நாட்டுப் பற்று
புத்தகம் விரிக்கும் கைகள்
பொன்மொழி புகலும் நாவு
எத்திசை கால் வைத்தாலும்
யாதுமூர் என்ற போக்கு

இந்தப் பாடலில் மைந்தனின் இதயத்தையே திறந்து வைக்கின்றார் அமுதுப் புலவர். அடுத்து வரும் பாடல் மைந்தனிடத்திலுள்ள மட்டற்ற அன்பினையும் மதிப்பினையும் எடுத்துக் காட்டுகின்றது. உலகோர் உவக்கும் மைந்தன் வாழ்வை வியப்பூட்டிக் காட்டுகின்றது இந்தப் பாடல்.

மெல்லிய தென்றல் போலும்
வெண்ணிலா ஒளியைப் போலும்
நல்லரும் மலர்கள் செண்டில்
நறுமணம் பரம்பல் போலும்
கல்லினில் அரைத்த கட்டை
சந்தன மணத்தைப் போலும்
சொல்லொடு பொருளைக் கேட்டோர்
சுட்டிப் பாராட்டு வாரே.

தன் மைந்தனிடத்திலுள்ள அளவற்ற மதிப்பை இந்தப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

மங்கிடா ஊற்றாய் - கீரி
மலையினில் அருவி பாய்ந்து
பொங்கிடும் ஆங்கிலத்தில்
புத்தகம் இயற்றி வைத்தீர்
திங்களும் தென்றற் காற்றும்
திரிந்திடும் எழுத்தைக் கண்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கினில் முத்துப்போல
சான்றோரில் சிறந்து வாழ்க

என்ற அமுதுவின் கவிதை வரிகள் ஒரு முதிர்ந்த அனுபவம் கொண்ட தந்தையின் வாழ்த்துப் படிமங்களாகவும் உவமைச் சிறப்புக்கள் கொண்டதாகவும் காணப்படுகின்றன. புலவர் இளவாலை அமுது அவர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும், பேரலைகள் வந்து நெஞ்சைக் குலுக்கி அதிர வைத்த போதிலும் நிறைகுடமாகவே வாழ்ந்தார்.


வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்


என்ற வள்ளுவன் குறளுக்கு இளவாலை அமுதுப் புலவர் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஓர் எடுத்துக்காட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. இரு செவாலியர்கள்

## "தமிழர் வரலாற்று விழுமியம் சிவாஜி" - அமுது





செவாலியர் இளவாலை அமுது அவர்கள் மிக ஆழமாக நேசித்த ஒரு மகா கலைஞன் செவாலியர் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் ஆவார். இவரது சிம்மக்குரல் சிதறிப் பரவாத தெருக்களே கிடையாது என்று கூறுவார் அமுது.

பராசக்தி படத்தின் வருகையானது திரை உலகின் வரலாற்றையே திசை திருப்பிவிட்டது என்று அடிக்கடி கூறுபவர் இளவாலை அமுது அவர்கள். அமுதுவின் கவிதை உருவாக்கத்திற்கு இன்னோர் வகையில் களம் அமைத்தவர் என்ற வகையில் அந்தக் கலைஞனைப் பற்றி புலவர் அமுதுவுடன் உரையாடிய பக்கங்களை இங்கே பதியவைக்கின்றேன்.

"தமிழ் உச்சரிப்புக்கு சரியான அர்த்தத்தைக் கொடுத்து அதனைக் கம்பீரப்படுத்தி நடைமுறை வாழ்வியல் தத்துவங்கள் எல்லாம் நடிப்பிலே வெளிக்காட்டியவர்" என்று கூறுகின்றார்.

மேலும் அவர் சிவாஜிகணேசன் பற்றிக் குறிப்பிடுகையில் "சர்வ சாதாரண மக்களுடைய உள்ளத்தில் அவருடைய குரல் சாகாவரம் பெற்றுவிட்டன" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக "சிங்கத்திருநாடே நீ சிலந்திக்கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழவைத்த வளமார்ந்த தமிழகமே நீ சொந்த நாட்டாரையே சுரண்டுவது எத்தனை நாட்களாக? வீரப்பெண்களின் ஏடுகளை எழுதி ஏற்றம்பெற்ற என் அருமைப்பொன் நாடே நீ வீதிகளில் விலைமகளிரைத் திரியவிட்டு விழிகளை மூடிக்கொள்வது ஏன்?

வானத்தை முட்டும் மாளிகைகள், மானத்தை இழந்த மனிதர்கள்! உயர்ந்த கோபுரங்கள் தாழ்ந்த உள்ளங்கள், ஏய் தமிழ்நாடே, இதுதானா உன் பெருமை? தகுதி? யோக்கியதை?"

இவ்வாறு கலைஞர் கருணாநிதியின் வசனங்கள் சிவாஜியின் சிம்மக்குரலில் சிதறிப்பரவாத தெருக்கள் இல்லை.

"வானம் பொழியுது, பூமி விளையுது. உனக்கேன் கொடுப்பது வட்டி?" என்று சிவாஜிகணேசன் உறுமிக்கொண்டு கேட்பது மக்கள் மனதிலேயே பாடமாகிவிட்டன.

தனது பத்து வயதிலே நாடகக் குழுவிலே சேர்ந்து கொண்ட சிவாஜிகணேசன் அவர்கள் காலை ஐந்து மணிக்கு எழுந்து தேகப் பயிற்சி, பாடற் பயிற்சி, நடிப்புப் பயிற்சி, நடனப் பயிற்சி என்று பல பயிற்சிகளை மேற்கொள்ளுவார். இதன் நோக்கம் நடிப்புத் துறையில் தான் ஒரு பெரும் சாதனை புரியவேண்டும் என்பதே இவருடைய குறிக்கோள். வீரசிவாஜி என்னும் நாடகத்தில் வெகு சிறப்பாக நடித்தார். அவருடைய நடிப்பின் ஆற்றலைக் கண்டு திராவிட கழகத்தின் தலைவர் பெரியார் அவர்கள் சிவாஜி என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார். அன்றிலிருந்து கணேசன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் சிவாஜிகணேசன் என்ற சிறப்பைப் பெற்றார்.

நடிப்புக் கலை தொடங்கிய காலந்தொட்டு பல்வகையான பாத்திரங்களைத் தமிழ் மக்கள் ஏற்று நடித்திருக்கின்றார்கள். அதில் பல்வகை சார்ந்த பாத்திரங்களை ஏற்று நடிப்பதில் ஈடிணையற்ற ஒரு நடிகன் சிவாஜிகணேசன் என்று அமுதுப் புலவர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறுவார். ஒரு நடிகன் தன்னுடைய நடிப்பினால் எந்தச் சுவையைக் காட்ட விரும்புகின்றானோ அதனைப் பார்க்கின்றவரும் அந்தச் சுவையை அனுபவிப்பார்கள். அத்தகைய ஒரு நடிப்பினை என் வாழ்நாட்களில் நான் கண்டுகொண்டது சிவாஜிகணேசன் அவர் களிடத்தில்தானென்று அமுதுப் புலவர் குறிப்பிடுவது நடிகர் திலகத்திடம் அமுதுப் புலவருக்கு இருந்த ஆழ்ந்த இரசனையை எடுத்துக் காட்டுகின்றது.

மெய்ப்பாட்டியல் கூறுகின்ற எந்தவொரு சுவையையும் குறையவிடாமல் வெளிப்படுத்திக் காட்டிய அற்புதமான ஆற்றலை அவரிடம் நான் கண்டுகொண்டேன் என்று வாயூறி நிற்பார் அமுதுப் புலவர் அவர்கள்.

1974 ஆம் ஆண்டு, நடிப்புக் கலையின் சிகரமாக விளங்கும் சிவாஜிகணேசனுடைய திறமையைப் பாராட்டி பிரான்ஸ் நாட்டுக் குடியரசின் கலை இலக்கியத் துறை அமைச்சர் செவாலியர் என்ற அதியுயர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

நடிகர்திலகம் இந்த மண்ணைவிட்டு மறைந்த துயரமான அந்த நாளில் கனத்த நெஞ்சோடு நானும் நண்பரும் அமுதுவிடம் சென்றோம். என்னைக் கண்டவுடனே மிக வருத்தத்துடன் என்ன தம்பி, உன்னுடைய ஆள் போய்விட்டார், உலகத் தமிழர்களின் வரலாற்று விழுமியம் ஒன்றை இழந்து விட்டோம் என்றார். மிக நீண்ட நேரமாக அவரின் திரையுலகச் சாதனைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அமுது அவர்கள் கவிஞர் கண்ணதாசனின் "மலர்ந்தும் மலராத பாதிமலர்போல" என்ற பாடலில் வரும்,

"நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந் தென்றலே, வளர் பொதிகைமலை தோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே" என்ற வரிகளைக் குறிப்பிட்டு,

"அடடா இப்படிப் பாட்டெழுத இனி யார் இருக்கிறார். அந்த அற்புதமான பாடல் வரிகளும், அதற்குள் பொதிந்துள்ள இசையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடகனின் தேன்மதுரக் குரலும், அவற்றை எல்லாம் உள்வாங்கி அந்தப் பாடலின் உயிர்த்துடிப்பு ஒரு துளியும் சிந்தாமல் சிதறாமல் வெளிப்படுத்திய மகா கலைஞன் சிவாஜி கணேசனுடைய நடிப்பாற்றல் அத்தனையும் இந்த மண்ணும் கடல்வானும் மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா." என்ற தன்மையை நடிப்பின் அமரத்தன்மையின் நீடித்த நித்தியத்தன்மையோடு உருவகப்படுத்தினார்.

'இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்' என்ற நூலில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றபொழுது "என் சிந்தனையில் நடிக்கும் நடிகர் திலகமே உங்கள் நடை, சிரிப்பு, கோபம், துயரம் என் ஆன்மாவின் அந்தரங்க அறைக்குள் எல்லாம் சென்று தங்கிவிட்டதே. உங்கள் வசனநடையினைக் கேட்டதில் என் ஆத்மாவிலிருந்து கவிதை பிறந்திருக்கின்றது" என்கின்றார். இளவாலை அமுது அவர்களின் இரசனையைக் குறிப்பதற்காக இந்தப் பகுதியை அமைக்கின்றேன். ஓய்வுநேரங்களில் அமுது அவர்களுடன் நாங்கள் உரையாடுகின்றபொழுது அவர் தருகின்ற கோப்பியையும் சிற்றுண்டியையும் அருந்திக்கொண்டு அளவளாவிய சுவையான பக்கங்கள் இவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. அமரர் கல்கி, கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன், பேரறிஞர் அண்ணா, சிந்தனைப் பண்ணையில் சங்கமித்த தமிழ்க் கங்கை



அமரர் கல்கி, அவர்கள் ஒரு எழுத்துலகின் வரலாறு. இலக்கிய மேதமையும் படைப்புக் கூர்மையும் கைகுலுக்கிக் கொள்ளும் அபூர்வமான பொழுதுகளில் மறக்கமுடியாத மாபெரும் இலக்கியங்கள் உருவாகுகின்றன. அந்த வகையில் 1941 – 1951 இடைப்பட்ட காலம் கல்கி அவர்களின் நாவல் இலக்கியத்தின் எழுச்சிக் காலம் என்று அமுது குறிப்பிடுகின்றார்.

பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், அலையோசை, பொன்னியின் செல்வன் என்னும் புகழ் மணக்கும் நான்கு வரலாற்று நாவல்களும் இந்தக் காலகட்டத்தில்தான் தோற்றம் பெற்றன. கல்கியின் நாவல் இலக்கியம் வாசகப் பெருமக்களின் இதயங்களை ஈர்த்து இன்புறுத்தியது. அமரர் கல்கி அவர்கள் பன்முகச்சிறப்புக் கொண்டவர். விடுதலைப் போராட்ட வீரர், பத்திரிகையாளர், திறனாய்வாளர், அரசியற் கட்டுரையாளர், நகைச்சுவை எழுத்தாளர், சமூகத்தொண்டன், சிறுகதை வித்தகர், நாவற்படைப்பாளர், பாடலாசிரியர் என்று பன்முகத்தன்மையை டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் இவ்வாறு அடுக்கிக்கொண்டே செல்வார்.

கலைகள் தெய்வீக இன்பங்கள் மட்டும் அல்ல. மனித வாழ்வை செழுமைப்படுத்துகின்ற அழகு உணர்வின் பெருக்கு என்று தொட்டுக் காட்டினார். வீரம் என்பது கத்தி முனையில் அல்ல. அறிவும் மனிதரை அரவணைக்கும் நேர்த்தியிலும் என்று விளக்கினார். காதல் என்பது ஆண் பெண் இருவரும் ஒருவரிடத்தில் ஒருவர் கொள்ளும் அன்பு மட்டுமல்ல தியாகமும் கூட என்று பாத்திரங்கள் வழி உணர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலக்கியம் என்பது சொற்களால் புனையும் ஓவியமல்ல. தூய்மையான பண்புகளை விளக்கிக் காட்டுகின்ற வித்தை என்பதனை விளக்கி வைத்தார்.

அமரர் கல்கி அவர்களின் பேராற்றலில் கிளர்ந்த கருவூலங்களைத் தன் நெஞ்சத்தில் ஆழமாக உள்வாங்கிக் கொண்டவர் புலவர் இளவாலை அமுது அவர்கள் என்பதனை, புலவர் அமுது அவர்களின் கல்கிபற்றிய கட்டுரைகள் எடுத்துவிளக்கியுள்ளன.

புலவர் இளவாலை அமுது அவர்கள் பள்ளிக்கூடம் போகும்போது ஆனந்தவிகடன் பத்திரிகையைத் தனது மடியிற்குள் மறைத்துக் கொண்டு போவார். காரணம் அக்காலம் சஞ்சிகைகளை மாணவர்கள் பள்ளிக்கூடம் கொண்டு செல்ல நிர்வாகம் தடைவிதித்திருந்தது. இருப்பினும் அமரர் கல்கி அவர்களின் எழுத்தில் கொண்ட இச்சையினால் அதை மறைத்துக் கொண்டுபோய் சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லாம் வாசிப்பார். கல்கியின் பன்முகம் சார்ந்த எழுத்து அமுதுவைச் சிறைப்படுத்தியது. அமரர் கல்கி அவர்களின் எழுத்தோட்டங்களை தானும் வழியொற்றி நடக்க முயன்றார்.

புலவர் இளவாலை அமுது அவர்களுக்கு கல்கியை நேரில் பார்க்க வேண்டும் என்ற பேராசை இருந்து வந்தது. அவருடைய பொற்காலம் அந்த ஆசையும் நிறைவேறியது. 1938 ஆம் ஆண்டு அமரர் கல்கி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்தார். அவருடன் ஓவியர் மாலி அவர்களும் வந்திருந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடந்த சிறப்பு விழாவிலே இளவாலை அமுது அவர்கள் அமரர் கல்கி அவர்களையும் ஓவியர் மாலி அவர்களையும் தரிசனம் செய்து அவர்களுடன் உரையாடித் தன் விருப்பத்தை நிறைவு செய்து கொண்டார்.

அமரர் கல்கி அவர்களைத் தன் நெஞ்சிலே ஆழமாகப் பதிய வைத்ததினால் எழுத்துலகில் இளவாலை அமுது அவர்கள் சின்னக்கல்கி என்ற பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கல்கி அவர்களிடத்தில் அமுதுப் புலவர் அவர்களுக்கு இருந்த இலக்கிய நெருக்கத்தினைப் பின்வரும் அமுதுவின் பாடல் உணர்த்துகின்றது.

சிந்தனையில் செழிப்புற்ற நந்தவனம் கல்கி
தேசத்தின் தேரிழுக்க வடம்பிடித்த தியாகி
செந்தமிழில் சந்தனமும் மல்லிகையும் மணக்கத்
தேன் சேர்த்து நாவூறும் வசனநடை எழுதி
விந்தைபெறும் சிறுகதைகள், நாவல்களைப் புனைந்து
விரும்புகின்ற கரும்பாக்கி விளைநிலத்தில் நட்டோன்
நந்தாத எழுத்துலகின் பண்ணையிலே கலைஞன்
நட்டு வைத்த பூ மரங்கள் நறுமணத்தை வீசும்.

இளவாலையில் இருந்த ஏகலைவனுக்கு துரோணராக இருந்தவர் அமரர் கல்கி என்பது அமுதுவின் வாசகங்களாகும். மேலும் கல்கி அவர்களைக் குறித்து அழகிய வானத்தில் சந்திரன் மிதப்பதுபோல தமிழ் வானத்தில் கல்கி வலம் வந்தார். கல்கியின் படைப்புக்கள் தமிழர் இல்லங்களின் வெள்ளித் தாம்பாளங்கள் என்று வாழ்த்தி நிற்பதும் மனங்கொள்ளத்தக்கது.

அமரர் கல்கியின் படைப்பினில் முற்றுமுழுதாகத் தோய்ந்த அமுது ஈழமண்ணின் இலக்கியப் பெருமக்களால் சின்னக்கல்கி என்று போற்றப்பட்டார்.

## கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன்

அமுது அவர்கள் கலைவாணர் பற்றி இப்படிச் சொல்கிறார். "சிரிப்பு டாக்டர் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் அவர்களின் இடத்தை இன்று வரை யாரும் நிரப்பவில்லை. வீட்டிலே திருட வந்த திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து அவனுக்கு காசும் உடுப்புக்களும் கொடுத்து இனிமேல் நீ இந்தப் பழக்கத்தை விட்டு விடு. தொழில் ஏதாவது செய்து புகழைச் சம்பாதி என்று திருட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவனையும் நண்பனாக்கி அறிவுரை வழங்கியவர் என்.எஸ். கிருஸ்ணன்.



மிகுந்த ஏழையாக இருந்து திரைப் படத்துறையில் முன்னேறி செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் அவர்கள். அவர் ஒருமுறை சென்னையில் ஒரு விழாவில் பேசியபோது இன்று நான் படம் நடித்து காசு வருகின்றபடியினால் மக்கள் பேசுகின்ற அளவில் நான் ஒரு பணக்காரன்தான் என்பதை ஒத்துக்கொள்கின்றேன். ஆனால் நான் இறக்கும்போது பணக்காரனாக இறக்கமாட்டேன். காரணம் என்னிடம் வந்து சேரும் பணத்துக்கும் பணக்காரனிடம் வந்து சேரும் பணத்திற்கும் வேறுபாடு உண்டு. என்னிடம் வரும் பணம் ஏழைகளுக்கு உதவும். பணக்காரர்களிடம் வரும் பணம் ஏழைகளையே உறிஞ்சும் என்றார்.

1944 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரில் மக்கள் கஷ்டத்தில் வாடிய வேளையில் என்.எஸ்.கேயின் பணம் ஏழைகளின் பசிதீர்க்கும் அரிசி மூடையாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது. தன் வாழ்நாள் முழுவதும் தான் உழைக்கும் பணம் ஏழைகளுக்கு உதவவேண்டும் என்பதில் திடமான நோக்கம் கொண்டு வாழ்ந்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் அவர்கள்." கலைவாணர் என்.எஸ். கே அவர்களின் நடிப்பிலும் நகைச்சுவையிலும் மிகுந்த பற்றுக்கொண்ட இளவாலை அமுது அவர்கள் பின்னாளில் நகைச்சுவைப் பேச்சில் தனக்கொரு முத்திரையைப் பதித்துக் கொண்டார். கலைவாணரின் வாழ்க்கை வரலாற்றை முற்றுமுழுதாகத் தெரிந்துகொண்டவர்தான் புலவர் இளவாலை அமுது அவர்கள்.

"கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் அவர்கள் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஒன்றுக்காக யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிக்கு வந்திருந்தார். அந்த நிகழ்ச்சி அமைப்புக் குழுவுடன் எனக்கு மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணக்கம் இருந்தது. அந்த வகையில் நிகழ்ச்சிக்கு முன்பாக நான் சில நண்பர்களைக் கூட்டிக்கொண்டு கலைவாணரை நேரில் சந்தித்தேன். அப்பொழுது மிகுந்த புன்னகையுடன் வாருங்கோ தம்பியவை என்று சொல்லித் தன்னுடைய நகைச்சுவைப் பாணியில் எங்களுடன் பேசினார். நாங்களும் பதிலுக்குப் பேசிவிட்டு கலைவாணரிடம் ஒரு விடயத்தைக் கூறினேன்.

ஐயா! உங்களுடைய நிகழ்ச்சிக்கு பெருந்திரளான மக்கள் வந்திருக்கின்றார்கள். இந்த மக்கள் மிகுந்த சமயப் பற்றுடையவர்கள், கடவுள் நம்பிக்கையுடையவர்கள். எனவே நீங்கள் நிகழ்ச்சியைத் தொடங்கும்போது கடவுள் பெயரால் ஒரு வணக்கத்தைச் சொல்லிவிட்டு நிகழ்ச்சியைத் தொடங்கினால் வெகுசிறப்பாக இருக்கும். இங்குள்ள மக்களும் அதனை மிகவும் விரும்புவார்கள் என்று கூறினேன். சிரித்தபடியே சொன்னார், ஆகட்டும் தம்பி நீங்கள் சொல்லிவிட்டீர்கள் அசத்திவிடுகிறேன் என்றார். சரி என்று சொல்லிவிட்டு நாங்கள் முன்வரிசையில் இருந்தோம்.

என்.எஸ்.கிருஸ்ணன் அவர்கள் மேடையில் தோன்றினார். கரகோஷம் வானத்தைப் பிளந்துகொண்டு சென்றது. இவர் என்ன கடவுள் வாழ்த்து பாடுகின்றார் பார்ப்பம் என்று ஆவலுடன் இருந்தேன். மேடைக்கு அவர் வந்த வேகத்தில் மிகுந்த கம்பீரமான குரலில் படார் என்ற ஒரு சொல் காதைக் கிழித்தது. மீண்டும் படார் படார் படார் என்று மூன்று முறை உயர்ந்த தொனியில் அந்தக் குரல் அதிர்ந்தது. நானும் அதிர்ந்துபோய் விட்டேன். என்னடா இவன், பாவி படார் படார் என்கிறான். இவரிட்ட ஏன் நாங்கள் மினைக்கெட்டுப் போனோம் என்று எண்ணும்போது அடுத்து அவரிடமிருந்து வந்த வார்த்தை கைவிடப்படார். மூன்றாவதாக வந்த வார்த்தை "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்." என்று அவர் நிகழ்ச்சியை ஆரம்பித்தபோது மக்கள் உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆனந்தத் தாண்டவமாடியது." இத்தகைய நகைச்சுவை அனுபவங்களை நெஞ்சிலே வைத்து மீட்டிப்பார்த்தவர் இளவாலை அமுது அவர்கள். இதனால்தான் அவருடைய பேச்சிலும் நகைச்சுவை இரண்டறக் கலந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.எஸ்.கிருஸ்ணன் அவர்கள் ரசிகர்களை எப்படி சிரிப்பில் ஆழ்த்தினாரோ அந்த வழியில் செவாலியர் அமுது அவர்களும் இலக்கிய ரசிகர்களை வயிறுகுலுங்கச் சிரிக்க வைத்தார் என்பதற்கு இலண்டன்வாழ் தமிழ் மக்கள் பெரும்சாட்சி.

## பேரறிஞர் அண்ணா



பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுத்துத் துறையில் தொடாத பகுதியில்லை என்றே கூறவேண்டும். அறிஞர் அண்ணாவின் நாடகத்தைப் பார்த்துவிட்டுத் தமிழ் நாடக உலகிற்கு ஒரு பெர்னாட்ஷா கிடைத்து விட்டார் என்று பாராட்டியவர் அமரர் கல்கி கிருஸ்ண மூர்த்தி அவர்கள். பகுத்தறிவு வாதியான அறிஞர் அண்ணா அவர்கள் தனது கடவுள் கொள்கையை விளக்கும் போது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றும், நான் காவி தரிக்காத இந்து என்றும், சிலுவை அணியாத கிறிஸ்தவன் என்றும் விளக்கிச் சென்றவர்.

சென்னையில் நடந்த ஒரு மாநாட்டில் என் இலட்சிய பூமி எது என்பதை அண்ணா அவர்கள் விளக்கிய விதம் அற்புதமானது. "எல்லோரும் இன்புற்று வாழும் இடம்தான் என் இலட்சிய பூமி. ஒருவரை ஒருவர் அழுத்தாமல், ஒருவரை ஒருவர் சுரண்டாமல், எல்லோருக்காகவும் நான், எனக்காக எல்லோரும் என்ற முறையில் சமூகம் அமையவேண்டும். அதுவே என் இலட்சிய பூமி" என்றார். அண்ணாவின் மொழிச் சிந்தனையை ஆழமாக நேசித்தவர் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் படைப்புக் களைத் தேடியெடுத்து ஆர்வத்துடன் படித்து அந்த அழகு மொழி நடையில் மிகுந்த நாட்டம் கொண்டவர் அமுதுப் புலவர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழி என்பது மக்கள் செல்வம். அது அவரவர் உணர்வின் ஊற்று. அவரவர் அறிவுப் பயிர் செழிக்கும் வயல். உயிர்கள் தழைக்க இன்றியமையாதது மழை. மனித மனங்கள் தழைக்க இன்றியமையாதது அவர் தம் மொழி. அந்தவகையில் எமக்குத் தாய்மொழி தமிழ். அதுவே தமிழர் வாழ்வின் விழி. அந்த விழியைப் பழுதுபடுத்துபவர்கள் எவராயினும் அந்த இனத்துக்குக் கேடு செய்பவர்கள் என்று மொழியின் ஆழ்ந்த கருத்தினை விளக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள். தமிழன் வாழ்வு நெறியை நன்கு உணர்த்த தமிழ்மொழி ஒன்றே போதும் என்பார் அண்ணா. வடமொழி போன்ற பிறமொழிகளை நீக்கவேண்டும். தனித்தே வளரக்கூடியது தமிழ்மொழி என்பதனை நிலைநாட்டுவதே தமிழன் இனமானம் காக்கும் நெறி என்று அழுத்திக் கூறினார்.

பேரறிஞர் அண்ணாவின் இத்தகைய மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இளவாலை அமுது அவர்களின் ஆத்மாவில் புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்ததை அவருடைய உரையாடலிலிருந்து அறிந்துகொண்டேன்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கவிதை, தொல்காப்பியப் பூங்கா, குறளோவியம் போன்ற இலக்கியப் படைப்புகளாலும், திரை வசனங்களாலும் ஈர்க்கப்பட்ட அமுதுப் புலவர் அவர்கள் கலைஞர் கருணாநிதியின் தமிழ் ஆற்றலைப் பகிர்ந்த பொற்தருணங்களை நினைவு கூருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணத்தில் பலம்வாய்ந்த அரசியல் மேடைகளில் புலவர் அமுதுவின் குரல் ஓங்கிஒலித்தது என்பது வரலாறு.

இந்த அரசியல் ஆளுமைகளை இவ்வாறு வளர்த்துக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. அமுதுப்புலவருடன் அஞ்சல், நாழிகை ஆசிரியர் மாலி, விரிவுரையாளர் மு.நித்தியானந்தன்



“மௌனமாய் இரு அப்போதுதான் மனச்சாட்சியின் மெல்லிய குரல் உனக்குக் கேட்கும்” என்றார் மகாத்மா காந்தியடிகள். அந்த மௌனத்தில் விளைந்து முற்றிய ஓர் எழுத்தாளரையும் ஒரு பேனா மன்னனையும் இந்த நாட்டில் காணவேண்டும் என்றால் அது மாலி அவர்கள் என்று தன் நெஞ்சார வாழ்த்துகின்றவர் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள்.

பேனா மன்னன் என்ற அமுதுவின் வார்த்தையைக் கேட்கும்போது எனக்கு வேறு ஒன்று நினைவில் வருகிறது. முன்னர் பேனா மன்னன் என்று போற்றப்பட்டவர் அமரர் கல்கி அவர்கள். இந்த இருவரையும் மிக ஆழமாக நேசித்தவர் அமுதுப் புலவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

அமரர் கல்கி அவர்களின் எழுத்தின் வீரியத்தை திரு. மாலி அவர்களிடத்தில் காணலாம் என்று அமுதுப் புலவர் அவர்கள் கௌரவிப்பதுண்டு. உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்வதானால் ஓர் அற்புதமான சங்கீதக் கச்சேரியை, நடனத்தை மேடையில் பார்த்து அனுபவித்த ஆனந்தத்தைவிட மாலி அவர்கள் எழுதும் விமர்சனங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்னும் மிகுந்த ஆனந்தத்தை ஏற்படுத்தும் என்று அமுது அவர்கள் கூறுவார்கள்.

நீண்டகாலம் பத்திரிகைத்துறை, அரசியற்துறை அனுபவம் கொண்ட மாலி அவர்களிடம் இளவாலை அமுதுப் புலவர் அவர்களுக்கு ஓர் உயர்ந்த நட்பு இருந்தது என்றே கூறலாம். அமுதுப் புலவர் அவர்களின் எந்த இலக்கிய மேடையிலும் மாலி அவர்களின் மேதைத் தன்மை வெளிப்படுவதைக் கண்டு மகிழலாம். மாலி அவர்களுடைய பேச்சிலே எப்பொழுதும் ஓர் அமைதியும் ஒரு தெளிவும் உள்ளத்திற்கு விருந்தளிக்கும் இதமும் கலந்திருப்பதனை மக்கள் இனங்கண்டு கொள்வார்கள். இருவரும் பசுமைத் தீவாம் நெடுந்தீவின் தோன்றல்கள் என்பதனாலோ என்னவோ அமுதுவும் மாலியும் ஒருவரையொருவர் ஆழமாக நேசித்தார்கள்.

**விரிவுரையாளர் மு.நித்தியானந்தன்**



இலக்கிய சங்கமத்தின் நினைவுப் பெருவிழாக்களில் அமுதுப் புலவருடன் இணைந்து விழாவினை அலங்கரிக்கின்ற அறிஞர் திரு.மு. நித்தியானந்தன் அவர்கள்.

இளவாலை அமுது இடத்தில் பேரன்பு கொண்டவர்களில் மு.நித்தியானந்தன் அவர்கள் மிக முக்கியமான ஒருவர். என்னுடைய வீட்டில் நடந்த பல இலக்கிய சந்திப்புக்களில் அந்த இருவருக்கும் இடையிலான அந்நியோந்நியத்தை என் கண்களால் கண்டு களித்திருக்கின்றேன்.

திரு.மு.நித்தியானந்தன் அவர்களைப் பற்றி அமுது அவர்கள் கூறுகின்ற வாசகங்கள் இவை:

“இவர் தீபம் தொலைக்காட்சியின் ஒரு சிற்பி. பல காரியங்களைச் சிந்தித்து அவற்றை ஒரே மனிதனாகச் சாதிக்கும் பல்கலைக்கழகம். இளஞ் சமுதாயத்தினரை ஊக்குவித்து ஊடகத்துறையில் கலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் வழிகாட்டும் விடிவெள்ளி. நூல் ஆய்வில் பலாக்கனி பதம்பார்ப்பதுபோல் கொட்டைவேறு, சுளைவேறு, குந்துவேறாக்கிச் சுளையின் இனிமையை சுட்டிக்காட்டும் விமர்சகர். சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒரேகோட்டில் செல்லும் மாண்பாளன். தன்னை விட என்னை நன்றாக நேசிப்பவர்."

பெறுமதிமிகு இவரின் விமர்சனம் எழுத்தாளருக்கு ஒரு கையேடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. அமுதத்தமிழுக்கு களம்அமைத்த புதினம் ஆசிரியரின் நெஞ்சோடு



"பிறந்து தவழ்ந்து வளர்ந்து அளைந்து ஓடியாடி உயிராக நேசித்த தாயகமண்ணை என்னால் மறக்கமுடியவில்லை. இலங்கையில் நான் வாழ்ந்த காலத்திலும் சரி இலண்டன் வந்து சேர்ந்தது முதல் இன்றுவரையும் எனக்குத் தெரிந்த ஒரேயொரு துறை பத்திரிகைத் துறை ஒன்றே. அது என்னோடு இரண்டறக்கலந்து என் இதயத்திலே வாழ்கின்றது." இவ்வாறு கூறுபவர் யார் தெரியுமா? இவர்தான் உலக சிந்தனைகளையும் ஆழமான தனது பத்திரிகை அனுபவங்களையும் உள்வாங்கிக் கொண்டு இலண்டன் வாழ் எம் தமிழ் பேசும் இனத்த வர்கள் மத்தியிலே புத்துணர்வையும் மண் வாசனையையும் ஊட்டும் வண்ணம் புதினம் என்கின்ற பத்திரிகையை நடாத்திவரும் திரு. இராஜகோபால் அவர்களாவார்.

இலக்கியநேசம் கொண்ட புதினம் ஆசிரியர் அவர்கள் அமுதுப்புலவர் பற்றி: "தமிழைப் பிழிந்து சாறாக்கி உள்ளத்தை ஊடுருவும் இளமை எழுத்துக்களால் என் நெஞ்சைவருடும் சக்தி புலவர்மணி செவாலியர் இளவாலை அமுது அவர்கள். அவர் பேச்சைக் கேட்கின்றபோதெல்லாம் என்னை நான் மறந்து வாய்விட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திருக்கின்றேன். அவர் என் இதயமேடையில் சிம்மாசனமிட்டு மௌனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்."

புலவர் இளவாலை அமுது அவர்கள் இலண்டன் வந்து சேர்ந்த காலத்தில் அந்தப் புலவனுக்கு ஓர் உந்துசக்தியாக அவரின் புலமைக்குக் களம் அமைத்துக் கொடுத்த பெருமைக்குரியவர் புதினம் ஆசிரியர் திரு. இராஜகோபால் அவர்கள் என்றால் அது மிகையாகாது. புதினம் பத்திரிகை பற்றி விளக்கம் தருகின்ற மூத்த பத்திரிகையாளர் பொன். பாலசுந்தரம் அவர்கள் புதினம் ஆசிரியரைப் பற்றி எடுத்துரைக்கின்ற விடயங்கள் இங்கு நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆசிரியர் திரு. இராஜகோபால் அவர்கள் ஈழநாடு பத்திரிகையின் சகல துறைகளிலும் ஆணிவேராக இருந்து செயற்பட்டவர் என்று பெருமைப்படுத்துகின்றார். இலண்டனிலிருந்து வெளியாகிக் கொண்டிருக்கின்ற புதினம் பத்திரிகை அரசியல், கலை, பண்பாடு, சமயம் போன்ற பல செய்திகளைத் தாங்கி வருகின்ற ஒரு பத்திரிகையாக - சிறுகதை, கவிதை, இலக்கியம் உட்பட எழுத்துத் துறையில் ஆர்வம் உள்ளவர் அனைவருக்கும் தளம் அமைத்துக் கொடுத்து மனச்சாந்தி செய்தது புதினமே என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் பொன். பாலசுந்தரம் அவர்கள், இலண்டனில் புதினத்தில் பேர் பதிக்காத எழுத்தாளர்கள் இல்லை என்று சொல்வது இலண்டனில் புதினம் பத்திரிகையின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்"

புதினம் ஆசிரியர் அவர்களுடைய விசேட பண்பினைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது இவர் ஏனைய எழுத்தாளர்களைப் படையுங்கள் என்று ஊக்கம் கொடுப்பதுடன் அவற்றைப் புத்தகமாகப் பிரசுரியுங்கள் என்று தூண்டுவது பல எழுத்தாளர்களைப் படைப்பாளிகளாக தமிழ் உலகிற்கு அறிமுகமாக்கி இருக்கின்றது என்று குறிப்பிடலாம். அந்த வகையில் திரு. இராஜகோபால் அவர்களின் இடைவிடாத ஊக்கமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தட்டிக்கொடுப்பும், இடைவிடாத தூண்டலினாலும் வெளியான அரும்பெரும் படைப்பே இளவாலை அமுது அவர்களின் "இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்ற அரிய பொக்கிஷமாகும்.

இளவாலை அமுது அவர்களின் உள்ளத்தில் இடம்பிடித்த பல்துறை சார்ந்த அறிஞர்களின் வாழ்க்கைப் பதிவுகளை தாங்கி வந்த இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் என்னும் நூல் புதினம் பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின்போது புதினம் ஆசிரியரின் கடின உழைப்பினால் உருவானது என்று கூறலாம். இந்த நூலில் இடம்பெற்ற அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் ஒவ்வொரு புதினம் பத்திரிகையிலும் தனித்தனிக் கட்டுரையாகப் பிரசுரிக்கப்பட்டு அது அநேக மக்களின் பாராட்டுக்களைப் பெற்றது. பத்திரிகை ஒவ்வொன்றும் வெளியானபோது புதினம் ஆசிரியர் அமுது அவர்களைத் தொடர்புகொண்டு ஐயா இந்த வாரப் பத்திரிகைக்குக் கட்டுரை முடிந்துவிட்டதா என்று தொலைபேசியில் கேட்டால், இராசா! பிள்ளையார் சுழி போட்டுவிட்டேன் விரைவாக முடித்துவிடுவேன் என்று பதில் கூறுவார். இப்படி பலவகையில் புதினம் ஆசிரியர் அவர்கள் ஊக்கம் கொடுத்து வெளியானதே இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் என்ற நூலாகும்.

"ஒரு கால வரலாற்றின் ஆவணம்."

இந்த நூலின் சிறப்பினைக் குறிப்பிட்டு பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. சிவலிங்கராஜா அவர்கள் இந்த நூலை ஒரு கால வரலாற்றின் ஆவணமாகக் கொள்ளலாம் என்று குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது. அத்தகைய சிறப்பு வாய்ந்த நூல் ஒன்று உருவாகுவதில் புலவர் அமுது அவர்களும் புதினம் பத்திரிகை ஆசிரியர் அவர்களும் மிகுந்த ஜீவத்துடிப்புடன் இணைந்து செயற்பட்டது மனங்கொள்ளத்தக்கது.

இளவாலை அமுது அவர்களின் நகைச்சுவைப் பேச்சையும் எழுத்தையும் கவிதையையும் மிக ஆழமாக நேசித்தவர், இரசித்தவர் புதினம் ஆசிரியர் திரு. இராஜகோபால் அவர்கள். இவரை மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த ஒரு கலைப்பிரியன் என்று புலவர் இளவாலை அமுது அவர்கள் அடிக்கடி மேடையில் கூறுவதை அவதானிக்கலாம். திரு. இராஜகோபால் அவர்களுடன் மடுமாதா காவியம் வெளியீட்டு விழாவிற்கு சிறப்புரையாற்ற வருகைதந்திருந்த ஆனந்தி சூரியப்பிரகாசம் (இலண்டன் பி.பி.ஸி. தமிழோசை) அவர்கள் அன்றைய அமுதுவின் நகைச்சுவைப் பேச்சில் தன்னை மறந்து இரசித்ததுடன் அன்றிலிருந்து அமுது அவர்களுடைய இலக்கியத் தொடர்பினைப் பேணி வந்துள்ளார். மடுமாதா காவிய வெளியீட்டு விழா நிறைவடைந்த வேளையில் புதினம் ஆசிரியரும் ஆனந்தி அவர்களும் மேடைக்குச் சென்று அமுதுவின் அந்த அழகான நகைச்சுவைப் பேச்சினை இருவரும் வாழ்த்தி நின்றார்கள்.

நூறு கோடி மக்களின் தலைவரான பாப்பரசர் செவாலியர் என்ற பட்டத்தைப் புலவர் இளவாலை அமுது அவர்களுக்கு வழங்கினார். புலவர் அமுது அவர்களுடைய தமிழ்மொழி சமயப் பண்பாடு என்ற பல்துறைமிக்க அவரது சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் கெளரவ கலாநிதி பட்டமளித்து கெளரவித்தது. இத்தகைய மூதறிஞர் ஒருவரின் அனுபவ ஞான விடயங்களை வெளிக்கொணர்வதில் புதினம் பத்திரிகை தனது ஒவ்வொரு பக்கங்களையும் புலவர் அமுது அவர்களுக்காக வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. புலவர் அமுது மாத்திரமன்றி அவருடைய குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரையும் நேசித்தவர் புதினம் ஆசிரியர் அவர்கள். புலவர் இளவாலை அமுது அவர்களின் எந்தவொரு இலக்கிய நிகழ்வாக இருந்தாலும் சரி, பட்டமளிப்பு விடயமாகிலும் சரி, பிறந்தநாள் போன்ற அவரது சொந்த விடயமானாலும் சரி அனைத்து விடயங்களிலும் புலவர் அமுது அவர்களுடைய வாழ்க்கையில் புதினம் பத்திரிகை மிகுந்த பங்கினை வகுத்துள்ளமை தெளிவாகும். இளவாலை அமுது அவர்கள் இந்த மண்ணைவிட்டுப் பிரிந்தபோது புதினம் பத்திரிகை தன் முழுப் பக்கங்களையும் கண்ணீரில் மூழ்கச் செய்தது ஒரு முக்கிய அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. கலாநிதி அமுது ஐயாவுடன் கவிஞர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை ஓர் இதமான மாலை



கவிஞர், கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர். இலங்கைக் கம்பன்கழக மேடையில் கவிஞர் இ. முருகையன் தலைமையில் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, கவிஞர் சோ.பத்மநாதன், கல்வயல் குமாரசாமி போன்ற கவிஞர்கள் தோன்றி அவர்கள் புரிந்த சாதனைகள் சொல்லில் அடங்காதவை. அந்தக் கவிஞர்களின் அணித்தலைமையில் பல பட்டிமன்றங்களில் நான் கலந்துகொண்டதும், அவர்களின் வாழ்த்துக் களைப் பெற்றுக் கொண்டதும் என் வாழ்வில் மறக்கமுடியாத பக்கங்கள். இவர்கள் எல்லோரும் என் இலக்கிய உறவுகள். கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் இலண்டனில் வாழ்ந்த காலத்தில் இலண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் அவருடைய சிறப்புச் சொற்பொழிவு ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு புலவர் அமுதுவை அழைத்துச் சென்றிருந்தேன். அர்த்தபுஷ்டியுள்ள அவரது சொற்பொழிவை அமுதுப்புலவர் மிக ஆழமாக இரசித்து அனுபவித்தார்.

அடுத்தவாரம் எனது வீட்டில் ஒரு இலக்கியச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தேன். இந்த நிகழ்வில் கவிஞர் காரையும், புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதுவும் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக மெய்மறந்து உரையாடினார்கள். தன் வாழ்க்கையில் மறக்க முடியாத பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி பற்றி கவிஞர் சுந்தரம்பிள்ளையவர்கள் மிகப்பெருமையாக புலவர் அமுதுவுடன் பேசிக்கொண்டார். ஈழத்தில் முத்திரைபதித்த பல நாடகக் கலைஞர்கள், கவிஞர்கள் அந்த உரையாடலில் வந்துவந்து போவதைப் பார்வையாளர்கள் இனங்கண்டு இரசித்தனர். குறிப்பாக நடிகமணி வைரமுத்து அவர்களின் அரிச்சந்திர மயானகாண்ட நடிப்புக் காட்சி பற்றி உரையாடிய போது இப்படி ஓர் அற்புதமான, சிறந்த நடிகன் எம் மண்ணில் தோன்றியது நாம் செய்த பெரும் பாக்கியம் என இரண்டு கவிஞர்களும் என் வீட்டில் இலக்கிய விருந்தில் மெய்மறந்து உரையாடிய நிகழ்வு என்றென்றும் இலக்கியத் தேன்பாய்ச்சும் பசுமை நிறைந்த நினைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின் அரவணைப்போடு

“புலம்பெயர்ந்தவர்களில் தமிழை வரன்முறையாகப் படித்தவர்களில் ஒருவர் வித்துவான் வேலன் அவர்கள். அந்தத் தமிழைக் கற்றதோடு அல்லாமல் அதனைப் பேணியும் வந்தவர். ஒரு நவீன சூழலில் தமிழ் படிப்பதற்கு வேண்டிய நடைமுறைகள் எல்லாவற்றிலும் அவரே முன்னின்றவர்.” இவ்வாறு கூறுபவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்.

“தமிழுடன் ஆளுமையைக் கற்றுத் தந்தவர். பாரதியை எமக்கு உறவாக்கியவர். சிறுமை கண்டு பொங்கக் கற்றுத் தந்தவர். படிக்கும் மாணவப் பருவம் வேலன் வீடு எங்கள் சரணாலயம். நல்லவற்றை நோக்கிய நாட்டம் இவர் தந்த ஊட்டம்.” இவ்வாறு வித்துவான் வேலன் அவர்கள் பற்றி மொழிபவர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்.

வித்துவான் வேலன் அவர்கள் தலைமைதாங்கி வழிநடத்திய பாரதி பாடல்களின் பட்டிமன்றங்கள், கம்ப இராமாயண சிறப்புப் பேச்சுக்கள், ஆய்வுகள் போன்ற இலக்கிய நிகழ்வுகளில் நான் பங்குகொண்டேன்.

அந்த இலங்கை மண்ணில் தளம் அமைத்து அவரோடு நாம் தடம் பதித்த அந்த இலக்கிய நினைவுகளை நான் இன்றும் முன்னிறுத்தி நன்றியோடு எண்ணிக்கொள்கின்றேன்.

எனக்கு ஊக்கமளித்த அந்த உற்சாக காலங்களை, இலக்கிய முன்னிரவுகளை நாம் இலக்கியத்தில் முளைகொள்ள வித்திட்ட முனைப்பான காலமென்று இன்றும் திடமாகச் சொல்லிக்கொள்வேன்.

அந்த வழியிலேதான் இலண்டன் மாநகரிலே அமுது ஐயாவை என் இலக்கிய ஊக்குசக்தியாய் காண்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது ஐயா இலண்டன் வேலன் இலக்கிய வட்டத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். ஒரு குடும்பமாய் இலக்கியத் தோழர்களோடு எப்படிப் பயணிப்பது என்பதனை இந்த வேலன் இலக்கியவட்டம் எங்களுக்கு உணர்த்தியது.

இலண்டனில் இளவாலை அமுது அவர்களின் மடுமாதா காவியம் என்ற நூல் வெளியிடப்படுகின்றபோது அந்த நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கி அதனைச் சிறப்பாக நடத்தி முடித்தவர் வித்துவான் வேலனார் அவர்கள்.

இந்த மடுமாதா காவியம் என்ற புலவர் அமுது அவர்களின் வெளியீட்டுச் சிறப்பு அம்சமே இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள் என்ற இன்னுமொரு படைப்பு வெளியாவதற்கு அத்திபாரம் இட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் இளவாலை அமுது அவர்களின் கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்பித்தவர் அறிஞர் சிறிக்காந்தராசா அவர்கள் ஆவார்.

இவர் வித்துவான் வேலனார் அவர்களுடைய மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. இளவாலை அமுது அவர்களுடைய எந்தவொரு இலக்கிய நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு சிறப்புரை வழங்குகின்ற பேரறிஞர் இவராவார். புலவர் இளவாலை அமுது அவர்களின் மூதறிஞர் பட்டமளிப்பு விழாவில் அமுது அவர்கள் அறிஞர் சிறிக்காந்தராசா அவர்களைக் குறிப்பிட்டு இவர் சிறந்த பண்பாளர்,ஒரு சிறந்த கவிஞர், ஒரு சிறந்த அறிஞர், ஒரு வழக்கறிஞர், என் அன்பைக் கவர்ந்துகொண்டவர் என்று சிறப்பித்துக் கூறியது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

மேலும் இந்த வட்டத்தைச் சேர்ந்த புலவர் சிவநாதன், திருமலை பாலா போன்ற தமிழ்ப் புலமையாளர்களிடம் புலவர் இளவாலை அமுது அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டதும் உறவை வளர்த்துக் கொண்டதும் முக்கிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை அமுது அவர்களின் எந்த நூல் வெளியீட்டு விழாக்களிலும் இவர்கள் தோன்றி தங்கள் புலமையினால் வாழ்த்தத் தவறுவதில்லை.

குறிப்பாக அமுது ஐயா அறிஞர் சிறிக்காந்தராசா அவர்களின் தமிழ் ஆளுமைமேல் கொண்ட மேலான மதிப்பினால் தனது விழாக்களில் கௌரவிக்கத் தவறுவதில்லை.

சிறப்பாகச் சொல்வதாயின் வணக்கத்துக்குரிய பிதா கஸ்பர் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட, அமுது ஐயாவின் “அமுதுவின் கவிதைகள்” நூல் வெளியீட்டுவிழாவில் அறிஞர் சிறிக்காந்தராசா அவர்கள் தலைமைதாங்க அமுது ஐயாவால் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 27. ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டத்தில் ஒரு பிதாமகர்

ஈழத்துச் சிறுகதை மூலவர்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்திலிங்கம் இவர்கள் மூவரும் ஈழநாட்டில் மாத்திரமன்றி தமிழகத்திலும் தங்கள் எழுத்தாற்றலை நிலைநாட்டியவர்கள்.

இவர்களில் சி.வைத்திலிங்கம் என்ற அந்தச் சிறுகதை ஆசிரியரின் சிறுகதைத் தொகுதி கங்காகீதம் என்ற பெயரில் வெளியானது. ஈழத்தின் முதுபெரும் அறிஞரான சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் இந்த வெளியீட்டு முயற்சியைச் செய்திருந்தார். சி.வைத்திலிங்கம் அவர்களின் புதல்வர்களில் ஒருவராகிய திருமதி சுமங்கலி தர்மேந்திரா அவர்கள் ஈலிங்கு நூல் நிலையத்தில் நீண்டகாலமாகப் பொறுப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி வருகின்றவர். தந்தையைப் போல இவருக்கும் இயல்பாகவே தமிழ் மீதும் தமிழறிஞர்கள் மீதும் இருந்த பற்றின் காரணமாக அந்த நூல் நிலையத்தில் பல தமிழ் நூல்தொகுதிகளை இணைத்து பல தமிழ் வாசகர்களை இணைத்து மிகுந்த அன்பும் அக்கறையுடனும் தனது சேவையை ஆற்றி வந்தார். தான் கடமையாற்றிய நூல் நிலையத்தில் தமிழ் வாசகர்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் பல தமிழறிஞர்களை, நண்பர்களை அணுகி அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவகையில் சிறந்த நூல்கள், சஞ்சிகைகள் பலவற்றை அந்த நூல் நிலையத்திற்கு வரவழைத்து வாசகர்கள் நெஞ்சத்தில் மிகுந்த செல்வாக்குடையவராக விளங்குகிறார்.

இவர் தனது விடாமுயற்சியினால் பலவிதமான தமிழ்க் கலை கலாசார நிகழ்வுகளை நூல் நிலையத்தில் நடாத்தி மக்களின் ஆதரவினைப் பெற்றுக் கொண்டார். காலப்போக்கில் பல அறிஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு இலக்கிய வாசகர் வட்டத்தை ஆரம்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று திட்டமிட்டார். அதன் பிரகாரம் உருவானதே ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டம்.

இந்த இலக்கிய வாசகர் வட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அதனைத் தலைமையேற்று மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தவர் புலவர் இளவாலை அமுது அவர்கள். அந்த நாளில் அவருடன் இலண்டனில் வாழ்ந்து மறைந்த முதுபெரும் அறிஞரான அரங்க முருகையன் அவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.மு. நித்தியானந்தன் அவர்களும், இலண்டனிலே வாழ்கின்ற ஒரு சங்ககால ஒளவை என்று புலவர் அமுதுவால் போற்றப்படுகின்ற திருமதி புனிதவதி பாலசுந்தரம் அவர்களும், இவர்களுடன் தமிழகம் சார்ந்த பல அறிஞர்களும் இணைந்து தமிழிலக்கிய வாசகர் வட்டத்தை உருவாக்கி உற்சாகத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

## இலக்கண ஆசான் அமுதுப் புலவர்

இந்த இலக்கிய வாசகர் வட்டம் மாதமொரு முறை கூட்டப்படும். அதில் பல கலந்துரையாடல்கள், அறிஞர்கள் சந்திப்பு, நூல் அறிமுகம், கவிதை நயம் உரைத்தல், கவியரங்கம் போன்ற பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெறும். இந்த நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் முன்னின்றும் தலைமை தாங்கியும் தன் அறிவுரைகளையும் தனது பங்களிப்பினையும் வழங்கி அங்கு வருகின்ற இலக்கியச் சுவைஞர் களுக்கு ஓர் ஆசானாக இருந்து சிறப்பித்தவர் இளவாலை அமுது அவர்கள். மரபுக் கவிதை எழுதவேண்டும் என்ற ஆர்வமுள்ள வாசகர்களுக்கு, மரபுக் கவிதை இலக்கணங்களை விளக்கி பாடல்களை எப்படி எழுதவேண்டும் என்ற நெறிமுறைகளை பல மணி நேரக்கணக்கில் எடுத்து விளக்கி ஊக்கமளித்தவர் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள்.

ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டம் வருடத்திற்கு ஒருமுறை இலக்கியப் பயணம் மேற்கொள்வது வழக்கம். அதன் பிரகாரம் இரண்டு தடவைகள் அறிஞர் ஜி.யு.போப் அவர்களின் சமாதிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சென்று அவருடைய கல்லறைக்குத் தமிழால் அர்ச்சனை செய்து வேறும் பல நிகழ்ச்சிகளை நடாத்தி வந்திருக்கின்றோம். அப்பொழுது எல்லாம் இளவாலை அமுது அவர்கள் இந்த நிகழ்ச்சியின் முன்னோடியாக இருந்து செயற்பட்டார். முதன்முதலாக ஜி.யு.போப் அவர்களின் கல்லறையின் பக்கத்தில் நின்று அவர் ஆற்றிய உரை இன்றும் என் காதிலே ஒலித்த வண்ணம் இருக்கின்றது. அறிஞர் போப் அவர்கள் பற்றி அமரர் கல்கி அவர்கள் கொண்டிருந்த அரிய பெரிய கருத்துக்களை எல்லாம் புலவர் இளவாலை அமுது அவர்கள் நினைவுகூர்ந்து ஆற்றிய பேருரை வாசகர் வட்ட அறிஞர்கள் நெஞ்சை நிறைத்திருந்தது. இலக்கிய வாசகர் வட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அறிஞர் பெருமக்களை ஒழுங்கு செய்வதிலும், அவர்களுடைய பிரயாண ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதிலும், இலக்கியப் பயணங்களை மேற்கொள்ளுகின்றபோது அதனை ஒழுங்கு செய்வ திலும் இலக்கிய வாசகர் வட்டத்தின் முதுகெலும்பாகச் செயற்பட்ட வர்கள் திரு,திருமதி. தர்மேந்திரன் அவர்கள் என்பது முக்கிய குறிப்பாகும்.

ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டம் பல அறிஞர்களின் சந்திப்புக் களை ஏற்படுத்தித் தந்தது. இந்தச் சந்திப்பில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் தங்கள் வாழ்வியல் அனுபவங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த இலக்கிய நிகழ்ச்சிகளில் சிறந்த அனுபவங்களை எல்லாம் நாங்கள் பெற்றுக்கொண்டோம். ஈழநாட்டிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் வந்த பல்துறை சார்ந்த அறிஞர்கள் இலக்கிய வாசகர் வட்டத்தை மெருகூட்டி வருகின்றார்கள்.

இலக்கிய வாசகர் வட்டம் காலமறிந்து இலக்கிய கர்த்தாவின் தரம் அறிந்து அவர்களைக் கௌரவிப்பதிலும் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. குறிப்பாக சங்ககால அகத்திணை, புறத்திணை பாடல்களுக்கு நயப்புரை வழங்கி இலக்கிய கலைஞர்களை வியப்பில் ஆழ்த்தும் தமிழகத்தைச் சார்ந்த திரு. நடராஜன் அவர்கள் நற்றிணைப் பாடல்களுக்கு தருகின்ற விளக்கங்களோ மிக அற்புதமானவை. இதன் சிறப்பு நோக்கி அவருக்கு 'நற்றிணையான்' என்ற பட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் வட்டம் வழங்கிக் கௌரவித்தது. இந்தப் பட்டத்தை வழங்குவதில் மிகுந்த அக்கறை காட்டியவர் இளவாலை அமுது அவர்கள்.

தன் வாழ்நாட்கள் பூராகத் தமிழுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் தொண்டு செய்யவேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டிருந்த திருமதி சுமங்கலி தர்மேந்திரா அவர்களுக்கு 'நூலகச் செல்வி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்தக் கௌரவத்தை வழங்குவதில் இளவாலை அமுது அவர்களும் தமிழ்மணி அரங்க முருகையன் அவர்களும் மற்றும் தமிழகம் சார்ந்த அறிஞர்களும் பெருவிருப்புக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலவர் இளவாலை அமுது அவர்களுடைய எந்தவொரு இலக்கிய நிகழ்ச்சியையும், குறிப்பாக நூல்வெளியீட்டு விழாக்களையும் ஈலிங்கு இலக்கிய வாசகர் வட்டம் தன் சொந்த நிகழ்வாகவே கொண்டாடி மகிழ்ந்தது.

## மூதறிஞர்

'மூதறிஞர்' பட்டம் வழங்கப்பட்ட விழாவிலே ஈலிங்கு இலக்கிய வட்டம் சார்பில் கவிஞர் சுகதினி பானுகோபன், கவிஞர் நிலா அவர்களும் வாழ்த்துக் கவிதையினை வழங்கி அமுதுப்புலவரை மகிழ்வித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 28. அர்ச்சனை மலர்களில் அமுது ஐயா

ஆத்மாவுக்குப் பலம் தெய்வம் தருகிறது, கண்கண்ட தெய்வம் தாயும் தந்தையும்தான். எம் தமிழ் பாரம்பரியம் தாய் தந்தை ஆசான் தெய்வம் என தொழுகின்றது. என் தந்தை எனக்கு தாயுமானவர் தந்தையுமானவர் குருவுமானவர். அவர் தெய்வமான போது...

அவருடைய நினைவுமலரை அர்ச்சனை மலர்கள் என்ற நூலாக்கினேன். அந்த நூலுக்கு என் தகப்பனாரைப் பற்றி ஒருசில பாடல்கள் எழுதித் தரும்படி புலவர் இளவாலை அமுது அவர்களிடம் மிகுந்த வாஞ்சையுடன் கேட்டுக் கொண்டேன். அவரும் அதற்கு ஒத்துக்கொண்டார்.

அப்பொழுது நான் அவருக்கு என் தகப்பனாரின் சில அம்சங்களை விளக்கினேன். சுதுமலையில் பிறந்தவர், இணுவிலில் திருமணம் செய்தவர். ஐந்து பிள்ளைகள், செல்வச் சந்நிதி முருகனைத் தேடிக் கால்நடையில் செல்பவர். அவர் வாழ்க்கையில் அதிகம் இரசித்தது இரண்டு பேர். ஒருவர் அமரர் சட்டமாமேதை ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள், மற்றவர் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்கள். இதனைக் கேட்டவுடன் அமுது அவர்கள் கலகலவெனச் சிரித்தார். உன்னுடைய தகப்பனார் ஒரு பெரியாள்தான் என்று மிகுந்த சந்தோசத்துடன் கூறினார்.

**எங்கள் பலம் பொன்னம்பலம்**

தொடர்ந்து அமுதுப்புலவர் பேசுகையில் எங்கள் பலம் பொன்னம்பலம் என்று ஈழநாட்டில் பேசப்பட்ட காலத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களிடத்தில் இருக்கின்ற வசீகரம், பேச்சுத்திறன், வாதாடும் திறன், வெற்றிகள், அவருடைய பார்வை, சுறுசுறுப்பு, கம்பீரம் என்ற பல விடயங்களை மிக அழகாக அடுக்கிக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சென்றார். அவருக்கு உலகப் புகழ்பெற்றுத் தந்த வழக்குகள் பற்றிப் பேசினார். பின்னர் ஒரு சம்பவத்தை எனக்கு நினைவுபடுத்தினார். "இளவாலையில் திருவாளர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர் களினுடைய தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்கு நானொரு முக்கிய பேச்சாள னாக அழைக்கப்பட்டிருந்தேன். அந்தக் கூட்டத்தில் நடந்த சம்பவம்தான் இது."

திருவாளர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுக்கு இளவாலையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் இளவாலை அமுதுப் புலவர் அவர்கள் ஆற்றிய உரை அந்தச் சட்டமேதையைக்கூட வயிறுகுலுங்கச் சிரிக்கச்செய்த சம்பவம்தான் அது. இளவாலை அமுது அவர்கள் தன் பேச்சை இப்படித்தான் ஆரம்பித்தார். "பாரத நாட்டில் அரசியல் வாழ்வில் அருந்தொண்டு புரிந்தவர்களை மக்கள் போற்றிப் புகழ்ந்து இருக்கின்றார்கள். இந்தவகையில் காந்தி, நேரு, இராச கோபாலாச்சாரியார், சுபாஸ் சந்திரபோஸ் என்பவர்களைக் கூறலாம். இவர்களுடைய நீண்டகாலச் சேவையின் பின்னரே அவர்களை காந்திஜி, நேருஜி, இராஜாஜி, நேத்தாஜி என்று ஜி என்ற சிறப்பு விகுதி இணைத்து அழைத்தார்கள். ஆனால் எங்கள் மதிப்புக்குரிய சட்டமாமேதை பொன்னம்பலம் ஐயா அவர்களுக்கு ஜி என்ற பட்டத்தை வழங்குவதற்கு முன்னரே இயற்கை அவருக்கு ஒன்றுக்கு இரண்டாக ஜி ஜி என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துவிட்டது. இது தமிழனுக்குக் கிடைத்த மிகப் பெரிய பெருமை" என்று அமுதுப் புலவர் அங்கு பேசியபோது மக்களின் சிரிப்பொலி அந்த மண்டபத்தையே அதிரச் செய்தது. அமரர் பொன்னரும் அந்த உரையைக் கேட்டு நன்றாக இரசித்துச் சிரித்தார் என்று சொல்லி அமுதுவின் முகம் புன்னகையைச் சிந்தியது. இந்த வைபவத்திற்கு என் தந்தையார் சமுகமளித்திருந்தால் இவ்விதம் சிரித்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதுவின் சிரிப்பிலே நான் என் தந்தையை மீண்டும் மீண்டும் கண்டுகொண்டேன்.

மிகுதி இதோ,

அவர் கவிதையில் பிறந்து எம்மைச் சாந்திப்படுத்திய பாடல்கள் இவைதான்:

பூங்காற்றுக் காலையிலே கதைகள் சொல்லப்
புகையிலைகள் அதைக் கேட்டுக் கைகள் தட்டும்
தேங்காய்கள் வீழ்ந்திடவே மாங்காய் சிந்தும்
தேன்கதலிக் குலைசிந்தும் செழித்த நாடு
நீங்காத நினைவுடனே அம்மன் பாதம்
நெஞ்சினிலே வைத்தபடி நீறு பூசித்
தூங்காத விரல் ஐந்தும் துணையாய்க் கொண்டு
சுதுமலையில் பயிர்செய்வார் பண்ணையாங்கே

பொன்னான குணக்குன்றம்; இறைவன் நெஞ்சம்;
புன்னகையும் தண்ணளியும் பூத்த செல்வன்!
கண்ணான *சிவசம்பு* கமத்தின் மைந்தன்
காரிகையாள் *இரத்தினத்தைக்* கைப்பிடித்து
எந்நாளும் தமிழ்ப்பெரியார் வாழ்க்கைப் பார்த்து
இதயத்தில் அவர்களுக்குக் கோவில் கட்டி
பண்ணான ஐந்து மக்கள் பரிசாய்ப் பெற்றுப்
பாலோடு தேன்போல வாழ்ந்த போது

மெல்லியலாம் அருந்ததிபோல் *செல்வ ராணி*
மின்கொடியாள் பெண்மயிலாள் *பத்ம ராணி*
நல்லிதய *இரட்னசபா பதி*யும் செய்ய
நற்றமிழின் பொற்புதல்வன் நாடு போற்றும்
சொல்லரசன் *சிவ. தணிகாசலத்தி* னோடு
தோன்றல் *சிவ குமாரனுமாம்* ஐவர் மக்கள்
வல்லபரன் அருளாலே மகிழ்ந்து வாழ்ந்து
மணம்பரப்பு மலரெனவே இருக்கக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டினிலே மக்களையே காக்க வேண்டி
　　கீழ்த்திசையே புலருமுன்னர் முருகன் வாழும்
நாட்டின் செல்வச் சந்நிதிக்கு நடந்து சென்று
　　நல்லருளை வேண்டுவதை மறக்கப் போமோ...
கோட்டினிலே மாமேதை ஜி ஜி வாதம்
　　கொடிபறக்கும் உன்நெஞ்சில் தியாக ராசன்
பாட்டினிலே பறிகொடுத்த நெஞ்சம் கண்டோம்
　　பழுதற்ற இரசனையிலே பயின்றாய் ஐயா

கூட்டினிலே கிளியினைப்போல் வாழ்ந்த அன்னை
　　கூடிவந்த நோய்நொடியால் உடலம் நொந்து
வீட்டினிலே அரைவருடம் வைத்திய சாலை
　　மெத்தையிலே அரைவருடம் வாழ்ந்த போது
வாட்டமின்றி மக்கள் நலம் இனிதாய்ப் பேணி
　　மனதினிலே சுமைதாங்கி வந்த தந்தாய்
தேட்டமெல்லாம் தவச்செல்வர் வாழ்வுக் காகச்
　　சீவித்த சிறப்புக்களை மறக்கப் போமோ?

தனிமையிலே இனிமைகண்டு சிரித்த ஐயா
　　சஞ்சலத்தில் துயர்மறைந்து சிரிக்கும் ஐயா
புனிதகுணம் பூத்திருந்த அருமைத் தந்தை
　　பூவுலகின் தடுமாற்றம் கண்டும் கேட்டும்
மனிதகுணம் மாறுவதால் சிரிக்கும் தந்தை
　　மாமனிதர் செயல்களையே மதிக்கும் தந்தை
இனியென்று காண்போமோ என்று வாட
　　இதயத்தில் துயர்பெருக மறைந்தார் அந்தோ.

கொடிய துயர் அரக்கர்களால் இருளே சூழ்ந்து
　　குற்றமற்ற பொதுமக்கள் பலியாய்ப் போகும்
விடிவற்ற போர்க்காலம் அமைதி இல்லை
　　வெந்துயரில் எம்தந்தை நோய்வாய்ப் பட்டார்
மடியினிலே தூக்கிவைத்துப் பாலை ஊற்றி
　　மகள்செல்வ ராணிஎன்பாள் நன்றாய்ப் பார்த்தாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியினிலே விழுந்தலறி அழுதார் மக்கள்
அவசரமோ பிரிவதற்கு அறியோம் கண்டாய்

## தேற்றம்

அங்கமெல்லாம் கண்ணாக அழுதபோதும்
அவனியிலே பிரிந்தவர்கள் வருவதுண்டோ
பொங்கு துயர் நாம் மறப்போம் உலகம் ஈதே
பொன்னுலகை அடைவதற்கு மார்க்கம் காண்போம்
எங்குமுள்ள இறைவனடி சேரு தற்கு
இப்போதே அன்பறங்கள் புரிவோம் கண்டீர்
மங்கிவிடா வாழ்வினையே வாழுதற்கு
மனதினிலே மாசகற்றி வாழுவோமே!

ஓர் உயர்ந்த இலக்கிய விசுவாசத்துடன் அமுதுப் புலவர் வடித்த கவிதை வரிகளில் என் தந்தை மீண்டும் உயிர் பெற்று வாழ்வதைக் கண்டுகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. "வானொலி வரலாற்றில் ஒரு மைல்கல், திரையுலகின் கலைக் களஞ்சியம் பி.எச்.அப்துல் ஹமீத்" - அமுது




திருவாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள் தொகுத்து வழங்கிய பிரபல பின்னணிப் பாடகர்கள் பங்குகொண்ட மதுராவின் பாடல் நிகழ்ச்சி ஒன்றினை நான் பார்த்தபோது ஒவ்வொரு கலைஞரையும் முன்னிலைப்படுத்தி திரு. ஹமீத் அவர்கள், சிறந்த அடைமொழி கொடுத்துப் பாராட்டி அறிமுகம் செய்தவிதம் என்னைப் பிரமிக்கச் செய்ததுடன் அந்த நிகழ்ச்சி என் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அன்றிலிருந்து எப்படியாவது அவர் தொகுத்து வழங்கும் ஒரு பாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடவேண்டும் என்று தீர்மானித்தேன். அந்த எண்ணம் நான் நினைத்ததைவிட சிறப்பாக நிறைவெய்தியது.

இலண்டனில் ஆச்சீஸ் நிறுவனம் பெருமையுடன் நடாத்திய அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் தொகுத்து வழங்கிய பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் இருபத்தைந்து பாடல்வரை டி.எம்.எஸ் அவர்களின் பாடல்களைப் பாடி முதலாவது பரிசான இந்தியா சென்று வருவதற்கான விமானச்சீட்டையும், அப்துல் ஹமீத் அவர்களின் சிறந்த பாராட்டையும் பெற்றேன். மறுநாள் மாலை திரு. ஹமீத் அவர்களுக்கு ஒரு விருந்துபசார விழா ஏற்பாடு செய்திருந்தேன். அதில் பல கலைஞர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் இளவாலை அமுது அவர்கள். இலங்கை வானொலியில் தனக்கென ஒரு முத்திரை பதித்த திரு. அப்துல் ஹமீத் அவர்கள் அந்த ஒன்றுகூடல் நிகழ்வில் இறைதாசன் என்னும் புனைபெயரில் தான் எழுதிய கவிதையின் அனுபவங்களையும், கோமாளிகள் படத்தில் நடித்த அனுபவங்களையும் அமுதுவிடம் பகிர்ந்துகொண்டார். முடிவில் உலகனைத்தும் பரந்து வாழும், தமிழர் இதயங் களில், குறிப்பாக கலைஞானிகளின் ஆத்மாவில் தன் பன்முகத் தன்மைகொண்ட அடையாளங் களை மிக ஆழமாகப் பதிய வைத்திருக்கும் அன்பு அறிவிப்பாளரை செவாலியர், கலாநிதி, மதுரகவி அமுதுப் புலவர் அவர்கள் உச்சிமோந்து பாராட்டிய அந்த இனிய பொழுதை அமுதுவின் நினைவாகப் பதியவைக்கின்றேன்.

பிரித்தானிய உலகத் தமிழ்க் கலையகம் இக்கலைஞனுக்கு விழா எடுத்து மகிழ்வுற்றது. இந்தப் பாராட்டு விழாவில் அமுதுப் புலவர் அவர்கள் அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களைப் பெருமைப்படுத்தி வாழ்த்தி வழங்கிய சிறப்புக் கவிதையினை அமுதுவின் நினைவாக இங்கே மீள்பதிவு செய்கின்றேன்:

**வானொலிக் கலைஞர்களில் சீனமதில்போல் எல்லை**

உச்சரிப்பில் பாலூற்றி ஒலிபரப்பில் தேனூற்றி
இச்சகத்தில் உரையாற்றும் ஏந்தலென்பார் அப்துல் ஹமீத்
கார்மேகம் கண்டுவிட்டால் களித்து மயிலாடும் - உன்
பேர்மேகம் ஒலிபரப்பில் பெருவெள்ளம் போட்டுவிடும்
உணவும் மறந்திடுவார் உறவும் மறந்திடுவார்
பணியும் மறந்திடுவார் பசுந்தமிழில் உரை கேட்போர்
அன்புத் தமிழ்த்தாய் அடி வைத்த நிலமனைத்தும்
உன் புகழின் தென்றல் ஒலிகேட்டு அதில் மிதந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களின் வேரறிவாய் பாடியவர் இயற்றியவர்
மேடையிலே அகராதி விரித்திடுவாய் கருத்தோடு.
வானொலிக் கலைஞர்களின் வரிசையிலே தமிழ் உலகில்
சீனமதில் போல் எல்லை சிற்பிக்கோர் திருவிளக்கு
வீட்டில் கிடந்து வெதும்பி வந்த நறுமலர்கள்
பூட்டை உடைத்துப் புதுமேடை இயற்றி வைத்தாய்
கலையின் கிளை அனைத்தும் கருத்தாக நீ தடவி
அலைந்து மலர்கொய்து அரியணையில் ஏற்றி வைத்தாய்
நிலைகுலைந்த நம்நாட்டின் நெஞ்சினிலே பால்வார்த்த
தலைவர் வரிசையிலே தமிழிசையின் வள்ளல் ஐயா
எத்தனையோ வெள்ளிகளை இனங்கண்டு அணைத்துவந்த
சித்தத்தில் உறுதிகொண்ட செய்மதியும் நீதானே?
மாற்றாரும் போற்றுகின்ற மாணிக்கப் பெட்டகமே
காற்றுக்கும் சுவைதந்த கனித்தமிழின் சித்திரமே
வாழுகவே பல்லாண்டு வானொலியின் யாழிசைபோல்
நாளெல்லாம் சேவையெண்ணி நாண்மலர்கள் தூவுகின்றோம்.


(நன்றி: உலகத்தமிழ் கலையகம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. இலண்டன் ஊடகக் கலைஞர்களின் சில நினைவுகளோடு





இளவாலை அமுதுப் புலவரின் புலமையின் ஆற்றலை ஐபிசி வானலை மூலமாக வெளிக்கொணர்ந்தவர் எஸ்.கே.இராஜன் அவர்கள். அவரிடம் மிகுந்த பேரன்பு கொண்டவர் இளவாலை அமுது அவர்கள். தமிழ்ச் சமுதாய விழிப்புணர்வுக்காக கலைத்துறையில் தன் சிறகுகளை விரிக்கும் ஒரு ஆரோக்கியக் கலைஞன் எஸ்.கே.இராஜன் என்று மதுரகவி அமுது அவர்கள் பாராட்டியிருப்பது இங்கே மனங்கொள்ளத்தக்கது. எஸ்.கே.இராஜன் அவர்கள் ஐபிசி வானொலி யில் பணி செய்த காலத்தில் 'காலைக் கலசம்' என்னும் நிகழ்ச்சியை நடாத்தினார். அதில் இளவாலை அமுது அவர்கள் ஈழத்துச் சான்றோர் என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்தி வந்தார். இதுவொரு பிரபல்யமான நிகழ்வாக மக்களிடம் சென்றடைந்தது மனங்கொள்ளத்தக்கது.

ஊடகத்துறையில் இளவாலை அமுது அவர்களைக் கவர்ந்த மற்றுமொரு கலைஞன் என்.எம்.என்.அனஸ் அவர்கள். அமுது அவர்களின் நூல் வெளியீட்டு மேடைகளில் தோன்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி உள்ளத்தைக் கவர்ந்தவர் இந்தக் கலைஞன். அதுமாத்திரமல்லாமல் தீபம் தொலைக்காட்சியின் பிரதான உத்தியோகத்தராகப் பணிபுரியும் அனஸ் அவர்கள் இளவாலை அமுது அவர்களின் பல்சுவை நிகழ்வுகளை, நேர்காணலை, தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொலைக்காட்சியில் முன்னெடுத்திருக்கின்றார். புலவர் இளவாலை அமுது அவர்களின் மரணத்தின்போது தீபம் தொலைக்காட்சி அமுது அவர்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. திரு. அனஸ் அவர்கள் ஒலிபரப்பில் உரையாற்றுவதிலும் பேட்டி காண்பதிலும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் மக்கள் மனத்தைக் கவர்ந்த ஒரு செயல் வீரன் என்று அமுது அவர்கள் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது.

இளவாலை அமுது அவர்களிடம் மிகுந்த பேரன்பு கொண்ட மற்றுமோர் ஊடகத்துறை அன்பர் திரு. நடாமோகன் அவர்கள். இலக்கிய மன்றம், இலக்கிய சங்கமம் பல நிகழ்வுகளில் அமுது அவர்களின் அன்பைக் கவர்ந்தவர் திரு. நடாமோகன் அவர்கள். இளவாலை அமுது அவர்களின் மறைவுக்கு ஒருமாத காலம் முன்னதாக நடாமோகன் அவர்களுடைய இலண்டன் தமிழ் வானொலி நீண்டதொரு நேர்காணலைத் தயாரித்து வழங்கியது. இந்த நேர்காணலை பிரபல எழுத்தாளர் அகஸ்தியரின் மகள் நவஜோதி யோகரட்ணம் அவர்கள் இலண்டன் தமிழ் வானொலியில் மேற் கொண்டார். இலண்டன் தமிழ் வானொலியில் இடம்பெற்ற இந்தச் சிறப்பான நேர்காணல் பின்னர் வீரகேசரி பத்திரிகையிலும் சிறப்பிடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. நடாமோகன் அவர்களை எங்கு கண்டாலும் அவருடைய தோற்றப்பொலிவையும் அவருடைய புன்சிரிப்பையும் பற்றி அமுது அவர்கள் பாராட்டிப் புகழாமல் இருந்தது இல்லை.

பொதுவாக இலண்டனில் உள்ள அத்தனை ஊடகங்களும் இளவாலை அமுது அவர்களின் பிரிவின் சோகத்தை வெளிப்படுத்துவதில் முன்னின்று உழைத்தன. இலண்டன் GTV தொலைக்காட்சி கலைஞர் கள் யாவருமே அமுது அவர்களின் கண்ணீர் அஞ்சலி நிகழ்ச்சிகளை முன்னெடுத்தார்கள். தாயகத்திலிருந்து வந்த அனைத்து தமிழ்ப் பத்திரிகைகளும் அமுதுவின் பிரிவைச் சுமந்து நின்றது குறிப்பிடத் தக்கது. ஊடகவியலாளர் திரு. ஸ்ரீரங்கன் அவர்கள் இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது அவர்களின் தமிழின்பால் மிகுந்த பற்றுக்கொண்டவர். இலண்டன் கனக துர்க்கை அம்மன் கோவில் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் அமுது அவர்களை வரவழைத்து, அவரைக் கௌரவிப்பதில் முன்னிற்பவர். இளவாலை அமுது அவர்களின் மறைவின்போது இலண்டனில் இருந்து வெளியாகும் தமிழர் தகவல் என்னும் சஞ்சிகையில் அமுது அவர்களின் பிரிவுத்துயரைக் குறித்து நீண்டதொரு ஆக்கத்தை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிக ஆழ்ந்த அறிவும் எளிமையும் கொண்ட அமுதுப்புலவர் அவர்களின் ஆற்றல் வெளிப்படாத தமிழ் ஊடகங்கள் எதுவும் இலண்டனில் இல்லை என்றே கூறலாம். அமுதுப் புலவர் அவர்களின் தமிழ் ஆற்றலை, கவிதையினை, பாடல் இசைத்தட்டினை மட்டுமே யின்றி அவருடைய நூல் வெளியீடாயினும் அந்தந்த நிகழ்வினை முன்னெடுத்துச் சிறப்பிப்பதில் இலண்டன் தமிழ் வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பன அதிக கவனம் செலுத்தின என்று கூறலாம். தன்னால் முடிந்தவரை தன்னுயிரினும் இனிய தாய் மண்ணுக்கும், தன் இனிய குடும்பத்துக்கும், தன் வாழ்நாள் இலட்சிய மாகவும் ,உயிர்மூச்சாகவும் கொண்ட தமிழ்த் தாய்க்கும் அருஞ்சேவை செய்து தன் கடமைகள் அனைத்தும் முடித்துவிட்டேன் என்று இம்மண்ணில் இருந்து விடைபெற்றபோது பூலோக மாதா வடித்த இரத்தக் கண்ணீரில் தமிழ் இதயங்கள் நனைந்தன. பூமி உள்ளவரை நீங்கள் படைத்துச் சென்ற மடுமாதா காவியம் நிலைத்திருக்கும் என்று பலர் இங்கே பேசுகின்றார்கள்.

சிறுவயதிலிருந்தே புலவன், கவிஞன் என்ற பாராட்டைப் பெற்று வசனநடையில் சின்னக்கல்கி என்று பெயர் எடுத்து 'மூதறிஞர்' என்ற பெருமையுடன் இம்மண்ணைவிட்டுப் பிரிந்தபோது இலண்டன் அனைத்துத் தமிழ் அறிஞர்களும் அமுதுப் புலவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து அவரின் அருமை பெருமைகளைப் பேசிக் கண்ணீர் மல்கக் கையசைத்து இறுதி விடை கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31. அமுதுவின் இதயத்தில் புல்லாங்குழல் வாசிப்பவர்களில் ஒரு சிலர்

தமிழ்தான் எனக்குச் செல்வம். தமிழ்க் கவிதையே எனக்கு மூச்சு. என் அறிவுப் பசிக்கும் ஆத்மதிருப்திக்கும் அதுவே எனக்கு மருந்து. எவ்வளவுக்கு எவ்வளவு அதன் தொடர்புகளை மிகுதிப்படுத்திக் கொள்ளுகின்றேனோ அவ்வளவுக்குத்தான் என் இதயத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும் என்ற தவிப்புடன் தமிழால் தன்னை ஒன்றிணைக்கின்ற நல்ல இதயங்களின் தொடர்புகளைப் பொன்போலப் பேணிக் காத்தவர் இளவாலை அமுது அவர்கள் . இந்த உலகில் அவர் தோன்றிய காலந்தொட்டு உயிர் வாழ்ந்த காலம் வரை தமிழே அவருடைய உயிர்மூச்சாக, உயிர்க்குருதியாகப் பாய்ந்து சென்றது என்று கூறலாம். தமிழுக்காக வாழ்ந்த அமுதுப் புலவர் அவர்கள் தமிழ் மூதறிஞர் என்ற உயரிய புகழ் உச்சியில் நின்றே எமக்கெல்லாம் விடை கொடுத்தார்.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் புகழ்பூத்த பண்டிதர் பரம்பரை முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரையிலான இருதுறை சார்ந்த அறிஞர் பெருமக்களின் அன்பிற்கும் பெருமதிப்புக்கும் ஓர் உதாரணமாக விளங்கிய இளவாலை அமுது அவர்களின் அபிமானிகளும் மாணவர்களும் உலகம் எங்கிலும் பரந்து வாழ்கின்றார்கள். எல்லோரையும் இந்தச் சிறுஏட்டில் ஒன்றிணைப்பது முடியாத காரியம். அப்படி முடியும் என்றால் அது ஒரு காவியமாகவே இருக்கும். எனவே இந்த நூல் முயற்சியின் மூலமாக பிற்காலம் இன்னும் பல நூல் முயற்சிகள் இடம்பெறலாமென்பது எனது நம்பிக்கை.

அந்த வகையில் "ஒரு பானைக்கு ஒரு அரிசி பதம்" என்பதுபோல் அமுது அவர்களிடம் மிகுந்த அன்பும் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட அறிஞர்கள், கவிஞர்கள் ஒருசிலரின் வாழ்த்துச் செய்தி களையும், அமுதுப்புலவர் அவர்கள் மீளாத்துயில்கொண்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அந்தப் பிரிவைத் தாங்கமுடியாது துடித்துவடித்த செய்திகளையும் இங்கு தருகின்றேன்.

## இளவாலை அமுது அவர்கள் செவாலியர் விருது பெற்றபோது அவரைத் தேடிவந்த வாழ்த்துமடல்கள்.

### யாழ். ஆயரின் வாழ்த்துமடல்



St.Patrick's College
Jaffna
Sri Lanka

26 November 2003

It is with great pleasure that I send my hearty congratulations to **MathuraKavi S.Adaikalamuthu** – also known as **Amuthu Master** – on the conferment of the Papal Honour of "The Knight of St.Gregory the Great"

He is a retired Headmaster, Tamil scholar, writer, journalist, an excellent exponent of Tamil Culture and Arts, a historian of the Tamil Catholic Church and a very talented communicator both in writings and in speeches. His writings mainly as a legendary story teller and as an epic poet eulogizing the lives of the Blessed Mother and the Saints have been prolific.

I have had the privilege of receiving his valuable guidance and counseling during my long stay at Ilavalai. His friendly disposition, intellectual prowess, administrative skills and tireless efforts in championing the cause he undertook were much admired by me and were a source of inspiration to me. The love and tactful advice he gave me, both when he was at Ilavalai and in the UK, enabled me to serve Ilavalai faithfully for a long period of twenty six years.

The magnitude of his contribution to Catholic life over more than six decades is very impressive and there is none to equal that, at present. As a result of his extra-ordinary service, Amuthu Master has been honoured by a number of prominent organizations in the country and the local church.

It is right and just, therefore, that this most loyal scribe and faithful servant be honoured with a major Papal award of "**The Knight of St.Gregory the Great**" for his unique and valuable service as a leading Catholic Writer and dedicated Catholic Leader. I am very happy to congratulate Amuthu Master and wish him God's choicest blessings to continue his devoted service to Tamil Catholic Church and to Tamil Language.

May God bless him.

**Revd.Dr.Justin B Gnanapragasam**
Rector – St.Patrick's College,
Jaffna.

**அமுது ஐயாவின் துணிச்சல் கண்டு, ஆயரின் வியப்பு.**



ஆயரின் குருத்துவ வெள்ளிவிழாவில் அன்றைய 1999 போர்க்காலச் சூழலில் வெளி நாடுகளில் இருந்து யாருமே தாயகம் பயனிக்க முடியாத காலகட்டத்தில் அவருடைய வெள்ளி விழாவில் கண்டிப்பாக தான் கலந்துகொள்ள வேண்டும் என்ற பிடிவாதத்தில் அவர் பயணித்தபோது அவரை அந்தச் சூழலில் தனிமையில் செல்ல விடக்கூடாது என்ற தவிப்பில் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளைகளில் இளையவரான அமுதரசன் அவர்கள் தந்தையை அழைத்துக்கொண்டு, 'எங்கள் குடும்பத்தில் பத்துப் பிள்ளைகள். அதில் ஒன்று குறைந்தாலும் காரியமில்லை, அப்பாவின் இலட்சியம்தான் முக்கியம்' என நினைத்தவராக குறிப்பிட்ட அந்த விழாவிலே கலந்து சிறப்பித்தார்கள். இந்த வரவைச் சற்றுமே எதிர்பார்க்காத ஆயர் அவர்கள் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்ததோடு அவர்களின் துணிச்சல் கண்டு வியப்புக் கொண்டார்.



## வண. பிதா எஸ். ஜே. இமானுவல் அடிகள்

**முப்பணி வேந்தர் அமுதுவுக்கு எமது பாராட்டுக்கள்**



இனத்திற்கும் மதத்திற்கும் சுமையாக இருந்து வாழ்ந்தவரல்ல அமுது. இனத்தையும் மதத்தையும் தம் தலைமேல் வைத்து சுமந்தவர் அமுது. ஈழத்திலும், தமிழ்மொழி உலகிலும், கத்தோலிக்க சமூகத்திலும் அமுது அடங்கி ஒடுங்கி செயலற்ற மந்தமான வாழ்க்கையை நடாத்தவில்லை. மாறாக இன மத மொழி ஆகிய மூன்று துறைகளிலும் தமக்கேற்ற பாணியில் வீரத்துடனும் விறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புடனும் மகத்தான சேவை செய்திருக்கின்றார். இவை மூன்றையும் ஒன்றுக்கொன்று முரண்படாத முறையில் எல்லாவற்றையும் ஒன்றாகவும் நன்றாகவும் இசைவுபடுத்தி சேவை புரிந்த பெரியார்கள் மிகச் சிலரே. அவர்களுள் அமுது அவர்களும் நிச்சயமாக ஒருவர்.

கடந்த சில பத்தாண்டுகளாக ஈழத் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் தோன்றியிருக்கின்றது. கிறிஸ்தவர்கள் மண்ணகத்தில் வாழ்ந்து விண்ணகத்தை நோக்கி இறைவன் காட்டிய பாதையிலே உண்மை, நீதி, சமாதானம் தேடி நடப்பவர்கள். இதுதான் திருச்சபையின் படிப்பினை. ஆனால் எம்முள் சிலர் தவறாக நல்ல மதத்தவர்களாக இருக்க வேண்டுமாயின் மண்பற்றையும் இனப்பற்றையும் குறைத்து விண்பற்றை மாத்திரம் வளர்க்க வேண்டுமென்று கருதுகின்றனர். இத்தவறு பல அடிப்படைக் கிறிஸ்தவ சபைகளிலும் காணப்படுவது வருத்தத்துக்குரியது. இத்தவறான கொள்கை எம்மைக் கடமையின் மட்டில் கோளைகளாக்கிவிடும். இப்பின்னணியில்தான் அமுது போன்ற பெரியார்களின் முப்பெரும் சேவையைக் கணிக்க வேண்டும். இவ்வுதாரணத்தில்தான் எமது சேவைகளையும் இசைவு படுத்தி வாழவேண்டும்.

அன்று அமுதுவின் சேவையை ஈழத்தின் பள்ளியிலும் பேச்சிலும் எழுத்திலும் பெற்று மகிழ்ந்தனர். இன்று அவரின் அனுபவத்தில் பழுத்த சேவையைப் புத்தகப் படைப்புக்களிலும் வானொலிப் பேச்சுக் களிலும் உலக நாடுகளில் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் பெற்று வருகின்றனர்.

வாழ்க அமுது ! வளர்க அவரின் முப்பணி!

எஸ்.ஜே.இமானுவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிப்பேரரசு வைரமுத்து



**மூத்த முன்னோடிக் கவிஞர் அவர்களுக்கு வைரமுத்து எழுதுகிறேன்.**

வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைத்தது.

பெருமைமிக்க போப்பாண்டவர் வாயிலாக தங்களுக்குச் செவாலியர் பட்டம் கிடைத் திருப்பதை அறிந்து சிந்தை களித்தேன்.

தங்களின் தளராத தமிழ்ப்பற்றுக்கும் அயராத தமிழ்ப்பணிக்கும் கிட்டிய மாபெரும் அங்கீகாரம் இது.

தங்களுக்கு இப்படியோர் உயர்வு கிட்டியிருப்பது உலகத் தமிழர்களுக்கே பெருமை சேர்ப்பதாகும்.

தாங்கள் உடல்நலத்தோடும் மனவளத்தோடும் பல்லாண்டு வாழவும்,
தங்கள் தமிழ்ப்பணி தொடரவும்
என் வாழ்த்துப் பூக்களைத் தூரத்திலிருந்து தூவுகிறேன்.

வாழ்த்துக்களோடு
வைரமுத்து

## முகத்தார் ஜேசு



**ஆருயிர் அமுது அண்ணா...!!!**

என்றென்றும் வாழ்த்தும் என் நெஞ்சத்தில் -
என்றென்றும் வாழும் ஆருயிர் அமுது அண்ணா!

இளவாலை அமுது 'புலவர்மணி', 'சொல்லின் செல்வர்' என விளங்கும் தங்களை, பரிசுத்த பாப்பரசர் வழங்கியுள்ள, 'செவாலியர்' விருது தேடிவந்துள்ளமையை வாழ்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைத் தேடி அலைகிறேன். நேரில் வருகை தரவும் துடிக்கிறேன்.

"கற்றவை பலரதும் மனதில் நிற்கும்
களத்திலே தமிழ் மழையாய் பெய்யும்
சொற்திறன் எச்சபையையும் வெல்லும்
சோர்விலா எழுத்தாற்றல் விருதுகளைச் சேர்க்கும்".

ஐயா அமுது அவர்களே!

தங்கள் எழுதுகோல் ஓர் வற்றாத ஜீவநதி, தரணிவாழ் தமிழன் நெஞ்சங்களில் தம் எழுத்துக்கள் என்றென்றும் ஜீவிதம்!!

இளவாலை மண்ணின் மண்வாசனை எட்டுத்திக்கும் எடுத்துரைத்த கவிஞர்! கவிஞர் அமுது. "தமிழுக்கு அமுதென்று பெயர்" என்ற சொற்சிலம்பங்களுக்கு இலக்கணமானவர். மறக்கமுடியாதது, மறுக்கவும் முடியாதது. காலங்கள் வாழ்த்தும் இளவாலை மண்வாசனை மகாகவி.

உரையாடும்போது சொல்லின் சுவைகளான எதுகையும் மோனையும் எட்டி நின்று வேடிக்கை பார்க்கும். எழுத்தில் வடிக்கும்போது உயிரினமும் மெய்யினமும் எழுந்து நின்று நர்த்தனமாடும்.

உதாரணம்:

இளவாலையே!...
தேங்காய் வீழ்ந்தால் மாங்காய் சொரியும்.
பலாக்காய் வீழ்ந்தால் பாக்குப் பிஞ்சுகள் சிதறும்.
வாழைக்குலைகள் முற்றத்தில் நின்று சுற்றத்திற்கு கைநீட்டும்.
வெற்றிலைக் கொடிகள் முருக்க மரங்களில் முதுகு சொறியும்.
நெல் அறுத்த வயல்களிலே கிளிக்கூட்டங்கள் பூபாளம் பாடும்.
மரவள்ளிக் கிழங்குகளும் மண்வளம் பேசும்.

சொல்நயம் சிறந்த இக்கவிதையை யாத்த சொல்லின் செல்வனை எப்படி வாழ்த்துவது? முக்கனிகளை மூலப்பொருளாக்கி மண் வாசனையை மையப்பொருளாக்கிப் பொழுது புலரும் வேளைதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழலில் பூபாளம் பாட கிளிக்கூட்டங்களை அழைத்து வருகின்றாரே அருமை அண்ணன் அமுது அவர்கள். காலங்கள் வாழ்த்தும் கவிவாணன்.

அன்புடனும், நட்புடனும் வாழ்த்தி நிறைவு செய்வது

அன்றும், இன்றும், என்றும்
அருமைத் தம்பி, நண்பன், உறவினன்
முகத்தார் ஜேசு

**சுடரொளி ஆசிரியர் ஐ.ரி.சம்பந்தன், கலாநிதி பொன். பாலசுந்தரம்**





**எங்கள் 'அமுது' க்குத் தமிழ் என்று பெயர்**

(சுடரொளி ஆசிரியர் ஐ.ரி.சம்பந்தன் அவர்களுடன் நெருங்கிய நட்புறவு கொண்டவர் இளவாலை அமுது அவர்கள். அமுதுவின் எந்தவொரு இலக்கிய மேடையிலும் சம்பந்தன் அவர்களின் வாழ்த்தொலி ஓங்கி ஒலிக்கும். அமுதுவின் கவிதையை அவர் எழுத்தை மிக ஆழமாக நேசித்தவர் ஐ.ரி. சம்பந்தன் அவர்கள். அமுதுவின் தொண்ணூறாவது அகவையைப் பாராட்டி வாழ்த்திப் பாடிய பாடல் இங்கே உள்ளவாறு...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"அமுது"க்குத் தமிழ் என்று பெயர்
தமிழுக்கு அமிழ்தென்று பெயர் - எங்கள்
"அமுது" க்குத் தமிழ் என்று பெயர்
புலவர் அமுதுவுக்குத் தமிழ் என்று பெயர்
இளவாலை அமுதுவுக்குத் தமிழ் என்று பெயர்
இளமைத் தமிழ் படைக்கும் எங்கள்
இளவாலை அமுதுக்குத் தமிழ் என்று பெயர்

முத்தமிழ் வித்தகனாய்
முழு மதிகள் பல கண்டவனாம்
இத்தலத்தில் மகிமையுடன்
இனியனவாய் வாழ்பவனாம்
கவிதை மழை பொழிந்து
புவியதனை மகிழ்வித்த
காவிய நாயகனாய்
ஓவியம்போல் உள்ளத்தில்
நிறைந்தவனாம் அமுது
எனும் பெருமனத்தோன்.

பாடுவார் - பாட்டால் ஆடவைப்பார்
பேசுவார் - பேச்சால் குளிரவைப்பார்
சிந்திப்பார் - சிந்தனையால் சீரமைப்பார்
அன்பளிப்பார் - ஆசியுடன் உபசரிப்பார்
பண்பாளர் - அரவணைக்கும் தென்பாளர்
இவர்தான் ஐயா! எங்கள் அமுதாவார்
பட்டங்கள் பல
வத்திக்கான் அரவணைத்த செவாலியர்
வாழ்த்துதற்குக் கலாநிதி
போற்றுதற்குத் தமிழ்க் கங்கை
புவியோருக்கு மதுரகவி
இன்னும் பல பெற்றும்
படாடோபம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமையும் மாறாமல்
இன்முகமும் புன்சிரிப்பும்
எங்களுக்குத் தான் அமுதம் ஐயா!
அன்புப் புலவரே! அமுதுப் புலவரே
அகவை 90 பெரிதல்ல
“அமுதே” பெரிது
ஆல்போல் தளைத்து
அறுகுபோல் வேரூன்றி
ஆயிரம் காலத்துப் பயிராக வாழ்வீராக!
இப்படி வாழ்த்துபவர்கள் வேறு யாருமல்ல,

உங்கள் நேச பாசத்திற்குரிய
ஐ.ரி.சம்பந்தன். கலாநிதி. பொன். பாலசுந்தரம்.

## வருத்தத்தோடு மீண்டும் கவிப்பேரரசு வைரமுத்து

(இளவாலை அமுது அவர்கள் இந்த மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்றபோது.)

**அறிவில் பழுத்த அன்பு வடிவமான அய்யா**
அமுதுப் புலவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி
என் மனதில் பாறைபோல் இறங்கியது.

கண்ணிமைகள் கவிழ்ந்து யோசித்தால்
அவரது நெடிய தோற்றமும்
தும்பைப் பூப்போன்ற வெள்ளுடையும்
அறிவார்ந்த விழிகளும்
அன்பு ததும்பும் மொழிகளும்
என்னைத் தொட்டுப் பேசிய சொந்தமும்
வந்துவந்து போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கையிலே பிறந்து
தமிழ்ப் பேராசான்களிடம்
தமிழை எழுத்தெண்ணிக் கற்று
இலக்கியச் செப்பமும்
இலக்கிய நுட்பமும் வாய்க்கப் பெற்றுத்
தன் நுரையீரல் முழுக்கத் தமிழ்க் காற்றையே
நிரப்பி வைத்திருந்த பெருமகன்
இன்று காலக்கடலில் கரைந்துவிட்டார் என்கிறபோது
தமிழ் தன் எழுத்துக்களில் ஒன்றைத்
தொலைத்துவிட்டதாகவே தோன்றுகிறது.

தமிழ் - தமிழர் - தமிழர் தாயகம் என்ற இலட்சியங்களைத்
தன் இறுதி மூச்சுவரை ஏந்திவந்த ஏந்தல் அவர்.

கடல்கடந்து வாழும் தமிழ்த் தலைமுறைகள்
அவர் எண்ணங்களை நெஞ்சில்
எழுதிக் கொள்ள வேண்டும்.
இரத்தமுஞ் சதையுமான உடல்கள் மட்டுமே மரிக்கக்கூடும்.
இலட்சியமும் சத்தியமும் மரிப்பதில்லை.
அவரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கும்
சகோதரர் கல்லாறு சதீஷ் போன்ற தமிழ்த் தங்கங்களுக்கும்
என் ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அவர் நினைவுகள் நம்மை
வழிநடத்தும் ஒளிக்கீற்றுகளாகத் திகழும்
என்பது திண்ணம்.
நிறைவாகப் பாவேந்தரின் பாடலைச் சொல்லி
அமுதுப் புலவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன்.

"தமிழுக்கும் அமுதுதென்று பேர் - இல்லை
அமுதுக்கும் தமிழென்று பேர்"

வருத்தத்தோடு.....

வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருத்துவக் கலாநிதி இளமுருகனார் பாரதி

**காமருநல் வடிவம் நீத்துக் கர்த்தரின் சேவடியிற் கலந்தவுனைக் கரங்குவித்து வணங்குவோமே!**



தேமதுரஞ் சொட்டச்சொட்டக் கவிதை யாலே
செல்வா! எனைநீ வாழ்த்திநின்றாய்! செந்தமிழ்ப் பூந்
தாமரைகள் பூத்திடவே தடாகம் அமைத்துத்
தனித்தமிழை வளர்த்துநின்றாய்! தகைமை பெற்றாய்!
நாமகிழ்ந்து தினம்போற்றச் 'செவாலியர்' விருதை
நற்குணத்தோய் பெற்றனையே! பற்ற றுத்துக்
காமருநல் வடிவம்நீத்துக் கர்த்தரின் சேவடியிற்
கலந்தவுனைக் கரங்குவித்து வணங்கு வோமே!!

சீலம்மிகு பெருவாழ்விற் றிழைத்துப் பெற்ற
செல்வங்கள் ஐயிரண்டுஞ் சிறக்கச் செய்தாய்!
காலமதாற் பட்டழியும் தமிழ் மலரக்
கடமையென மரபுதனை ஓம்பிக் காத்தாய்!
கோலச்செங் கதிரோன்போற் கவிக் கிரணம்
குவலயத்திற் பாய்ச்சித் *தமிழ்க் கங்கை* யானாய்!
பாலனவன் இராச்சியத்திற் பணி இயற்றப்
பக்குவம்பெற் றேகினையோ? சாந்தி! சாந்தி!!

நடைக்கெனவே உனக்கென்றோர் பாணி தேர்ந்து
நறுந்தேனுஞ் சர்க்கரையுங் கலந்தாற் போலப்
படைத்தளித்த செந்தமிழ்ப்பா மரபுக் கவிகள்
பகர்ந்திடுமே உன்புகழைப் பாரில் அன்றோ?
"கிடைத்திடுமோ *அமுதே*யுன் தீஞ்சொல் அமுது?
கீற்றுமதி போலெங்கு உற்றாய்" என் றேங்க
அடைக்கலமாய் இயேசுபிரான் பாதார விந்தம்
அணைத்துய்த்த *அடைக்கல முத்தே* சாந்தி!.
ஓம் சாந்தி!

பல் மருத்துவ கலாநிதி இளமுருகனார் பாரதி
சிட்னி - அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் பிரிவிலே அன்பு மகன் சந்திரகாந்தன்





## Mother, Sweet Mother ....

Rev. Fr. A. Joseph Chandrakanthan, [illegible]
*Associate Professor, University of Toronto and*
*Bioethicist Centre for Clinical Ethics,*
*University of Toronto Joint Centre for Bioethics*

My mother, Mrs. Theresa Adaikalamuthu, the third of the eight children of the late Mr. Marcelin Chelliah Swampillai and Mrs. Mariapillai Chelliah both pious Catholics from St. Anne's Church at Ilavalai, passed away peacefully after a brief period of hospitalization at Ealing Hospital in London, England on Monday June 02, 2003. Though she has been ailing for the past several years I have known her as a person who would accept and offer up suffering with a profound patience and exemplary Christian spirit. She has been a devoted wife, a helper and companion to my father who is a reputed Tamil poet and author. Recently Pope John Paul II Honoured him as a Chevalier Knight of St. Gregory the Great.

"Amma," as I have always called her since the time I began to utter my first words in Tamil, took exceptional pride that two of her close relatives were chosen to serve God and in that they were among the first handful of natives from among the Jaffna Tamils to respond to the priestly and religious vocation. Her grand uncle, the Late Rev. Fr. Sebastian Gabrielpillai, was the first native son of Ilavalai to be ordained to the priesthood for the Catholic diocese of Jaffna and her grand aunt, Rev. Sr. Martha Gajetan Gabrielpillai, became a nun in the Congregation of the Holy Family of Bordeaux. Their sister known as Mariapillai or Kovilammai who was widowed at a very young age lived in the land opposite to the Church in the first brick house ever to be built at Ilavalai during the British colonial period. She was a lay leader who led the Ilavalai Catholic community in prayer in the vernacular language for several decades, when liturgical services were held in the Latin language.

Born at Ilavalai in 1919, Theresammah as she is endearingly known among her relatives and friends, had her early education at Holy Family Convent, Ilavalai and completed her Diploma as a Trained Teacher at the Women Teachers' Training College at Ilavalai. She began her profession as a teacher at St. Joseph's College, Anuradhapura in 1939 and later taught at Holy Family Convent, Jaffna, Little Flower Convent in Karampon, Kayts, St. John's Tamil School at Periyavilan, and retired in 1976 as the Senior Assistant of St. Henry's Boys School at Ilavalai where she taught for over fifteen years.

All of us her sons were privileged to have had her as our primary school teacher. My mother looked upon her ministry of teaching as a sacred vocation. She had a very special love for children and personally showed a great deal of compassion, affection and love to those children who have lost either one or both of their parents. I have often witnessed Amma sharing her meal with poor children from her school whom she recognized as under fed or hungry. Through her life, she taught us her children and many others the deepest significance of the Christian values of love and care, charity and self-sacrifice, simplicity and humility.

With exceptional care and affection Amma protected and brought us up, her children: Shanmathy, Indumathy BEd, Kandumathy, Sebastian Nehru, Chandrakanthan PhD, ThD, Jeyamathy, Vasanthakumar BSc, MPhil, PhD, [illegible] MBA, [illegible] and [illegible] BEng. She encouraged us to study and to be service-oriented. Everyday she would wake up all her children and urge us to go to Church for Daily Mass which is celebrated at St Anne's Church, Ilavalai at 6:00 a.m. Despite the burdensome duties of her daily life as a teacher and mother of ten children, she hardly ever missed the Family Rosary that we use pray with the sound of the evening "Angelus" at 6:00 p.m.

She also had an immense love for her grand children: [illegible], BSc, PhD, [illegible] BSc, (Amma brought her up for over a year at our family home at Ilavalai in 1981-82) Tyrone, BEng, Jonathan, BEng, [illegible], [illegible], Caroline, [illegible], [illegible], Ryan, Mark,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Rick, Georgina, Winston, Jessica, Shelton, Clinton, Sharon, Edith, Cynthia, Evelyn and Shelton.

The horrendous effects of the internecine civil war between the Tamils and the Sinhala government of Sri Lanka (GOSL) did not fail to make its brutal scar both physically and psychologically on my mother. She has recalled to me several times that sometime in 1985 she had to walk ten miles on mid-day, under the scorching heat of the sun from Jaffna to Ilavalai as a result of a military onslaught in the city of Jaffna. She has gone to the city to collect her pension from the bank and there was no transport available for her to return home.

Later, on the 13th of July 1992 two Supersonic bombers of the Sri Lankan air force began pounding Ilavalai dropping a cluster of 250kilo bombs and all the people began to flee in panic. I was then at the University of Jaffna, which is about twelve miles away from Ilavalai. At a time when every mode of mass communication was banned by the GOSL, any news could reach Jaffna only by word of mouth. The news was conveyed to me by my colleagues around 3.00 p.m. at the University that aerial bombardment in and around Ilavalai began around 12.30 that afternoon. I became very anxious and worried about hundreds of students in the two High schools at Ilavalai, my elderly parents were all alone at home and other families with a number of seniors living there.


Around 4.00 in the afternoon I rode on my motorcycle toward Ilavalai and when I reached Pandaterruppu, Mr. George [illegible], Head of the Jaffna Sub-delegation of the International Committee of Red Cross told me that the road to Ilavalai has been temporarily closed and that the people who fled from Ilavalai are at Our Lady of Fatima's Church compound at Pandaterruppu. Rushing to the churchyard I found a large number of people from Ilavalai who were in panic and shock. There were over six hundred people and I looked for my parents in the crowd, though I was skeptical that my father would not have left home because my mother was unable to walk on her own as a result of her illness. I waited until it was dark and ventured to go to Ilavalai to see my parents. Leaving my motor cycle at Pandaterruppu I hired an auto-rickshaw and went to Ilavalai around 10.00 p.m. There was no sign of life at Ilavalai except the frightening growl of dogs. When I reached home I found my parents seated on the sofa with a small lantern dimly lit. I helped them to hurriedly pack whatever they can pick up and get into the auto-rickshaw and brought them to my rectory at St. Xavier's Church in Thirunelvely, Jaffna. That was Amma's last day at our family home. We had to say good bye to our home under the cover of darkness because no one knew where the military is positioned and any suspicious move could have caused them to open fire. Much later I learnt that the army was standing about 500 meters from our home. Very reluctantly with a heavy heart she undertook the journey to London leaving behind her ancestral home and village which was very close to her heart. She returned home on the 9th of June 2003 when we her children together with our Dad took her lifeless remains in a casket.

While living in London, more than once she expressed her wishes that if and when God calls her to her heavenly abode her remains be buried at St. Anne's cemetery near her own parents. To honour her wishes we had a funeral service at St. Bernard's Church in Mandeville Road Northolt, England on Saturday June 7, and took her remains to Ilavalai, Jaffna on the 9th of June 2003 for ceremonial and burial service at St. Anne's Cemetery, Ilavalai. Fr. Chandrakanthan was the Principal celebrant at her funeral Mass at Ilavalai, which was attended by a large number of priests, nuns and her past students, relatives and friends. His Lordship the Bishop of Jaffna, the Most Rev. Thomas Savundaranayagam, led the final commendations.

Amma! You are the greatest person we've ever met in our life. We always feel that we have been the luckiest children to have had you as our mother.

## அன்பு மகன் அமுது அரசன்

**பப்பா ! கேட்கிறதா என் குரல்?**



அரசா என்று எனை அழைத்து அன்பைக் கொட்டி
அகத்தினிலே பால் வார்க்க இனி யாரைக் காண்பேன்?
பொன்னான நின்வாழ்வை உலகம் போற்றும் உங்கள்
புகழ்மொழியைத் திருவிழியை இனி எங்கு காண்பேன்?
சுவையான தமிழ்பேசும் என்அருமை தந்தையரே
எனது வீடு
இன்று கண்ணீர் மழையில் தோய்ந்து நிற்கும்
சோகக் காடு
எம் குடியின் கங்கை நதி எமை விட்டுப் பிரிந்ததன்றோ
இதுதான் விதி என்று என் இதயத்தில் அறைந்திடவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பப்பா வீட்டுக்குப் போவோம் என பரிதவிக்கிறாள் என் இளைய மகள்
இனி அவளை யாரிடம் நான் அழைத்துச் செல்வேன் ஆறுதல் கேட்டு?
இடி விழுந்தால் போல் அதிர்ந்து கதறுகின்றார்
என் மனையாள்,பிள்ளைகள் மூவர் வழி சொல்ல மாட்டீரோ?
நினைத்தவுடன் இனிக்கின்ற நேசத் தந்தை
நெஞ்சினிலே எனைக் கிடத்தி வளர்த்த தந்தை
திணையளவும் தீமை எண்ணாத தெய்வத் தந்தை
சந்தன மரம் போல் உங்கள் ஆக்கம்
தமிழில் என்றும் தணியாத் தாகம்
சிந்தையில் செயலில் என்றும் தூய்மை
இறுதியிலே ஈழத்து கவிஞர் எல்லாம் ஒன்று கூடி
சங்கத்து தமிழ் எடுத்து கண்ணீர் தோய்த்து
சமரகவி பாட வைத்து மறைந்தீர்களோ?
இளைய மைந்தன் எனைத் தவிக்க விட்டு எங்கே சென்றீர்?
எப்பிறப்பில் இனி உங்களைக் காண்போம்?
இதுவோ எம் வாழ்வு?

அன்பு மகன்
அமுது அரசன்

~ ※ ~ ※ ~ ※ ~ ※ ~

## வண்ணைத் தெய்வம்

**தமிழாக வாழ்ந்த மனிதம் ஒன்று மறைந்தது!!!**



தமிழ் அழுகின்றது!
தமிழ்த் தாய் அழுகின்றாள்!!!
தமிழ் இலக்கிய நெஞ்சங்கள் அனைத்தும் அழுகின்றன!!!

மெல்ல நலிந்து வரும் மரபுக் கவிதைகளை - இந்த வையத்தில் வாழவைத்த கவிதைக் கடலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் எழுத்தும் தமிழாக வாழ்ந்தவரே!
நல்ல தமிழ் நூல்களை நாம் படிக்கத் தந்தவரே!

நாளாந்த வாழ்வில் நாம் பேசும்
நளினங்களை, நகைச்சுவைகளெல்லாம்!
நீர் பாடும் கவிதைகளில் ரீங்காரமிட்டு நிற்கும்!
உம் கவிதைகளை நாம் பாடும்போதெல்லாம்
எம் வாய்கள் எல்லாம் பொச்சடிக்கும்!

மேடைகள் எத்தனையோ கண்டீர்!?
பட்டங்கள் எத்தனையோ சுமந்தீர்!?
கோடையிலும் மழை பொழிவது போல
காவியங்கள் பல படைத்து நின்றீர்!

சங்க இலக்கியத்தில் காவியமாய் வீற்றிருக்கும்
புறநானூறு போல!
புதுக் காவியம் ஒன்று படைப்பதற்கு முன்பாகவே
"விதி சதி செய்துவிட்டது"!
ஐயா! நீங்கள் மரணிக்கவில்லை!
தமிழால் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள்!
தமிழை நேசிக்கும் இதயங்கள் எல்லாம்
உங்களுக்காய் பிரார்த்திக்கும்!

வண்ணைத் தெய்வம்

## முதன்மை ஆசிரியர், தமிழர் தகவல் - கனடா

### முற்றிப் பழுத்த கனி

நல்லவர் பெரியவர், அறிஞர், மதிப்புக்குரியவர், மரியாதைக்குரியவர் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் மனித வாழ்வில் உயர்வானவர்களைக் குறிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்வானது என்பது சிந்தனை, செயற்பாடு வாழ்வியல் நடைமுறைச் சமூகத்துக்கு ஆற்றும் சிறப்பான பணிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது.

எனது பார்வையில் மேற்சொன்ன அத்தனை சிறப்புக்களையும் ஒருங்கே பெற்ற ஒருவர், எம்மத்தியில் எங்கள் காலத்தில் எங்களுடன் ஒருவராக வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்திருந்தார் என்றால், அவர் எங்கள் அன்புக்குப் பாத்திரமான அமுதுப் புலவர் அவர்கள்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென நினைத்து, அதற்கமைய வாழ்ந்து காட்டிய அமுதுப் புலவர், தமது 92 ஆவது வயதில் காலமாகி, ஒரு திங்கள் முடிவடைந்து விட்டது என்பதை நம்ப முடியாமலிருக்கிறது.

எனது வாழ்வின் அரைப்பகுதிக் காலம் அவருடன் பழகியிருக்கிறேன். அவரது கனிவான பேச்சில் என்னை மறந்திருக்கிறேன். அவரது உடையழகையும் நடையழகையும் புன்னகை வதன அழகையும் பார்த்து ரசித்திருக்கிறேன். பல தடவைகள் அவரை எனது தந்தையின் இடத்தில் வைத்துப் பார்த்திருக்கிறேன்.

இப்படித்தான் எங்கள் தொடர்பு ஆரம்பமானது. ஆசிரியப் பணிக்கு வருவதற்கு முன்னர், தமது பதினேழாவது வயதிலேயே பத்திரிகைகளுக்கு “ச.அடைக்கலமுத்து” என்ற பெயரில் எழுத ஆரம்பித்து, ஒரு காலத்தில் தினகரன், வீரகேசரி, பாதுகாவலன் ஆகிய பத்திரிகைளின் செய்தியாளராக இருந்தவர் என்பதனைப் பின்னரே அறிந்து கொண்டேன்.

1983- 84ஆம் ஆண்டுகளில் யாழ்நகரில் எனது பத்திரிகை அலுவலகத்திற்கு அடிக்கடி வருவார். அவரது கையில் உள்ள சிறிய பைக்குள் கவிதைகள் எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும். “பிரசுரியுங்கள்” என்று பண்புடன் கூறிச் செல்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதன் பின்னர் எங்களுக்கிடையேயான அன்பு இறுக்கமானது. ஆனால் நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. 1987 இன் நடுப் பகுதியிலென நினைக்கிறேன். இங்கிலாந்திலிருந்து சில கவிதைகளுடன் வந்த அவரது கடிதம், அவர் தாயகத்திலிருந்து குடும்பமாகப் புறப்பட்டு விட்டார் என்பதை அறியத் தந்தது.

அடுத்த இரண்டாண்டில் நானும் அஞ்ஞானவாசியாக நேர்ந்தது.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி ஸ்காபரோவிலுள்ள தேவாலயமொன்றில் வண.பேராசிரியர் சந்திரகாந்தன் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழாவுக்கு மனைவியுடன் சென்றவேளை, பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

என் பெருமதிப்புக்குரிய அமுதுப் புலவர் வாயிலில் ஆஜானு பாகுவான தோற்றத்துடன் காணப்பட்டார். நானாகவே அருகில்சென்று, "என்னைத் தெரிகிறதா?" என வினவினேன்.

அகிலனின் அப்பா என்று சொல்லி எனது உணர்வை உறக்க நிலையிலிருந்து கலைத்தவர் என்னை அணைத்து உச்சிமோந்து, திரு உங்களை இங்கு எதிர்பார்த்திருந்தேன் என்று கூறி அன்போடு உபசரித்தார். எங்கள் இணைப்பு மேலும் இறுக்கமானது.

2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழர் தகவல் விருது பெறுவதற்காக இங்கிலாந்திலிருந்து வந்திருந்தார். வாழ்நாள் சேவையாளர் விருதும், தங்கப்பதக்கமும் அவருக்கு வழங்கி மதிப்பளிக்கப் பெற்றது.

அன்று அவர் நிகழ்த்திய உரை, எல்லோரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தது. அதற்கு முன்னரும் பின்னரும் ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபாபீடம் அப்படியான சிரிப்பொலியைக் கேட்டிராது என்பது உண்மையிலும் உண்மை.

கடந்த நான்கு ஆண்டுகளில் அடிக்கடி கடிதம் எழுதுவார். தமது புதிய படைப்புக்களை (நூல்கள்) அனுப்பி வைப்பார். தேவையான சில பத்திரிகை நறுக்குகளையும் அனுப்புவார். கடிதம் எழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பழக்கம் குறைவான நான், தொலைபேசி வாயிலாக உரையாடுவேன். அவரது நகைச்சுவை உரையாடல் எனக்கு மிகுந்த விருப்பமானது.

கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி, அமுதுப் புலவரின் அடிவழுவாப் புதல்வா் சந்திரகாந்தன் அடிகள் தொலைபேசியில் தந்த தகவல் இது. "திரு! அப்பாவுக்கு ஒரு Stroke வந்து coma நிலைக்குச் சென்று விட்டார். அடுத்த அரைமணி நேரத்தில் இலண்டன் புறப்படுகின்றேன். வழக்கம்போல அவருக்குக் கொடுப்பதற்காக இந்த வருட தமிழா் தகவல் ஆண்டு மலரையும் எடுத்துச் செல்கிறேன் ஒரு நம்பிக்கையுடன்" என்பது அந்தத் தகவல்.

அமுதுப் புலவா் பெப்ரவரி 23 ஆம் திகதி மீளாத் துயிலாகி விட்டார் என்ற செய்தி வந்தது. இன்னமும் எட்டாண்டுகள் வாழ்ந்திருந் தால், எம்மத்தியில் ஒரு மூதறிஞா் நூறாண்டு வாழ்ந்திருப்பாரோ என்று எண்ணுகிறோம். அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை.

பெப்ரவரி ஏழாம் திகதி, இலண்டனில் அவரது பாராட்டு விழாவும், 1200 பக்கங்களைக் கொண்ட இளவாலை தமிழ்க் கங்கை அமுது ஐயாவின் படைப்புக்கள் நூல் வெளியீடும் வெகுசிறப்பாக இடம் பெற்றன. இந்த நூலின் உள்ளேயும் பின் அட்டையிலும் தமிழா் தகவலின் பதினைந்தாவதாண்டு மலரில் அவா் பற்றி நான் எழுதியிருந்த கட்டுரையைத் தெரிந்து பிரசுரித்தமை, என் மீதும் தமிழா் தகவல் மீதும் அவருக்கிருந்த பிரியத்தை எடுத்துக் காட்டியுள்ளது.

அமுதுப் புலவரை தமிழுலகுக்கு ஈன்ற பெற்றோருக்கு எங்கள் முதல் நன்றி!

மூதறிஞரைத் தமிழ் செய்யத் தந்த அமரத்துவ மனைவி திரேசம்மா அன்னைக்கும், அன்புக்குரிய பிள்ளைச் செல்வங்களுக்கும் நன்றி சொல்ல எம்மிடம் வார்த்தைகளில்லை.

எஸ்.திருச்செல்வம்

முதன்மை ஆசிரியா், தமிழா் தகவல் - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு ஒன்றியம்

**எம்முடன் என்றும் வாழ்வார்!**

இவருக்கு விருதளித்து மகிழ்ந்தோம் அன்றைக்கு.
எம் மண்ணின் புகழ்பூத்த மற்றொரு "தமிழ்த்தூதை"
இழந்து நிற்கின்றோம் இன்றைக்கு.
"அமுதுவின் அற்புதப் படைப்புக்கள்" என்பது
"படைப்புக்களில் அற்புதம் எங்கள் அமுது" என்றாகி
எம்முடன் என்றும் வாழ்வார் இந்தப் பேராசான்.

நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்.)

## அமுதுவின் புத்திரர்கள்

**எங்கள் பப்பா எங்களின் வாழ்விற்கோர் "கலங்கரை விளக்கு"**

"சாந்துணையுங் கல்" என்ற முதுமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் எங்கள் பப்பா. கல்வி, அதனால் உண்டாகும் அறிவு, இவற்றால் உண்டாகும் நல்லொழுக்கம் அத்தனைக்கும் முன்னுதாரண மாக வாழ்ந்து காட்டியவர் எங்கள் பப்பா. தன் பிள்ளைகளின் வாழ்விற்கும், அவர்களின் உயர்விற்கும் உறுதியான வழிமுறைகளைக் கையாண்டு எம்மைச் சீரும் சிறப்புடனும் வாழ வழிகாட்டியவர் எங்கள் தந்தை. பல்துறை சார்ந்த தமிழறிஞர்களால் எம் தந்தை வழிநடத்தப்பட்டவர் ஆதலால் எப்பொழுதும் அவருடைய பேச்சில் ஒரு முதிர்வும், ஒரு கனிவும் செறிந்திருக்கும்.

எங்கள் பப்பா ஒரு மரபுக் கவிஞன். அவருடைய இதயம் பூவினும் மென்மையானது. அவர் ஒவ்வொரு சொற்களையும் தெரிந்தெடுத்தே பேசுவார். அத்தனை சொற்களும் தேன்சுவை சொட்டும். தன் பிள்ளைகளிடம் ஒரு நண்பனைப்போல் பேசுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதுப் புலவர் அவர்களை எங்கள் தந்தை என்று சொல்வதற்கு அவரின் பிள்ளைகளாகிய நாம் என்ன தவம் செய்தோமோ.?

தமிழ் ஆசானாகத் தன் வாழ்வைத் தொடங்கிய எங்கள் பப்பா ஒரு சிறந்த எழுத்தாளனாக, நாடு போற்றும் கவிஞனாக வரவேண்டும் என்பதில் மிகுந்த வைராக்கியமுடையவராக வாழ்ந்தார். இளவயதில் இவருடைய சிந்தனைப் பிழிவில் உருவான கட்டுரைத் தொகுப்புக்கள் எம் தந்தைக்கு "சின்னக் கல்கி" என்ற மகுடத்தைச் சூட்டியது. அவர் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் அவருடைய செயலூக்கம் குன்றவில்லை. மாறாக சமூகத்தை நோக்கிய சிந்தனையில் அவருடைய எண்ணங்கள் அதி உத்வேகத்தை கொண்டிருந்தமையை நாங்கள் உணர்ந்தோம். எங்கள் தாயாரின் கடின உழைப்பும், அவரின் அன்பான அரவணைப்பும் எங்கள் பப்பாவின் இலட்சியத்தை ஈடேற்றத் துணைபுரிந்தது. வாழ்வில் தன் இலட்சியத்தில் அவர்கொண்டிருந்த தளர்வில்லா உறுதி அவரின் இறுதிமூச்சுவரை தொடர்ந்திருந்ததை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். பப்பாவின் "அற்புதப் படைப்புகள்" கலாநிதி, செவாலியர், மூதறிஞர் போன்ற அவரின் எச்சங்கள் எங்கள் தந்தையின் நாமத்தை தரணியில் என்றென்றும் தாங்கி நிற்கும்.

ஒரு மனிதன் எப்படி இந்தப் பூமியில் பேரோடும் புகழோடும் வாழவேண்டுமோ அப்படியே இந்த வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து முடித்தவர் எங்கள் தந்தை. அவருடைய ஆத்மா இறைவன் பாதாரவிந்தங்களை நிச்சயம் சென்றடையும்.

" எங்கள் பப்பா எங்களின் வாழ்வுக்கு ஒரு கலங்கரை விளக்கு."
" பிள்ளைகள் இதயநாதம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 32. நிறைவாக

என் அன்புக்குரிய தமிழ் நெஞ்சங்களே, 23.02.2010 உங்களுக்கு நினைவிருக்கின்றதா? நிச்சயம் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அன்றுதான் அமுது என்ற அந்தத் தமிழ்மலை சரிந்த நாள். என் ஆற்றலுக்கு தகுந்தவரை அந்த தமிழ்மலையின் வரலாற்றை உங்கள் முன் படைக்கின்றேன். இதனூடாக மரணத்தின்போது அமுதுவுக்கு நான் கொடுத்த வாக்குறுதியையும் நிறைவு செய்கின்றேன். இலக்கியச் சுவை உடையவர் எவரோ அவரால்தான் ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பாதையைப் புரிந்துகொள்ள முடியும். அந்தவகையில் இளவாலை அமுது அவர்களிடம் நான் கொண்ட ஈடுபாட்டினால் இந்த நூலைப் படைக்கின்றேன். அமுது அவர்களின் முதலாவது ஆண்டு நினைவாக இந்நூல் வெளிவரவேண்டும் என்று எண்ணினேன். அந்த முயற்சி கைகூடவில்லை. அவருடைய முதலாவது ஆண்டு நினைவாக நினைவுப் பேருரை இடம்பெற்றது. பேராசிரியர் செல்வா கனகநாயகம் (ரொறன்ரோ பல்கலைக்கழகம், கனடா) அவர்கள் இலண்டன் வருகை தந்து (27.02.2011) அமுதுவின் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

செவாலியர் அமுதுப் புலவர் அவர்கள் ஒரு "சரித்திர புருஷர்". தமிழையும் தமிழ் மண்ணையும் நேசிக்கின்ற ஒவ்வொரு மனித இதயத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பவர். அமுது அவர்களின் வரலாற்றினை நான் எழுத வேண்டும் என்பதனை அமுதுப் புலவர் அவர்களும் விரும்பியிருந்தார் என்பதற்கு ஒலிநாடாவில் அவர் பதிவு செய்து தந்துவிட்டுச் சென்ற வாழ்க்கைக் குறிப்புக்களே சான்றாகும்.

15.09.1918 ஆம் ஆண்டில் பிறந்து 23.02.2010 வரை வாழ்ந்த அமுதுப் புலவர் அவர்கள் பத்து வயதிலிருந்தே தமிழ்க்கேணியில் காலை நனைத்து பேரறிஞர் என்று பெயர் பெற்று இறுதிப் படுக்கைக்குச் செல்லும்வரை அவர் தமிழ் நெஞ்சம் ஓய்ந்ததில்லையே!! 07.02.2010 சனிக்கிழமை அமுது அவர்களின் இறுதி இலக்கியமேடை இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நெஞ்சில் பசுமை நினைவுகளாகப் பதிந்து இருக்கின்றது. முத்தமிழ் அறிஞர் தாஸீசியஸ் தலைமையில் அறிஞர்கள் புடைசூழ தமிழ்விழா கொண்டாடிய நாளை யார்தான் மறப்பார்கள்? இலங்கை யிலிருந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த வீரகேசரி செய்தி ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் மூதறிஞர் என்ற பட்டத்தை வழங்க, அறிஞர் தாஸீசியஸ் எழுந்து நின்று மூதறிஞர் வாழ்க என்று வாழ்த்தியபோது அனைத்துத் தமிழ் உள்ளங்களும் இணைந்து மூதறிஞர் வாழ்க என்று வாழ்த்திய ஓசையில் அமுது அடைந்த ஆனந்தத்தை வடிப்பதற்கு வார்த்தைகள் இல்லை.

மேடையிலே சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த அமுதுப் புலவர் அவர்கள் இந்தச் சிம்மாசனத்தைவிட்டு இறங்கமாட்டேன் என்று அடம்பிடித்தது உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அந்தநாள் அமுது அவர்களுடைய அந்த இறுதிப்பேச்சு ஒருநாளும் இல்லாத வகையில் எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. ஐயோ இந்தச் சோறு, கறி ஆறப்போகுதென்று சொல்லிச் சொல்லியே நீண்டநேரம் மக்களைக் காக்க வைத்துப் பேசி, மக்களுக்கு ஆசி கூறி உணவு படைத்து விடைகொடுத்தார். இதுதான் உங்கள் இறுதிவிடை என்று அன்று எமக்குத் தெரியாது. இப்படியொரு நிறைவான மரணம் யாருக்கு வருமென்று கற்றவர்கள் பலரும் இங்கே ஆச்சரியப்படு கின்றார்கள்.

இவ்வாறு தமிழாகவே வாழ்ந்த ஒரு மனிதனுடைய முழுப் பக்கங்களையும் வெளிக்கொண்டு வருவதென்பது ஒரு முடியாத காரியம். எனவேதான் அமுதுவின் ஒருசில பக்கங்களை மட்டுமே இந்த வரலாற்றில் காண முடியும், அல்லது இந்த நூல் அமுதுப் புலவர் பற்றிய படைப்புக்கள் மேலும் தோன்றுவதற்கு உந்துசக்தியாக அமையும் என்று நம்புகின்றேன்.

புலவர் இளவாலை அமுதுவின் படைப்புக்களில் ஒருசிலவற்றையே குறிப்பிட்டிருக்கின்றேன். எழுதவேண்டிய பல விடயங்கள் எதிர் காலத்தில் நூலுருப் பெறலாம் என்பது என்னுடைய எண்ணம். இனி இதுவரை காலமும் அமுது அவர்களின் படைப்புக்களாக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. மாதா அஞ்சலி (கவிதைகள்)
2. இவ்வழிச் சென்ற இனிய மனிதன்
3. காக்கும் கரங்கள் (சில்லாலை இன்னாசித்தம்பியின் வைத்திய ஆராய்ச்சி)
4. நெஞ்சே நினை (நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வரலாறு)
5. புனித அன்னம்மாள் ஆலய வரலாறு
6. அமுதுவின் கவிதைகள் (முதற்பாகம்)
7. மடுமாதா காவியம்
8. அன்பின்கங்கை அன்னை திரேசா
9. அமுதுவின் கவிதைகள் (திருத்திய பதிப்பு - இரண்டாம் பாகம்)
10. இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்

என அமுது ஐயாவின் அற்புதப் படைப்புக்களை நாம் வரிசைப் படுத்தலாம். மேலும் அவர் வடித்த கவிதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுதிகள் எண்ணற்றவை. அமுதுவின் படைப்புக்கள் அனைத்தும் தமிழ் மக்கள் நெஞ்சில் பெருமைமிகு நினைவுகளாக என்றென்றும் நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை.

இனி இளவாலை அமுது அவர்கள் பெற்றுக் கொண்ட விருது களை எடுத்துக் கூறுவது இங்கு மிகப் பொருத்தமான அம்சமாகும். அந்த வகையில்,

சொல்லின் செல்வன்- யாழ். தமிழ் இலக்கியக்கழகம்.

புலவர்மணி- இளவாலை. கல்லூரி. பழைய மா. சங்கம். இலண்டன்.

செந்தமிழ்த் தென்றல்- ஈழகேசரி, புதினம் ஆசிரியர்.

முப்பணி வேந்தன்- கலாநிதி வண.எஸ்.ஜே. இமானுவல் அடிகளார். இலண்டன்.

கவியரசர்- பேராசிரியர். கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ்க்கங்கை- ஜேர்மனி தமிழர் பணியகம். பேராயர், கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அவர்கள்.

மதுரகவி- இளவாலை கன்னியர் மடம் அரங்கில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால்.

மகாகவி- வெம்பிளி உயர்கல்லூரி, இலண்டன்.

கலாபூஷணம்- பிரம்மஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள். இந்து கலாசார அலுவலகம், பணிப்பாளர் நாயகம்.

செவாலியர்- பரிசுத்த பாப்பரசர் யோன் போல் 11, மாசில்லா அன்னை கலாலயம்.

கௌரவ கலாநிதி- யாழ். பல்கலைக்கழக வேந்தர், கைலாசபதி மண்டபம். யாழ்ப்பாணம்.

தமிழ்ச் சுரங்கம்- பிரான்சிய தமிழ் அரங்கம். பிரான்ஸ்.

அறிஞர்திலகம்- கனடா- ரொறன்ரோ. "தமிழர் தகவல் பத்திரிகை சார்பில்."

ஈழத்துக் கம்பன்- மேற்கு இலண்டன் . தமிழ்ப் பாடசாலை.

மேலும் தமிழ்க்கடல், சொல்லரசன், மரபுக்கவி இமயம், பாவேந்தர் போன்ற கௌரவங்களையும் பெற்றிருக்கின்றார். அதற்கு அப்பாலும் கனடாவில் "தமிழர் தகவல்" நிறுவனம் அமுதுப்புலவர் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினையும், தங்கப் பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்தது ஒரு முக்கிய அம்சமாகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக் கலைமாணி தேர்வினைப் பூர்த்திசெய்வதற்காக செல்வி டயானா மரியதாசன் அவர்கள் "தமிழுக்கு அமுதென்று பேர்" என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரை நூல் ஒன்று தயாரித்து வெளியிட்டிருப்பதனை மிகுந்த பெருமிதத்துடன் கூறியிருக்கின்றார்.

பலபல விருதுகள் அமுதுவைத் தேடிவந்தபோதிலும் இவருக்கு 2002 ஆம் ஆண்டு இவருடைய கல்வி, சமூக, சமயப் பணிகளைப் பாராட்டி பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வழங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பித்த 'செவாலியர்' என்ற பட்டத்தை இளவாலை அமுது அவர்கள் தன் வாழ்க்கையின் கிடைத்தற்கரிய பெரும்பேறாக எண்ணி மகிழ்ந்தார் என்பது மிகமுக்கியமான ஓர் அம்சம்.

வாழ்நாள் சாதனையாளராக வாழ்ந்து செவாலியர் பட்டம் பெற்று மூதறிஞனாக எம் நெஞ்சில் வாழ்கின்ற ஒரு மாமனிதனின் வாழ்வை நான் எழுத முற்பட்டமையினால் என் எழுத்துக்கள் அவர் பெருமைக்கு களங்கம் ஏற்படுத்திவிடுமோ? என்ற ஏக்கம் எப்பொழுதும் எனக்கு உண்டு. எனவே என் சிறுமைகண்டு எல்லோரையும் பொறுத்துக் கொள்ளும் வண்ணம் வேண்டிக் கொள்கிறேன். இந்த நூல் முயற்சி யானது தமிழ் அமுதமாக வாழ்ந்த புலவர் அமுதுவிடம் ஒரு தந்தையிடம் கொண்ட பாசத்தினைப்போல் ஏற்பட்ட இணக்கத்தினால் என் வெட்கத்தையும் மறந்து இதனை எழுதிவிட்டேன்.

அமுதுவின் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று புதினம் பத்திரிகையில் பலர் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அந்த வேண்டுதலை இதுவரையும் யாரும் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. ஒரு மனிதன் வாழும்போது அவரைக் கௌரவிக்க வேண்டும் என்பது ஒரு பண்பு. அந்தவகையில் புதினம் என்ற பத்திரிகை அமுது அவர்களுக்குச் செய்த பணிவிடை, கௌரவம் என்பன வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். பல சவால்களை சமாளித்து ஏழு வருட காலத்தில் இலக்கிய ஆர்வலர்களின் எதிர்பார்ப்பையும், அமுதுக்கு நான் கொடுத்த வாக்கினையும் இந்த நூலை எழுதி முடித்ததன் மூலம் நிறைவுசெய்துள்ளேன்.

மனிதப் பிறவிக்கு அடுத்தாற்போல் இந்த உலகத்தில் ஒரு விந்தையான பொருள் இருக்கின்றது என்றால் அது புத்தகம் ஒன்றுதான் என ஒரு அறிஞன் கூறினான். காரணம் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுடனும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து முடித்தவர்களுடனும் நாம் உரையாடி இன்புறக்கூடிய அரிய சாதனம் புத்தகம் என்றும் விளக்கினான். அந்தவகையில் என் ஆத்மாவிற்குள் ஆழமாகப் பதிந்துவிட்ட அற்புத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களைச் சிந்திக்கவும் எழுதவும் இந்த நூல் வழிவகுத்தது. இவ்வாறான ஒரு பேரின்பத்தை நான் அடைவதற்கு வழிகாட்டிச்சென்ற, அல்லது என்னை ஊக்குவித்துச் சென்ற அமுதுப் புலவர் அவர்களின் பாதங்களை வணங்கிப் பணிகின்றேன்.

நிறைந்த அன்பினர்,அயராத உழைப்புக் கொண்டவர், நேசமொழி பேசுபவர், தாயினும்சாலப் பரிவுடையவர், தந்தையினும் பேரன்பு மிக்கவர். மிகவும் செழிப்பு வாய்ந்த ஆலமரமாக இருந்தார்.அந்த மரத்தின் குளிர்நிழலில் அமர்ந்திருந்து ஆனந்தகீதம் இசைத்தோம்.

அவருடைய புகழ் நீடூழி வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரண்டாம் பாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமுதுவைச் சுமந்த தாயக மண்ணின் தரிசனம் நோக்கிய இலக்கியப் பயணம்



அமுது ஐயா அவர்களுடைய நூலை நிறைவுசெய்து பதிப்பிப்பதற்கு ஆயத்தமான வேளையில் திடீரென்று நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதித்திருந்த எனது அண்ணரைப் பார்ப்பதற்கு தாயகத்தைத் தரிசிக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. எனவே நூல் பதிப்பிக்கின்ற முயற்சியை இடைநிறுத்திவிட்டு தாயகப் பயணத்தை மேற்கொண்டேன். இந்தத் தரிசனம்கூட இன்னொரு வகையில் என்னுடைய இனிய நூலுக்கு வலுச்சேர்ப்பதை உணர்கின்றேன்.

இருபது ஆண்டுகளைக் கடந்து என் தாய்மண்மீது என் கால்கள் பதிந்தபோது அந்த மண்ணில் காற்றும், ஒளியும், உணர்வும் கலந்து அம்மா ஊட்டிய அந்த அன்பு அமுது என் உள்ளத்திலே புதிய உற்சாகத்தை ஊட்டியது. தாய்மண் என்றால் என்ன என்பதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின் தரிசனத்தை இப்போது உணர்கின்றேன். இந்தவேளையில் ஏற்பட்ட என் மன உணர்வுகளை வடிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. இருந்தபோதும் அமுது ஐயாவின் நூலுக்காக நான் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களை சொல்லியே ஆகவேண்டும்.

முதலில் செவாலியர் அமுது ஐயா அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்த பசுமைத்தீவு என்றும், பாற்தீவு என்றும் புகழப்படுகின்ற நெடுந்தீவுக்குச் சென்றேன். குமுதினிப் படகில் ஏறி பசுமைத்தீவான அந்தக் கிராமத்தின் கரையை அண்டியபோது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை, தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் அழகான திருவுருவச்சிலை என்னை வரவேற்று என் கண்களைப் பனிக்கச் செய்தது. பேருவகைபொங்க அந்தத் தெய்வீக உருவத்தைத் தொட்டு வணங்குகின்றேன். அந்தக்கணத்தில் அமுதுவும் தமிழ்த்தூதும் இணைந்து ஈழகேசரி நிறுவனத்துக்குச் சென்ற அற்புதக் காட்சி என் உள்ளத்தில் ஆனந்தத் தாண்டவமாடியது. அதி உற்சாகத்துடன் உள்ளம் உடைந்து உருக அந்தப் புனித பூமியில் நடந்து சென்று கலாபூஷணம் ஏ.டபிள்யூ. அரியநாயகம் அவர்களைச் சந்தித்து என் வருகையின் நோக்கத்தைக் குறிப்பிட்டேன். அவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும்போதே நெடுந்தீவு மண்ணிலும் அந்த மக்களிலும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் மீதும் அவருக்கிருந்த தீராக் காதலை அவரின் பேச்சிலும் மூச்சிலும் உணர்ந்தேன்.

துறைமுக வாயிலில் தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலையையும் நெடுந்தீவின் மத்தியில் தனிநாயகம் அடிகளாரின் கலையரங்கத்தையும் நிறுவ முன்னின்று உழைத்தவர். இன்முகத்துடன் விருந்துபடைத்து நெடுந்தீவு மண்ணின் விருந்தோம்பலுக்கு சான்றாக இருக்கும் ஒரு பெருந்தகையும் இவரே என்பதனை தெளிவாகத் தெரிந்துகொண்டேன். நெடுந்தீவின் மூலை முடுக்கெல்லாம் அவரே என்னைக் கூட்டிச்சென்று அந்தக் கிராமத்தின் அருமைபெருமைகளை உணர்த்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலில் நான் அமுது அவர்களுக்கு அரும்வரிகளைச் சொல்லிக் கொடுத்த ஆரம்பப் பள்ளியைத் தரிசித்தேன். பேரறிஞர் செவாலியர் அமுதுவை உருவாக்கிய புனித சவேரியர் றோ.க. பாடசாலைதான் அது. அந்தப் பாடசாலை இப்பொழுது அந்த மண்ணில் அத்திபாரம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. அந்த மண்ணை முத்தமிட்டேன்.

அதனைத் தொடர்ந்து அமுதுவின் சகோதரன் அதிபராக இருந்த நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க புனித யுவானியர் பாடசாலையைத் தரிசித்தேன். அதனைத் தொடர்ந்து தவத்திரு தனிநாயகம் அடிகளாரும் அமுது ஐயாவின் மகன் அருட்தந்தை கலாநிதி சந்திரகாந்தன் அடிகளாரும் குருவாகி முதல்முதலாக தங்கள் மூதாதையர் வாழ்ந்த நெடுந்தீவு மண்ணுக்கு வருகை தந்து திருப்பலி நிறைவேற்றிய "புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலயம்" - அந்த அற்புதமான ஆலயத்தைத் தரிசித்தேன். நெடுந்தீவு மக்கள் ஒன்றுகூடிப் பெரு வரவேற்பு அளித்த நிகழ்வுகளை எல்லாம் அரியநாயகம் ஐயா அவர்கள் நினைவுகூர்ந்தார். அமுதுவின் ஆரம்பப் பள்ளியின் அருகே இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு மண்ணில் முக்கிய அடையாளங்களான பெருக்கு மரத்தைக் கண்டுவியந்தேன். தொடர்ந்து பெருக்கடிப் பிள்ளையாரையும் தரிசனம் செய்தேன். அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர் கோட்டை, அதன் முன்பாக உள்ள புறாக்கூடு போன்ற பல காட்சிகளை கண்டு இன்புற்றேன். தொடர்ந்தும் ஐயா அவர்கள் என்னை அழைத்துக்கொண்டு சென்று அழகான குதிரைகள் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்று அவை தண்ணீர் குடிக்கின்ற காட்சியை எனக்குத் தரிசனமாக்கினார். தொடர்ந்து வரும் வழிகளில் எல்லாம் நெடுந்தீவின் கலாசார மண்டபம், நெடுந்தீவு மகா வித்தியாலயம், தவத்திரு தனிநாயகம் அடிகளார் சிறுபராயத்தில் வாழ்ந்த மனை என்பவற்றை எல்லாம் எனக்குச் சுட்டிக்காட்டினார். எல்லாம் என்னால் எண்ணிப் பார்க்க முடியாத அற்புதக் காட்சிகள். என்னுடைய நோக்கத்தை நிறைவு செய்துகொண்டு மீண்டும் துறைமுகத்தை அடைகின்றேன். விடைபெறும்போது அரியநாயகம் ஐயாவின் கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கலங்குகின்றன. கலாபூஷணம் அரியநாயகம் ஐயா அவர்கள் எனக்குத் தந்த உற்சாகமான வரவேற்பு உபசாரம் எல்லாவற்றையும் மீட்டிப் பார்த்தபோது புலவர் அரியநாயகம் அவர்களை எனக்குத் தெரியவில்லை, புலவர் அமுதுவின் வடிவமாகவே அவர் காட்சியளிக்கின்றார்.

வாழ்நாட்களில் எத்தனையோ மறக்கமுடியாத நினைவுகள் என் எண்ணத்தில் நிறைந்திருக்கின்றன. ஆனால் என் நெடுந்தீவுப் பயணம், குமுதினிப் படகு, தமிழ்த்தூதின் உருவச்சிலை, அமுதுவின் அரிவரிப் பள்ளி, பெருக்குமரம், கடற்கரையில் உருக்குலைந்த நிலையிலுள்ள ஒல்லாந்தரின் கோட்டை, புறாக்கூடு, நீண்டுவளர்ந்த கற்சுவர்கள், அரியநாயகம் அவர்கள் கொடுத்த உற்சாக விருந்து இவை அனைத்துமே என்றென்றும் என் வாழ்வின் பசுமையான நினைவுகள்.

அடுத்ததாக வாழை பலா மா மரங்கள் வளம் சொரியும் இளவாலை மண்ணில் கால் பதிக்கின்றேன். இப்பொழுதெல்லாம் அமுது ஐயா அவர்கள் என்னுடன் கொஞ்சி உறவாடிய உணர்வுகள் என்னை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டது. அன்பரங்கம் என்ற பெயர் அமைந்த, முத்துக்கள் பத்து உவந்தளித்த அமுதுவின் இல்லத்தைத் தரிசித்தேன். அமுது ஐயா அவர்கள் கூறியதுபோல தென்னைமரம், மாமரம், பலாமரம், எலுமிச்சை, தோடை, வேம்பு இவை எல்லாமே அமுதுவின் ஜீவசத்துள்ள நண்பர்களாய் ஆடாமல் அசையாமல் தன் துயரத்தையும் மறைத்து நின்று என்னை ஆவலுடன் உற்றுப் பார்த்ததனை உணர்ந்தேன். வீட்டின் உட்செல்லுகின்றேன். முன் கதவைத் திறந்தவுடன் அமுதுவும் அவரின் துணைவியார் திரேசம்மாவின் உருவப்படமும் என்னை உற்றுப் பார்த்தன. என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. காரணம் இலண்டனில் அமுது ஐயாவின் வீட்டு வாசற்கதவின் மணியை அழுத்தியதும் ஓடிவந்து கட்டியணைத்தல்லவா முத்தம் கொடுப்பார். இப்போது நிழற்படமாக அல்லவா நிற்கின்றார். கண்ணைத் துடைத்துக்கொண்டு அந்த வீட்டின் மூலைமுடுக்கெல்லாம் அமுதுவின் சுவாசக்காற்றுப்பட்ட இடமெல்லாம் பார்க்கின்றேன். அமுது அவர்கள் பெற்றுக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருதுகள் எல்லாம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தக் கணத்தில் பேராசிரியர் பாலறாவாயனுடன் சென்று தரிசித்த மகாகவி பாரதியின் ஞாபகார்த்த இல்லம்தான் என் மனக்கண்ணில் தோன்றியது. அமுது வின் இல்லத்தை பாரதியின் இல்லம்போல் ஒரு ஞாபகார்த்த இல்லமாக ஆக்கமுடியுமா என்ற ஆதங்கம் ஒருகணம் என் நெஞ்சினிலே மின்னியது. காரணம் அதுவொரு நூற்றாண்டு வரலாறு படைத்த மனையல்லவா. இதற்குக் காலம்தான் பதில்கூறவேண்டும்.

அமுது ஐயா அவர்கள் தன் மனைக்குச் செல்லுகின்றபோதெல்லாம் அவர் படுத்துறங்கிய கட்டில் அவர் அமர்ந்திருந்து சிந்தித்த நாற்காலி அனைத்திலும் உருண்டுபுரண்டேன். அவர் நீர் குடிக்கப் பாவித்த செம்பு முதலாக அவர் உண்டு உறங்கிய இடங்கள் அனைத்தையும் கண்டு தொட்டு அனுபவித்தேன். அந்த வீட்டின் சுவரில் கை வைக்கும்போது அமுது ஐயா சொன்ன செய்திகள்தான் எதிரொலித்தன. "நானும் மனைவியும் இணைந்து இந்த வீட்டைக் கட்டினோம். ஒரு கல்லைப் புரட்டி எடுத்தாலும் அது எங்கள் பெயரைச் சொல்லி பெருமூச்சுவிடும். வீட்டின் சுவரின் சுண்ணாம்புப் பூச்சைச் சுரண்டிவிட்டு காதை வைத்தால் அங்கு அம்மா என்று என் மக்கள் அழைத்த அன்புக்குரல் ஆயிரமாயிரம் கேட்கும்" என்ற அமுதுவின் மன ஓசையின் அதிர்வுகளை உணர்வுபூர்வமாக அனுபவித்தேன்.

இளவாலை மண்ணைவிட்டுப் போய் வருகின்றேன் என்று அமுது ஐயா சொன்னபோது துயரம் தாங்காமல் தன் இலைகளால் சடக்குச் சடக்கென்று தன் மார்பில் அடித்த கறுத்தக்கொழும்பான் மாமரத்தை நெருங்கினேன். அந்த மாமரத்தையும் முத்தமிட்டேன். நீ மரமல்ல ஜீவகளையுள்ள அமுதுவின் நண்பன். அன்று நீ அடைந்த சோகத்தின் ஆழத்தை இன்று நான் முழுமையாக உணர்கின்றேன். இப்பொழுது உனது நிலைதான் எனக்கும் என்ற செய்தியை என் எண்ணங்களால் அதற்கு உணர்த்திவிட்டுப் புறப்படுகின்றேன்.

சோகமும் துயரமும், வீரமும் வெற்றியும் கலவாமல் இலக்கியம் உருவாக முடியாது என்று அமுது எழுதி வைத்துச் சென்ற அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின் தரிசனத்தை அந்தக் கறுத்தக்கொழும்பான் மாமரம் எனக்கு ஆணித்தரமாக உணர்த்தியது. இரத்தமும் சதையுமான உடல்கள் மட்டுமே மரிக்கக்கூடும், இலட்சியமும் சத்தியமும் மரிப்பதில்லை என்ற நம்பிக்கையுடன் அவர் வாழ்ந்த மனையில் இருந்து விடைபெறுகின்றேன். இந்தத் தரிசனத்தின் உண்மைகளை முடிந்தவரை காட்சிப்படுத்துகின்றேன்.

மேலும் இந்தத் தாயகத் தரிசனத்தின்போது பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் சிவலிங்கராஜா, பேராசிரியர் விசாகரூபன், பேராசிரியர் தேவராஜா, நல்லை ஆதீன முதல்வர், கம்பவாரிதி இ.ஜெயராஜ், எழுத்தாளர் செங்கை ஆழியான், என் தமிழ் ஆசான் குழந்தைவேலு, “எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்” என்ற நூலின் ஆசிரியர் செல்லப்பா நடராசா, உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன், கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி ஆறு. திருமுருகன், எழுத்தாளர் அமரர் டானியல் அவர்களின் மகன் டானியல் வசந்தன், பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை முதலான அறிஞர்களின் உரையாடல்களும், நேர்முக வாழ்த்துக்களும், ஆசிகளும், உதயன் பத்திரிகையில் வெளியான பேட்டியும் என் தேடலுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதனையும் இங்கு பதிவு செய்கின்றேன். மீண்டும் இலண்டன் வருகை தந்ததும் என் தாயகத்தில் நான் உண்ட நிலாச்சோற்றின் அனுபவத்தினைப் பத்திரிகைக்காகவும், காற்றுவெளிச் சஞ்சிகைக்காகவும் “எழுத்தாளர் காற்றுவெளிச் சஞ்சிகை ஆசிரியர் திரு. முல்லையமுதன்” அவர்கள் கண்ட செவ்வியும் இந்த நூலுக்கு மேலும் வலுச்சேர்க்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அதனை நூலின் இறுதிப்பாகமாக இணைத்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

## செவ்வி கண்டவர்: திரு. முல்லை அமுதன்



என் தாயகப் பயணமும், தமிழ்க்கங்கை அமுது ஐயாவினுடைய நூல் பற்றியதுமான உரையாடல்.

முல்லை அமுதன்:- வணக்கம்

சிவ. தணிகாசலம் :- வணக்கம்

மு.அமுதன் :- இங்கிலாந்தில் முதன்முதலில் இலக்கிய மன்றம் தொடங்கிய பெருமை தங்களையே சாரும். அதன் உருவாக்கம் சார்ந்த அனுபவங்களைக் கூறமுடியுமா?

சிவ.தணி. :- எனக்குத் தமிழில் பிடிப்பினை உண்டுபண்ணிய ஆசான் திரு. குழந்தைவேல் அவர்கள். "குழந்தை" "வெடிப் புறப்பேசு" என்ற பாரதியின் வாக்குக்கு இலக்கணம் குழந்தை. அந்தத் தமிழ் ஆசான் ஊட்டிய சுவை என்னைக் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களிடம் இணைத்தது. அகில இலங்கை கம்பன் கழகத்தில் கம்பவாரிதி நெறியாள்கையில் பல பட்டி மன்றங்களைச் சந்தித்தேன். கழகத்தின் தொடர்பினால் அறிஞர்கள் தொடர்பு விரிந்து சென்றது. எங்கள் கழகத்தில் ஓர் இரசிகமணி என்ற உணர்வை ஊட்டியூட்டி தமிழ் இலக்கிய பற்றாளனாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லறிஞர்களை நெஞ்சில் சுமக்கும் பக்தனாகவும் என்னை உருவாக்கினார் கம்பவாரிதி ஜெயராஜ். நான் இலண்டன் வந்த காலப் பகுதியில் எனது உணர்வுகளில் இருள் கௌவிக் கொள்ளத் தொடங்கின. ஆனால் அது நீடிக்கவில்லை. இலண்டனில் முதன்முதலாக சைவ மாநாடு நடை பெற்றபோது எனது கம்பன் கழக நண்பர் தமிழருவி சிவகுமாரன் உட்பட பல அறிஞர்கள் இலண்டனில் இம்மாநாட்டில் பேருரை ஆற்ற வந்திருந்தார்கள். அந்தப் பெருமக்களின் வருகையால் எனக்குள் உறங்கிக்கொண்டிருந்த உணர்வுகள் விழித்தெழுந்தன. இலண்டன் தமிழிலக்கிய மன்றம் தோற்றம் பெற்றது. ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயம் அதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது. அன்றைய ஆலயத்தின் தலைவர் சொ.கருணைலிங்கம் அவர்கள் அதற்குப் பேராதரவு புரிந்தார். ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் வருகை தந்த தமிழ்ச் சான்றோர்களால் எமது இலக்கிய மன்றம் பல களங் களைக் கண்டது. என் இலக்கியத் தந்தை அமுது ஐயா அவர்கள் பெருவழிகாட்டியாக விளங்கினார்.

மு.அமுதன் :- அதனைப்போல் ஏன் இன்றுவரை காத்திரமான இலக்கிய மன்றங்கள் உருவாகவில்லை? அதற்கான காரணம் என்னவென்று சொல்வீர்கள்?

சிவ.தணி. :- உருவாகவில்லை என்பதில் எனக்கு உடன்பாடில்லை. பல இலக்கிய வட்டங்கள் தங்கள் சக்திக்கேற்ப மிகப் பாரிய இலக்கியப் பணியாற்றிக் கொண்டு இருக் கின்றார்கள். ஆனால் எமது இலண்டன் தமிழிலக்கிய மன்றம் முன் உதாரணமாக பல இலக்கிய பொது மேடைகளை அமைத்தது. அத்துடன் இங்கு வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கியக் கலைஞர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. மேலும் எம் இலக்கியமன்றம் சுதுமலைக் கவிஞர் இராஜமனோகரன் அவர்களது தலைமையில் பல அறிஞர்களை கௌரவித்துச் சிறப்பித்திருக்கின்றது. பேராசிரியர் சண்முகதாஸ், கம்பவாரிதி ஜெயராஜ், ஆறு. திருமுருகன், செங்கை ஆழியான் போன்ற அறிஞர்களைத் தாயகத்தில் சந்தித்தபோது அமுதுவினால் தாங்கள் கௌரவம் பெற்றதை நினைவுகூர்ந்து அந்த நாட்கள் எம் வாழ்வில் நினை வழியாநாட்கள் என்று பெருமையாகக் கூறியதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மு.அமுதன் :- தமிழகத்துக் கலைஞர்களைச் சந்தித்தபோது தங்கள் மன உணர்வுகள் எப்படி இருந்தன?

சிவ.தணி :- "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்". என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடலை முன்பு பல தடவைகள் கேட்டுப் பூரித்திருக் கின்றேன். அந்த உண்மையின் தரிசனத்தை அந்தக் கலைஞர்களிடம் நிதர்சனமாகக் கண்டு அனுபவித்தேன்.

மு.அமுதன் :- தமிழகம் சென்று திரும்பியதில் நமக்கு நிலாத்துண்டுகள் கிடைத்தது. அந்த நிலாத் துண்டுகள் பற்றிச் சொல்வீர்களா?

சிவ. தணி :- இலண்டன் இலக்கிய மன்ற அமைப்பாளராக பல்துறை சார்ந்த அறிஞர் பெருமக்களைச் சந்தித்தேன். அ.ச.ஞானசம்பந்தன், ஔவை நடராஜன், எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா, ஆர்.எஸ்.மனோகர், கவிஞர் வைரமுத்து, ரி.எம்.எஸ், பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பழகன் என்று பல்துறை சார்ந்த கலைஞர்களைக் கண்டு அவர்களின் நீண்டகால அனுபவங்களைக் கேட்டறிந்தேன். அந்த அனுபவங்களை எல்லாம் எழுத்து வடிவில் கொண்டு வரவேண்டும் என்று உற்சாகம் தந்து அதற்கு நிலாத்துண்டு என்று பெயரும் இட்டு என்னை அமுது ஐயா எழுதத் தொடக்கி வைத்தார். அதற்குப் புதினம் ஆசிரியர் அவர்கள் எனக்கு களம் அமைத்தார்.

மு.அமுதன் :- புதினம் இதழில் தொடர் பிரசுரமானதும் வாசகர் மத்தியில் அதற்கான வரவேற்பு எப்படியிருந்தது?

சிவ.தணி :- அடுத்த நிலாத்துண்டு யாராக இருக்குமோ என்ற எதிர்பார்ப்பை வாசகர் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. இத்தனை கலைஞர்களையும் எப்படி உன்னால் தரிசனம் செய்ய முடிந்தது என்று என்னை ஆச்சரியத் துடன் பார்த்தனர். இதனை நூலாக்க வேண்டும் என்று புதினம் ஆசிரியர் பல தடவை கேட்டுக் கொண்டார். புதினம் இதழின் ஒவ்வொரு பிரதிகளும் உரிய கலைஞர்களுக்குத் தமிழகத்துக்கு அனுப்பி யிருந்தேன். அவர்களின் வாழ்த்துக்கள் என்னைத் தேடிவந்தது.

மு. அமுதன் :- இரண்டு ஆண்டுகளாக சொல்லோவியம் என்னும் உங்கள் தொடர் நிகழ்ச்சி ரி.ஆர்.ரி வானொலியிலும் சந்திரோதயம் வானொலியிலும் ஒலிபரப்பானது. அது பற்றி?

சிவ. தணி :- உண்மையில் இந்த நிகழ்ச்சியைச் செய்வதற்கு நான் சங்ககால, சங்கமருவியகால நூல்களைக் களமாகக் கொண்டு ஒவ்வொரு சொல்லை எடுத்து உதாரணமாக குழந்தை, தாலாட்டு, தாய், தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று அந்தச் சொல்லுக்கான பரிமாணங்களை பல நூல் வழிதேடி இந்த நிகழ்ச்சியைத் தொகுத்திருந்தேன். நடாமோகன் அவர்கள் என் நிகழ்ச்சிக்குப் பேராதரவு புரிந்தார். ஜேர்மன், பாரிஸ், சுவிஸ் போன்ற நாடு களிலும் அதற்குப் பல நேயர்கள் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வானொலியில் நிகழ்ச்சி முடிந்த சில நிமிட நேரத்தில் பலருடைய அழைப்புகள் என் வீடு தேடிவரும்.

மு.அமுதன் :- புலம்பெயர் எழுத்தாளர்கள், எழுத்துக்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள் என்ன? விரல் விட்டு எண்ணக் கூடியவாறு யாரை இனங்காணுவீர்கள் ?

சிவ. தணி :- மக்கள் புலம்பெயர்வது காலங்காலமாக இடையறாது நிகழ்ந்து வரும் செயல் என்றுதான் வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். இந்த வகையில் ஈழத்தைப் பொறுத்தமட்டில் அரசியல் நிகழ்வுகளால் ஆயிரமாயிரம் குடும்பத்தினர் அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலியா, கனடா என்று குடியேறியிருக்கின்றார் கள். இவ்வாறு குடியேறியவர்களில் பெரும்பாலானோர் அதிகம் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாடுகளில் வாழ்கின்ற எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களை நூலாக வெளியிடுகின்றார்கள். உலகம் பரந்து வாழும் தமிழினம் உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்தெழுந்து, விழித்தெழுந்து, வீறாப்புக்கொண்டு தமது ஆக்கங் களை வெளியிடுகின்றார்கள். மிகப் பிரபல்யம் வாய்ந்த எழுத்தாளர்கள் தொடங்கி வளர்ந்து வருகின்ற எழுத்தாளர்களும் இதில் அடங்குகின்றார்கள் என்றே கூறுவேன். தமிழிலக்கிய முயற்சிகள் அனைத்துமே பாராட்டப்படவேண்டியவை. எழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் தமிழ்ப் பணி செய்பவர்களே.! எனவே எழுதும் பல்லாயிரக் கணக்கான விரல்களை நான் வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன். இந்த விரல்களில் வித்தியாசம் காண நான் விருமபவில்லை.

மு.அமுதன் :- புலம்பெயர் நாடுகளில் அடிக்கடி நூல் வெளியீடுகள் இடம்பெறுவதால் இலக்கியம் வளர்ந்துள்ளது என்று கொள்ளலாமா?

சிவ. தணி :- மொத்தத்தில் தமிழர்கள் வாழும் அயல் புலங்களில் தமிழ்மொழியும், கலை பண்பாடுகளும் வாழ்கின்றன, வளர்கின்றன. "திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றுக்கு இணங்க பல்கலைக் கழக மட்டத்திலும் தமிழ்க்கல்வி பயிற்றுவிக்கப் படுகின்றன. வேற்று நாட்டவர்களும் எமது மொழி, கலை, பண்பாடுகளைக் கற்கின்றார்கள். இந்த நிலையில் புலம்பெயர் தேசத்தில் அடிக்கடி நிகழும் வெளியீடுகள்தான் புலம்பெயர் இலக்கிய கர்த்தாக் களையும், இலக்கிய ஆர்வலர்களையும் இணைக்கின்ற ஒன்றாக அமைவதுடன் தொடர்ந்தும் அந்தப் பணியை விடாது செயற்பட வேண்டும் என்ற ஊக்கத்தையும் தருகின்றது. அதுமட்டுமன்றி இந் நூல் வெளியீடுகள் உறங்கிக் கொண்டிருக்கின்ற எழுத்தாளர்களையும் எழுதத் தூண்டுகின்றது எனலாம்.

மு.அமுதன் :- இலண்டன் தமிழ் வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பாகிய இலக்கிய சங்கமம் பற்றிச் சொல்லுங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவ.தணி :- என்னைப் பொறுத்தமட்டில் இந்த நிகழ்ச்சி இலக்கியப் பரப்பில் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணியதாகவே கருதுகிறேன். அமுதுப் புலவர், அறிஞர் குணசிங்கம், மு.நித்தியானந்தன், நடராஜா கண்ணப்பு, இராணி சீனிவாசகம், மாதவி சிவலீலன், இராஜமனோகரன், முல்லை அமுதன் போன்றவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு தங்கம்மா அப்பாக்குட்டி, வாரியார் சுவாமிகள், பாரதிதாசன், கவியரசர் கண்ணதாசன் போன்ற பெரியார்களுக்கு இலக்கிய சங்கமம் என்ற நிகழ்வினூடாக ஏற்படுத்தப்பட்ட “அணையாத தீபங்கள்” நிகழ்ச்சி பல சான்றோர்களின் எண்ணத்தை ஈர்த்துள்ளமையை யாரும் மறுக்க முடியாது. இந்த நிகழ்வில் அமுதுப் புலவர் அவர்கள் பல கருத்தரங்குகளை நடத்தியதை பலரும் அறிவார்கள். அந்த வகையில் அமுதுவின் வரலாறும் கூட இலக்கிய சங்கமம் வெளியீடாகவே வெளிவர இருக்கின்றது.

மு.அமுதன் :- இந்த நிகழ்வு பலரை இலக்கிய உலகத்திற்கு அறிமுகம் செய்துள்ளது. ஆனாலும் இந்த வானொலி நிகழ்ச்சியைத் தொடரமுடியாமல் போனது ஏன்?

சிவ.தணி :- நீங்கள் சொல்வதைப்போல் இந்த நிகழ்வு இலைமறை காயாக இருந்த பல கலைஞர்களை வெளியுலகிற்குக் கொண்டு வந்துள்ளது. இந்த இலக்கிய ஒலிபரப்பில் நாடகம், சிறுகதை, கவிதை, ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்று பல்சுவை நிகழ்வுகள் இலக்கிய சங்கமத்தில் இடம்பிடித்தன. ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் முகத்தார், வண்ணைத் தெய்வம், பேராசிரியர் சுப்பிரமணியன் போன்ற அறிஞர்கள் இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமத்தைச் சிறப்பித்திருக்கின்றார்கள். எனினும் திறந்த மனத்துடன் கூறுவதானால் பொருளாதார நெருக்கடி இந்த வானொலி நிகழ்வைத் தாங்குவதற்கு எனக்கு இடம்கொடுக்கவில்லை. என்றாலும் இலக்கிய சங்கமத்தின் அணையாத தீபங்கள் நிகழ்ச்சி அறிஞர்கள் ஒன்றுகூடலாகத் திகழ்கின்றது. அதுவே உங்கள் தலைமையில் அண்மையில் நடந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் அறுபத்தைந்தாவது ஆண்டு அணையாத தீபம் நிகழ்வாகும்.

மு. அமுதன் :- இங்கிலாந்தில் கவிதை என்றதும் நினைவுக்கு வருபவர் அமுதுப் புலவர் ஐயாவே. அவருடன் தங்களின் உறவு பற்றி இலக்கிய உலகம் அறிய ஆவலாய் உள்ளது.

சிவ. தணி :- உறவின் வேர்களை எடுத்துச் சொன்ன மகாகவி பாரதியின் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததுமிந்நாடே" என்ற உரிமையின் குரல்தான் இவ்விடத்தில் என் நெஞ்சிலே உதிக்கின்றது. அந்தவகையில் என் இலக்கிய உலகின் தந்தை அவரே. மடுமாதா காவிய வெளியீட்டின்போது அந்த நூலின் ஆய்வுரைக்காகச் சென்றேன். அமுது ஐயாவின் இதயம் கவர்ந்தேன். ஐயாவின் மரணப் படுக்கை வரை மட்டுமின்றி அதற்கு அப்பாலும் தொடர்கின்றது அந்த உறவு. என்மீது பட்டுத்தெறித்த அமுதுவின் மூச்சுக்காற்றின் விம்பங்களே என்னுடைய எழுத்துக்கள். அவர் கருணைக் கண்களினால் அர்ச்சிக்கப்பட்டதே என் இலக்கியச் சிந்தனைகள். அமுது என் இலக்கியத் தந்தை என்று கூறியதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதியின் நினைவுகள்தான் மீண்டும் துளிர்க்கின்றது. அதுதான் என்ன?

"வயது முதிர்ந்துவிடினும் - எந்தை
வாலிபக் களை யென்றும் மாறுவதில்லை.
துயரில்லை மூப்பில்லை – என்றும் சோர்வில்லை."

இவையனைத்தும் அமுதுவிடம் நான் கண்ட முத்திரைகள்.

மு. அமுதன் :- அமுதுப் புலவரின் கௌரவப் பட்டங்களிலே செவாலியர் விருதுதான் சிறந்தது. அந்த விருது பற்றி..?

சிவ. தணி :- தான் பெற்றுக்கொண்ட பட்டங்களினால் பெருமை கொள்ளாத பெருந்தகை அமுது. அவரின் கவிச் சுவையும் நகைச்சுவையும் இலக்கிய உலகம் அறிந்ததே. அமுது அவர்களுக்கு யாழ். பல்கலைக் கழகம் வழங்கிய கலாநிதி பட்டம் தொடங்கி பல விருதுகளுக்கு அவர் உரிமையானபோதும் செவாலியர் என்ற சர்வதேச சிறப்பு விருது பரிசுத்த பாப்பரசரிட மிருந்தல்லவா கிடைத்தது! மடுமாதா காவியம், அன்பின் கங்கை அன்னை திரேசா, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்ற அரிய படைப்புக்களின் பெறு பேறல்லவா செவாலியர் விருது. எனவேதான் அமுது ஐயா அவர்கள் செவாலியர் விருதினை தன் வாழ்க்கையில் கிடைத்த பெரும்பேறாய்க் கருதினார் போலும்.

மு. அமுதன் :- அரங்கிற்கு ஐயா வருகின்றார் என்றாலே பார்வை யாளர்கள் உசாராகி விடுவார்கள். அது அவரின் நகைச்சுவையா அல்லது அவருடைய ஆளுமையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவ. தணி :- நல்ல சுவையாகப் பேசுவது என்பதே ஒரு பெரிய ஆளுமை என்று கருதுகிறேன். மற்றவர்கள் எவராலும் எட்டமுடியாத அல்லது கைவரப்பெறாத இந்தப் பெரிய ஆளுமை அமுது ஐயா அவர்களுக்குரிய தனிச்சிறப்பான அம்சமாகவே நான் கருதுகின்றேன். அதிலும் பழகு தமிழில் இலக்கிய நயம் குன்றாமல் எடுத்துரைப்பதில் அமுது ஐயாவிற்கு நிகர் அமுது ஐயாவே. அந்த இடைவெளி இன்னும் வெற்றிடமாகவே இருக்கின்றது. எமது பழகு தமிழில் பகிடிகளுடன் பண்பட்ட உரையை ஆற்ற முடியும் என்கிற ஒரு புதிய பாணியைத் தொடக்கி வைத்தவர் என்ற பெருமையும் புலவர் அமுது அவர்களையே சாரும். இது அவரின் பெரும் ஆளுமை என்றே கருதுகிறேன். மேலும் அமுதுப்புலவர் பன்முகத்தன்மை கொண்டவர். கவிதை, நாவல், வரலாற்று நூல்கள், மேடைப்பேச்சு என்ற பரந்தநோக்கில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பார்வை அவரின் மிகப்பெரிய ஆளுமை என்றுதான் நான் கருதுகின்றேன். இதில் எந்தத் துறையில் அவர் கூடிய அல்லது குறைந்த ஆளுமை உடையவர் என்று பகுத்தாய்வதைவிட இவை அனைத்தும் ஒன்றிணைகின்ற பெரும் ஆளுமைக்குரியவரே அமுது என்று கூறுவேன்.

மு. அமுதன் :- அரங்க உரையாடல்கள் ஊடே அவருள் ஒரு துயரம் கவிந்திருந்ததை கவனித்திருந்தீர்களா?

சிவ.தணி :- இந்த வார்த்தை நூற்றுக்கு நூறு உண்மையானதே. ஒரு கவிஞன் தன் பாதம் பதிக்க மடிகொடுத்த மண்ணையும், தன்னைத் தாலாட்டி வளர்த்த தமிழிசைத் தேன்காற்றையும் மறக்க முடியுமா என்ன? அன்று தாயகத்தைவிட்டு நீங்கிய பொழுது அமுதுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவலைகள் எப்படியிருந்தது என்று கேளுங்கள். "முற்றத்து எலுமிச்சையில் பழுத்து விழுந்து கிடந்த பழங்களைப் பொறுக்கும்போது துயரம் என் நெஞ்சைக் கவ்வியது. இளந்தென்றல் வீசி என் சோகத்தைத் துடைத்தது. கறுத்தக்கொழும்பு மாமரத்து இலைகள் என்னைப் பார்த்துச் சடக்குச் சடக்கு என்று மார்பில் அடித்தது. இளவாலைச் செம்மண் என் உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஒட்டிக்கொண்டது. வீட்டில் ஜன்னலைச் சாத்தும்போது கைகேயி வரம் கேட்ட போது அதிர்ந்து போன தசரதன் முகம் போல புத்தக அலுமாரி நாங்கள் அநாதையானோம் என்று புலம்பியது. என் கண்களில் நிரம்பி வழிந்த நீரை என் மனைவிக்குக் காட்டவில்லை. போய் வருகிறேன் என்று கூறாமல் கூறி வந்தேன்." அந்த வகையில் மக்கள் வாழ்வின் அழகினையும் அவலங்களையும், அலங்கோலங்களையும் கண்டு நெஞ்சுருகிய அமுதுப் புலவர் அவரின் கவிதாமண்டலம் அதனை உணர்த்தி நிற்கின்றது.

மு. அமுதன் :- ஒரு படைப்பாளி என்ற வகையில் அவரின் கவிதைக் களம், வலம், பலம் பற்றிச் சொல்லுங்கள்?

சிவ. தணி :- யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த இலக்கியப் பேரறிஞர்கள் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரின் மகன் வித்துவான் இளமுருகனார் அவர்களிடம் இலக்கிய இலக்கணங்களை முறை யாகப் பயின்ற காரணத்தினால் நான் மரபுக் கவிதையை முறையாகத் தெரிந்து கொண்டவன் என்று அமுது கூறுவதே அவருடைய முதற்பலமாகக் கருதுகின்றேன். தாயகம் மட்டுமன்றி புதினம், அஞ்சல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஈழநாடு, ஈழமுரசு போன்ற மேல்நாட்டுப் பத்திரிகைகள் அமுதுவின் கவிதைக்குக் களம் அமைத்துக் கொடுத்தது வரலாறு. அது மாத்திரமல்லாமல் எமது புலமும், புலத்தின் வளமும், பக்தியும் அமுது அவர்களின் கவிதைத் தளங்கள் என்றே கூறுவேன். பக்தி என்ற கூற்றினை இன்னும் சற்று விரிவாகச் சொன்னால், அன்னையின் நாமங்கொண்ட எம் மண்ணின் மடு அமுதுவுக்குப் பெரும் களம் அமைத்துக் கொடுத்தது. அந்தக் களத்தை ஆதார மாகக் கொண்டு எழுந்ததே மடு மாதா காவியமாகும். இந்த மடுமாதா காவியம், அன்னை திரேசா போன்ற படைப்புக்களே அவரைச் செவாலியர் என்ற சர்வதேச அரங்கில் நிலை நிறுத்தியது.

மு. அமுதன் :- அமுது ஐயாவின் வாழ்வியல் பண்பாட்டுக் கோலங்களைச் சமூகஞ் சார்ந்து நூலாக எழுதி வருகின்றீர்கள். அது பற்றி....?

சிவ. தணி :- அமுது ஐயாவின் வாழ்க்கைப் பயணம் என்னும் தமிழ்க் கடலில் பயணிப்பதற்கு ஒரு பெரும் பாக்கியம் கிடைத்துள்ளது. ஏறத்தாழ பதினாறு ஆண்டுகள் என் இலக்கிய வாழ்வுக்குப் பெருந்தொண்டு புரிந்தவர். நாம் தொடர்பு கொண்டபோதெல்லாம் அவருடைய வாழ்வும் சிந்தனைகளும் உரையாடல்கள் யாவும் எம்புலம் நோக்கியதாகவே இருந்தது. ஒருமுறை அவருடைய வாழ்வுக்காலம் பற்றி ஒரு உரையாடலை மேற்கொண்டிருந்தேன். அந்த வாழ்க்கைப் பதிவுகள் தான் எனது நூலின் ஆதாரம். அந்தப் பதிவுகள் எம் மக்களுக்கு ஒரு வரலாற்றுப் பார்வையையும் ஒரு பரிமாண வளர்ச்சியையும் வெளிக்கொணரும் என்று கொள்ளலாம். தொண்ணூறு ஆண்டுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் வாழ்ந்த அமுது அவர்கள் தன் வாழ்வின் பல பகுதிகளை நினைவுபடுத்திச் சென்றார். அந்த இலக்கியச் சுவடுகள்தான் இந்த நூலில் எல்லோரும் பயனுறும் வண்ணம், என்றைக்கும் நிலைத்திருக்கும் வண்ணம் பதிவாக்கியுள்ளேன்.

மு. அமுதன் :- இலக்கியப் பணியின் தேடலுக்காகத் தாயகம் சென்று திரும்பினீர்கள், நிலாச்சோறு கிடைக்குமா?

சிவ. தணி :- நீங்கள் நிலாச்சோறு என்று கருதுவது எம் தாயக மண்ணில் அதாவது எங்கள் புலத்தின் காற்றும், ஒளியும் கலந்து அம்மா ஊட்டிய அந்த அன்பு அமுது தானே. இப்பொழுது நாம் வாழுகின்ற இந்த மண்ணில் மாறுபட்ட புலத்தில் அதனை எழுத்தில் அல்லது காட்சி வடிவங்களில் கொண்டு வரலாம். ஆனால் இவை வெறும் விம்பங்கள்தானே. உண்மையின் தரிசனத்தைப் பெற நாம் அந்த மண்ணுக்கே செல்லவேண்டும். இருப்பினும் நான் உண்ட நிலாச் சோற்றை என்னால் முடிந்தவரை உங்களுடன் பரிமாறுகின்றேன்.

மு. அமுதன் :- ஐயா பற்றிய தேடலுக்குரிய பயணத்தில் தாயகத்தில் சந்தித்த மனிதர்கள், ஐயா பிறந்து வாழ்ந்த இடங்கள், வாழ்ந்த வீடு, அவர் நடமாடிய நிலம், தென்னைமரம், திண்ணை, மின்சாரக் கம்பம் உங்களுக்கு ஏற்படுத்திய தாக்கம் என்ன?

சிவ. தணி :- ஒரு சமூகத்தின் கூறுகள் என்ற வகையில் நீங்கள் குறிப்பிடுகின்ற உயிர் சார்ந்த, உயிர் சாராத இந்தக் கூறுகள் எல்லாம் கவிஞனுடைய பார்வையில் ஒரு அங்கங்களாகி அவைகள் எல்லாம் எம்முடன் பேசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொடங்கி விடுகின்றதை உணர்கின்றேன். இந்த விடயங்கள் பற்றி பலமுறை அமுது ஐயாவுடன் உரையாடியிருக்கின்றேன். அந்த உரையாடல்களைத் தான் அவர் எம்மிடம் விட்டுச் சென்றிருக்கின்றார். இளவாலையில் முத்துக்கள் பத்தளித்த அமுது ஐயாவின் அன்பரங்கம் என்ற அவரின் மனையைத் தரிசித்தபோது முதலில் என் நெஞ்சை ஈர்த்தது ஐயா அவர்கள் பாடி வைத்த முற்றத்து மாமரம். அந்த மாமரத்தின் இலைகள், எலுமிச்சை, கமுகு, பலா மரங்களில் எல்லாம் அமுதுவின் ஜீவத்துடிப்பை உணர்ந்து கொண்டேன். சோகமும் துயரமும் வீரமும் வெற்றியும் கலவாத இலக்கியமில்லை. அந்தவகையில் அமுதுவின் வீட்டின் உள்சென்று அவரின் நினைவு களை மீட்டபோது வீட்டின் எந்த மூலையிலும் ஒரு கல்லைப் புரட்டினாலும் அது எங்கள் பெயரைச் சொல்லி பெருமூச்சுவிடும். வீட்டில் சுவரின் மைப் பூச்சைச் சுரண்டிவிட்டுக் காதை வைத்தால் அங்கே அம்மா என்று என் மக்கள் அழைத்த அன்புக்குரல் ஆயிரம் கேட்கும். தென்னைமரம், மாமரம், பலாமரம், எலுமிச்சை, தோடை, வேம்பு, கொய்யா, விளாத்தி இவையெல்லாம் என் குடும்பத்தின் ஜீவசத்துள்ள நண்பர்கள் என்ற அமுது ஐயாவின் மன ஓசையை அந்த இடத்திலே நிதர்சனமாக உணர்ந்து கொண்டேன்.

மு. அமுதன் :- முன்னரெல்லாம் தண்டவாளத்துண்டில் தட்டி ஒலியெழுப்பித்தான் பாடசாலையில் பாட நேரத்தை அறிவிப்பார்கள். அங்கு தன் செலவில் மணி ஒன்றை அன்பளிப்புச் செய்தார் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அதுபற்றி.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ. தணி :- ஆம்! அதுதான் இளவாலை அமுது அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த இளவாலை றோ.க.த.பாடசாலை. இந்தப் பாடசாலையில் தண்ட வாளத்துண்டில் தட்டி ஒலி எழுப்பித்தான் பாடசாலையை முன்பு ஆரம்பிப்பார்கள். பின்னர் அதற்காக ஒரு மணி உருவாக்கப்பட்டது. இந்தச் செய்தியை அறிந்த அமுது அவர்கள் அதற்குண்டான முழுப் பெறுமதியையும் தானே வழங்கினார். அந்த நன்றியைக் கருத்திற்கொண்டு காத்திருந்து அமுது ஐயா அவர்கள் இளவாலைக்குப் பயணமானபோது அவரே ஒரு விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அந்த மணியை முதன்முதலாக ஒலிக்கச் செய்து அந்தப் பள்ளிக் கூடத்திலே புத்தொலியூட்டினார். தற்பொழுது அந்தப் பள்ளிக்கூடத்தின் அதிபர் அவர்களே இந்த நிகழ்வினை நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்ந்து அந்த இடங்களையெல்லாம் காண்பித்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

மு. அமுதன் :- அமுது ஐயா அவர்களின் இல்லத்தைப் பார்த்ததும் பாரதியார் ஞாபகார்த்த இல்லம் போல் ஆக்குவதே சிறந்தது என்ற ஆதங்கம் பற்றி.....?

சிவ. தணி :- உண்மையில் இது நல்லதொரு முயற்சி. அமுது அவர்களின் இல்லத்தைத் தரிசித்தபோது எனக்கு பாரதியின் ஞாபகார்த்த இல்லந்தான் நினைவுக்கு வந்தது. இதனை நம் தமிழ் சார்ந்த அமைப்புக்கள் நடைமுறைப்படுத்தினால் ஒரு நூற்றாண்டு கால தமிழ் இலக்கிய வரலாற்றை மாணவ சமூகம் கண்டு பயனுற முடியும். ஐயாவின் பன்முகத்தில் எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நூல்களும் அவர் பெற்றுக்கொண்ட விருதுகளும் அந்த இல்லத்தில் சாட்சியாக இருக்கின்றன.

மு. அமுதன் :- தங்கள் பயணத்தின்போது தங்களுக்குத் தமிழ் போதித்த திரு. குழந்தைவேல் ஆசிரியரைக் கண்ட அனுபவம் எவ்வாறு இருந்தது.?

சிவ. தணி :- சங்கடமான தமிழ் இலக்கணத்தைச் சங்கீதமாகப் பாடியே கற்பித்தவர் தமிழ் ஆசான் "தமிழ்க் குழந்தை" என்று அழைக்கப்படும் குழந்தைவேலு அவர்கள். தாயகத்தில் நான் சந்தித்த முக்கியமான ஆசிரியர் அவர். இன்றும் அவர் மிகுந்த சுறுசுறுப்புடன் தமிழ்ப் பணியாற்றி வருகின்றார். மூத்த கவிஞர் அமுது ஐயாவின் நூலுக்கு அவர் மிகுந்த பாராட்டுதலை வழங்கினார்.

மு. அமுதன் :- நெடுந்தீவுப் பயணத்தின்போது தங்களின் கண்களைப் பனிக்க வைத்த சம்பவம் என்ன?

சிவ. தணி :- பசுந்தீவு என்று அழைக்கப்படும் நெடுந்தீவு மண்ணைத் தரிசிக்க குமுதினிப் படகில் ஏறி ஆவலுடன் செல் கின்றேன். குமுதினிப் படகு பசுமைத்தீவின் கரையை அடைந்தபோது ஒரு அற்புதக்காட்சி என் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. பேரலைகள் பொங்கிப் பிரவாகிக்கின்ற நெடுந்தீவு என்னுந் தமிழ்த் தோணியிலே எங்கள் அமுது ஐயா, பண்டிதஞானி ஞானப்பிரகாசம் என்னும் தமிழ் அறிஞர்கள் ஒருங்குசேர, உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை என்றும், பன்மொழிப் புலவர் என்றும் போற்றப் படும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலை அங்கே அந்தத் தோணிக்கு அவரே தலைவ ராய்ச் சுக்கானைப் பிடித்து நிற்பதுபோன்று காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளிப்பதை உணர்ந்தேன். உள்ளம் உடைந்தேன், உணர்வுப் பெருக்கால் என் கண்கள் என்னையறியாமலே கண்ணீர் வடித்தன. அதனைப்போன்று இன்னுமோர் நிகழ்வும் என் நெஞ்சை உருக்கியது. அதுதான் அரும்வரிகளைச் சொல்லிக்கொடுத்த அமுதுவின் ஆரம்பப் பள்ளி. அந்தப் பாடசாலை தற்பொழுது அத்திபாரம் மட்டும்தான் எஞ்சியிருக்கின்றது. அந்த மண்ணையும் முத்தமிட்டேன்.

மு. அமுதன் :- உங்கள் பார்வையில் கலாபூஷணம் ஏ.டபிள்யூ அரியநாயகம் அவர்களைப் பற்றி அறிய ஆவலாக இருக்கின்றோம்.

சிவ. தணி :- பசுமைத்தீவு என்றும் பாற்தீவு என்றும் பெருமை பெறும் நெடுந்தீவு மண்ணின்மீதும், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் மீதும், தீராத பற்றுக் கொண்ட ஒரு தமிழ்ப் பண்பாளர். துறைமுக வாயிலில் தனி நாயகம் அடிகளாரின் உருவச்சிலையையும், நெடுந்தீவு மத்தியில் தனிநாயகம் அடிகளாரின் அரங்கத்தையும் அமைப்பதில் முன்னின்று உழைத்தவர். மிகவும் நெருங்கிய அன்புடன் இன்னமுது படைத்து நெடுந்தீவு மண்ணின் விருந் தோம்பலுக்குச் சான்றாக விளங்கியவரும் அவரே. நெடுந்தீவின் மூலைமுடுக்கெல்லாம் என்னைக் கூட்டிச்சென்று நெடுந்தீவின் பெருமையை எனக்கு உணர்த்தியவரும் அவரே.

மு. அமுதன் :- எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம் நூலை எழுதிய திரு. செல்லப்பா நடராஜா அவர்களின் சந்திப்புப் பற்றி.....?

சிவ. தணி :- ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் பார்த்துப் பேசிப் பழகியவர்கள் நிறையப் பேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் ஒரு சிலர் என் உள்ளத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அப்படியான சிலருள் என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒருவர் தான் திரு. செல்லப்பா நடராஜா அவர்கள். தாயகத்தில் அவரை நான்கு நாட்கள் தொடர்ந்து சந்தித்து உரையாடினேன். இவர் தனது பாராளுமன்ற மொழி பெயர்ப்பு அனுபவங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சபை அமர்வுகள், நடைமுறை அனுபவங்கள் பற்றியும் பகிர்ந்து கொண்டார். மேலும் பல ஆண்டுகள் பத்திரிகையாளனாக இருந்த பண் பட்ட ஒரு ஆசிரியர் என்பதனை அவர் பேச்சிலும், மூச்சிலும் உணர்ந்தேன். உலகப் புகழ்பெற்ற கலைஞர்களை அவர் பேட்டி கண்ட அனுபவம் என்னைப் பிரமிக்க வைத்தது. மேலும் எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம் என்னும் நூலை இலண்டனில் அறிமுகம் செய்ய அவர் ஆவலாக இருக்கின்றார். நான் அந்த அறிமுக விழாவை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளேன்.

மு. அமுதன் :- திரு. செல்லப்பா நடராஜா அவர்களின் ஊடாக உதயன் பிரதம ஆசிரியர் திரு. கானமயில்நாதன் அவர்களின் நட்பைப் பெற்றுள்ளீர்கள். ஆயின் ஊடகங்களின் கணிசமான பங்களிப்பு ஏற்படுத்தித் தந்த ஒரு பொழுதினை உற்சாகமானதாகக் கருதுகின்றீர்களா?

சிவ. தணி :- உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. கானமயில்நாதன் அவர்களுடைய சந்திப்பு எனக்கு மிகுந்த ஒரு உற்சாகத்தையும் திருப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. செல்லப்பா நடராஜா அவர்கள்தான் இந்த இணைப்பை ஏற்படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அனுபவங்களை உதயன் ஆசிரியருடன் பரிமாறிக்கொண்டதும் ஒரு சிறந்த அனுபவம். அமுது ஐயாவை மிக ஆழமாகத் தெரிந்துகொண்டவரும் அவரே. ஒரு சிறந்த பத்திரிகையாளனுடன் பேட்டி கொடுப்பது என்பது எங்கள் அனுபவங்களைத் தக்கமுறையில் பரிமாறிக்கொள்ளுகின்றோம் என்ற திருப்தியும் அதனால் ஒரு உற்சாகமும் தோன்றுவது உண்மைதானே? மேலும் என் பேட்டியை உதயன் பத்திரிகை தக்கமுறையில் பிரசுரித்திருந்தது மனங் கொள்ளத்தக்கது.

மு. அமுதன் :- பேராசிரியர் கலாநிதி சண்முகதாஸ், பேராசிரியர்கள் விசாகரூபன், சிவலிங்கராஜா, மூத்த எழுத்தாளரான செங்கையாழியான் போன்றவர்களை சந்தித்ததன் மூலம் அமுது ஐயா பற்றிய தங்களின் நூலுக்குக் காத்திரமான அனுபவத்தைப் பெறமுடிந்தது எனக் கருதுகின்றீர்களா?

சிவ. தணி :- பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் விசாகரூபன், பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகிய மூன்று பேராசிரியர் களும் ஏற்கனவே எனது நூலுக்கு அணி செய்திருக் கின்றார்கள். அந்த வகையில் அவர்களுக்கு நன்றி பாராட்டும் முகமாகவே அவர்களின் வீடுசென்று அவர்களின் வாழ்த்துக்களை நேரிலும் பெற்றுக் கொண்டேன். அவர்களின் கருத்துக்களை "செவாலியர் இளவாலை அமுது" என்ற நூலிலே நீங்கள் கண்டுகொள்ளலாம். இதில் முக்கியமாக பேராசிரியர் விசாகரூபன் அவர்களின் கருத்தொன்றை முன்வைக் கின்றேன். "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல அறிஞர்களுக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கியுள்ளது. ஆயினும் இப்பட்டத்தின் மூலம் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தைக் கௌரவப்படுத்தியவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் புலவர் அமுது முதன்மையானவர்" என்று குறிப்பிட்டார். மன்னார் ஆயர் இரா. யோசப்பு ஆண்டகையும் இக்கருத்தினைக் கொண்டிருப்பது மனங்கொள்ளத்தக்கது. மேலும் செங்கையாழியான் அவர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அவர் என்னுடைய ஆசிரியர். அதுமட்டுமன்றி நான் யாழ் இணுவிலில் நடத்திய தனியார் கல்வி நிறுவனத்தின் புவியியல் ஆசிரியராகப் பணிசெய்து என்னைப் பெருமைப்படுத்தியவர். வாடைக்காற்று படம் தயாரிக் கப்பட்ட காலத்தில் அவர் வகுப்பை முடித்துவிட்டு மிகவேகமாகப் படத்தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபடு கின்ற காட்சியே என் நெஞ்சிலே வந்து உரசிக் கொண்டது. இப்பொழுது அவர் இளைத்திருக்கின்றார். நான் அவர் வீட்டுக்குச் சென்றபோது அவர் தன் சகோதரரின் மரணவீட்டிற்குச் சென்றுவிட்டு வந்திருந்தார். நாங்கள் சென்றதும் வரவேற்று உபசரித்து அமுது ஐயாவின் நூல் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்து உன்னுடைய முயற்சி பெருவெற்றி பெற என் உளமார வாழ்த்துகின்றேன் என்று வாழ்த்தியனுப்பினார்.

மு. அமுதன் :- யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் பேராசிரியர் தேவராஜா அவர்களின் சந்திப்பு எத்தகைய ஒத்துழைப்பினைப் பெற்றுத் தந்தது?

சிவ. தணி :- எங்கள் கிராமத்தின் கர்மவீரர் என்று எல்லோரும் சொந்தம் கொண்டாடும் பேருள்ளங்கொண்டவர் பேராசிரியர் திரு. தேவராஜா அவர்கள். இவர் அமுதுப் புலவரின் மகன் சந்திரகாந்தன் அவர்கள் பணியாற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், அவரது நண்பருமாவார். நான் இணுவிலில் ஆரம்பித்த கல்வி நிறுவனத்தில் அன்று ஆசிரியப் பணி செய்து பெருமைப்படுத்தியதோடு குணராஜா, குழந்தைவேலு, கிருஸ்ணானந்தன், வன்னியசிங்கம், சுப்பிரமணிய ஐயர், யோகேஸ்வரன், குணரத்தினம் போன்ற பேராசான்களை எனது நிறுவனத்துக்குக் கொண்டு வந்து சிறப்பித்தவர். பேராசிரியர் தேவராஜா அவர்கள் என் நெஞ்சிலே என்றும் ஒரு தனியிடத்தை அமைத்துள்ளார். அமுதுவின் பாஷையில் சொல்லுவதானால் அவருக்கு என் இதயத்திலே ஒரு கதிரை போட்டிருக்கின்றேன் என்றே கூறுவேன். அத்துடன் வீடு தேடிவந்து என்னை அழைத்துக் கொண்டு சகல பேராசிரியர் வீடுகளுக்கும் அவரே அழைத்துச் சென்று எனது தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

மு. அமுதன் :- ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசும்போது நம்முன் நிற்பவர் "பஞ்சமர்" நாவலை எழுதிய அமரர் டானியலே. அவரின் மகன் டானியல் வசந்தன் அவர்களைச் சந்தித்த அனுபவம் பற்றி.....?

சிவ. தணி :- அமரர் டானியல் அவர்களின் தொகுப்பு நூல் ஒன்றை வாங்க முதலில் கொழும்பிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் உள்ள நூற்பதிப்பகங்களைத் தேடியலைந்தேன். எனக்கு அது கிடைக்கவில்லை. பின்னர் விக்னேஸ்வரன் என்ற நண்பர் மூலம் டானியல் வசந்தன் அவர்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றுவதனை அறிந்து தொடர்பு கொண்டேன். அவரும் என்னை நேரில் சந்திக்க விருப்பம் தெரிவித்தார். அதன் பிரகாரம் உடுவில் மகளிர் கல்லூரியில் அவரைச் சந்தித்து இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிந்தனைகளைப் பரிமாறினோம். தந்தையின் நூற் தொகுப்பை எனக்கு அன்புப் பரிசாகத் தந்தார். தன் தந்தை அறிஞர் டானியல் அவர்களின் குறுநாவல் வெளியாக இருக்கின்ற செய்தியையும் அதனை இலண்டனில் அறிமுகம் செய்யவேண்டும் என்ற அன்புக் கட்டளையையும் என்னிடம் விடுத்து விடைபெற்றார்.

மு. அமுதன் :- இலக்கிய மன்றம் மூலம் சிறந்த பட்டிமன்றங்களை இலண்டனில் பல பாகங்களிலும் நடத்தியுள்ளீர்கள். அப்போது கைகொடுத்தவர்களில் தமிழ்ப் பேராசிரியர் பாலறாவாயன், கம்பவாரிதி இ.ஜெயராஜ், ஆறு. திருமுருகன், சரஸ்வதி இராமநாதன், தமிழருவி சிவகுமாரன், தமிழறிஞர் திரு. சிறிக்காந்தராசா, கவிஞர் திரு. இராஜமனோகரன். இப்போது தங்களின் நூல் தேடலின்போது அவர்களின் பங்களிப்பு எத்தகையது?

சிவ. தணி :- நீங்கள் குறிப்பிட்டது போன்று இந்த அறிஞர் பெருமக்கள் யாவருமே இலண்டன் தமிழ் இலக்கிய மன்றம் முன்னெடுத்த அருப்பெரும் நிகழ்வுகளின் முக்கிய பங்கினையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்கள். அதற்காக அவர்களுக்கு என்றும் நான் தலைவணங்குகின்றேன். ஆனால் அமுது ஐயாவின் நூல் என்பது அவர் என்னுடன் நெடுங்காலம் பழகியதில் அவர் தன்னை எவ்வாறு எதிர்கால உலகிற்கு அடையாளங்காட்ட எண்ணினாரோ, அந்த அடிப்படையில் எனது சுயமானத்தில் எழுந்த உந்துதலினால் அதனால் ஏற்பட்ட தேடலினால் இந்த நூலை அளிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு. அமுதன் :- கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த அமரர் அடைக்கல முத்து என்னும் அமுதுப் புலவரின் வாழ்க்கையில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் மறக்கமுடியாதவர். அமுது ஐயாவின் மகன் சந்திரகாந்தனும் குருத்துவப்பட்டம் பெற்றவரே. எனவே அடிகளாரின் தொடர்பினால் நிச்சயம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் என்று நம்புகின்றோம். உங்களின் கருத்து நம்பிக்கை என்ன?

சிவ. தணி :- தன் இனத்தையும் மதத்தையும் தன் தலைமேல் சுமந்தவர் அமுது ஐயா. அவர்களின் நூலை வெளியிட நான் எடுக்கின்ற பிரயத்தனங்களை ஆயரிடம் வெளிப்படுத்திய மாத்திரமே எனது கோரிக்கையை ஏற்று இந்த நூலை அணிசெய்கின்ற ஒரு அழகிய வாழ்த்தினை என் நூலுக்குத் தந்துதவிய அருளாட்சியும் எனக்குப் பெரிய ஆசீர்வாதம்தானே?.

மு. அமுதன் :- கத்தோலிக்கராக இருந்தும் எம்மதமும் சம்மதம் என்று இருந்தார் அமுதுப் புலவர். அதனால்தான் நல்லை முதல்வரின் வாழ்த்துரையையும் பெற்று வந்தீர்களா?

சிவ. தணி :- என்னைப் பொறுத்தவரையில் தமிழே உயிராக வாழ்ந்தவர் அமுதுப் புலவர். எப்பொழுதும் அவர் எல்லா மதங்களையும் மதிப்பவர். கனகதுர்க்கை அம்மன் ஆலயம், ஈழபதீஸ்வரர் ஆலயம், முத்து மாரியம்மன் ஆலயம் என்று பல ஆலயங்களில் களங்கண்டவர். அமுதுவின் நகைச்சுவைப் பேச்சை கேட்பதற்கு ஆவலுடன் ஆலயத்தில் காத்திருந்த மக்களின் உணர்வலைகளை இன்றும் நான் மீட்டிப்பார்க்கின்றேன். நல்லை ஆதீன முதல்வரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆசியினை நான் பெற்றுக் கொண்டதும் அந்த நிலைப்பாட்டின் அடிப்படையே.

மு. அமுதன் :- புகழை விரும்பாத கவிஞர் தன் வாழ்நாளில் முழுமையான ஒரு சாதனையாளன் என்று கருதுகிறீர்களா?

சிவ. தணி :- "தோன்றில் புகழோடு தோன்றுக" என்பதுதான் யதார்த்தம். ஒரு நல்ல கவிஞன் காலம் காலமாக நிலைத்திருப்பான். இதுவே காலத்தின் கண்ணாடி.

மு. அமுதன் :- அமுது ஐயாவுடன் மன்னார் மறை மாவட்ட பேராயர் நெருங்கிய தொடர்புடையவர். அதுமட்டுமன்றி பொதுப் பணிகளில் பெரும் பங்கு வகிப்பவர். இவர்கள் உறவு தொடர்பாக நீங்கள் நினைவு கூருவது என்ன?

சிவ.தணி :- பேராயர் எம்மக்கள் துயர்கொண்டபோதெல்லாம் துணை நிற்பார். மடுமாதா காவியம் மற்றும் மடுமாதா காவியத்தின் ஒலிப்பேழைகள் விற்று வந்த பணம் முழுவதும் அமுது ஐயா அவர்களே பேராயரிடம் ஒப்படைத்தவர். ஒரு கலைஞனால் இதனைத் தவிர தனது சமூகத்திற்கு வேறு என்ன செய்யமுடியும்? மேலும் மன்னார் மக்களின் மனதில் பொன்னேர் கொண்டு உழப்பட்டதல்லவா எங்கள் அமுது ஐயாவின் பெயர். மடுமாதா காவியம் என்னும் நூலைத் தந்தமைக்காக இக்கவிஞரை மன்னார் மக்கள் என்றும் மனத்தில் இருத்திக் கொண்டாடுவர் என்று ஆயர் வாழ்த்தி நிற்பது ஆயரின் மன உருக்கத்தை வெளிப்படுத்தி நிற்பதுடன் மடுமாதாவின் அருளுரையாகவும் எனக்குத் தோன்றுகின்றது.

மு. அமுதன் :- திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்டப் பேரருள் தந்தை கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களுக்கும் அமுதுவிற்கும் இடையிலான உறவு பற்றி....?

சிவ. தணி :- தமிழ்க் கிறிஸ்தவ உலகில் தனது அற்புதப் படைப்பால் அழியாத இடம்பிடித்தவர் இளவாலை அமுது அவர்கள் என்பதே ஆயர் அவர்களின் மேலான கருத்து. இந்த நூற்றாண்டின் கிறிஸ்தவத் தமிழ்ப் புலவராக விளங்கும் இளவாலை அமுதுவின் வாழ்வும் பணியும் எதிர்காலத் தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பது அமுதுவின் பன்முகம் சார்ந்த பணிகளில் ஆயர் அவர்கள் கொண்டிருக்கின்ற மதிப்பீட்டினை விளக்கி நிற்கின்றது என்பது எனது பணிவான எண்ணம்.

மு. அமுதன் :- உங்கள் தந்தையின் நினைவான அர்ச்சனை மலர்கள் வெளியீட்டு விழாவின் பிரதம விருந்தினராகக் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டார். தாயகத்தில் அவரைச் சந்தித்த அனுபவம் என்ன?

சிவ. தணி :- அன்று அர்ச்சனை மலர்கள் வெளியீட்டில் சிறப்பு விருந்தினராகத் திருமுருகன் அவர்கள் கலந்து சிறப்பித்த வேளை நிகழ்ச்சியைத் தலைமை தாங்கி நடத்தியவர் அமுதுப் புலவர். அன்று ஆறு. திருமுருகன் பற்றி அமுதுப் புலவர் குறிப்பிடுகையில் ஆறு. திருமுருகன் எம்மில் ஆறு பேருக்குச் சமன் என்று தனக்குரிய பாணியில் நகைச்சுவையாகச் சிறப்பித்தார். ஐயா அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை என்பதனை இன்று ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த கணத்திலே உணர்ந்தேன். அதிபர், ஆசிரியப்பணி, முதியோர் இல்லங்கள், சமயத் திருப்பணிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப் பணிகள் என்று மூச்சுவிட நேரமில்லாமல் தன்னை முற்றுமுழுதாக சமூகத்திற்காய் ஈடுபடுத்திக் கொண்டு இருக்கின்றார். இவரை ஒரு சமயத்துறவி என்பதனைவிட ஒரு சமூகத்துறவியாகவே பார்க் கின்றேன்.

முூ. அமுதன் :- உங்களின் நண்பர் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் அமுது ஐயாவின் முதலாவது நினைவு தினத்தில் இங்கு வந்து மேடை தரிசனம் செய்தவர். இவருடைய சந்திப்புப் பற்றி...?

சிவ. தணி :- அன்று தொட்டு இன்றுவரை ஓய்வில்லா ஓடம் ஆவார். சமூகசேவை என்பது அவரின் உயிர் மூச்சு. அமுதுப் புலவரின் முதலாண்டு நினைவுப் பேருரைக் கூட்டம் தன்னைப் பிரமிப்பில் ஆழ்த்தியதை இன்றும் நினைவு கூர்ந்தார். அத்துடன் அமுதுவின் மகன் சந்திர காந்தனையும் அந்த விழாவில் தரிசித்ததைப் பெரும்பேறாக விளக்கினார். அன்றைய அமுதுவின் நினைவுப் பேருரை அரங்கம் - கத்தோலிக்க மக்களின் மீது தான் வைத்திருக்கும் மதிப்பினை மேலும் ஒருபடி உயர்த்திவிட்டது என்கின்றார்.

மு. அமுதன் :- யாழ். பல்கலைக்கழக தமிழ்ச் சிறப்புக் கலைமாணித் தேர்வுக்கு அமுதுவின் வாழ்வு ஒரு ஆய்வுக் கட்டுரை யாகச் சமர்ப்பிக்கப்பட்டது பற்றிக் கூறமுடியுமா?

சிவ. தணி :- உண்மையிலே இந்தக் கேள்வி என் நெஞ்சைத் தொடுகின்றது. காரணம், அமுது ஐயா அவர்கள் அந்தப் பல்கலைக்கழக ஆய்வு முயற்சியில் அவருடைய வாழ்க்கையின் பரிமாணங்கள் ஆராயப் பட்டதனையும் அது நூலாக வெளிவந்ததனையும் அமுது அவர்கள் மிகுந்த உள்ளக்களிப்புடனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருமிதத்துடனும் எங்களிடம் கூறியிருக்கின்றார். அந்தப் பல்கலைக்கழகச் சிறப்புக் கலைமாணி தேர்வினைப் பூர்த்தி செய்ய "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்னும் தலைப்பில் ஆய்வு நூலினைச் சமர்ப்பித்த டயானா மரியதாஸ் அவர்களை நான் அவர்களின் இல்லத்தில் சந்தித்தேன். இளவாலை சென்.ஹென்றிஸ் அதிபர் வணக்கத்திற்குரிய யேசுதாஸ் அவர்கள் இந்தச் சந்திப்பினை ஏற்பாடு செய்தார். அந்த நூல் வெளியீட்டினால் அமுது அடைந்த ஆனந்தத்தை அவருடன் பரிமாறிக் கொண்டேன். அந்தச் செய்திகள் அவரின் இதயத்தில் ஆனந்தத் தேன் பாய்ச்சியதைக் கண்குளிரக்கண்டு அமுதுவின் பெயரால் வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்து வந்தேன்.

மு. அமுதன் :- இலண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் தமிழ்ப் பாடசாலை ஒழுங்கு செய்திருந்த உறவுமாலை என்னும் நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அமுது ஐயா அவர்களே பொன்னாடை போர்த்தி கம்ப வாரிதியைக் கௌரவித்தார். தற்போதைய தாயகத்தின் பயணத்தில் கம்பவாரிதியின் சந்திப்பு எத்தகையது?

சிவ. தணி :- எடுத்த பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழ்கின்ற இலட்சிய புருஷராகவே கம்பவாரிதி அவர்களைப் பார்க்கின்றேன். முதன்முதலில் எந்த உணர்வுடன் அவரிடத்தில் உறவு கொண்டேனோ இன்றைய சந்திப்பு என்னும் அந்த நேசத்தைப் பல படிகள் உயர்த்திவிட்டன. அவர் தன்னை மறந்து, நடக்க விருக்கும் கம்பன் விழா நினைவுகளில் மூழ்கியிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார். இந்தவேளையிலும் என்னைத் தகுந்த முறையில் உபசரித்து, அமுது ஐயா பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததனை நினைவுகூர்ந்து, அமுது ஐயா அவர்களின் நூல் பற்றிய முயற்சிகள் கண்டு மலர்ந்த அவருடைய முகத்தை என் நெஞ்சில் மீண்டும் பதிவு செய்து கொண்டு வந்துள்ளேன்.

மு. அமுதன் :- சில அறிஞர்களின் தொடர்பு மேலும் பல அறிஞர்களின் தொடர்பை உண்டுபண்ணி மேலும் மேலும் இலக்கியத்தில் வளரவும், அதன் பரப்பையும் விரிவாக்கும். அந்த வகையில் நீங்கள் யாரைக் குறிப்பிடுகின்றீர்கள்?

சிவ.தணி :- தமிழகத்தில் நான் தரிசனம் செய்த அறிஞர் பெருமக்களைப் பட்டியலிட்டுக் கூறமுடியாது. அந்த அளவிற்கு ஓர் ஆழமான இலக்கிய உறவுப்பாலத்தை எனக்கு அமைத்துத் தந்தவர் பேராசிரியர் அருணை பாலறாவாயன் அவர்கள். என் எழுத்துக்கும் இலக்கியப் பணிக்கும் ஒரு உந்துசக்தி அவரே. அந்தப் பேராசிரியர் எனக்குச் செய்த நன்மைகள் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை. பேராசிரியர் என்மீது கொண்ட தனிப்பெருங் கருணையினால் தமிழகத்தின் பல்துறைசார்ந்த அறிஞர்களின் இதயம் நிறைந்த வாழ்த்துக்களில் திக்குமுக்காடுகின்றேன். அமுது ஐயாவின் அன்பையும் அவரின் இலக்கிய நினைவுப் பரிசையும் பேராசிரியர் கவர்ந்து கொண்டார் என்பது நிதர்சனமானதே.

மு. அமுதன் :- தாங்கள் வெளியிடவுள்ள நூலின் உள்ளடக்கம் பற்றி சொல்லமுடியுமா? வெளிவரும் தங்களின் இந்த நூல் பெரிய எதிர்பார்ப்பைத் தரும் என்பதில் மறுப்பில்லை. நூலின் மூலம் நீங்கள் சொல்ல முயலும் செய்திதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவ. தணி :- செய்தி என்பதனைவிட இந்த நூலின் பயன்பாடு என்ன என்று கூட நீங்கள் கேட்கலாம். சுருக்கமாகச் சொன்னால் இந்த நூல் இலக்கியத்தில் முன்னேறத் துடிப்பவர்க்கு ஒரு பாடமாக அல்லது உந்து சக்தியாக அமையும். சமூகம், இலக்கியம், மதம் என்ற மூன்று நிலைகளில் நின்றவர் அமுது ஐயா. அவரைப் பற்றிய வாழ்க்கைச் செய்திகள் நீண்டு கிடக்கின்றன. எனது நூல் அதில் சில பங்கினை எடுத்து வரும் என்று கூறலாம். என்னுடைய நூலில் சொல்லப்படாத பெரும் விடயங்களையெல்லாம் தாங்கி வரப்போகின்ற ஏனைய நூல்களுக்கும் இந்த நூல் ஒரு வழிகோலாக அமையும் என்றும் கூறலாம்.

மு. அமுதன் :- நூல் எப்போது கிடைக்கும் என எதிர்பார்க்கும் வாசகர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

சிவ. தணி :- கங்கை கோடையில் பாய்ந்தால்தானே தாகங் கொண்டவர்க்கு விருந்தளிக்கும் நீரோடையாகின்றது. இதுபோன்றே இலக்கியத்தாகம் கொண்டவர்கள் இக்கோடையில் எதிர்பார்க்கலாம்.

மு. அமுதன் :- நிறைவாக அமுது ஐயா அவர்களின் உருவத்தை நீங்கள் நெஞ்சில் நிறுத்திப் பார்க்கின்றபொழுது எப்படிப்பட்ட ஒரு ஸ்தானத்தில் உங்களால் பார்க்க முடிகின்றது. குருவாகவா? தமிழறிஞராகவா? நண்பராகவா? தந்தையாகவா?

சிவ. தணி :- அமுது ஐயா அவர்கள் இலக்கிய உலகில் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்த ஒரு பேரறிஞர். கூப்பிடுகின்ற போதெல்லாம் தொடர்பில் இருக்கின்ற, என் இலக்கியக் களங்களை நகர்த்திச் சென்ற ஒரு இலக்கியத் தோழன். என்னுடன் மட்டுமல்லாது என் பிள்ளைகளுடனும் நெருங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்துடன் பழகிய ஒரு அருட்தந்தை. தமிழ் இலக்கியம் சம்பந்தமான சகல சந்தேகங்களையும் தீர்த்து வைப்பதில் அவர் ஒரு ஞானகுரு. என் தாயகப் பயணத்தின் நிறைவாக எனது வீட்டின் பக்கத்திலுள்ள நாகதம்பிரான் கோயிலில் ஒரு பொங்கலை நேர்த்தியாகச் செய்திருந்தேன். பொங்கற் பானை வரைகட்டித் தளும்பியது. பொங்கற்பானையின் கீழ் சுள்ளிகள் தணலாகிக் கொண்டிருந்தன. அந்தக் கணத்திலே அமுது ஐயா அவர்கள் இலக்கிய சங்கமத்தின் ஒவ்வொரு இலக்கிய நிகழ்வின் அழைப்பின்போதும் தவறாமல் கூறுகின்ற அந்த வாசகங்கள் என் நெஞ்சிலே எதிரொலிக்கத் தம்பிரான் கோயிலில் என் கண்களும் குளமாகின. அந்த வாசகம்தான் என்ன? “இவன் பொங்கலுக்குப் பானை வைத்தால் அந்த அடுப்பில் நான் வந்து ஒரு சுள்ளியாவது வைக்க வேண்டும். இல்லாவிட்டால் இவனுக்குப் பொச்சமடங்காது”.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதுவின் வரலாறு சொல்லும் நிழற்படங்கள்



Amma and Papa August 1945



Amma with her son Fr. Chandrakanthan and son-in-law Murail Joachimpillai -1987



Amma and Papa with daughters Kanthi and Rubia son Chelian and grandson Rajkanthar at Fr. Chandrakanthan's convocation in the University of Ottawa, Canada (1988)



கலாநிதி அமுது
திரு. திருமதி அமுதரசன்



கனடாவில் மகனாரின் பட்டமளிப்பு விழாவில்



வண. பிதா S.J. இம்மனுவல் அடிகளார் முப்பணி வேந்தன் பட்டம் சூட்டுகிறார் - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுதுவின் வீட்டில் தந்தை செல்வாவுக்கு விருந்து



புதினம் ஆசிரியரின் நெகிழ்வில்



மகள் இராசாத்தியின் திருமணம்



மடுமாதா காவியம் நூல் வெளியீடு வித்துவான் க.ந. வேலன் பொன்னாடை அணிவிக்கிறார்.




மதுரகவிப்புலவர் பட்டத்தை யாழ். துணைவேந்தர் வழங்கிய போது (2002)



நண்பர் ஆசிரியர் திரு. நடராசா



வெரித்தாஸ் வானொலி வெள்ளி விழாக்குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





90ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம்



யாழ். பல்கலைக்கழகத்தில்



பொன்விழாவில்



பொன்விழாவில் திரு. ஜவார் அவர்களுடன்



அவுஸ்திரேலியாவில் உறவினர்களுடன்



பாசமுள்ள பேரன்



90 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம்



ஒரு கூட்டுப்பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிகை விருந்தில்



பேரப்பிள்ளைகளுடன்



பிறந்தநாள் விழாவில்



Amma with daughters Jeya and Inthu (1989)



ஒன்றுகூடல்



ஒன்றுகூடல்



அமுதுவின் கவிதையில்




கஸ்பார் அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுமாதா காவியம் வெளியீட்டு விழா



அமுதுவுடன் நூலாசிரியர்
சிவ. தணிகாசலம்



புதினம் இராஜகோபால்



வித்துவான் வேலனுடன்
நூலாசிரியர் சிவ. தணிகாசலம்



பிபிசி ஆனந்தி,
வெஸ்டன் நகைமாளிகை அதிபர்
திரு.வே.சிவசுந்தரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதுவின் கவிதைகள் வெளியீட்டு விழாவில்



கஸ்பார் அடிகள்



சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள்




கஸ்பார் அடிகள் உரையாற்றுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதறிஞர், கலாநிதி, மதுரகவி, செவாலியர் விருதுகள்







நூலாசிரியர்,ஏ.சி.தாஸீசியஸ், அமுது, பாஸ்கரநாதன்



பட்டமளிப்பு - மதுரகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய சந்திப்புக்கள்







மருத்துவர் இந்திரகுமாருடன்
நூலாசிரியர் சிவ. தணிகாசலம்



தமிழர் தகவல் திருச்செல்வம்,
நூலாசிரியர் சிவ. தணிகாசலம்



விரிவுரையாளர்
மு. நித்தியானந்தன்



முகத்தார்,நூலாசிரியர்,வண்ணைத்தெய்வம், அமுது,
பொறியியலாளர் கணேசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மன்றத்தில் அமுது



அமுது, பேராசிரியர் சண்முகதாஸ்



கம்பவாரிதி, அமுது, குகன் ஐயா



பாஸ்கரநாதன், சிவசோதி, கம்பவாரிதி,
நூலாசிரியர், இராஜமனோகரன்



செஞ்சொற்செல்வர் ஆறு.
திருமுருகன், அமுது



சிவஸ்ரீ கைலாசநாதக்
குருக்கள்



சொற்பொழிவாற்றும் அமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழபதீஸ்வரர் தமிழ்ப் பாடசாலை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரதி விழாவில் திருமதி சரஸ்வதி இராமநாதன்



பிபிசி திரு. திருமதி சங்கரன்



சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள்



எஸ்.பி. ஐயர்




இலக்கிய ஒன்று கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய சங்கமம்



1 புனிதவதி பாலசுந்தரம் 2. இராணி ஸ்ரீநிவாசகம் 3. அறிஞர் குணசிங்கம்
4. அரங்க முருகையன் 5. பேரா. பாலசுகுமார் 6. மாதவி சிவலீலன்
7. முல்லை அமுதனும் பத்மநாப ஐயரும் 8. சுகதினி பானுகோபன்
9. பண்ணிசைப் பாடகர் க. பரமசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











1. மாலிசிவம், அமுது, நித்தியானந்தன், 2. முல்லை அமுதன், 3. புனிதவதி பாலசுந்தரம், 4. கண்ணப்பு, 5. இந்து மகேஸ் 6. நடா மோகன்
7. செங்கையாழியன், ஸ்ரீ ரங்கன், ஐ.தி. சம்பந்தன், கவுன்சிலர் போல், நூலாசிரியர், பாஸ்கரன் 8. வீ. ஆர். இராமநாதன், 9. பாலாஜி, சற்குணராசன், கவிஞர் வீரவாகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈலிங் வாசகர் வட்டத்தில் அமுது








1. ஜி.யு.போப் கல்லறையில் அமுது 2. நடுவில் பேரா.கோபன் மகாதேவாவுடன் வாசகர் வட்டம் தர்மேந்திரா 3-5. கல்லறைக்குச் சென்ற வாசகர் வட்டத்தினர் 6. கவிஞர் கந்தவனம் (இடப்பக்கத்தில்) இராஜ்குமார்(ரையுடன்) நூலாசிரியரின் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுதுவின் பிறந்த மண்ணில் நூலாசிரியர்









1. பசுமைத்தீவின் நுழைவாசல், 2. அமுதுவின் ஆரம்பப்பள்ளி, 3.புறாக்கூடு, 4. புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமைத்தீவின் அடையாளங்கள்










1. குதிரைகள் 2. பெருக்குமரம்
3. தமிழ்த்தூதின் வீட்டுக்கு முன்பாக
4. நெடுந்தீவு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமுது வாழ்ந்த மண்ணில்














1.அமுதுவின் இல்லம் 2.புனித அன்னம்மாள் ஆலயம்,
3.மார்பிலடித்த மாமரம் 4.அமுது பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்த மணி
5.இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலை அதிபர் செல்வி மரியாம்பிள்ளை
6. அமுதுவை ஆய்வு செய்த டயானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் மண்ணில் என்னைத் தொட்ட எம்மவர்கள்













நூலாசிரியருடன் நிற்பவர்கள்:1.பேரா.தேவராசா, தமிழ்க் குழந்தை 2. செங்கை ஆழியான் 3. எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம் செல்லப்பா நடராசா 4. உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் 5. பரட்சி எழுத்தாளர் டானியல் மகன் வசந்தன் 6. என் இதயத்தைத் தொட்டவர்களில் சிகரம் மகாராசா முதலி- இவன் வாய்திறந்தால் புல்லும் சிரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியக் கலைஞர்கள் வாழ்த்தில்

பல பெரியோர்களிடம் இருந்து பெறுகின்ற வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்தான் ஒருவனின் முன்னேற்றத்துக்கும், அவர் கொண்டிருக்கும் இலட்சியங்களின் ஈடேற்றத்துக்கும், வெற்றிக்கும் ஆணிவேராகும். இதுதான் என் வெற்றியின் இரகசியம். இதுதான் என் வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட அனுபவம் என்கிறார் அமுதுப்புலவர் அவர்கள். அந்த ஆலமரத்தின் நிழலில் குடியிருந்தவன் என்ற வகையில் இந்நூல் வெளிவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழகத்தில் இருந்து எனக்கு வாழ்த்துமழை பொழிந்த அறிஞர் பெருமக்களுள் ஒருசில முகங்களை இங்கே பதியவைக்கின்றேன். என் தாயக உறவுகளுடன் இணைந்த பக்கங்களாக தமிழகத்தின் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று பல்துறை சார்ந்த வல்லுனர்களின் வாழ்த்தொலியின் விம்பமாக இந்தப் படைப்பினைப் பார்க்கின்றேன். எடுத்துக்கொண்ட முயற்சி செம்மையானது என்றால் தெய்வமும் விதியும் என்றுமே கைவிடாது என்பதனை இந்த முயற்சியினால் உணர்ந்துகொள்கின்றேன்.



நூலாசிரியருடன் 1. அ.ச.ஞானசம்பந்தன் 2. திரு திருமதி அவ்வை நடராசன் 3. இராணி ஆசிரியர் ஆமாம்சாமி 4. கலாநிதி அண்ணாபரிமளம் 5. பேரா. செல்வகணபதி 6. இயக்குநர் மாதவன் 7. பேரா. முத்து சண்முகம் 8. குங்குமம் மாலன் 9. கவிஞர் மேத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலறாவாயன்,லேனா தமிழ்வாணன்,



பேரா.கங்காதரன்



ஐ.லியோனி



பேரா.செல்வராசன்



இந்திரா பார்த்தசாரதி



சோ.சத்தியசீலனார், கலாநிதி அறிவொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எம்.என். நம்பியார்



ஆர்.எஸ். மனோகர்



டெல்லி கணேஸ்



மேஜர் சுந்தரராஜன்



ஆச்சி மனோரமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழர் தகவல் வாழ்நாள் சாதனை விருதும், தங்கப் பதக்கத்தையும் அமுது பெறுகின்ற காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













நூலாசிரியருடன் 1.டி.எம்.எஸ். 2. பி.பி. ஸ்ரீநிவாஸ் 3. பேரா.சுதந்திரமுத்து,
கவிஞர் மேத்தா 4. தமிழருவி சிவகுமாரன், பேரா. பாலறாவாயன்.
5. வண்ணை , அமுது, முகத்தார்
6.அமுது, திரு திருமதி பாலேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய சங்கம நிகழ்வுகளில் வைரமணிகளாய்ப் பிரகாசிப்பவை....




பாரதி நூற்றாண்டு விழா ஈழபதீஸ்வரர் ஆலயம் பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன்




தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவர் அவர்களின் நினைவுப் பெருவிழா




நாவலர் பெருவிழா




இலண்டன் இலக்கிய சங்கமம் தனிநாயகம் அடிகளார் நினைவுப் பெருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய சங்கம நிகழ்வரங்கில் தடம்பதித்த இலக்கியக் கலைஞர்கள்



கயிலை நாகநாத சிவாச்சாரியார்



திரு. க. இராசமனோகரன், அமுது ஐயா, கலாநிதி குணா



திரு. சூ.யோ.பற்றிமாகரன், திரு. சு.வாமதேவன்



திரு. ச.ஸ்ரீரங்கன்



திரு. பே.சிவானந்தன், திரு. வி.ஆர். இராமநாதன்



திரு. ப.வசந்தகுருக்கள், திரு. ஆர்.இரவீந்திரமோகன், திரு. எஸ்.செல்வராசா, திரு க. ஸ்ரீகாந்தலிங்கம் (பண்டாரவன்னியன்), வாழ்நாள் சாதனையாளர் திரு. ஐ.ரி. சம்பந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி குணாவேலுப்பிள்ளை கௌரவம்
ஹரோ மூத்தோர் சங்கம் நடனக் குழு



இலட்சியத் தம்பதிகள் விருது
திரு திருமதி தர்மேந்திரன் கௌரவம்



இளையோர் இலக்கிய சங்கம
பட்டிமன்றக் குழுவினர்



தனிநாயகம் அடிகளார் விழா கௌரவம்



நிலா, மாதவி, ஆனந்த சயனன், ஓப்பிலாமணி



இலக்கிய சங்கம காவலர்
திரு.அ.ஸ்ரீசற்குணம்



கலாநிதி முத்து முருகேசன்
(செயலாளர்)



இலக்கிய சங்கம அபிமானி
ஊரெழு அ. கனகசூரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சைவப்புலவர் க. சிவானந்தன் எம்.ஜி.ஆர் உரை



சைவ ஆசான் திரு. அருணாசலம் நூல் வெளியீட்டு விழா



சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விழா



ஔவையார் பட்டிமன்றம் நடுவர் தமிழருவி சிவகுமாரன்



இலக்கிய சங்கம விருந்தோம்பல்



இலக்கிய சங்கம விருந்தோம்பல்



ஈழபதீஸ்வர் ஆலயம் இலக்கிய விழா



மா. சிறிகாந்தா (இலக்கிய சங்கம காப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எட்டயபுரம் எஸ். செல்வராசா
இலக்கிய சங்கம காவலர்



திரு. க. ஒப்பிலாமணி, திரு இ. தயானந்தா
இலக்கிய சங்கம விழாவில்





சிவநெறிச் சிந்தனையாளன்
திரு. வேதநாராயணன்



கம்பவாரிதி, இரத்னா, ஜெயதேவன்,
குகன் ஐயா




புலவர் சிவானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்கள் பத்தளித்த அன்னையின் பிரிவில்





Sons, Arasan and Chelian, with other relatives carry the casket into the church



In keeping with Tamil Tradition, the sons, Sebastian, Vasanthan, Chelian and Arasan. carry the casket on their shouldlers from the family home to the Parish Church at Ilavalai



Rev. Dr. Justin Gnanapragasam, Rector. St. Patrick's College, Jaffna. delivering the funeral homily at St. Anne's Church, Ilavalai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகங்களில் இலக்கிய சங்கமம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீடித்த வாழ்வில் இலக்கியத் தம்பதிகள்



Chevalier Dr. S. Adaikalamuthu
Phd (HC. University of Jaffna)
Retired Principal, St. Henry's Rct
Boys' School, Ilavalai, Sri Lanka
Born: September 14, 1918 Eternal
Rest: February 23, 2010



முத்துக்கள் பத்தளித்த அன்னை
திரேசம்மா




தமிழ் விதைத்த தமிழமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இவன் பொங்கலுக்குப் பானை வைத்தால்
நான் வந்து ஒரு சுள்ளியாவது வைக்கவேணும்.
இல்லாவிட்டால் இவனுக்கு பொச்ச மடங்காது" - அமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD



# செவாலியர் இளவாலை அமுது

பதினைந்து வருடங்களுக்கு மேலாக
நெக்குருகிப் போய்விட்ட
அன்பின் வெளிப்பாடே அமுதுவின் வரலாறு

கதவின் மணியோசை கேட்டவுடன் ஓடிவந்து
கட்டியணைத்து முத்தமிட்டு
"வாங்கோ ராசாக்கள் வந்துட்டியளோ"
என்று அன்பு மழை பொழிந்து வரவேற்ற
அமுது என்ற அன்புக்கங்கையின்
ஆத்ம சுகத்தினைத் தரும் இனியகுரலை
இனி எப்போது கேட்போம் என்ற தவிப்பில்
பிறந்ததே இந்த அமுதுவின் வரலாறு.

"ஈந்தவர் அன்றி இருந்தவர் யாரோ"
என்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.
"காலத்தில் அழியாத காவியந் தரவந்த
மாபெரும் கவிமன்னனே - உனக்கு
தாய் ஒரு மொழி சொல்லுவேன்"
உணர்ச்சியில் விளையாடும்
உன்னதக் கவிச்சிங்கம்
தளர்ச்சியில் விழலாகுமா?
மகனே சந்தனம் சேறாகுமா?"
என்று கவியரசர் பாடியது அமுதுப்புலவருக்கா? ஆம்.
தளர்வறியா அமுதுப்புலவரின்
கடலளவு கற்பனைகள் கனிந்துருகும் கவிக்கனிகள்
சலித்தறியாத் தவவாழ்வு தாங்கிவரும்
இத்திருச்சரிதைமலரில், நான் வலம்வந்த
இலக்கியப்பூமியில் என் பாதையைச்
செப்பனிட்ட கலைப் பிரம்மாக்களையும்
இலக்கிய சங்கமத்திற்குப் பலம்சேர்த்த
தமிழ்ப் பற்றாளர்களையும் தொண்டர்களையும்
இம்மலரால் பயன்பெறும் எதிர்காலத் தமிழ் வித்துக்களையும்
அமுதுவாழ்வின் கோபுரக்கலசத்தில்
வைரமணிகளாகப் பிரகாசிக்க வைத்துள்ளேன்.
செவாலியர் இளவாலை அமுதுப்புலவர் அவர்களின் புகழ்
தேன்ஊற்றுத் தமிழ்போல் நிலைத்து வாழ்க!

**சிவ. தணிகாசலம்**
**இலக்கிய சங்கம அமைப்பாளர்**

**இது ஒரு இலண்டன் இலக்கிய சங்கமம் வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org